

I. மகர யாழ் (காமன கொடி)

விபுலாநந்த சுவாமிகள்

இயற்றிய

யாழ் நூல்

என்னும்

இசைத் தமிழ் நூல்
1750

YĀḺ - NŪL

A treatise on Ancient Tamil Music

BY

SWAMI VIPULANANDA,

B SC (LONDON)

Professor and Head of the Dept of Tamil,

University of Ceylon, Colombo.

PUBLISHED BY

THE KARANTHAI TAMIL SANGAM,

TANJORE S INDIA

1947

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தஞ்சை

சர்வசித்து ஆண்டு - கலி ௫௦௪௯

விலை ரூ. **20**

அருட்டிரு. விபுலானந்த அடிகளார்

(1—8—1942இல் மதுரையில் நிகழ்ந்த முத்தமிழ் மாநாட்டில்
இயற் பகுதிக்குத் தலைமை தாங்கியபோது எடுத்தது.)

பதிப்புரை

தமிழ்த் தாயின் தவப் புதல்வருள் ஒருவ ராய நல்லிசைப் புலவர், அருண்மிகு விபுலாநந்த அடிகளார் அவர்கள், தாம் பதினான் காண்டுகளாக நிகழ்த்திய இய லிசை யாராய்ச்சியினால் நுண்ணிதிற் கண் டுணர்ந்த பழந் தமிழிசை நூன் முடிபுகளை ஒரு கோவைப் படுத்தி, இசைத் தமிழ நூலாகிய யாழநூலினை இயற்றி யருளினார்கள்

இநநூல வெளிவருதற குரிய அருந் தொண் டினைத் தமிழ்த தாயின் தவப் பேறும, தமிழ்ப புலவர் களின் துணைச் செலவரும், நம் சங்கப் புரவலரும ஆகிய கோனூார் சமீன்தாா, நச்சாந்துப்பட்டி, உயர் திருவாளர் பெ ராம ராம சித. சிதம்பரம் செட்டியார் அவர்கள மேற்கொண்டு நிறைவேற்றினார்கள்.

நம் சங்கத்தின் பேரருட் செல்வர்க ளாகிய இப பெரியா ரிருவரும் யாழநூல் வெளிவரற் காம் பதிப் புரிமையினை நம் சங்கத்திற்குப் பேரன்புடன் வழங்கி யுள்ளார்கள் இவர்கட்கு நம சங்கத்தின் நன்றி யினைத தெரிவித்துக் கொள்ளுகின்றேம்.

இந நூலினை வனப்புற அச்சியற்றித் தந்த கரந்தைக கூட்டுறவுப பதிப்பகத்தாரின் உதவி பாராட்டற் குரியது

அரும் பெறல் நூலாகிய இவ் யாழ்நூலைப் பயின்று, தமிழர்கள் நல்லிசை பெற்று மகிழ்வாராக. நலம்

க. த. சங்கம,
5—6—1947

ஆ யா. அருளானந்தசாமி நாடாா,
(இராவ பகதூா) தலைவா

யாழ் நூல்

உள்ளுறை

முகப்பு	1
பதிப்புரை	3
உள்ளுறை	5
படங்களின் அட்டவணை	9
முகவுரை	11
சிறப்புப் பாயிரம்	15
நூல்	க–ச௱க, 1–76

க. பாயிரவியல் க–உஅ

1. தெய்வ வணக்கம் . க
2. இசை நரம்புகளின் பெயரும் முறையும் .. உ
3. இசை நரம்புகளின் ஓசைகளும், அவைதமக்குப் பிற காலத்தார் வழங்கிய பெயர்களும் ச
4. இயற்கையி னியன்ற விசையும் பண்ணப்பட்ட விசையும், உள்ளத் துணர்வுகளும் மெய்ப்பாடு களும், இணை, கிளை, பகை, நட்பு ; பண் ணென் னும் பெயர்க் காரணம் ரு
5. மூவகைத் தானம், ஆரோசை, அமரோசை, நால் வகைச் செய்யு ளியக்கம் . ௰ரு
6. தேவபாணியும் பரிபாடலும் . ௰சு
7. மிடற்றுப் பாடலுங் கருவிப் பாடலும் .. ௰எ
8. பாணர் வரன்முறை . ௰அ
9. திணைக் கருப்பொருளாகிய யாழின் பகுதி .. உக
10. யாழ்க் கருவியின் தெய்வ நலம், இக் கருவி தமிழ் நாட்டிலிருந்து பிற நாடுகளுக்குப் பரவிய வரன் முறை . உச
11. நூல் தோன்றிய வரன்முறையும், அவையடக்க மும், நூற்பயனும் .. உஎ

உ. யாழுறுப்பியல் ௩௧–௫௨

1. வில் யாழ் ... ௩௧

2 பேரி யாழ் ... ௩௭

3. மகர யாழ் . ௪௮

4 சீறி யாழ், செங்கோட்டி யாழ் .. ௫௰

5. சகோட யாழ் ... ௫௧

௩. இசை நரம்பியல் ௫௩–௮௩

1 பூதநூல், அளக்கும் முறையும் அளவு கோலும்; ஓசையி னியக்கமும் வேகமும், துளைக் கருவி யிலக்கணம், கட்டளை யாழ் ... ௫௩

2. நரம்பின் முதலிசையைச் சார்ந்து தோற்றுட் வழி யிசைகள் . ௬௧

3. கிளை மரபாக இசை கூட்டும் முறை, ஏழிசைகளின் பிறப்பு; அலகெண்ணும் அலகுநிலை யெண்ணும் ௬௩

4. கிளை யியைபின்றப் பிறக்கும் பதினே ரிசை நிலைகள்; நட்பியைபு; நட்பியைபின்றப் பிறக்கும் பதினே ரிசை நிலைகள், மேனாட்டில் வழங்கும் விளரிக் கிரமம், சுருதி வீணை ௭௰

5 இசை நரம்புகளின் சிற்றெல்லையும் பேரெல்லையும், ஏழு தானங்கள், முற்றிசையின் பிரிவுகள் பன்னிரு வீட்டிலும் இசை நரம்புகள் நிற்கும் முறை ௭௮

௪ பாலைத்திரிபியல் ௮௫–௱௪௰

1. பாலை யென்னுஞ் சொல் வழக்கு, ஏழ் பெரும் பாலை, இசைநிலை யிராசிகள் ௮௫

2. பன்னிரு பாலை (பொது வுருவங்கள்) ௮௯

3 ஏழ் பெரும் பாலைகளை மூன்று கிரமங்களிலும் நிறுத்தல் ௯௫

4 மூன்று கிரமங்களிலும் பன்னிரு பாலைகளையும் கருவியிலே தோற்றுவித்தல், வட்டப் பாலை இட முறைத் திரிபு; எதிர் நிரனிறைப் பாலைகள் ... ௱௨

5 துததக கிரமம, விளரிக கிரமம, புதிய விளரிக கிரமம, கிரமங்களுக கிடையே யமைந்த தொடர்பு ௱௰௪

6. சகோட யாழக கருவிககு இசை கூட்டுதல ௱௨௧

7 அரஙகேறறு காதையில யாழாசிரிய னமைதி கூறிய செய்யுட பாகததுககு உரை .. ௱௨௩

௫. பண்ணியல ௱௪௧–௨௱௯

1. நாற பெரும பண, இருபததொரு திறம; பெரும பண்ணும திறமும அகநிலை, புறநிலை, அருகியல, பெருகியல என வகைபபடுதல . ௱௪௧

2. பாலை நிலையும பண ணு நிலையும . ௱௫௩

3. ஐநது கிரமஙகளிலும ஏழ பெரும பாலைக ளெயதும இசைநிலை ௱௫௮

4 பனனிரு பாலையி னுரு, திணைப பணகளின பாலை நிலையும நரமபடைவும ௱௬௬

5. நூறறு மூனறு பணகளின பாலைநிலைகளைச சுருதி வீணையி லமைததுக காடடல ௱௮௨

6. பழந தமிழிசை மரபிறகும வட நாடடிசை மரபிறகு மிடையே அமைநத தொடாபு ௱௯௩

7. ஆயசசியா குரவை—முலலைப பண ; வேனிற காதை —மருதப பண; திரிகோணப பாலை, சதுரப பாலை, இடைககாலதது வழககில நாற பெரும பண களின நால வகைச சாதிகள ௱௯௬

௬. தேவாரவியல் ௨௱௰௧–௨௱௮௯

1. இசைபபா வகை; தேவாரம எனனும பெயாக காரணம, கடடளை வகை . ௨௱௰௧

2. யாப பமைதி . ௨௱௰௩

3 பணணும, இரதமும, தாளமும எனனும மூவகைப பாகுபாடு . ௨௱௬௰

4. இசை யமைதி . ௨௱௬௪

5. சஙகீதரதநாகரததிற கணட சில தேவாரப பண கள ௨௱௬௮

எ. ஒழிபியல் ௨௱௯௧–௩௱௯௮

1 எண்ணளவை; இசைக் கணிதம், நாற்பத் திரண்டு இசை நிலைகள் (சுருதிகள்) ௨௱௯௧

2. கிராம வழக்கு வேறுபட்ட இடைக் காலத்துச் சுருதிகள், அஹோபல பண்டிதரும் வேங்கடமகியும் கொண்ட சுருதிகள் ௩௱௨௰

3 கொங்கு வேளிர் பெருங்கதையினுட் குறிப்பிட்டதும், ஆயிர நரம்பு தொடுத்தியன்றது மான பெருங்கலம் என்னும் பேரியாழ் ... ௩௱௨௮

4. குடுமியாமலைக் கல்வெட்டு ௩௱௩௬

5 இக்காலத்தில் தென்னாட்டிசையில் வழங்கும் எழுபத்திரண்டு மேள ராகங்களின் மூர்ச்சனைகள், மகரந்தமும் இரத்தினாகரமும் கூறிய காந்தாரக் கிராமத்தின் மூர்ச்சனைகள் ... ௩௱௫௪

6. அலங்காரங்கள் ... ௩௱௬௧

7. தாள வமைதி ௩௱௭௰

8. இசை நூல் வரன்முறை ௩௱௭௩

9 முடிபுரை ௩௱௯௪

அழகிய நாச்சியார் முன்னிலைப் பரவல் ௩௱௯௯–௪௱௪௧

சேர்க்கை 1–76

I தேவார இசைத் திரட்டு 1

II இசை, நாடகச் சூத்திரங்கள் 26

க. அடியார்க்கு நல்லார் காட்டியவை 36

உ அரும்பதவுரையில் மட்டும் காணப்படுபவை 69

ங. பிங்கல நிகண்டிற் காண்பவை 74

யாழ் நூல்

படங்களின் அட்டவணை

முழுப் பக்கப் படங்கள்

	ஆசிரியா அருட்டிரு விபுலாநநத அடிகள	...	3
	தமிழவேள	..	11
I	மகர யாழ (காமன கொடி)	...	முகபபு
II	வில யாழ	..	௩௧
III.	ஐயாயிரம ஆணடுகளுககு முன் னிருநத யாழக கருவி		௪௧
IV	சீறி யாழ		௫௰
	A. சகோட யாழ	...	௫௩
	A1 சகோட யாழ		௭௮
V	பேரி யாழ (மலைபடுகடா அததுட கூறபபெறறது)	.	௮௫
	B1. சகோட யாழ	..	௱௨௧
VI.	அமராவதி, கோலி என னும இடஙகளிற கணடெடுககபபட்டுச, சென்னைக காட்சிச சாலையில வைககபபட்டிருககும பாடினி யுருவஙகள	.	௱௪௧
	B. சகோட யாழ	.	௨௱௰௧
VII	மகர யாழ (வருணன ஊர்தி)	.	௨௱௬௧

சிறு படங்கள

1.	பததா, கோடு, வறுவாய	.	௪௨
2(a).	போாவை	...	௪௩
2(b).	யாபபு	..	௪௪
2(c).	உநதி	..	௪௫
2(d)	கவைககடை		௪௭
3	மகர வெலகொடி	.	௪௮
4	கட்டளை யாழ	.	௫௮
5	தூமபுமுகம அடைககபபட்ட வஙகியஙகள		௬௧
6	இருவாயுந திறநத வஙகியஙகள	..	௬௧



தமிழ்வேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை
கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் தலைவர்

முகவுரை.

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்புங்
கேட்பான் புகிலளவில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவைகேட்க தக்கார்.

என்னும் ஆளுடையபிள்ளையார் அருள்மொழி, தமிழிலக்கிய வரலாற்றிற், பல இடங்களில், தன் உண்மையைப் புலப்படுத்தி நிற்பது, ஆராய்ச்சியாளர்க்கு இன்பம் அளிப்ப தொன்றாம். சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில், 1892-ஆம் ஆண்டானது, இயலிசை நாடகம் என்னும் முத்தமிழ்த் திறனையும் தமிழறிஞர் தெரிந்து வளர்த்தற்கு வழிசெய்த சிறப்புடைய யாண்டாகும். சங்க நூற் செல்வத்தைத் தமிழுலகிற்கு வழங்கிய பெரும் பேராசிரிய ராகிய உ. வே. சாமிநாதையர் அவர்கள், சேர முனிவர் அருளிய முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தினை, அவ்வாண்டிலே தான், முழு உருவத்துடன் வெளியிட்டார்கள். அந் நூலினைக் கண்ணுற்ற தமிழ்ப் புலவர் பலரும், தமிழரது அறிவுப் பெருஞ் செல்வத்தைத் தாம் பெற்றமை கருதி மகிழ்ந்தாராயினும், அந் நூல் வாயிலாக இளங்கோவடிகள் உலகிற்கு வழங்கியருளிய இசைத் தமிழின் இயல்பினை உள்ளவாறு உணர்ந்து இசைத்து மகிழும் வாய்ப்பின்றி மயங்குவா ராயினர். சிலப்பதிகார உரை யாசிரிய ராகிய அடியார்க்கு நல்லார் காலத்திலேயே, இசை நாடகத் தமிழ் நூல்க ளாகிய தொன்னூல்கள் பலவும் வழக்கற்று மறைந்தன எனபது அவர்தம் உரைப்பாயிரத்தாற் புலனாம். சிலப்பதிகார மாகிய பழந்தமிழ் முத் தமிழின் பாட்டிற்கு விரிவுரை எழுதிய உரையாசிரியர்கள் காலத் திருந்த இசை நுணுக்கம் முதலிய இசைத் தமிழ் நூல்களும் இக் காலத்துக் கிடைத்தில. இனி, அந் நூல்களின் உதவி கொண்டு அடியார்க்கு நல்லார் எழுதிய உரைப் பகுதியில் இசைத் திறன் விளக்கும் கானல்வரி யுரை முதலிய சிறந்த பகுதிகளுங் காணப்படவில்லை. இந் நிலையில், சிலப்பதிகாரத்தில், இளங்கோவடிகள் அருமையாகப் பொதிந்து வைத்த இசைக் கலையின் நுட்பத்தினை யாம் உணர்தல் எவ்வாறு எனத் தமிழறிஞர் பெரிதுங் கவல்வா ராயினர். இக் கவற்சி நீங்கச் சிலப்பதிகாரம் வெளிவந்த 1892-ஆம் ஆண்டிலேயே, அந் நூலிற் பொதிந்துள்ள இசைத் தமிழ் நுட்பங்களை இனி தெடுத்து விளக்குதற் குரிய முத்தமிழ்ப் புலவர் ஒருவரை இறைவன் திருவருள் தோற்றுவித்தது.

ஈழ நாட்டின் கிழக்குப் பகுதியில், மட்டக்களப்பி லுள்ள காரேறு மூதூரில் வாழ்ந்த வேளாண் செல்வ ராகிய சாமித்தம்பியாருக்கும், அவர் தம் மனைத்தக்க மாண புடையா ராகிய கண்ணம்மையார்க்கும் தவப் புதல்வராக 1892, மார்ச்சு 29 (கர, பங்குனி, ௰௬)-ஆம் நாளில், முத்தமிழ்ப் புலவராகிய அருட்டிரு விபுலானந்த அடிகளார் தோன்றினார்கள். தமிழர்களின் தவப் பயனாகத் தோன்றிய அடிகளாரது இளம் பருவப் பெயர் மயில்வாகனனார் என்பதாகும். ஆங்கிலம், தமிழ் என்னும் இரு மொழிகளிலும் பெரும் புலவராய், வட மொழியும் பயின்று, எண்ணூல், பூத நூல் முதலிய அறிவியற் றுறைகளிலும் தெளிந்த புலமை எய்தி, மதுரைத் தமிழ்ச் சங்கப்

பண்டிதத் தேர்விலும், இலண்டன், பல கலைக் கழக B Sc பட்டத் தேர்விலும் வெற்றி பெற்றுப் பண்டித மயில்வாகனனார் என்னும் பெயருடன் தலைமையாசிரியராய் அமர்ந்து தொண்டாற்றினார்கள். பண்டைத் தமிழருடைய கலைத் துறை, நாகரிகம், அரசியல் என்பவற்றின் மேதகவினையும், அவர்கள் உலகமெலாம் பரவிய சீர்த்தியினையும், தமிழகம் இன்று அடைந்துள்ள இழி நிலையினையும் எண்ணி உளநெகிழ்ந்த மயிலவாகனனார் நாட்டு மக்களின் எதிர் கால ஆக்கத்திற்குத் தொண்டு செய்தற்கெனவே தம் வாழ்வினை அமைத்துக் கொள்ள விரும்பி, வங்க நாட்டில், ஞானக் கதிரவனாகத் தோன்றி உணர்வொளி பரப்பிய ஸ்ரீ இராமகிருட்டின தேவர் அருளிய மெய்ம் மொழிகளிற் றிளைத்து, அவர்தம் நன் மாணவராகிய சிவானந்த சுவாமிகளை வணங்கி, அருள்பெற்று, விபுலானந்தா என்னும் துறவு நிலைப் பெயர் எய்தி, சமயப் பணியும், தமிழ்ப் பணியும் செய்து வருவதனைத் தமிழுலகம் நன்குணரும்.

அடிகளார், இலங்கை அரசினராலே பெருமதிப்புப் பெற்ற கலைச் செல்வராகிய கைலாசபிள்ளை முதலியாரவர்களிடம் சிலப்பதிகாரத்தினை நன்கு பயின்றார்கள். முத் தமிழ்க் காப்பிய மாகிய அதனைப் பயிலுங்கால, இயற்றமிழோடன்றி, ஏனை இசை, நாடகத் துறையினையும் அறிந்து கொள்ள அவர்கள் உள்ளம் அவாவியது. ஆங்கில மொழியிற் பெரும் புலவராகிய செகப்பிரியரது நாடக நூற் பொருளினையும், வட மொழி நூல்களிற் கண்ட நாடக அமைதியினையும் சிலப்பதிகாரத்தி லுள்ள நாடக நூல் முடிபுகளோடு ஒப்பு நோக்கி ஆராய்ந்து, மதங்க சூளாமணி என்னும் நாடகத் தமிழ் நூலினை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக வெளியிட்டு உதவினார்கள். அவ்வாறே, சிலப்பதிகார இசை நூற் பொருளினையும் ஆராய்ந்து வெளிப்படுத்த வேண்டுமென்னும் பெரு விருப்பம் அடிகள் உளத்துத் தோன்றியது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதித் தலைவராக அடிகளார் தொண்டாற்றிய காலத்திலே, ஆங்குள்ள இசைக் கல்லூரியினை மேற் பார்க்கும் பொறுப்பும் அவர்களுக்கு உரிய தாயிற்று. அப்பொழுது, இசைக் கல்லூரி ஆசிரியரா யிருந்த சங்கீத கலாநிதி க. பொன்னையா பிள்ளை அவர்களிடம் கருநாடக சங்கீதம் என இக் காலத்தார் வழங்கும் இசையின் அமைப்பினை அறிந்து கொண்டு, இவ் விசைத் தமிழ் ஆராய்ச்சியினைத் தொடங்கினார்கள். 1936-ஆம் ஆண்டு, சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவிலே, பழந் தமிழரின் இசை, ஓவியம், கலையறிவு என்னும் பொருள்பற்றிப் பேச நேர்ந்த பொழுது, இற்றைக்கு ஆயிரம் யாண்டுகளாக வழக்கற்று மறைந்த பழந் தமிழரின் இசைக் கருவியாகிய யாழின் இயல்பினைச் சங்க இலக்கிய நூற் சான்று கொண்டு விளக்கி, ஓவிய உருவில் முதன் முதல் வெளிப்படுத்தினார்கள். அடிகளாரது இசை யாராய்ச்சிபற்றிய சொற் பொழிவுகளை நேரிற் கேட்டு மகிழ்ந்த பெரும் பேராசிரியர் உ. வே. சாமிநாதையர் முதலிய தமிழறிஞர் பலரும், இவ் வரிய ஆராய்ச்சிப் பொருளை நூல் வடிவில் விரைந்து வெளியிடும்படி அடிகளாரை அடிக்கடி வேண்டிக்கொண்டார்கள்.

ஈழ நாட்டிலே, ஸ்ரீ இராமகிருட்டின சங்கத்துப் பள்ளிக்கூடங்களை நடத்தும் பொறுப்பு அடிகளாரது முழு நேரத்தையும் பற்றினமையினாலே, இவ் விசைத் தமிழ்

ஆராய்ச்சி ஓரளவு தடைப்பட்டு நின்றது. இந்நிலையில், திருக்கயிலாய யாத்திரைக்குச் சென்று, அம்மையப்பரை வணங்கி மீண்ட அடிகளாரைக் கண்டு, நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைப் போற்றி வளர்த்த செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்களும், இசைத் தமிழ் நூலினை விரைந்து வெளியிட்டுதவும்படி வேண்டிக்கொண்டார்கள்.

இமயமலைச் சாரலிலுள்ள அத்துவித ஆசிரமத்திற்குச் சென்று, பிரபுத்த பாரதா என்னும் ஆங்கில மாத வெளியீட்டிற்கு ஆசிரியராக அமர்ந்து, தொண்டாற்றும் பொறுப்பு விபுலானந்த அடிகளார்க்கு உரிய தாயிற்று. இமயத்தில் தங்கியிருந்த பொழுது, பலவாண்டுகளாக ஆராய்ந்து வந்த இசைத் தமிழ் ஆராய்ச்சியினைத் தொடர்ந்து முடித்தற் கேற்ற வசதி ஏற்பட்டது. பின்னர், ஈழ நாட்டுப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்ற இயைந்தமை இவ் விசை யாராய்ச்சி நிறைவு பெறுதற்குப் பெருந்துணை செய்தது. தமிழ்த் தெய்வத்தின் திருவருளால், பழந் தமிழ் யாழைக் கருவியினை மீட்டும் உருவாக்கிப், பண்டையோர் வளர்த்த இசை நலங்களை யெல்லாம் இசைத்துக் கேட்டு மகிழ்தற் குரிய இசைத் தமிழ் முதல் நூலாக யாழ்நூல் என்னும் இவ் அரும் பெரு நூலினை அடிகளார் தமிழகத்துக்கு வழங்கியுள்ளார்கள்.

'நரம்பின் மறை' எனத் தொல்காப்பியரும், 'இசையோடு சிவணிய யாழின் நூல்' எனக் கொங்குவேளிரும் குறிப்பிட்ட யாழ் நூற் பொருள் இருந்த இடம் தெரியாது, மறைந்தொழிந்த இந் நாளிலே, விழுத்தக்க பெரும் புலமையினாலும், தம் உயிர்க்குயிராய உள் நின் றுணர்த்திய திருவரு ளுணர்வினாலும், பண்டைத் தமிழ் நூல்களிலுள்ள அரும் பொருள்களை நுண்ணிதிற் கண்டுணர்ந்து, இவ்விசைத் தமிழ் நூலினை நிறைவு செய்துள்ளார்கள். சிலப்பதிகாரத்தில், அரங்கேற்று காதையினுள்ளே, யாழ் ஆசிரியன் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்கு இயைந்ததொரு விரிவுரையாக இவ் யாழ்நூல் அமைந்துள்ளது.

இசைத் திறம் அனைத்தும், பிறர் கருதுமாறு போல, முனிவர் முதலியோரால் ஒரு காலத்துத் திடீரெனப் படைக்கப்பட்டன ஆகாமல், கற் றோன்றி மண் தோன்றாக் காலத்தே, வில்லோடு முற்றோன்றி, மூத்த குடிமக்கள் காலந் தொடங்கி, நாளும் நாளும் சிறுகச் சிறுக வளர்ந்து, பண்பட்ட வரலாற்றினை இவ் யாழ்நூல் தெளிய விளக்குவ தாகும். அன்றியும், இசைத் தமிழ் நூல்க ளெல்லாம் வழக்கற்று மறைந்தன எனப் பழைய வரலாறு கூறி இரங்கிய கவற்சியினை நீக்கி, அங்ஙனம் இழந்த பெரு நிதியத்தை மீண்டும் உருவாக்கி உலகத்தார்க்கு அளிக்கும் செயற் றிறம் உணர்த்தும் நூலாகவும் இந்நூல் திகழ்கின்றது.

இந் நூல் தோன்றிய வரன்முறையினையும், பிறவற்றையும் யாழ்நூ லாசிரியர் முன்னுரையினும், முடிபுரையினும் தெளிய விளக்கி யுள்ளார்கள். இதுகாறும் சிலப்பதிகாரத்தைப் பயில்வோ ரனைவரும், அதன்கட் கூறப்பெற்ற இசைப் பகுதிகள் நீங்கலாகப் பயில்வது வழக்கம். பல்கலைக் கழகத்தாரும், சிலப்பதிகாரத்தைப் பாடமாக அமைக்குங்கால், அரங்கேற்று காதை நீங்கலாகப் பாட திட்டத்தினை வகுத்து வருவது வழக்கம். இங்ஙனம் புலவர்களாலும், பல்கலைக் கழகத்தாராலும்

அறிதற்கு இயலாதன வென ஒதுக்கப்பெற்ற இசை-நூற் பொருள்களை விளங்க எடுத்துரைக்கும் இசைத் தமிழ் முதல் நூலாக இவ் யாழ் நூல் வெளிவருவது தமிழகத்தாரது நற் பேறே யாகும்.

ஆயிரம் ஆண்டுகளாக வழக்கற்று மறைந்த இசைத் தமிழாகிய அருங்கலை நிதியத்தின் பெருமையினையும், அதனைத் தம் நுண்ணுணர்வால் ஆராய்ந்து கண்டுணர்ந்த அருட்டிரு. விபுலானந்த வடிகளாரது புலமை மாண்பினையும், இவ் யாழ்நூல் இனிது புலப்படுத்துவ தாகும். செழுங்கலை நியமம் மெனத் திகழும் நம் அடிகளார் அவர்கள் கற்றுணர்ந்த பலவகைக் கலைகளும், இவ் விசை நூலாராய்ச்சிக்குத் துணை செய்தன என்னும் உண்மை, இந் நூலைப் பயில்வார்க்கு எளிதிற் புலனாம். முத்தமிழ்ப் புலமை வித்தகராகிய இளங்கோவடிகள், தம் இளமைப் பருவத்தே, அரசியற் செல்வத்தைத் துறந்து, 'சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து அந்தமில் இன்பத்து அரசாள் வேந்து' எனக் கண்ணகியாரால் பாராட்டப் பெறும் சிறப்பெய்தி, செந்தமிழின் முத்திறனும் செழிக்கச் சிலப்பதிகாரத்தினை யியற்றி யருளியது போலவே யாழ்நூ லாசிரிய ராகிய அடிகளாரும், இளமைப் பருவத்தே, உலகியற் செல்வங்களை வெறுத்துத், துறவுநிலை மேற்கொண்டு, சேர முனிவரின் திருவடித் துணையைப் பற்றித், தவ நிலையில் நின்று, அரும் பெறல் நூலாகிய இவ் யாழ்நூலினைத் தமிழுலகுக்கு உதவியுள்ளார்கள். அடிகளாரை இவ் விசைத் தமிழாராய்ச்சியிற் பெரிதும் ஊக்கிய செந்தமிழ்ப் புரவலர், தமிழ்வேள் உமாமகேசுவரம் பிள்ளை யவர்களின் அன்புக் குரிய நிலைய மாகிய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக இவ் யாழ்நூல் வெளிவருவது பெரிதும் பொருத்த முடையதே யாகும்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகத் தமிழ்த் தொண்டு செய்துவருகின்ற அடிகளா ரவர்கள், பண்டைத் தமிழர் இசை நலன் உலக மெலாம் பரவும் வண்ணம், இவ் யாழ்நூலினை, ஆங்கில மொழியில், மொழி பெயர்த்து வெளியிடுவதுடன், ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்ப் புலமை உலக மெலாம் பரவ ஆங்கிலத்திலும், தமிழிலும், இதுபோன்ற ஆராய்ச்சி நூல்களை யியற்றித் தமிழகத்தை யுய்வித் தருள்வார்களாக என அவர்கள் திருவடிகளைப் பணிந்து வேண்டுகின்றேன். அடிகளாரது தமிழாராய்ச்சிக்கு வேண்டும் வசதிகளை யெல்லாம் தமிழ்ச் செல்வர்களும், பல்கலைக் கழகத்தாரும் அவ்வப்போது செய்து புகழ் பெறுவாராக.

புலமைக் கருவூல மாகிய அடிகளா ரருளிய யாழ் நூற் பொருளினைத் தமிழறிஞர் யாவரும் நன்கு பயின்று, நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்து, நலம் பெறுக எனத் தமிழ்த் தெய்வத்தின் திருவடிகளை வாழ்த்தி வணங்குகின்றேன்.

இன்னிசைதோ யாழ்நூ லிசைபரப்பி னன்புலமை
மன்னுவிபு லாநந்த மாமுனிவன் — தொன்மைத்
தமிழ்ப்புலமை மல்கத் தமிழ்வளர்த்து வாழ்க
இமிழ்கடல்சூழ் ஞாலத் தினிது

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சை.
5—6—1947.

நீ. கந்தசாமி,
அமைச்சர்.



திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில் ஆளுடையபிள்ளையார் திருமுன் கூடிய புலவர் பேரவையில்
நூலரங்கேற்றுதற்கு யாழ்நூலாசிரியர் எழுந்தருளுந் தோற்றம் (5—6—47)

உ

சிறப்புப் பாயிரம்.

உலகமெலாங் களிகூர ஒளிர்தமிழி னியல்வளர
இலகுதமி ழிசைவழக்கே எம்மருங்கும் வளர்ந்தோங்கப்
புலவருள மகிழ்கூர யாழ்நூல்செய புலவர்பிரான்
மலரடியென் சென்னியினு மனத்தகத்தும் மலர்ந்துளவால்.

வேறு

ஒளிர்பரிதி யியக்கத்தாற் சிதர்ந்துதிர்ந்த தோர்பகுதி யுலக மாகி
மிளிர்மலையாய் விளங்கியவந் நாள்தொட்டே நாகரிக விறலான் மிக்குக்
குளிர்கடலி னிடைமிளிர்ந்த குமரிநிலப் பெருமக்கள் குறிப்பிற் றோன்றுந்
தெளிதமிழி னியலபுணர்ந்தார் தெளிவுநிலை பெற்றோங்கித் திகழ்ந்தா ரன்றே.

உள்ளததாற் பொருளியலடை யுணர்ததுமொழி யியலென்பா, உணர்ச்சி வேக
வெள்ளத்தா லெவ்வுயிரும் மகிழ்ந்திசைய ஓசைநலம விளங்க வின்பங்
கொள்ளசசெய் உரைத்திறத்தாற் குலவுமொழி யிசையென்பர், குறித்த செய்கை
விள்ளத்தா னதுவாகப் பயிற்றுமொழி நாடகமா விரிப்ப ராலோ

பெருநாரை பெருங்குருகு முதலியநல் லிசைநூல்கள், பேணத் தக்க
பொருளார்ந்த தமிழப்பரதம் முறுவலசெயிற் றியநகுண நூல் சயந்த மென்னுந்
திருவார்ந்த நாடகச்செந் தமிழ்நூல்க ளானவெலாம் திகழ்தென் னாட்டில்
வருவார்போ வார்தமிழி னியல்பனைத்து முணர்ந்துமனம் மகிழ்ந்தார் மன்னோ.

அசைவில்செழுந் தமிழவழககே குமரிமுத லிமயம்வரை யமைந்த வந்நாள்
திசைமுழுதும் மெய்யறிவு சிறநதோங்கத தமிழப்புலவர் திகழ்ந்தார், தங்கள்
இசைநிலையை வளர்ததிட்டார், யாழகுழலென் றெத்துணையோ கருவி கண்டார்,
வசையொழிய வளம்பெருக அறம்வளர்ததே தமிழர்நிலை மாணபுங் கண்டார்

புனத்தகத்தே பொழிலகததே புறவார்தண் பணையகத்தே புன்னைக் கானல்
கனைத்ததிரை தவழ்மருங்கே கான்யாறறே யருஞ்சுரத்தே காத லின்ப
மனததகததே மகிழ்சுரக்கும மனையகததே மன்றிடத்தே மற்று மாங்கே
இனிததமி ழிசைபரவு மியல்கண்டார் இன்பநிலை யெங்குங் கண்டார்.

மூவாத விளைமைமிளிர் முத்தமிழி னியல்புணர முன்னோர் தநத
தாவாத தமிழ்நூல்க ளெத்துணையோ தென்மதுரைத தலைச்சங் கத்தே,
பாவார்ந்த கபாடபுரச் சஙகததே, கூடலிலே பயின்ற யாவும்
ஓவாத கடல்கோளால் மேவார்செய் சழக்கதனு லொழிந்த வந்தோ.

அதனால்,

ஆருயிரைப பொருடபடுத்தா தமரகததே தறுகண்ண ராறறும் வெற்றிப்
போரினையும் புகழசான்ற தமிழிளைஞர் காதலராய்ப் புணர்ந்து வாழுஞ்
சீரினையும் தெய்வவிழாச் சிறப்பினையும் நாடெங்குஞ் சிறக்கப் பாடிப்
பார்புகழ இசைவளர்க்கும் பாணரெனுந் தமிழ்க்குலத்தார் பரிசு தேறேம்

காதலையும் வெற்றியையுங் கவின்பெறவே வளாததுமனக் கவலை மாற்றித்
தீதொழிய அசசமுடன் பெருமிதத்தை யளவுபெற நிறுத்திச் சீரசால்
மாதரொடு மைந்தாகளு நாவிலததைந் திணைமரபின் மகிழந்து வாழ
ஆதரவா யமைநதிசைந்த யாழொடுபண் பாலைமுத லனைத்துங் காணேம

செந்துறைவெண் டுறைதேவ பாணியொடு வணணமிவை தெளியத தேறேம
சந்தமுள வரிப்பாட லுரிப்பொருளின் றுறைமுறையே தழுவப பாடிப்
பைநதொடியாா யாழதனை யிசைத்துமகிழ தரககாணேம் பாரோர் போற்றும்
நந்தமிழி னிசையுணரார் வசையுரைபபார் நிலைகணடு நடுஙகி னேமால்

சேரரிளங் கோவடிகள் செந்தமிழின முத்திறமுஞ செழிதது மல்க
ஆவமுறச் செய்தளித்த சிலப்பதிகா ரததமைந்த அரிய வுண்மை
தேர,அடி யார்க்குநலலார் இயறறியரு ளுரையகததே சிறபபக காட்டும
பார்பரவு மிசைநுணுக்கம் முதலான நூல்களிவண பயிலக காணேம.

கானல்வரி யுரைகாணேங கற்றறிந்தா போறறவுளக கருத்தை யீாக்குந
தேனனைய பரிபாட லிசையமுதம் செவியினிக்கக கேளோந தெயவ
ஞானமுணர் பிள்ளையார் தமிழ்படாநத யாழ்காணேம நாளுநம இனனே
மானமுடைத தமிழர்குலம் மதியிழந்த வகைகணடே மருளகின் றேமால

அவ்வழி,

இன்னபல பலநினைந்தே தமிழருளங் கவலபொழுதி லிளஙகோ வென்னும்
மன்னவனே தமிழ்வளர்கக மீட்டுமிவண் வந்தடைந்தான் மகிழமி னெனனத
துன்னியிவண் முத்தமிழுந துறைபோக வாயந்துணர்ந்து தொகுத்து நோக்கி
இன்னிசைதேர் யாழநூலை யியற்றினான் அவனசீாததி இயம்பக கேணமின்.

தென்னிலஙகைக குணபாலிற காரேறு மூதூரிற சிறநது தோன்றும
தன்னலமில் வேளாளா குலததலைவன உயாசாமித தமபி யெனபான்
நனனலஞ்சார் கண்ணமமை தனை மணநது மனையறஞ்செய நலததா லென்றும்
மன்னுதமிழ் வளமலிய மயிலவாக னப்பெயாகொள மகன்வந் துற்றான்

அவனுநதான,

தந்தைதா யுளமகிழுக கலைககழுகந தனையடைநதே தகுதி விஞ்சச்
செந்தமிழும ஆங்கிலமும வடமொழியும நனிபயின்று தோந்து கண்ணுய
வநதவெண்ணூல் பூதவிய லறிவியனூ லெனைப்பலவும பயின்று தேறி
முநதுபல கலைநலநதேர் முருகனென்ப புலமைநலம் முதிரப் பெற்றான்

சிறப்புப் பாயிரம்

தண்ணளிசே நல்லுளமுந தகைசான்ற பெருஞ்சால்புந் தழுவப் பெற்ற
கண்ணம்மை கைத்தலத்தே வளர்தருநாள முதறகொண்டே கருததி லென்றும்
பண்வளர்செந தமிழ்ப்பண்பாம தீஞ்சுவைப்பா லினைப்பருகி மகிழ்நதான், இந்நாள்
எண்வளர்பல் கலைகளெலாந் தமிழவழியே பரபபவுளத தெண்ணி னுைல

கயவாகு போற்றவொளிர் கண்ணகியார திருககோயில கண்டு தாழ்ந்து
செயலாரும் புகழபுரிந்த கண்ணமமை மகவாகித திகழுஞ் சீரததி
இயல்பாகப பெறறதனுல, சிலபபின்முதற் பதிப்பாண்டிற் பிறதத லாலீண
டியலிசைநா டகப்பொருளசேர் தொடாநிலையி லிவனுள்ளம இயைநத தாலோ.

கருஙகடலிற் கலமுகைத்துக் காறறினையே தொழிலகொளளுங கருததுமுற்றி
விரும்பியநல் யவனம்வளர் கிரேதத*முத லாகவெஙகும் மேவி முனனுள
ஓருஙகுவளா தமிழகுலத்தார உலகமெலாம் பரவியதோ ருயாவு கேட்டும்
மருஙகறியாா அடிமைகளாய மடிகின்ற தமிழாநிலை கணடு மாழகி,

சிந்துநதிக கரையிலிநநா ளகழநதுகாண மீனுடடிற றிகழநத முன்னோா
சிநதைமகிழ செலவவளந திகழநதொளிரு நாகரிகச சீரததி பெறறே
முந்துபல்லா யிரமாணடின முன்னரே புகழவளாத்த முறைமை கண்டும்
செந்தமிழர் வாழுமவகை யறியாது தேமபுநிலை யகறறல தேர்நதே,

பண்டைமுறை யேயினறுந தமிழருயர் நிலைபெறறுப் பாரில வாழத
தொண்டுசெயும பெருஙகாதல உளததகததே கிளாநதெழலால தோற்றுந் திண்மை
கொண்டுலகிற றுன்பகறறுந் துறவறமேற கொணடுழைக்குங குறிககோள் மேவித்
தண்டமிழா போறறுமயில் வாகனனா துறவறததிற சாாந்தா ரன்றே

திருவளரு மயோததிநகர் வந்தஅருந திறல்திகழும் ஆயா பாடி
மருவிவளா கணணனெனு மிருவருமோ ருருவாகி வஙக நாட்டிற
பெருகுபுகழ காமாரபு கூாதனிலே பிறநதருளும பெரியோன் செயய
திருவடியிற் பணிபுரியுஞ் சிவானநத முனிவனடி சென்னி சேர்த்தி,

அப்பெரியோ னருண்மொழியைச செவிமடுததே யருளறஞ்சே ரன்பி னுலே
மெய்ப்பொருளை யுணாநதுமகிழ் தவநிலையிற றலைப்படுநன் மாண்பின் மேவி
இப்பெரிய வுலகததே யெவவுயிாக்குந துன்பகறறி யின்ப நல்கும
ஒபபரிய புலமைவிபு லாநந்த அடிகளென ஒளிாகின றுைல.

வேறு

அறிவியற பொருளி னியலபினை விளககும அருந்தமிழ்க் கட்டுரை வரைந்தான,
பிறமொழிப் புலவா பாநலந தமிழிற் பெயாததுளஞ் சிறந்தனன், புலமைத
திறமலி கலைதோ மாணவர் தமககுச செந்தமி ழியலவளந் தெரிககும
அறம்வளர் பணிபூண் டறிவினு லின்ப மார்தரச் செய்தன னனறே.

*Crete

ஒப்பருந் திறத்தால் நாடகத் தமிழி னுயர்வினை மதித்துள முவந்தே
செப்பருஞ் சீர்சால் செந்தமிழ் முடிபும் சிறந்தமே ணுட்டவர் திறமும்
இப்பரி சென்றே யாவரு முணர மதங்கசூ ளாமணி யெனுநூல்
மெய்ப்பட வடிக்கும் விறல்மிகத் தந்தான் வியந்திவற் புகழுந்தனர் புலவர்

ஆங்கில மொழியிற் புலவராம் பெரியோர் அருந்திறற் புலமையிற் றிளைத்தே
பாங்குறு மவர்தம் பாக்களிற் சுவைதேர் பயிற்சியின் முதற்படி யாக
ஆங்கில வாணி யெனப்பெயர் தந்தே அவர்சொலுங் கவிகளிற் சிலதேர்ந்
தோங்கிய சுவைதேர் தீந்தமிழ்ப் பாட லுரையினை யியற்றினன் மாதோ

வேறு

செல்வ னண்ணு மலைநிறுவுஞ் செழுங்கலைதேர் நியமமெனத் திகழும் எங்கள்
தில்லை நகர்க் கழகத்தும் தென்னிலங்கைத் தீவகத்தார் பயிலுஞ் சீர்சால்
பல்கலைதேர் கழகத்தும் பாங்குபெறுந் தமிழ்த்தலைமைப் பண்பா ரின்பம்
மல்கவரும் பேராசான் மன்னியபல் கலைவளாத்தே மகிழுந் தோன்றல்.

கானருகே வயலருகே கடலருகே மலையருகே வாழும் சான்றோர்
தேனெனவே வளர்த்ததமி ழேழிசைநூற் றிறங்கண்டே தெளிவான் ஓர்நாள்
மீனொளிருங் கடலிலங்கை விளங்குமட்டு நீர்நிலையு ளெழுநல் லோசை
தானுணர்ந்தே யேழிசைதே ராராய்ச்சித் திருத்தொண்டிற் றலைநின் றுேனல்

இசையுருவாய் நின்றபிரா னெழுந்தருளுந் திருக்கயிலை யிறைஞ்சிப் போற்றும்
நசையதனுல் நம்பெருமான் திருவடியே துணையென்ன நயந்து வானின்
மிசையவருஞ் செலற்கரிதாய் அம்மையப்பர் வீற்றிருக்கும் மேன்மை பெறவே
திசைமுழுதும் விளக்கியசீர்த் திருமலையை வலங்கொண்டு திகழ்ந்தா னன்றே

பனிமலையின் பாங்கரொளிர் திருக்கயிலா யப்பரப்பிற் பால்போற் றேன்றி
யினிமைதரு மானதநீர்த் துறையாடி இறையருள்சே ரெழில்பெற் றேங்கித்
தனிமையொளிர் தவநெறியால் மனமாசு தவிர்ந்திறைவற் றுழந்து போற்றிக்
கனிமனத்தால் கண்களெலாம் நீர்மல்கக் கசிந்துருகும் வாழ்வு பெற்றுன்

மலைசிலையா எடுத்தபிரான் மகிழ்ந்தருளுந் திருக்கயிலை யெனனுந் தெய்வ
மலைதலையா லேவணங்கி மகிழ்ந்திடுநற் பேறுபெறு மாண்பன எங்கோன்
மலைவறமெய்ந் நூற்பொருளை மனங்கொள்வோ ரொருமைநிலை வளர்த்த தெய்வ
மலைமிசையி னிருப்பரென மனங்கொண்டே வளரிமயஞ் சார்ந்தான் மாதோ.

வேறு

துயிலுணர்ந் தெழுந்த நாவலந் தீவாந் தாயதோ ரிதழ்வெளி யீட்டிற்
பயிலுநல் லாசா னெனவமர்ந் தொண்மை பரப்புநற் பொருளுரை வழங்கி
அயலவர் மதித்து மகிழ்தரத் தமிழ்நூ லரும்பொருள் பரப்பினுன் அன்பின்
இயல்வளர் இமயத் தவநிலை யுறைந்தே யின்றமிழ்ப் பணிபல புரிந்தான்

சிறப்புப் பாயிரம்

ஐயிரண் டாண்டா யிரவொடு பகலும் அருந்தமி ழிசைததுறை யாய்ந்தே
மெய்மைசேர் நூலின் றுணிபொருள் பலவும் விளங்கிட ஒருமைசே ருளத்தால்
தெய்வநல் லிமயச் செழுமலை யுறைநாள் திகழ்மலை மகள்திரு வருளால்
ஐயமற் றெழிய முடிபொருள் பலவும அறிவினிற் றிகழதர வறிநதான்

அஙகமர் நாளில் நபபியா ரூரர் ஆளுடைப் பிள்ளையா ரிவர்கள்
பொங்குபே ரன்பாற் போற்றிசெய் திசைத்த பொற்புறு திருப்பதி கச்சீர
தங்குகே தாரத் திருமலை யெதிரே தோன்றிடத தாழநதெதிர் போற்றி
அங்கணா தமிழுக் கருளிய வினிமை யார்நதுளங் தேககின னன்றே.

இன்னிசை வழியே நற்றமிழ பரபபும் இயலபுடைச சமபநதர்க் கநாள
முன்னிலைத் தோன்றி ஞானவா ரமுதம் மருத்திய முதலவியெம் அன்னை
சொன்னிலை வளஞ்சால சிலபபதி காரத் தொகுபொரு ளாய்ந்திடு காலைப
பன்னிரு பாலைத திறமுணின் றுணர்த்தப பாங்குற வுணர்ந்துள மகிழ்ந்தான்

இரவினில யாமப் பொழுதிலே யொருநா ளிசைத்தமிழ வளநதெரிந தருளி
உரவனெம் அடிகள ஒளிபெறு முள்ளத் துவகைமிக கோஙகிட வெழுநதே
பரவின னுமையைப் பாடினுன் பணிந்தான் பராவருங காதல்மிக் கிசையின்
மரபினைத தெரிக்க வகுத்தனன் இசைநூல் வண்டமிழ வளர்ந்தது நன்றே

வஙகமாா கடல்சூ ழிலங்கைநாட் டினிலே யமருநாள் மன்னிய அன்பின்
பொங்குநற் புகழான் சிதமபர வள்ளல் பொறபுறு பணை*யின் மேவித
தஙகிய பொழுதிற் புத்தர்சீர் பரவு சமனொளி திகழ்தரப் பணிந்தே
அங்கமர் திறத்தால் ஆயிர நரம்பின் ஆதியா ழமைதிகண் டறிந்தான்.

முன்னைநான் மறையின் முறபட வளர்ந்த முதன்மைசால் தமிழிசை மரபும்
நன்னரார் சங்கந் திகழ்நதொளிர் நாளில் நயம்பெற வளர்ந்தநற் றிறமும்
பின்னைநா ளிளங்கோ செயதருள சிலம்பிற் பிறஙகிய இசைக்கலை நயமும்
இன்னிசைக கருவி குழல்வழி நின்ற யாழுறுப் பமைதியா மியல்பும,

இனிமைதேர் யாழிற் றேனென விமிரும் ஏழிசை நரம்பிய லமைவும்
முனிவர்தம பெருமான சேரர்தங குரிசில் மொழிந்தநூற பாலையின் றிரிபும்
தனிவளர் புலமைத் தமிழாகாண் நூற்று மூன்றெனும பண்ணியல் வகையும்
பனிமதிச் சடையோற பரவுதே வார யாப்பிய லமைதியாம் பரிசும்,

குடுமியா மலையிற் பல்லவர் கோமான் குறித்திடு மெழுத்தினிற் காணும்
வடுவிலா விசையும் சாரஙக தேவர் வண்டமிழ நாட்டினிற் போந்த
அடைவினை யுணர்ந்தே யியற்றிடு நூலி னமைந்ததே வாரநல் லிசையும
முடிவிலா வின்ப இசைநிலை யுணரக் கிளந்திடு கணிதநூன முறையும்,

* Woodstock Estate, Ceylon

யாழ் நூல்

ஏழிசை மரபின் உலகவர் கண்ட இயல்புதேர் பிறபொருள் வைப்போ
டேழியல் வகுத்தே யெழின்மிகும் யாழ்நூ லெனுமிஃ தியற்றினன், தமிழா
வாழ்நல் வழிகண் டுணர்வினை யருளி வளர்விபு லாநந்த னென்பான்,
ஆழிசூ ழுலகி லறிவொளி பரப்பும் ஆண்மைபெற் றெழுந்தனன் தமிழா

இயல்வளங் காணேம் இசைவளங் கேளேம் என்றுமுன் இரங்கிய தமிழா
துயரொழிந் துவப்பா ராகவித் தோன்றல் துறவற நெறிதலை நின்றே
மயர்வறத் தெளிந்தீ ராயிரம் யாண்டாய் மறைந்தொழி யாழ்த்திறங் கண்டென்
துயர்தவிர்த் துவந்தான் எனத்தமி ழன்னை தொல்லெழில் பெற்றுள முவந்தாள்

இனிமுத லாக ஏழிசை வளங்கண் டெழில்பெறும் இசைநலம் என்றும்
தெளிதர, மறைந்த பழந்தமிழ் நூல்கள் புதுநலம் பெற்றொளி திகழ,
ஒளிர்தரு பண்டைச் செம்முறைக் கேள்வி* யுருநலம் பெற்றிசை பரப்ப,
அளிதரும் அடிகள் நூல்நலங் கண்டா ரனைவரு மகிழ்ச்சியிற் றிளைத்தார்.

வாழி தமிழா வளர்புகழால் ஞாலமெலாம்
ஏழிசைதோ யாழ்நூ லிசைபரப்பி — வாழியரோ
வித்தகனூர் எங்கள் விபுலாநந் தப்பெயர்கொள்
அத்தனார் தாளெம் அரண்

இந்நூற் பாயிரஞ் செய்தான், யாழ்நூ லாசிரியர் மாணவரு ளொருவ னாகிய க. வெள்ளைவாரணன்

* செம்முறைக் கேள்வி யாழ்நூல் ௩௰௬-ஆம் பக்கம் பார்க்க



திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில் ஆளுடையபிள்ளையார் திருமுன் கூடிய புலவர் பேரவையில் யாழ்நூலாசிரியர் நூலரங்கேற்றும் தோற்றம் (5—6—47)

உ

கணபதி துணை

யாழ் நூல்

க—பாயிரவியல்

1. தெய்வ வணக்கம்

முத்தப்பிள்ளையார்

உழையிசை இபமென உருவுகொள் பரனை உமைதிரு வுளநிறை அமிழ்துகு மழலை
மொழியுரை குழவியை அழகறி விளமை முழுதியல் வரதனை முறைமுறை பணிவாம்
புழைசெறி கழைகுழ லிசைபொழி பொதியம் புகழுற வளருறு புலமகள் பனுவல்
இழையணி தமிழ்மகள் எமதுளம் உறையும் இறைமகள் இசையியல் வளமுறு கெனவே.

இளையபிள்ளையார்

இளியொன் றின்ற இசைதந்த மஞ்ஞை எழிலொன் றூரும் இளையோன்
கிளியொன் றின்ற மழலைக்குறத்தி கிழவன் பதங்கள் பணிவாம்
அளியொன் றுசோலை வளிநின்ற கூடல் அரவிந்தவாவி உறைவாள்
ஒளியொன் றுமேனி உரவோளெம் மம்மையை உரையெங்கு மோசை உறவே.

நிலங்கடந்த நெடுமுடியண்ணல்

விளரியிசை ஆனிரைகள் விழைமுல்லைக் குழலிசைத்து விலவீ ரற்குக்
களரியினில் மறையிசைத்த கடல்வண்ணன் பதவிணையைக் கருத்துள் வைப்பாம்
முளரிமலர்த் தவிசிருத்தி முடிமன்னர் அடிபணிந்த முறைமை யாலே
வளரிமயம் வரையாணை வகுத்தளித்த தமிழரசி வாழ்க என்றே

திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள்

தாரம் உய்த்தது பாணற் கருளொடே தாளம் ஈந்தது காழியர் கோவுக்கே
சீரும் பாணியும் தூக்கும் இசையவே தெய்வ மாநடங் கொண்டது தில்லையில்
ஓரும் வேதத்தின் உச்சியில் நின்றதாள் உள்ளி ஏத்தி வணங்குதும் பைந்தமிழ்
பாரில் எங்கும் பரந்திசை கூடியே பண்டி ருந்ததோர் பண்பினை எய்தவே

வெற்றிவெல்போர்க் கொற்றவை

சூல்இசைய வண்டுழுத குழற்கோதை சரியக
 கொடியதொழில் வாளவுணர் குலமுதல்வர் இரிய
உரகமணிக் கச்சசையப் பொற்சிலம்புங் கழலும்
 ஒலிக்கமரக் காலரடும் ஒண்டொடியைப் பணிவாம்
இரவிகுணத் திசையெழலும் இருளகலு மாபோல்
 இதயவிருள் அகலவரும் எழில்முகத்து நங்கை
பரவியுளங் குளிர்கவென மணிமொழியைப் பகர்ந்தாள்
 பாரெங்கும் இவள்பெருமை பரந்திடுக எனவே.

திருவின்செல்வி

துத்தத் திசைபயில் கிளிமொழி மலர்மகள்
பத்தர்க் கருள்புரி பதவிணை பரவுதும்
வித்தகக் கலையினில் உயர்வுறு தமிழ்மொழி
எத்திக் கினுமியல் இசையொடு மருவவே.

இசைமடந்தை

கைக்கிளை நருக் கட்டிய நரம்பிற் கலந்துகின் றினனிசை எழுப்பி
மைக்கிளை கட்டுப் பகையிணை தெரிந்த மெல்லியல் இணையடி பணிவாம்
புக்கிளை யாத புலமையின் ஊற்றுய்ப் பொருந்தினர்க் காரமிழ் தாகி
எக்கிளை ஞரினும் மிக்கஅன் பளிக்கும் இருந்தமிழ் அணங்கினை உவந்தே.

2. இசைநரம்புகளின் பெயரும் முறையும்

தெய்வ வணக்கமாக மேலேகூறிய ஏழுபாடல்களின் பொருளினைக் காணப் புகுமுன், அவைதமது முதன்மொழிகளை நோக்குவோமாக அம் முதன்மொழிகள் உழை, இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை என அமைந்து ஏழிசைகளின் பெயர்களாகின்றன. சிலப்பதிகாரத்திலே

'மேலது உழையிளி கீழது கைக்கிளை' என அரங்கேற்றுகாதையினுள்ளும்,

'பிழையா மரபின் ஈரேழ் கோவையை
உழைமுதற் கைக்கிளை யிறுவாயாகக் கட்டி' என வேனிற்காதையினுள்ளும்,

'செந்திறம் புரிந்த செங்கோட் டியாழில்
தந்திரி கரத்தொடு திவவுறுத் தியாத்து
ஒற்றுப் புடைமையிற் பற்றுவழிச் சேர்த்தி
உழைமுதற் கைக்கிளை யிறுவாயாகக் கட்டி' எனப் புறஞ்சேரியிறுத்தகாதையினுள்ளும்

கூறப்படுதலின், சகோடயாழிலுஞ் செங்கோட்டியாழிலும் நரம்புகள் உழைமுதற் கைக்கிளையிறுவாயாகக் கட்டப்பட்டன என அறிகின்றாம்.

'ஈரேழ்தொடுத்த செம்முறைக்கேள்வி' எனவும, 'பிழையாமரபின் ஈரேழ் கோவை' எனவுங் கூறப்பட்ட சகோடயாழின் பதினான்கு நரம்புகளிலே, முதல் நான்கு மெலிவுத்தானத்திலும், இடை ஏழு சமனதானத்திலும், இறுதி மூன்று வலிவுத் தானத்திலும் நின்றன.

மெலிவு	சமன்.	வலிவு
உ. இ வி தா.	கு. து. கை உ. இ வி. தா.	கு. து. கை.

அவை அவ்வாறு நிற்றலின் சமன்தானத்து ஏழு நரம்புகளும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் முறையாக அமைந்தன.

இனி, 'வண்ணப்பட்டடை யாழ்மேல்வைத்து', என அரங்கேற்றுகாதையி னுள்ளும், 'குரலவாய் இளிவாய்க் கேட்டனள்' என வேனிற்காதையுள்ளும் வருத லானும், பன்னிரண்டு இராசி வீடுகளிலே ஏழு இசை நரம்புகளையும் நிறுத்துமிடத்துக் குரல் துலாத்திலே நிற்க இளி இடபத்திலே நிற்றலானும், குரல்நரம்பு மாயோ னுகுமிடத்து இளிநரம்பு முன்னோனுகிய பலபத்திரனுகுமென ஆய்ச்சியர்குரவையுட் கூறப்படுதலானும், 'பட்டடை—நரம்புகளில இளிக்குப் பெயர், என்னை ? எல்லாப் பணணிற்கும் அடிமணையாதலின்,' என அடியார்க்கு நல்லார் கூறுதலானும், பண்டை இசையாசிரியர் இளிக்கிரமத்திலே, இளிமுதலாக நரம்புகளை வைத்தனரென அறிகின் ரும் அங்ஙனம் வைக்குங்கால் அவை இளி, விளரி, தாரம, குரல், துத்தம், கைக்கிளை, உழை என நிற்பன பிற்காலத்தாரும இம்முறையே கொண்டனரென்பதைப் பின்னர்க் காட்டுதும்.

தாரக்கிரமத்திலே தாரம் முதலாகவும், குரற்கிரமத்திலே குரல் முதலாகவும், நரம்புகள் வைக்கப்பட்டன இங்குக் குறிப்பிட்ட தாரக்கிரமம், குரற்கிரமம், இளிக் கிரமம் எனனும மூவகைக் கிரமங்களின் இலக்கணம் மேல்வரும பாலைத்திரிபியலினுட் கூறப்படும்

'தாரத்துட் டோன்றும உழையுழை யுட்டோன்றும
ஒருங் குரலகுரலி னுட்டோனறிச—சேருமிளி
யுட்டோனறுந துத்தத்துட் டோனறும விளரியுட்
கைக்கிளை தோன்றும பிறப்பு'

என்றமையின், பிறப்புமுறையிலே ஏழு நரம்புகளும் தாரம், உழை, குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளையென நின்றனவெனபதும் அறியக்கிடக்கின்றது.

3. இசைநரம்புகளின் ஓசைகளும், அவை தமக்குப் பிற்காலத்தார் வழங்கிய பெயர்களும்

முதற்பாட்டிலே 'உழையிசை இபம்', அஃதாவது உழைநரம்பின் ஓசையைத் தருகின்ற யானை என்றும்.

'வேண்டிய வண்டும் மாண்டகு கிளியும
குதிரையும யானையுங் குயிலுந் தேநுவும
ஆடுமே என்றிவை எழிசை யோசை' எனப் பிங்கலந்தையும,

'வண்டு கிள்ளை வாசிமத யானை
தவளை தேநுவா டேழிசை யோசை' எனச் சேந்தன் திவாகரமும,

'வண்டொடு கிள்ளை வாசி மதயானை தவளை தேநு
ஒண்டிற லாடென் றேழு மோதுமே ழிசையி லோசை' எனச் சூடாமணி நிகண்டும,

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழிசையின் ஓசைகளை முறையாகக் கூறுதலின், உழையென்னும் இசைநரம்பின் ஓசை யானையின் ஒலியாகு மென்பது பெறுதும். நாரதசிக்ஷை, சங்கீதரத்நாகரம் என்னும் வடமொழி நூலாசிரியர்கள் யானையின் ஒலி நிஷாதம் என்னும் சுவரத்துக்கு உரியதென்பர் அங்ஙன மாதலின், உழை நிஷாதமென்பது பெறப்பட்டது. சாமவேதகானம நிஷாத சுவரத் தைத் தொடங்குமிடமாகக் கொண்டது அதுபற்றி யானைக்குச 'சாமகா' என ஒரு பெயருண்டென வடமொழி நூலார் கூறுவர். மேலும், பண்டை விளரியும் பிற்காலத்து இருஷபமும் பசுவின் ஒலியைத் தமக்குரிய ஓசையாகப் பெற்றன ஆதலின், இவை யிரண்டும் தம்முள் ஒப்பன. பண்டைத் தாரமும பிற்காலத்துக் காந்தாரமும ஆட்டி னொலியைத் தமக்குரிய ஓசையாகக் கொண்டன ஆதலின், இவையிரண்டும் தம்முள் ஒப்பன. அவ்வாறே பண்டைக் கைக்கிளையும பிற்காலத்துத் தைவதமும குதிரையி னொலியைத் தமக்குரிய ஓசையாகக் கொண்டன ஆதலின், இவையிரண்டுந் தம்முள் ஒப்பன. இனி நிஷாதத்தை யடுத்துவருவது ஷட்ஜம் ஏனைய ஆறும் பிறத்தற்கு இடமானது என்பது 'ஷட்ஜம்' என்னும் பெயர்க்காரணமாகும் உழையை அடுத்து வருகின்ற இளியும எல்லாப் பண்ணிற்கும் 'அடிமணையாதலின்' பட்டடை என்னும் பெயரினைப் பெற்றதென முன்னர்க் காட்டினும் ஆதலின், பண்டை இளி பிற்காலத்து ஷட்ஜம் ஆகும். இளிக்கிரமத்திலே, இளி முதனிலையாக நிற்கும என்பதும் பிறவும் முன்னே கூறப்பட்டன. 'இளிக்கிரமம்' என்பதனை வடநூலார் 'ஷட்ஜக்கிராமம்' என வழங்கினர் இளிநரம்பின ஓசைக்குத் தமிழ நிகண்டுநூல்கள் குயில, தவளை யிவற்றினொலியைக் குறிப்பிட்டன. நாரதசிக்ஷையும், சங்கீதரத்நாகரமும ஷட்ஜத திற்கு மயிலின் ஒலியினைக் கூறியிருக்கின்றன யாமும அவ வழக்குபற்றி இந் நூலினுள்ளே 'இளியொன்றிநின்ற இசைதந்த மஞ்ஞை' என்றும் மேற்குறித்த ஐந்தினையும அடைவே நிறுத்தியபின் எஞ்சிநின்ற குரலுந் துத்தமும் பிற்காலத்தா ரால முறையே மத்திம பஞ்சமங்களாக வழங்கப்பட்டனவென்பது தெளிவா கின்றது. இவவாறு கொள்ளுதற்குரிய வேறுசில நியாயங்கள் பின்னர் அலகு(சுருதி)க்

கணக்குக் கூறுமிடத்துக் காட்டப்படும் தமிழ் நிகண்டுநூல்களினுள்ளும் கலித் தொகை, பரிபாடல் ஆதிய சங்க இலக்கியங்களினுள்ளும் குரல்நரம்பினுக்குத் தேன் வண்டினது ஒலி ஒப்பாகக் கூறப்பட்டது ஆதலின், நாம் மேலே 5-ஆம் பாடலிலே 'குரல் இசைய வண்டு' என்றும் வடநூலார் மத்திமத்துக்குக் கொக்கு, கிரௌஞ்சம என்னுமிவற்றைக் காட்டுவர் துத்தத்திற்குத் தமிழ்நூலார் கிளியைக் காட்டினர் ஆதலின், நாமும் 'துத்தத்திசைபயில கிளி' என்றும் வடநூலார் குயிலைக் காட்டுவர். இரண்டும் பொருத்தமேயாம இளிநரம்பாகிய ஷட்ஜத்திற்குப் பிங்கலந்தை குயி லொலியினைக் கூறியது பொருத்தமில்லை என்பதனை அறிந்தே சேந்தன் திவாகரமும் சூடாமணி நிகண்டும அஃதொழித்துத் தவளையினொலியைக் கூறின தவளையினொலி யும மயிலினொலியும ஒரே நீர்மையவாதலின், நாம் மயிலினைக் கொண்டாம் இம் முடிபுகளைத் தெளிவுநோக்கி அட்டவணைப்படுத்துவாம்

இளி	மயில், தவளை	ஷட்ஜம
விளரி	பசு	இருஷபம்
தாரம	ஆடு	காந்தாரம
குரல்	வண்டு, கொக்கு	மத்திமம்
துத்தம	கிளி, குயில்	பஞ்சமம
கைக்கிளை	குதிரை	தைவதம்
உழை	யானை	நிஷாதம்

4. இயற்கையினியன்ற விசையும பண்ணப்பட்ட விசையும் ; உள்ளத்துணர்வுகளும் மெய்ப்பாடுகளும் ; இணை, கிளை, பகை, நட்பு ; பண்ணென்னும பெயர்க்காரணம்

நல்லழுசியார் என்னும புலவர் பரிபாடல் கஎ-ஆம பாட்டிலே இயற்கையி னமைந்த ஆடல் பாடலையும், பாணனும பாடினியும பணணித்தந்த பாடல ஆடலையும் ஒருங்கு வைத்து ஒப்புமை காட்டுகின்றார். அவர் செய்யுள வருமாறு

'ஒருதிறம, பாணர் யாழின் றீங்குரலெழ
ஒருதிறம, யாணர் வண்டின் இமிரிசையெழ
ஒருதிறம, கண்ணார் குழலின் கரைபுஎழ
ஒருதிறம, பண்ணார் தும்பி பரந்திசையூத
ஒருதிறம, மண்ணார் முழவி னிசையெழ
ஒருதிறம, அண்ணல நெடுவரை யருவிநீர்ததும்ப
ஒருதிறம, ஆடல விறலியர் ஒலகுபுநுடங்க
ஒருதிறம, வாடை யுளர்வயிற் பூங்கொடிநுடங்க
ஒருதிறம, பாடினிமுரலும பாலையங்குரலின்
நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற
ஒருதிறம, ஆடுசீர் மஞ்ஞை யரிக்குரல தோன்ற
மாறுமா றுற்றனபோல மாறெதிர் கோடல
மாறட்டான் குன்ற முடைத்து.'

சேவ்வேள் குன்றததின் ஒருபுறத்திலே இயறகை வனப்பும், மற்றொருபுறத்திலே செயற்கை வனப்பும் மாறுற்றனபோல எதிர்கொணடு நின்று புலவருள்ளத்திற்கு உவகையளிக்கின்றன பாணருடைய யாழினின்று எழும் இனிய இசை ஒருபுறமாக, அவவிசைகேட்டு மாறுற்றுப் புதிதாகவந்த வணடுகளின் இமிர்தல மறறொருபுறமாயிறறு இவவாறே குழலின கரைபொடு தும்பியினிசையும், முழவிசையொடு அருவிநீரொலியும, விறலியா நடககத்தொடு பூஙகொடியின் நுடக்கமும், கிழமை, நிறை, குறைகளின் தோற்றத்தோடு மயிலினது அரிந்த குரலின் தோறறமும், மாறுறறனபோன்று எதிர்நின்றன

கிழமை ஆஅஅஅ-ஆஅஅஅ-ஆஅஅஅ-ஆஅஅஅ என நாலு தாக்கு உடையது, நிறை ஆஅஅஅ-ஆஅஅஅ என இரணடு தாககு உடையது, குறை ஆஅஅஅ என ஒரு தாக்கு உடையது மயிலிறெலி, அரிநது (இடையிடடுத) தோன்றுதலின், கிழமை, நிறை, குறைககு ஒப்பாயிறறு

முத்தமிழ் வளாதத பொதியத்தருநதவன் வாழிடமாதலின், பொதியவரை இசைக்கிருப்பிடமாயிறறு அவ் வரையிலுள்ள புழைசெறிந்த கழையும் குழலிசையினைத்தரும் என்னும் பொருளமையப், 'புழைசெறிகழை குழலிசைபொழி பொதியம்' என்றும் தமிழணங்கு அரசுவீற்றிருந்த மதுரை மாநகரினைச் சூழ்நத சோலையிலே, வண்டினம் யாழ்செய்யப், பொதியததிருந்துவந்து அநநகர்ப்புறததினை யடைந்த தென்றலானது, அவ்வியாழிசை கேடடுருகி, நின்றுநின்று மெல்லென வியஙகிற்றுதலின், 'அளியொன்றுசோலை வளிநின்ற கூடல்' என்றும திணைப்புனங காதத வள்ளி நாயகியாரின் மெலலென் மழலை செவிப்பட்ட கிளியானது இனமெனறெண்ணி அகலாது நிற்றல் இயல்பாதலின், 'கிளியொன்றிநின்ற குறததி' எனறும மழலைக்கு ஏற்றியுரைப்பினும் அமையும் அருந்தமிழ்க களவொழுகக முறையிலே குறிஞ்சி நிலத்துத் தலைவியாகிய வள்ளியைத் தமது இளவலுககுக கூட்டி வைததல் கருதியே முத்துபிள்ளையார் 'உழையிசை யிபமென' உருககொணடாரெனப புராணங் கூறும.

புனத்திலும், பொழிலிலும, குன்றததின்மீதும், மருதத்தண்பணையிலும, முல்லைப்புறவததிலும், கடற்கானலிலும, கான்யாறறடைகரையிலும, அருஞ்சுரத்திலும், மனையினகததும், மன்றததினுள்ளும், தேவாகோடடததும, அறவோர் பளளியிலும் இசை வழங்கிய நாடு தமிழ்நாடு. மெலலென்றிசைககும் தென்றலி னுயிாப்பிலும, இழுமென இழிதரும அருவி நீரிலும, நறுமலரில முரலுகின்ற தேன்வண்டினொலியிலும், இசையினைக கேட்டு உவந்த பழநதமிழா், பாடன்மகளது மிடற்றுப் பாடலையும், பாணனிசைதத யாழப்பாடலையும், குழலோன தந்த வஙகியப் பாடலையும் செவியாரக கேட்டு இன்பமெய்தினர்

யாழ்க்கருவியிலே இயைபுடைய நரமபுகள் பலவற்றை இசைத்தெழுப்புகின்ற பண்போன்ற இன்னிசை யொலியொன்று ஈழநாடடின் கிழககுக கரையிலுள்ள மட்டக்களப்பு வாவியினுள்ளே கேடகப்படுகினறது அவ்விசையினைக் குறித்து விககிரம, காாததிகைத் திங்கள் தமிழ்ப்பொழிலிலே யாம் வெளியிடட 'நீரரமகளிரின்னிசைப்பாட' லின் ஒருபகுதியினை ஈண்டுத தருகின்றும்.

பாயிரவியல்

'இளவேனிற்காலத்திலே, நிறைமதி நாளாகிய பூரணை நாளிலும், அதற்கு முன்னும் பின்னுமுள்ள நாட்களிலும், வானம் களங்கமற்றிருக்கும் வேளையிலே, யாமப்பொழுதிலே, புளியந்தீவுக்கோட்டைக்கும் கல்லடிக்கு மிடையிலே, சிறு தோணியினைச் செலுத்திச்சென்று, வாவி நடுவிலே, ஆரப்பரவமின்றி, அமைதி நிலையிலிருந்து உற்றுக்கேட்டால், நீரினுள்ளிருந்தெழுகின்ற அற்புதமாகிய இன்னிசையொலி செவி வழிப் புகுந்து உள்ளத்தையுருக்கும் இத்தகைய அற்புத இசையொலியானது வட அமெரிக்கா நாட்டின் மேற்றிசையிலுள்ள கலிபோர்னியா (California) நாட்டிலும் ஈழத்து மட்டக்களப்பு நாட்டிலுமன்றிப் பிறிதெவ்விடத்திலும் கேட்கப்பட்டிலதென அறிஞர் கூறுவர். இலங்கைக்கு வரும் மேனாட்டார் இவ்விசையைச் செவிமடுப்பதற்காக மட்டக்களப்பிற்கு வருவதுண்டு. இவ்விசை நீரினுள்ளிருந்து எழுவதாதலின், நீர்வாழ்செந்தின் ஒலியாதல் வேண்டுமென எண்ணிப்போலும், அந்நிய நாட்டார் இதனைப் பாடும் மீன் (Singing Fish) இசையென்பர். மீன்கள் நீரினுட் குதித்து ஆடுதலைக் கண்டோமேயன்றி, அவை மகிழ்ச்சியாற் பாடுதலை யாண்டுங் கேட்டில மாதலின், அந்நிய நாட்டாரது உரையினை யாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம். கலை வல்லார் காணாத உண்மைகள் சில கவிஞரது உள்ளத்து உதிப்பவாதலின், இவ்வற்புதக் கீதவொலியைக் குறித்துத் தமிழ்ப்புலவர் ஒருவரெழுதிய செய்யுள் ஒன்றினை ஈண்டுத் தருகின்றோம். அறிஞர் உவந்தேற்று அருள் புரிவாராக. கவிஞர்க்கு இயல்பாக அமைந்த புனைந்துரையெனக் கொள்ளினும் இழுக்காகாது.

தண்ணளிசெங் கோலாய்த் தனியறமே சக்கரமாய்
மண்முழுதும் ஆண்டுபுகழ் வாமன் அடியிணையே
என்றும் அழியா திலங்குஞ் சமணொளியும்
கன்று குணிலாகக் கனியுதிர்த்த மாயவற்கு
மூவடிமண் ஈந்தளித்து மூவாப் புகழ்படைத்த
மாவலியின் பேரால் வயங்கு மணிநதியும்
காவும் பொழிலுங் கழிமுகமும் புள்ளணிந்த
ஏரியும் மல்கி இரத்தினத் தீவமென
ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
ஏரால் இயன்றசெந்நெல் இன்சுவைத்தீங் கன்னலொடு
தெங்கி னிளநீருந் தீம்பலவி னுள்ளமிர்தும்
எங்குங் குறையா இயல்புடைய நன்னாடு
மட்டக் களப்பென்னு மாநாட்ட நாட்டினிடைப்
பட்டினப் பாங்கர்ப் பரந்தோ ருமுகமாய
ஐங்கரன் கோயில் அமிர்த கழிக்கணித்தாய்ப்
பொங்கு கடலுட் புகும்நீர் நிலையொன்று
நீர்நிலையி னுள்ளே நிகழ்ந்த அதிசயத்தைப்
பாரறியக் கூறும் பனுவ லிதுவாகும்

மாசகன்ற மணிவிசுமபில் வயஙகுநிறை மதியம
மலாககிரண ஒளிபரப்ப வளருமின வேனில
வீசுதென்ற லொடுகூடி விளையாடல கணடு
விணணகததார மணணகததில விழைவுகொளும யாமம.

அஞசிறைய புளளொலியும ஆனகனறின கழுததில
அணிமணியின இனனொலியும அடஙகியபின நகரார
பஞசியைநத அணைசேரும இடையாமப பொழுதிற
பாணனொடு தோணிமிசைப படாநதனனோ புலவன

தேனிலவு மலாப்பொழிலிற் சிறைவணடு துயிலச
செழுநதாஙகத தீமபுனலுள நநதினஙகள துயில
மீனவன் செலவினறி வெணணிலவிற றுயில
விளஙகுமடடு நீாநிலையுள எழுநததொரு நாதம.

நீல வானி லே
நிலவு வீச வே
மாலை வேளை யே
மலைவு தீரு வோம
சால நாடி யே
சலதி நீரு ளே
பாலை பாடி யே
பலரொ டாடு வோம

நிலவு வீச வே	மலைவு தீரு வோம
சலதி நீரு ளே	பலரொ டாடு வோம
நிசரி காக மா	மபத நீநீ சா
சரிக மாம பா	பதநி சாச ரீ
ரிகம பாப தா	தநிச ரீரி கா
கமப தாத நீ	நிசரி காக மா

எனன எழுநதஅநத இன்னிசைததீம பாடலினைக
கன்னலெனக் கேட்டுக் களிதத புலவனுநதன
அனபனமுக நோககி ஆகாஇவ வறபுததைத
என்னென் றுரைப்பேன் இசைநூற் பொருளுணர்நதேன்
ஐநதாம நரமபின அமைதியினை யானறிநதேன
காநதாரத தைந்தாயக் கனிநத நிஷாதமெழும
செயய நிஷாதச செழுஞ சுரததின பஞசமமே
வையம புகழுகினற மததிமமாம மததிமததிற(கு)
அஞசாஞ சுரமாம அணிசட்ஜம சட்ஜத்தின
பஞசமமே பஞசமமாம பன்னும ரிஷபமதற(கு)
அஞசாஞ சுரமாய அடையும் அணிரிஷபத்(து)

எஞ்சாத பஞ்சமமாய் எய்திநிற்குந் தைவதமே
தைவதத்திற் கைகதாயத் தனித்தகாந் தாரமெழும்
இவ்வகையே ஏழாகி இன்னிசையாழ் தீங்குழலில்
நாதமாய்த் தோன்றி நவைதீர் அமிழ்தனைய
கீதமாய் மேவுங் கிளையாய்ப் பகைநட்பாய்
நின்ற முறையை நினையின் இவைகிளையாம்
என்ற பொழுதில் எழுவர் மடநல்லார்
நீரு ளிருந்தெழுந்து நின்றார் அரமகளிர்
ஆதலினால் மூப்பறியார் அந்தீங் குழலொலியும்
ஓதிய யாழின் ஒலியு மெனமொழிவார்
பைம்புனலின் மேற்படாத பாசிநிகர் கூந்தலார்
அம்பொன்னின் மேனி அரையின்கீழ் மீன்வடிவம்
செங்கமலம் போற்கரங்கள் திங்கள் மதிமுகத்திற்
பொங்கிய புன்முறுவல் பூத்தார் புலமையார்
கவிமுகத்தை நோக்கிக் கனிந்துரைப்பார் யாங்கிளையே
புவியிலெனத் தாரமென்பார் புதல்வியிவள் போஉழையே
உழையின் மகள்குரற்பே ருற்றாள் இளிதாயை
பிழையில் இளிபாற் பிறந்தாள்போ துத்தமே
துத்தம் பயந்த சுவைவிளரிப் போபூண்டாள்
உய்த்த விளரிக் குறுதாயை கைக்கிளையே
பொன்னின் கபாட புரத்துறைவோம் மாவலிநீர்
தன்னிற் படிந்து சமனொளியைக் கும்பிடுவோம்
ஆடுவோம் பாடுவோம் ஆராத காதலினால்
வாடுவோம் பின்னர் மகிழ்வோம் நகைபுரிவோம்
அச்ச முறுவோம் அடையாதார் தங்களையாம்
இச்சை யறவே இழித்துரைக்கும் நீர்மையேம்
உருத்தெழுந்து கோபிப்போம் உண்மை யுரைப்போம்
அருத்தியொடு வீரம் அறைவோம் வியப்புறுவோம்
திங்கள் நிறைநாளிற் சேர்வோமிந் நீர்நிலையைக்
கங்குல் கழியுமுன்னே கார்படிந்த மைக்கடலைச்
சென்றியாஞ் சேர்வோமெனு செய்கை யிதுவென்றார்
ஒன்றாக நீருள் ஒளித்தார் தமிழ்ப்புலவன்
சிந்தையை யன்னார்பாற் சோத்தி மனைபுகுந்தான்
வந்த இசையின் வரன்முறையும் ஈங்கிதுவே.’

நீரரமகளிர் தோன்றியது கவி கற்பனையாமெனக் கொள்ளுமிடத்து, இசைத் தோற்றத்திற்குப் பிறிதொரு காரணங் காட்டல் வேண்டும். மணி, கடல், யானை, குழல், மேகம், வண்டு, தும்பி, சங்கு, பேரிகை, யாழ் எனக்கூறிய பத்துவகை நாதங்க ளுள்ளே சங்கநாதமானது முரற்சி, முழக்கம் என இருவகைப்படுமென்று அறிஞர்

கூறுவர். 'முந்நீர் வலம்புரி சோர்ந்தசைந்து வாய்முரன்று முழங்கி யீன்ற, மெய்ந் நீர்த் திருமுத்து' எனச் சீவகசிந்தாமணி ஓம்படைசசெய்யுளினுள்ளே இருவகை நாதமும் கூறப்பட்டன. 'மோது முதுதிரையான் மொத்துண்டு போந்தசைந்த முரல்வாய்ச் சங்கம்' எனச் சிலப்பதிகாரம் முரற்சியை மாத்திரங் கூறுகிறது இம் முரற்சியானது சங்கினது வளர்ச்சிக்கேற்ப நாதம வேறுபட்டுத் தோன்றும். மட்டக் களப்பு வாவி கடலொடு கலப்பதாதலின், ஒருவகைச் சஙகு வாழ்தற் கிடமாயிறறு. அளவிற் சிறியவும் பெரியவுமான சங்குகள் இடையிட்டு முரல்வதனாலே ஏற்படும் ஓசையின் சேர்க்கை இசைததன்மை பெற்றுத் தோன்றுகிறது அஃதெவ்வாறாயி னும், கவிதையுட் கூறப்பட்ட நீரரமகளிரது கிளையிற்பிறப்புமுறை இசைமரபிற்கு ஒத்ததேயாம்.

நின்ற நரம்பிற்கு ஐநதாம நரமபு கிளைநரம்பு எனப்படும். நான்காம் நரம்பு நட்பு நரம்பு எனப்படும். மூன்றும், ஆறும் நரம்புகளைப் பகை நரம்பு என்பர். இரண் டாம், ஏழாம் நரம்புகள் நின்ற நரம்பிற்கு இணையெனப்படுவ. ஏழு நரம்புகளும்,

1	2	3	4	5	6	7
முதல்	இணை	பகை	நட்பு	கிளை	பகை	இணை

என்னும் அடைவாக நிற்றலை நோக்குக.

'உறவினை நட்புக் கிளைவியப் பெய்த
முகின்முழ வதிர ஏழிசை முகக்கும்
முல்லை யாழொடு சுனுழிவனை டலம்பக்
களவளர் குழுப் புறவுபாட் டெடுப்பப்
பசுந்தழை பாப்பிக் கனமயி லால'

என்னும் கல்லாடச் செய்யுளடிகளின் உரையிலே,

'ஏழா நரம்பினை நாலு நட்பாகு
மைநதுகிளை யாறு மூன்றும் பகையே'

என்றாரிசைமரபுடையார்' எனக் காணப்படுகிறது வழுநீங்கிய தூயவுருவத்திலே,

'ஏழா நரம்பிணை நாலு நட்பாகும்
ஐந்துகிளை ஆறும் மூன்றும் பகையே'

என்றார் இசைமரபுடையார்' என்று பாடங்கொளளவேண்டுமெனப் புலப்படுகின்றது.

'இணையெனப் படுவ கீழும மேலும
அணையத் தோன்றும அளவின வெனப'

என அடியார்க்குநல்லார் காட்டிய சூத்திரப் பொருளும் இதனாற் றெளிவாகின்றது. மூன்றும் ஆறும் நரம்புகளைப் பகையெனக்கொண்ட காரணமும் அப்பகை நீக்குதற் குக் கைக்கொள்ளப்பட்ட மரபும் பின்னர்க கூறப்படும்.

மேலைச் செய்யுளிலே நீரரமகளிர் கூற்றாக ஒன்பது சுவைகளும் குறிப்பிடப் பட்டன இவை தம்மை ஒருசிறிது ஆராய்வாம் இன்பததிலும் துன்பத்திலும் பாட்டு உதித்து மனத்திற்கு ஆறுதலளிக்கின்றது. இன்பந் துய்த்த உள்ளத்தினின்று மலர்ச்சியும் உயர்ச்சியும் தோற்றுவன துன்பந தோய்தலினாலே மனத்தில் அசைவுங் கலக்கமும் ஏற்படுவன மலர்ச்சி, உயர்ச்சி, அசைவு, கலக்கம் என்னும் நான்கினும் நின்று உவகை, பெருமிதம், இளிவரல், வெகுளி என்னும் நான்கும் தோன்றுவன. உவகையினின்று நகையும், பெருமிதத்தினின்று மருட்கையும், இளிவரலினின்று அச்சமும், வெகுளியினின்று அவலமும் தோன்றுவன. இவவெட்டுந் தோல்காப்பிய மெய்ப்பாட்டியலினுள்ளே விரிவுற ஆராயப்பட்டன. இவற்றோடு சமநிலையினையுஞ் சேர்க்கச் சுவை ஒன்பதாகும்.

மேலே குறிப்பிட்ட உள்ளத்துணர்ச்சிகளுக்கும் மெய்ப்பாடுகளுக்கும் வட நூலார் வழங்கிய பெயர்களைக் கீழே காண்க

உள்ளத்துணர்ச்சிகள்

- இன்பம்
  - மலர்ச்சி
    - உவகை (சிருங்காரம்)
      - நகை (ஹாஸயம்)
  - உயர்ச்சி
    - பெருமிதம் (வீரம்)
      - மருட்கை (அற்புதம்)
- துன்பம்
  - அசைவு
    - இளிவரல் (பீபற்சம்)
      - அச்சம் (பயோற்கர்ஷம்)
  - கலக்கம்
    - வெகுளி (உருததிரம்)
      - அவலம் (கருணை)

மெய்ப்பாடுகள்

- உவகை (இரதி)
  - நகை (ஹாஸ்யம்)
- பெருமிதம் (உற்சாகம்)
  - மருட்கை (ஸ்மயம்)
- இளிவரல் (ஜுகுப்ஸை)
  - அச்சம் (பயம்)
- வெகுளி (குரோதம்)
  - அவலம் (சோகம்)

இசையாசிரியனமைதி கூறியவிடத்துச் சிலப்பதிகார அரும்பத வுரையாசிரியர் ‘உருக்களை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும்படியும் புணர்க்கவும் வல்லனாய்’ என்கின்றார். சுவையோடு தொடர்புடைய ‘இரதம்’ என்னும இம்மொழி வடமொழிப் பாவத்தோடு ஒத்த பொருளினதாகச் சுவையுணர்சசியைக் குறிததுத் தமிழில் வழங்கப்படுகிறது.

'பண்ணும்பத மேழும்பல வோசைத்தமி ழவையும
உண்ணின்றதொர் சுவையும்உறு தாளத்தொலி பலவும்
மண்ணும்புன லுயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழ லையே'

என்னும் தேவாரப் பதிகத்தின் முதலீரடிகளிலும் ஆளுடையபிள்ளையார் பண், இரதம், தாளம் எனும் மூன்றினையும் குறிப்பிடுகின்றார். இம் மூன்றுறுப்படக்கிய பிண்டமே 'பரதம்' எனப்பட்டது. 'நாடகத்தமிழ்நூலாகிய பரதம், அகத்தியம் முதலாவுள்ள தொன்னூல்களு மிறந்தன' என அடியார்க்குநல்லார் கூறுதலின், தமிழ்ப்பரதம் ஒன்று இருந்து இறந்தமை தெளிவாகின்றது.

மேலே குறித்த மூன்றுறுப்புக்களிலே இரதம் இதுவென ஓரளவிறகுக் காட்டினும்; பண், தாளம் என்னும் இரண்டினது தன்மையையும் ஒருசிறிது ஆராய்வாம்

'அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்' எனவும்

'அசையுஞ் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உணர்த்தலும் வல்லோ ராறே' எனவும்

'இசைநிலை நிறைய நிற்குவ வாயின
அசைநிலை வரையார் சீர்நிலை பெறலே' எனவும்

ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலின், செயயுளிடத்து எழுத்துக்கள் பெறும் மாத்திரை யளவு உரைக்கும் இலக்கணம் இயற்றமிழுக்கும் இசைத்தமிழுக்கும் பொதுவாமென்பது புலனாகின்றது. 'சீரியைந்திற்றது சீர்' எனறபடி, தாளததினிறுதி இசைத் தமிழிலுஞ் சீர் எனப்படும். தாளத்தினிடை நிகழுங் காலம் தூக்கு எனப்படும். தாளத்தின் முதலெடுக்குங் காலம் பாணி எனப்படும் கலித்தொகை கடவுள்வாழ்த்துப் பாடல் உரையினை நோக்குக. செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் எனும் நால்வகை ஓசைவிகற்பங்கள் தாளத்தினை அடிப்படையாகக் கொண்டன. தாளம் பிழையாது நிற்கப் பாவினது உருவம் செவிக்குப் புலனாகும் அழகிய செந்தாமரை மலரினையும் பசிய இலையினையும் படத்திலெழுதப் புகுந்த ஓவியன் முதலிலே வெள்ளிய தளத்திலே நுண்ணிய வரைகளினாலே உருவத்தைத் தோற்றுவிக்கிறான். இவ்வுருவத்தினைப் போன்றது தாளத்தோடியைந்த பாவினோசை அதன்மேல் செம்மை, பசுமையாகிய நிறங்களைத் தீட்டிச் சித்திரததை முடிக்கிறான். பாவோடணைந்த இசையினை இசைத்தல் இந்நிறந்தீட்டுதல்போலவதோர் செய்கை. 'நிறந்தோன்ற' என உரையாசிரியர்கள் பலவிடத்தும் வழங்கியிருப்பதைக் காணலாம் 'நிறம்' என்னும் தமிழ மொழியோடு ஒத்த பொருளினது 'இராகம்' என்னும் வடமொழி. பாவோடு நிறத்தினை இசைத்தலால், இஃது, 'இசை' யெனப்பட்டது. பண்ணுதல் என்னும் வினையடியாகப் பிறந்தது 'பண்'. பண்ணும் இசையும் ஒத்த தன்மையவாயினும், அவற்றிடையே அமைந்த வேறுபாடுகளுஞ் சிலவுள. அவை பணணியலினுட் கூறப்படுவ.

அரங்கேற்றுகாதை யுரையினுள்ளே இப்பொருளினைக் கூறும் பகுதியைத் தருவாம்.

'மூலாதாரந் தொடஙகிய எழுததின் நாதம் ஆளததியாய்ப் பின் இசையென்றும் பண்ணெனறும பெயராம என்னை ?

'பாவோ டிணைத விசையெனறூா பணணெனறூா
மேவாா பெருநதானம எட்டானும—பாவாய
எடுத்தல முதலா இருநானகும பணணிப
படுததமையாற பணணெனறு பாா'

'பல இயறபாககளோடு நிறததை இசைததலால இசையென்று பெயராம்

'பெருந்தானமெட்டினும கிரியைகளெட்டானும பணணிப்படுததலாற பண்ணென்று பெயராயிறறு

'பெருந்தானமெட்டாவன நெஞ்சும, மிடறும், நாக்கும, மூக்கும, அண்ணுக்கும, உதடும, பலலும், தலையுமென விவை'.

'கிரியைகளெட்டாவன எடுததல, படுததல, நலிதல், கமபிதம், குடிலம, ஒலி, உருட்டு, தாககு எனவிவை'

இவைதம்மோடு குடிலததிறகும ஒலிககுமிடையில விந்து, நாதம என்னும இரண்டினைச் சோததுப்பதது எனபாருளா இவைதமமைப் பண்ணியலினுள விரிததுக் கூறுவாம்

---

5. மூவகைத்தானம் ; ஆரோசை ; அமரோசை ; நாலவகைச செய்யுளியககம்.

வேனிறகாதையினுளளே,

மூவகை யியககமும முறையுளிக கழிபபித
திறதது வழிப்படூஉந தெளளிசைக காணததுப
புறததொரு பாணியிற பூஙகொடி மயஙகி

என்புழிக் கூறிய 'மூவகை யியககமும்', புறஞ்சேரியிறுதத காதையினுளளே,

ஒற்றுறுப் புடைமையிற பறறுவழிச சோததி
உழைமுதற கைக்கிளை யிறுவாயக கட்டி
வரன்முறை வநத மூவகைத தானததுப
பாய்கலைப பாவை பாடற பாணி
ஆசான் திறததி னமைவரக் கேட்டு

என்புழிக கூறிய 'மூவகைததானமும' ஒதத பொருளின. மெலிவு, சமன், வலிவு என நாம் முன்னர்க் குறிபபிடட மூன்றுமே மூவகையியக்கமென்றும, மூவகைத் தானமென்றும இங்குச சுட்டப்பட்டன.

> மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்முறையால்
> தந்திரிகள் மெலிவித்தும் சமங்கொண்டும் வலிவித்தும்
> அந்தரத்து விரல்தெறிழிலகள் அளவுபெற அசைத்தியக்கிச்
> சந்தரச்செங் கனிவாயுந் துணைவாயுந் தொடக்குணண

எனும் ஆறுமுகநாயனார் புராணச் செய்யுளினாலே, மந்தரம், மத்திமம், தாரம் எனப் பிற்காலத்தார் வழங்கியன பழந்தமிழர் கூறிய மெலிவு, சமன், வலிவு என்னும் மூன்றினையுமேயாம் என்பது தெளிவாகின்றது. வடமொழித் 'தாரம்' மூவகைத் தானத்தினுள் ஒன்று, தமிழ்த் 'தாரம்' ஏழிசையில் ஒன்று. இருமொழியும் மயங்காது காத்தற்பொருட்டு வடமொழித் தாரத்தை யொழித்து, 'உச்சம்' என்னும் சொல்லினையே வழங்குவாம். மெலிவிற்கு 'மந்தம்' என்னும் வழக்குச் சிலப்பதிகாரத்திலும் வந்துளது. மூன்றினையும் சேர்த்து 'மந்தோச்சசமம்' என அடியார்க்கு நல்லார் வழங்கினார். வீணைநரம்பு மந்தக்குரலுக்கு இசைகூட்டப்பட்டிருப்பின், அதன் செம்பாலிலே சமவிசையாகிய குரலும், அதன் வாரத்திலே உச்சவிசையாகிய குரலுங் கேட்கப்படுவ.

> அம்போ தாகக மறுபதிற் றடித்தே
> செம்பால் வாரஞ் சிறுமைக கெல்லை

என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையிலே, 'செம்பாலாகிய முப்பதடி', 'வாரமாகிய பதினைந்தடி' எனக் கூறப்படுதலின், நின்ற அளவிற் சரிபாதி 'செம்பால்' எனவும், நான்கிலொரு கூறு 'வாரம்' எனவும் அறிகின்றாம். இவற்றின் விரிவெல்லாம் இசை நரம்பியலினுட் கூறப்படும்.

குரல் — துத்தம் — கைக்கிளை — உழை — இளி — விளரி—தாரம் — குரல் என மந்தக்குரல்முதற் சமக்குரல்வரைப் பெருகிச் செல்லும் நரம்புகளின் இசை ஆரோசை எனப்படும். குரல் — தாரம் — விளரி—இளி — உழை — கைக்கிளை—துத்தம்—குரல் எனச் சமவிசையாகிய குரல்முதல் மந்தக்குரல்வரை அமர்ந்து இயங்கும் இசை அமரோசை எனப்படும். இவைதம்மைப் பிற்காலத்தார் 'ஏற்றம்', 'இறக்கம்' என்னும் பொருளினவாகிய 'ஆரோகணை', 'அவரோகணை'ச் சொற்களால் வழங்கினர்.

நரம்பு நீளத்திற் குறுக இசை பெருகிச் செல்லும். நொடிப்பொழுதிற்கு 256 சிற்றசைவுகளோடு இயங்குகின்ற வீணைத்தந்தியின் செம்பால் 512 சிற்றசைவுகளோடு இயங்கும், வாரம் 1024 சிற்றசைவுகளோடு இயங்கும்.

பேரியாழிலே, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி என்னும் ஏழும், மெலிவு, சமன், வலிவு என்னும் மூன்று தானத்திலும் தனித்தனி நின்றன. மொத்த நரம்பு இருபத்தொன்று. சமன்தானத்து நரம்பு ஏழும் மெலிவுத்தானத்து நரம்பு ஏழின் செம்பாலாவன. வலிவுத்தானத்து நரம்பு ஏழும் சமன்தானத்து நரம்பு ஏழின் செம்பாலாவன; மெலிவுத்தானத்து நரம்பு ஏழின் வாரமாவன எனினும் பொருந்தும்.

சேங்கோட்டியாழி லமைந்த ஒற்றுறுபபானது, நரம்புகளைச் செம்பாலாக்கி மெலிவுநரமபிற் சமன்தோன்றவும், வாரமாக்கி மெலிவு நரம்பில் உச்சமெனப்படும் வலிவுதோன்றவும செய்வது.

இசைக்கும் இயலுககும் பொதுவாகிய செயயுளியககம் நான்கு உள அவை முதனடை, வாரம், கூடை, திரள எனபபடுவ அருமபதவுரையாசிரியா அரஙகேற்று காதையுரையினுளளே, ‘இயக்க நான்கினும முதனடை மிகவும் தாழ்நத செலவினை யுடைததாகலானும, திரள் மிகவும முடுகிய நடையினை யுடைத்தாகலானும, இவை தவிர்ந்து இடைபபட்ட வாரப்பாடல சொலலொழுககமும இசையொழுககமும் உடைததாகலானும, கூடைப்பாடல சொறசெறிவும் இசைசசெறிவும் உடைத்தாக லானும், சிறப்புநோககி அவவிரண்டினுளளும் வாரப்பாடலை அளவு நிரமப நிறுத்த வல்லனுய்’ என்றுர் எனக கூறியதுகொண்டு நால்வகை யியககததினையும பொதுவாக வுணாநதுகொள்ளலாம் இவவாசிரியாதாமே கானல்வரி உரையினுள்ளே,

அழலணஙகு தாமரை யருளாழி யுடையகோன் அடிக்கீழ்ச சோநது
நிழலணங்கு முருகுயிர்த்து நிரநதலாநது தோடேநதி நிழறறும போலும்
நிழலணங்கு முருகுயிர்தது நிரநதலாநது தோடேநதி நிழறறு மாயிற
ருழலணஙகு மனபுடையார் சூழொளியும வீழகரியும் சொலலா வன்றே

இது கூடைச செயயுள.

கூடை யெனபது கூறுங காலை
நான்கடி யாகி யிடையடி மடககி
நான்கடி யஃகி நடததறகு முரிததே

வார மெனபது வகுககுங காலை
நடையினு மொலியினு மெழுததினு நோககித
தொடையமைந தொழுகுந தொன்மைததெனப

இவை அடிவரையிட்டன

எனக காட்டினா. ‘நடத்தற்கு முரித்தே’ என்புழிநின்ற உம்மையினுல் இடை மடங்காது வருவனவுங்கொள்க இஙகுக் கூறிய நால்வகை யியககங்களும் செப்பல் முதலிய நால்வகை யோசைகளும் மயங்கிவருதலின், மயங்கிசைக் கொச்சகககலிப்பா அப்பெயர் பெற்றது

உரைசால அடிகளா அருளிய மங்கலவாழத்துப்பாடல் மயஙகிசைக்கொச்சகக் கலிப்பாவிறகுச சிறந்த எடுத்துககாட்டாகும்

இந்நூற் றெய்வவணககச செய்யுடகளுள்ளே கைககிளைச் செயயுள் முதனடையாகவும், இளி, விளரி, தாரச செயயுடகள் வாரமாகவும், குரற்செய்யுள கூடையாக வும், உழை துத்தச் செய்யுட்கள் திரளாகவும் அமைந்துநின்றன.

6. தேவபாணியும் பரிபாடலும்

முதலூழி யிறுதிக்கண் கடல்கொண்ட தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும், இறையனாரும், குமரவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்டோரிருந்து தமிழாராய்ந்த காலத்திலே, எண்ணிறந்த பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையு முள்ளிட்டன புனையப் பட்டனவென அறிகின்றோம். கடைச்சங்கத்துத் தொகுக்கப்பட்ட தொகைநூல்களுள் ஒன்றாகிய எழுபது பரிபாடலின் ஒருபகுதி நமக்குக் கிடைத்துளது. கிடைத்த பகுதியினை நோக்கித் தமிழிசையின் வளத்தினையும் பாடலினமைந்த விழுமிய பொருளினையுங் கண்டு இறுமபூதெய்துகின்றோம். நமக்குக் கிடைத்த ஒருசில பரிபாடல்களின் நலத்தினை நோக்கித் தலைச்சங்கத்தார் புனைந்த எண்ணிறந்த பரிபாடல்கள் எத்துணை வளஞ் சிறந்திருந்தனவோ வென்வெண்ணி உளமுருகுகின்றோம். பாடற்பின்னுக்ப பாட்டுத்துறையும், பாடினார்பெயரும், பண்ணின்பெயரும், இசைவகுத்தார் பெயரும் தரப்பட்டிருக்கின்றன. நாகனார், பெட்டனாகனார், நன்னாகனார், நந்நாகனார், கண்ணனாகனார் என்கின்ற பெயர்களை நோக்குமிடத்து, இசைவகுத்த பாணர் நாக குலத்தினராமோ என எண்ணவேண்டியிருக்கிறது. கேசவனார், நல்லச்சுதனார் என்போர் பாடினோராகவும், இசைவகுத்தோராகவும் இருக்கின்றனர். இவர்தாம் வகுத்த இசையினை ஒருமுறைபற்றி எழுதியிருத்தல் வேண்டும். அம்முறையும், முறைபற்றிய இசைக்குறிப்பும் நமக்குக் கிடைத்தில.

> திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
> தொருபாட்டுக் காடுகிழாட் கொன்று—மருவினிய
> வையையிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
> செய்யபரி பாடற் றிறம்

என்றமையின், இப்பாடல்கள், மாயோன், சேயோன், காடுகிழாள் எனனுந் தெய்வங்களை வாழ்த்திய பாடல்களாகவும், வையை, மதுரையின் வனப்பினையும், அவைதம்மில் முறையே நீராடியும், வாழ்ந்தும் இன்பந்துய்த்த மக்களது செயல்களையுங் கூறும் செய்யுட்களாகவும் அமைந்தன. இயற்கைவனப்புந் தெய்வவனப்புமே இசைப் பாட்டுக்கு உவந்த பொருளாவன என்பதைப் பரிபாடல்நூல் நமக்கு நன்கு உணர்த்துகிறது. தமிழ்நாடு உய்யுமாறு திருவவதாரஞ்செய்த நாயன்மார்கள் பாடிய தேவாரப் பாடல்களும் இயற்கை வனப்பினையும் தெய்வ வனப்பினையும் ஒருங்கு கூறும் நீர்மைய.

தேவரை முன்னிலைப்படுத்திப் பரவும்பாட்டுத் தேவபாணி எனப்படும். இது முத்தமிழுக்கும் பொதுவானது. கடலாடுகாதை யுரையினுள்ளே அடியார்க்குநல்லார் 'பதினோராடற்கும் முகநிலையாகிய தேவபாணி, மாயோன்பாணி' எனக்கூறி, ஆங்கதற்குப் பின்வருஞ் செய்யுளை எடுத்துக்காட்டாகத் தருகின்றார்.

> மலர்மிசைத் திருவினை வலத்தினி லமைத்தவன
> மறிதிரைக் கடலினை மதித்திட அடைத்தவன
> இலங்கொளித் தடவரை கரத்தினி லெடுத்தவன
> இனநிரைத் தொகைகளை யிசைத்தலி லழைத்தவன்

முலையுணட தருமவள நலததினை முடிததவன
முடிகளபத துடையவ னூரததினை யறுததவன
உலகனைத தையுமொரு பததகினி லொடுககினன
ஒளிமலாக கழறகு வதறகினி யழைததுமே
இஃது எணசீரான வநத கொசசக வொருபோகு.
பண—கௌசிகம தாளம—இரணடொத்துடைததடாரம.

மேலேகுறிப்பிடட பதினோராடலகளுள ஒனறு மரககாலாடல் இது வெற்றி வெலபோர்க்கொறறவையாகிய துாககை யாடியது அவுணா வஞசனையினாலே பாமபு, தேள் முதலியவாகப் புகுதலை யுணாநது, அவறறை யுழக்கிக களைதறகு மரககால கொணடு ஆடுதலின் மரக்காலாடலாயிறறு மேலே தெய்வ வணககப் பாடலக ளுள்ளே, சூறபாடலில மரககாலாடல குறிப்பிடப்பட்டது அப் பாடலில், 'மணி மொழி' என்றது வாதவூரடிகளருளிய திருவாசகததினை.

7. மிடறறுபபாடலுங் கருவிபபாடலும்

ஏமாஙகத நாடடின இராசமாபுரததிலே, அழகுற அமைநத யாழமணடபத் திலே வநது அமர்ந்த காந்தருவதததையானவள முதலிலே அவைபபரிசாரமாக ஒரு பாடலைப்பாடுகினறாள் அதன்மேல அவள் தோழியாகிய வீணாபதி யென்னும் பேடி, மணவினைகருதி வநதிருந்த ஆடவரை நோக்கி, 'இளையாளாகிய தததை பாட வீர ரெலலாரும அதற்கேறப யாழின கூறுபாட்டையெலலாம வாசிததல தொடஙகுக அதற்கு இயையீராயின், இவளது யாழ வாசினை போல விரையப் பாடுவீராக' என் றாள் பின்பு, காநதருவதததை, பாவைபோலிருந்து, யாழை வாசிதது, அதற்கேற்பப் பாடினாள் அவவிசையினைக கேடட அரசா முதலினோர் விம்மிதமெயதி, 'இமமட வரலது புருவம ஏறா, கண்ணும ஆடா, மிடறும வீங்காது, பறகளும தோன்றா; ஆத லால இவள வாய்திறநது பாடினாளோ? அன்றி யாழ்தான தனககுரிய நரம்போடு நாவினையும பெற்றுப் பாடிறறோ?' வென வருநதினா

கருஙகொடிப புருவ மேறா கயனெடுங கணணு மாடா
அருஙகடி மிடறும விமமா தணிமணி யெயிறுந தோனறா
இருஙகடற் பவளச செவவாய திறநதிவள பாடி னாளோ
நரமபொடு வீணை நாவி னவினறதோ வெனறு நைநதார் —சீவகசிநதாமணி

இங்குக் குறித்த பாடன்மரபே இசைமரபு என்னும நூலினுள்ளும,

கணணிமையா கணடந துடியா கொடிறசையா
பணணளவும வாயதோனறா பறறெரியா—எணணிலவை
களளாா நறுநதெரியற் கைதவனே காநதருவா
உளளாளப பாட லுணா —நசசினாக்கினியருரை-மேறகோள

என்னுமிடத்துங் கூறப்பட்டது இங்குக் கூறியது உள்ளாளப்பாடல். முன்பு கூறிய கிரியைகளெட்டுடனே, 'உளளாளம், விந்து, நாதம்' என்னும மூன்றினையுங் கூட்டப் பெறுகின்ற பதினொன்றும் பதினொரு பாடறறொழில்கள எனப்படுவ

உளளாளம் விநதுவுட ஞத மொலியுருட்டுத
தளளாத தாககெடுததல் தான்படுததல—மௌளக்
கருதி நலிதலகம் பிததல் குடிலம
ஒருபதின்மே லொனறென் றுரை —நசசினாக்கினியருரை-மேறகோள

உள்ளாளத்திணைக் குடிலத்தோடு ஒன்ருக்கிக கூறுவாருமுளர் விந்து, நாதம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் ஐந்தும் ஒரு தொகுதியாக, எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம் என்னும் ஐந்தும் மற்ருெரு தொகுதியாக நிறபவெனக் காணப் படுகிறது. பின்னின்ற ஐந்தின் இலக்கணம் வருமாறு

எடுததல்பாட் டுச்சமாம எண்படுததல் மநதம
நடுதது நலிதல் சமமாம—தொடுததியன்ற
தன்ளாத கம்பிதங் தாணடுஙகல நறகுடிலம
உள்ளாளப் பாட லுணா —நசசினாககினியருரை-மேற்கோள

உள்ளாளப்பாட்டுப் பாடுங்கால், இடை பிஙகலையை இயக்க மறுத்து, மூலாதார முதல் பிரமரந்திரமளவும நின்ற வெளியிலே இயங்கிப் பாடுதலென்பர்

பண்ணொன்று பாட லதுவொன்று பல்வளைக்கை
மண்ணொன்று மெல்விரலும வாணரம்பின் மேனடவா
விண்ணின் றியஙகி மிடறு நடுஙகி
எண்ணின்றி மாத ரிசைதோற் றிருநதனளே

என்னுஞ் சீவகசிந்தாமணிப் பாடலினுள்ளே, 'விண்' என்றது மேலே கூறிய வெளியினை. அவ் வெளியிலே இயங்கிப் பாடவேண்டிய உள்ளாளததிலே மிடறு நடுங் குதலாலேற்பட்ட கம்பிதங் கலநதது குறையாயிறறு ஆதலினுலே காநதருவதத்தை யாழ்ப்போரிலே தோல்வியடைந்தாள்

பருநது நிழலும்போற பாட்டும் எழாலும
திருநதுதாரச சீவகற்கே சோநதன

என்னுமிடததுப பருந்தினியககம பாடறருெழிலுக்கு ஒப்பாகக் கூறப்பட்டது; எங்ஙனமெனின், 'பருந்து பறக்குமிடதது முறையே உயாந்து அந் நிலததின்கண் நின்று ஆய்ந்து பின்னும் அம்முறையே மேன்மேல உயர்கின்ருற்போலப் பாட வேண்டுதலின் அஃது உவமமாயிற்று.'

கருவிகள் பல ஒருங்கியைந்து ஒலிப்பதனை இக் காலத்தார் Orchestra என்பர். இது பழந்தமிழ் நாட்டில் ஆமந்திரிகை யென வழங்கப்பட்டது. 'குழல்வழி யாழெழீஇத தணணுமைப் பின்னா, முழவியம்ப லாமந்திரிகை' எனச் சீவக சிந்தாமணி, 675 ஆம் பாடலுரையில், நச்சினுர்க்கினியர் காட்டிய மேற்கோட சூத்திரத்திலும்,

குழல்வழி நினற தியாழே யாழ்வழித
தண்ணுமை நினறது தகவே தணணுமைப்
பின்வழி நினறது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந திரிகை

என்னும் அரங்கேற்றுகாதைச் செய்யுளினுலும் அறிகின்ரும். இச் செய்யுளுரையிலே,

அரும்பதவுரையாசிரியர், 'ஆமந்திரிகையாவது—இடக்கை. நின்றது கருவியென்றது ஓசையென்க' என்றார்.

அனைத்துக் கருவிகளையும் ஆக்கியும் அடக்கியும் சிதைவின்றிச் செலுத்துவோன் தண்ணுமையாகிய மத்தளக்கருவியை யிசைப்போனாதலின், அவன் 'அத்தகு தண்ணுமை யருந்தொழில் முதல்வ' னெனப் போற்றப்பட்டான்.

—

8. பாணர் வரன்முறை

'பாணன் பறையன் துடியன் கடம்பனென் றிந்நான்கல்லது குடியுமில்லை' என்னும் பழஞ்செய்யுளிற் குறிக்கப்படும் நான்கு பெயர்களுள்ளே மூன்று இசைக் கருவியாற்பெற்ற பெயர்கள் ஆதலினாலே, பழந்தமிழ்நாட்டிலே இசையறிவு பெருகப் பரவியிருந்ததென அறிகின்றாம்.

பேரிகை படகம் இடக்கை உடுக்கை
சீர்மிகு மத்தளம் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகம் தண்ணுமை தாவில் தடாரி
அந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளம் துடுமை சிறுபறை அடக்கம்
மாசில் தகுணிச்சம் விரலேறு பாகம்
தொக்க உபாங்கம் துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே —அடியார்க்குநல்லாருரை-மேற்கோள்

எனத் தோற்கருவிகள் கூறப்பட்டன. பறையினை முழக்குவோன் பறையன்; துடியினை முழக்குவோன் துடியன் 'தோற்றந் துடியதனில்' என்றமையினாலே, கூத்தப்பிரானது திருக்கரத்திலிருப்பது துடியென்று தெளியப்படும்.

மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையு மத்திணைப் புறனே

என்னும் தொல்காப்பியப் புறத்திணையியற் சூத்திரத்தினாலே, போர்க்களத்துச் செல்லும் மறவர் தத்தமது துடியரோடு ஊர்ப்புறஞ் சூழ்தல் கூறப்பட்டது

நிதிலஞ்செய் பட்டமும் நெற்றித் திலதமும்
ஒத்திலங்க மெய்பூசி 'யோர்த்துடீஇத்—தத்தம்
துடியரோ டூர்ப்புறஞ் சூழ்ந்தார் மறவர்
குடிநிரை பாராட்டக் கொண்டு.

என்னும் பழம்பாடலிற் கூறியிருப்பவற்றை அகக்கண்கொண்டு நோக்குவோமாக. பழந்தமிழ்நாட்டு வீரமறவர் நெற்றியிலே திலதமிட்டு முத்தினாற்செய்த நெற்றிப் பட்டத்தைக் கட்டியிருக்கின்றனர் உடலிலே சாந்தம் பூசி அரையிலே போர்க் கோலத்திற்குரிய ஆடை அணிந்திருக்கின்றனர் தத்தமது துடியர் பின்செல்ல ஊர்ப் புறத்தைச் சூழ்ந்து செல்கின்றார்.

முல்லைக்கு ஏறுகோட்பறை, குறிஞ்சிக்கு முருகியமுந் தொண்டகப் பறையும், மருதத்திற்கு மணமுழவும் நெல்லரிகிணையும், நெய்தற்கு மீன்கோட்பறை, பாலைக்குச் சூறைகோட்பறையும் நிரைகோட்பறையும் என ஐவகை நிலத்திற்கும் பறை கூறப் பட்டன. இவற்றை முழக்குவோர் பறையர்.

பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த கிளவியொடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்

எனத் தொல்காப்பியச் செய்யுளியலுட் கூறியபடி, கற்பினுட் கூற்றிற்குரிய பாணன் தலைமகளது ஊடலினைத் தீர்க்கும் வாயில்களுள் ஒருவன்.

வையாவிக்கோப் பெரும்பேகன் தனது மனைவி கண்ணகியைத் துறந்திருந்தானாக, அவனாற் றுறக்கப்பட்ட கண்ணகி காரணமாக அவனைப் பாடிய பரணரும், அரிசில்கிழாரும், பெருங்குன்றூர்கிழாரும் அகத்திணை மரபின்படி தம்மைப் பாணராக வைத்துச் செய்யுள் செய்தது மேற்குறித்த உண்மையினை வலியுறுத்துகின்றது. அவற்றுள் ஒரு செய்யுள் வருமாறு:

மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக
பசித்தும் வாரேம் பாரமும் இலமே
களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந் துறைநர் நடுங்கப் பண்ணி
அறஞ்செய் தீமோ அருள்வெய் யோயென
இஃதியாம் இரந்த பரிசில் அஃதிருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னாது உறைவி அரும்படர் களைமே —புறம். 145

'யாம் பசித்தும் வருவே மல்லேம், காக்கப்படும் சுற்றமும் உடையே மல்லேம்' எனப் புலவர் கூறுகின்றார். உண்மைப் பாணரேயெனின் இவ்விரண்டும் உடையவராகவே தோற்றுவார். அவர் அத்தகையராதலை,

உடும்புரித் தன்ன என்பெழு மருங்கிற்
கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது
சில்செவித் தாகிய கேள்வி நொந்துநொந்து
ஈங்கு எவன்செய்தியோ பாண —புறம். 68

கையது கடனிறை யாழே மெய்யது
புரவல ரின்மையிற் பசியே அரையது
வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்
ஓம்பி யுடுத்த உயவற் பாண —புறம். 69

என்னும் இச் செய்யுட்கள் காட்டுகின்றன. பத்துப்பாட்டிலமைந்த சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம் என்னுங்

கூத்தராற்றுப்படை ஆகிய நூல்கள் பழைய பாணருடைய வரன்முறையினைப் பெருகக் கூறுவன.

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், திருப்பாணாழ்வார், பாணபத்திரர் என்னுந் தெய்வப் பாணர்கள் இடைக்காலத்தில வாழ்ந்து இறைவனருள் பெற்றவர்கள்.

---

9. திணைககருப் பொருளாகிய யாழின்பகுதி *

தெயவ முணவே மாமரம புட்பறை
செயதி யாழின பகுதியொடு தொகைஇ
அவவகை பிறவுங கருவென மொழிப —தொல. அகததிணையியல-கஅ

எனத தொல்லாசிரிய ருரைத்ததுகொண்டு, யாழின்பகுதி கருப்பொருள் வகையினுள் ஒன்றுமென அறிகின்றும திணை ஐநதாதலின், யாழின் பகுதியும் ஐவகையவா மென்பது ஒருதலை 'ஈரிரு பண்ணும் எழுமூன்று திறனும்' எனும் இசைநூன் மரபினை நோககுமிடததுப், பெரும்பண் நான்கென்பது பெறப்படுகின்றது. இது யாழின்பகுதி ஐவகையவென மேறகண்ட முடிபினேடு மாறுகொள்வதாகக் காணப் படுதலின், யாழின பகுதியின் பெயருந், தொகையும், முறையும, பொழுதுரிமையும் என்றின்னவற்றை ஆராய்ந்தறிதல் இன்றியமையாததாயிறறு

சீரினிது கொணடு நரமபினி தியக்கி
யாழோர மருதம பணண(ப).........
....
புலாநது விரி விடியல......... —மதுரைக்காஞ்சி கூடுஎ—கூஎச

என்றதனுல், மருதப்பண் விடியற்காலத்திற்கு உரியதென்பது பெறப்படடது

திவவுமெயா நிறுததுச் செவவழி பணணிக
குரலபுணா நலயாழ முழவோ டொன்றி
நுணணீ ராகுளி யிரட்டப் பலவுட
ஞெணசுடர் விளகக முநதுற......
....
முநதை யாமஞ சென்ற பினறை —மதுரைககாஞசி கூ௦ச—கூ௨௦.

என்றதனுற் செவ்வழிப்பண மாலைக்காலத்துக் குரியதென்பது பெறப்படடது.

அருளா யாதலோ கொடிதே யிருள்வரச
சீறியாழ் செவவழி பணணி யாழநின
காரெதிர் கானம் பாடினே மாக —புறம. கசச

---

*வரலாறறு முறைமையினை மறநத பாணரது செயலும் பிறவும கூறும இப் பகுதி விககிரம மாசித் திஙகளிலே, தமிழ்பபொழிலில் யாம வெளியிட்ட 'பணணுந திறனும்' என்னும் பொருளுரையினின்று எடுக்கப்பட்டதாதலின், மணிமலரில வெளிவநத 'முறைமறநதறைதல்' எனனும பொருளுரைக்குக் காலததால முநதியதென்பதை அறிஞர் அறிநதுகொளவாராக.

'மாலைக்காலம் வந்தவளவிலே சிறிய யாழை இரங்கற்பண்ணாகிய செவ்வழி யென்னும் பண்ணிலே வாசிக்கும் பரிசு பண்ணி நினது மழையை யேற்றுக்கொண்ட காட்டைப் பாடினேமாக' என்றமையால், முல்லை நிலமும், கார் காலமும், மாலைப்பொழுதும் செவ்வழிப்பண்ணிற் குரியவாமென்பதும், அது இரங்கற்பண் ணென்பதும் பெறப்பட்டன.

வளராத் தொடியினும் வௌவுபு திரிந்து
விளரி யுறுதருந் தீந்தொடை நினையாத்
தளரு நெஞ்சம் . . . —புறம் உசுo

இரங்கற்பண்ணாகிய விளரியைச் சென்றுறுகின்ற இனிய நரப்புத் தொடையினது தீங்கை நினைந்து நடுங்கு நெஞ்சம்' என்றமையால், விளரிப்பண்ணும் இரங்கற்பண் ணென்பது பெறப்பட்டது.

ஐந்திணைக்குங் கூறிய உரிப்பொருளையும், கருப்பொருட்பாலவாகிய யாழின் பகுதியையும், முதற்பொருட்பாலவாகிய சிறுபொழுதையும் உடன்வைத்து நோக்குவோமாக.

உரிப்பொருள்	யாழ்	பண்	சிறுபொழுது
புணர்தல்	குறிஞ்சி	குறிஞ்சி	யாமம்
பிரிதல்	பாலை	பாலை	நண்பகல்
இருத்தல்	முல்லை	சாதாரி	மாலை
இரங்கல்	நெய்தல்	செவ்வழி	எற்பாடு
ஊடல்	மருதம்	மருதம்	வைகறை, விடியல்

இவற்றுள், யாழின் பெயர் நச்சினார்க்கினியருரையாலும், பண்ணின் பெயர் இளம்பூரணருரையாலும் அறியப்படுவன.

திறனில் யாழே நெய்தல் யாழாகும்

திறனில் யாழ்விளரி நெய்தனிலஞ் சிவணும்

என்னுஞ் சேந்தன் திவாகரத்தினாலும், 'விரவிய திறனில் யாழும் விளரியும் நெய்தலாமே' என்னுஞ் சூடாமணி நிகண்டினாலும், 'விளரியாழ்' என்பது நெய்தல் யாழே யாமெனவும், அது திறனில்லாத யாழ் எனவும் அறிகின்றோம். செவ்வழி யாழுக்கு இசைநூலாசிரியர் திறம் வகுத்தோதினராதலின், அது திறனில் யாழாகிய நெய்தல் யாழின் வேறுபட்ட தென்பது புலப்படுகின்றது. நெய்தற்குரிய சிறுபொழுதாகிய எற்பாடு விளரிப்பண் பாடுதற்குரிய காலமாகும். செவ்வழிக்குரிமை மாலைக்காலமாமென முன்னாகக் காட்டினோம். மாலையிற் செவ்வழிப்பண்ணும், காலையில் மருதப்பண்ணும் வாசிக்கவேண்டுமென்பது இசைநூன்மரபு. இம்முறையன்றி, வேறுபட மொழிவார், வரலாற்று முறையை மறந்தோராவா ரென்பதைப் பின்வருஞ் செய்யுள் வற்புறுத்துகின்றது.

நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி
வரவெமர் மறந்தனர் .... —புறம். கசகூ

வரவு—வரலாற்றுமுறைமை

சேந்தன் திவாகரத்தினுள்ளே,

யாமயாழ்ப் பெயர்க் குறிஞ்சி யாழும
செவவழியாழப பெயா முலலை யாழும
பாலையாழும மருத யாழு மென
நாலவகை யாழும நாற்பெரும பணணே

எனக கூறப்படடதாதலின, முல்லையாழே செவவழியாழென அறிகின்ரும். யாமப் பொழுதிற்கு உரியதாகிய குறிஞ்சியாழிறகு 'யாமயாழ' என மறறுமொருபெயர் உளதென்பதையும் இதனுற் காணகினருமை (அசசிடடப்படட சேநதன் திவாகரப் புத்தகததில் நாற்பெரும் பணணின்பெயா கூறுமிடதது, 'யாமையாழ' எனறிருப் பதை 'யாமயாழ' என்று திருததிககொளக முல்லையாழததிறனுகிய 'யாமையாழ்' என்பதொன்றுண்டு அதனை உரியவிடததிற காட்டுதும்)

முல்லையுஞ சாதாரியும் செவவ்ழியாழிறகுரிய திறனுமென்பது பின்னர்க் காட டப்படும். செவவழி முல்லைக்குரியதாக விருப்ப, அதனை நெய்தலொடு புணாத்துக் கூறிய இளம்பூரணரும், பிறரும வழுவுறறனரோவெனின், அற்றன்று, திறனில் யாழாகிய நெயதலயாழை இசைநூலாசிரியர் பெரும்பண் வரிசையினின் றகற்றி விட்டாராதலின், மாலைப்பொழுதிற்குரிய செவவழியாழினை எற்பாடடோடுஞ் சார்ததிக் கூறியது ஒருவாற்ரு னமையுமென்க.

பாலை குறிஞசி மருதனுசெவ வழியென
நாலவகை யாழா நாறபெரும பணணே —பிங்கலநிகண்டு-கந௨எ௫

உரவிய பாலையாழே யுலவிய குறிஞசியாழே
மருதனு செவவழியாழெனன வகுதத நாலிசையுநாற்பண —சூடாமணிநிகணடு.

எனக் கூறிய நாறபெரும பணணிறகும அறுவகைச் சிறுபொழுதையும் கொடுக்கு மிடதது,

வைகறை, விடியல்	மருதயாழ
நண்பகல்	பாலையாழ
எறபாடு, மாலை	செவவழியாழ்
யாமம	குறிஞ்சியாழ

என மரபுபட்டுநிற்கக காண்கின்ரும்

பொழுதென மாலைக் கெழுயாமம வைகறை
யெறறேற்ற நணபக லெற்பா டெனவாறே
மாலைக்குரிமை மலர்தலுற் பலமபுள
சோலைசோந தொலிததல சுரபி கரைதல
துன்னடைந்த தாமரை சுளிததெனக கூமபல்
கன்னடங காமபோதி கனியப் பாடலே
யாமத துரிமை யாகரி பாடலே
யூமன சகோர முவரி யுவததலே
காம மனனதங கரவென் றிவையே

வைகறைக் குரிமை வாரணங் கூவன்
மெய்யெனக் கனவுறன் மீனொளி குன்றல
வாமமீ னுதித்தன் மாதவர் வாழ்த்த
லிராம கலியுட னிந்தோளம் பாடலே
விடியற் குரிமை விலங்கொடு மற்றுயிர
கடிமகிழ்ந் தெழுச்சி காவொடு கமலம்
விரிபூ மலர்தல் வெண்பனி துளித்தல
தெரிபூ பாளந் தேசாட்சி பாடலே
நண்பகற் குரிமை நயத்தல் கோகம
வெண்டே ரோடன் மேதிநீ ராடல
பண்டிசை சாரங்கம் பாட லென்பவே
எற்பாட் டுரிமை வெற்பா னிழனீளல்
வானஞ் சிவத்தல மறியினங் குதித்தல
கானமாயக காபி கலியாணி பாடலே

எனத் தோன்னூல்விளக்க நூலாசிரியர் சிறுபொழுதுரிமை கூறியதை நோக்குங்கால்,

மாலைக்குரிமை	கன்னடம, காம்போதி
யாமத்துரிமை	ஆகரி
வைகறைக்குரிமை	இராமகலி, இநதோளம
விடியறகுரிமை	பூபாளம், தேசாட்சி
நண்பகற்குரிமை	சாரங்கம்
எற்பாட்டுரிமை	காபி, கலியாணி

எனப் பிற்காலத்தார் கொண்டன ரென்பது தெளிவாகின்றது. வடநாட்டில் இற்றை நாளினும் இம்முறை கையாளப்பட்டு வருகிறது

10. யாழ்க்கருவியின் தெய்வநலம் ; இக்கருவி தமிழ்நாட்டிலிருந்து பிறநாடுகளுக்குப் பரவிய வரன்முறை

'இசையினி விவடகுத் தோற்றும் யானையால் வேறுமென்னில், இசைவதொன் றன்று கண்டீர்' எனும் சீவகசிந்தாமணிச் செய்யுட் பகுதிக்கு, நச்சினார்க்கினியர், 'இவட்கு இசையாற்றோற்ற நாம இசைக்கு வணங்கும் யானையால வெல்லுது மென்று கருதிற் பொருந்துவ தொன்றன்று' என உரை கூறி, 'யானை நாதத்திற் றோற்றுதலின் அதற்கு வணங்குதலியல்பு' என அகலவுரையுந் தந்தார். 'பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்' வேழமுகனுகச சமய நூல்களிலே கூறப்படுதல் இத தொடர்பிலே உய்த்துணரற பாலது.

பொருள்வயிற் பிரியக்கருதிய தலைமகனைச் செலவழுங்குவித்த தோழி கூற்றாக வரும்,

காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல
யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புநின

தொலகவின் தொலைத லஞசியெனு
சொலவரைத தஙகினா காதலோரே

என்னும் பாலைககலியினுள்ளே யானை யாழோசையி னெல்லையிலே தங்குமென்பது குறிப்பிடபபட்டது

வததவா கோமகனுகிய உதயணன் கோடபதி என்னும் யாழிசையினுலே தெயவயானையினை வசபபடுததிய செயதி பெருஙகதையினுட் கூறப்படடது

கொணடுசெல பாணநின தணடுறை யூரனைப
பாடுமனைப பாடல கூடாது நீடுநிலைப
புரவியும பணணிலை முனிகுவ
விரகில மொழியலயாம வேடடில வழியே

என்னும நறறிணைச செய்யுளிலே, குதிரை இசைகேட்பின் முனிவுகொளளும் என்னும் உண்மை குறிககப்படடது

போாககளததிலே, வில்வீரனுகிய விசயனுக்கு மறைநூற பொருளைத் தெரிதத அருந்திறலாசான தொழுநைததுறையிலே கோவலா சிறுமியரொடு ஆடலபுரிநத நாட்களிலே, அவன மணிவாயினெழுநத குழலோசை ஆஙகுளள ஆனிரைகளையும் மூவுலகினுமுளள உயிாக கூடடஙகளையும வசப்படுததிய தெனபர்.

பாடடுக்குருகுந தமிழ்சசொக்கநாதா கூடலம்பதியிலே பாணபததிரர் பொருட டாக விறகாளாகி இசைபரபபிய ஞான்று, அவ் விசைவலையிற்பட்ட விடவாய நாக மும, பலபொறிமஞ்ஞையும், யானையும, சிஙகமும், மானும, புலியும் என்றினனவை தமமியல்பாகிய பகைமையினை மறந்து ஒன்றுகூடி நின்றனவெனப் புராணங கூறும்

திருநீலகண்டப் பெருமபாணருககுப பொற்பலகையளிததது, ஞானசமபந்தருக்குப் பொற்றுளமீநது, இசை வளாத்த பேரருளாளன் இசையே யுருவாக நின்ருன் என்னும் உணமை, ' பணணும பதமேழும் . விணணும் முழுதானுன் ' என்னும் ஆளுடைய பிளளையார் திருவாக்கினுலும், ' ஏழிசையாய இசைப்பயனுய இனனமுதாய எனனுடைய தோழனுமாய ' எனககூறிய ஆளுடைய நம்பிகள் திருவாககினுலும, ' ஓசை யொலியெலா மானுய் நீயே ' எனககூறிய ஆளுடைய அரசர் திருவாக்கினுலும அறியபபடுகின்றது

' முன்நல்யாழ் பயிலநூல நரம்பின முதிர்சுவையே ' எனக கன்னலும அமிழ்தும போன்ற கார்முகில்வண்ணனைப பாடிய திருககுருகைப்பிரான், அவ்வண்ணல் யாழ்நரம்பின் முதிாசுவையாகி நின்ருன் என்னும் உண்மையினைத் தெளிவுபடுத்துகின்ருர்.

இத்தகைய தெய்வத்தன்மை வாயநத இசையினைத் தந்த யாழ்க்கருவி தெய்வமபோலப் போற்றபபட்டது. ' இத்திறத்துக குறறநீங்கிய யாழுகையிற் ருெழுது வாங்கி ' என்னுமிடத்து இளங்கோவடிகள் தொழப்படும உரிமை யாழ்க்கருவிக்கு உளதென்பதைக் குறிப்பிட்டார்.

மடுததவன புகுவழி மறையேனென் றியாழொடும
எடுததுசசூள பலவுறற பாணன்வாந தீயான்கொால

என்னும் மருதககலியினுளளே, யாழாகிய தெயவத்தோடு பல தெய்வங்களையுங் கூட்

டிச் சூளுற்ற பாணனது செயதி கூறப்பட்டது யாழுக்குரிய தெய்வம் 'மாதங்கி' யென நச்சினார்க்கினியர் சீவக்சிந்தாமணி யுரையினுட் கூறினர்

நமது நாட்டிற்போலவே வேறு பல நாடுகளிலும் யாழக்கருவி தெயவமாகப் போற்றப்படடது. பண்டை நாளிலே சீரும் சிறப்பு மெய்தியிருந்த மிசிரம் என்னும் எகிப்து (Egypt) நாட்டிலும, பாரசீகக் கடற்கரையிலிருந்து அழிந்துபோன சுமேரு (Sumeria) நாட்டிலும், சோழர் குடியேறினமையினாலே சோழதேயம் எனனும பெய ரினை எய்திப் பிற்காலத்திலே மொழிச சிதைவினாலே சால்தெயா (Chaldea) என வழங்கப்படட தொல்பதியிலும், சேரா குலததார் கலததிற் சென்று வெறறிபெற் றுத் தம்மாணை செலுத்திய கிரேதத (Crete) தீவிலும, அதறகணிததாகிய (Greece) யவனபுரத்திலும், உரோமர் வருதறகுமுன பழைய இததாலி (Italy) தேசததிலும், ஐபீரியா எனப்படட பழைய ஸ்பெயின (Spain) தேசததிலும, பிறவிடஙகளிலும் தமிழ்க குலததாா வாழ்ந்து நாகரிகம் பரப்பினாகளென மேறறிசை யறிஞர் ஆராய்ச்சியாற்கணடு வெளியிட்டிருககின்றனா இந்நாடுகளிலெல்லாம் யாழக்கருவி யும் போற்றப்பட்டது. சிந்துநதிதீரததிலே, முன்னாளிலே, பாண்டிய மனனரது ஆளுகையிலே, மீனாடு என்னும் பெயரொடு திகழ்ந்ததும், பின்னாளிலே, 'இறந்தோர் மேடு' எனும் கருத்துடைய 'முகிஞ்சதரை' (Mohen-jo-Daro) என்னும பெயு ரெய்தியதுமாகிய பழைய நாட்டிலே, மிதுனராசியானது யாழ என்னும் பெயரி னால வழங்கப்பட்டு, இணை யாழுருவததினாலே குறியீடு செயயப்படடதென அறிஞர் கூறுவர்.

வேற்று நாடடிலே தமிழககுலததாா குடியேறி வாழந்த வரலாற்றினை, 'உலக புராணம்' என்னுந தலைப்பெயாக்கீழ்ச 'செநதமிழி'லும, பிற இதழகளிலும யாம் வெளியிட்ட பொருளுரையிலே விரிவாகக் காணலாம மததியதரைக கடலினைச் சூழவிருநத நாடுகள பழைமையாக எய்திய நாகரீகமானது பிற கலைகளோடு இசைக் கலையினையும திறமபெற வளாததது

இலஙகை மன்னனாகிய இராவணனை வகுதத நரம்புககருவி, அவ்வகைய கருவிகளுள்ளே பலவாற்றானும் முதன்மைபெறறதெனத துணிதற கிடமுண்டு 'தல முத லூழியிற றானவா தருக்கறப், புலமக ளாளா புரிநரம் பாயிரம, வலிபெறத் தொடுத்த வாககமை பேரியாழ' எனப் பெருங்கதையினுட் கூறப்பட்ட கருவியினை ஆதியாழ் எனக் கொளளும அறிவுடையோர் தானவா கையிலிருந்த யாழ் தாம் கொள்ளும் 'ஆதியாழ'ககுக் காலததால் முறபட்டதெனபதை மறந்துவிட்டனர் போலும்

முன்னாளிலே, தமிழநாடடிலே இருந்து இறந்துபோன கூதது, இசை நூல் களின் பெயரும், வரன்முறையும், முசசங்கஙகளின் வரலாறு கூறும இடங்களிலெல் லாம் பெறப்படுவ. அடியாாக்கு நல்லார் உரையிலே காணப்படுஞ் சூத்திரங்களை இந் நூலுக்குச் சேர்க்கையாகத் தருவாம் அவர்காலத்திருந்த இசைநூல்களின் பெயரை அச் சேர்க்கையுட காண்க.

கடல்வாய்ப்படடனவும், காலத்தின் மாறுதலினாலே மறைந்துபோயினவுமாகிய நூல்கள் மிகப்பல. அந் நூற்பெயர்களைக் கூறிப் பழமைபாராடடுவதோடு அமைந்

திருப்போமா? இல்லை. முன்னிருந்த கலைசெல்வத்தை மீட்டும் பெறுதற்கு முயல்வோம அத்தகைய முயற்சி நமது நாட்டிற்கு ஆக்கமளிக்கும்

சர் உவாலடர் ஸ்கொட் என்னுங் கவிஞா தமது தாய்நாட்டிலிருந்து மறைந்து போன யாழ்க் கருவியினை முன்னிலைபபடுத்தி யெழுதிய செழுமபாடல் உள்ளததை யுருககும் நீர்மையது அது நமதுநாட்டு யாழ்க்கருவிககும் ஏற்புடையதாதலின், அபபாடலின் மொழிபெயர்ப்பினை ஈண்டுத தருகினறும இது ஸ்கொட எழுதிய நீரநிலைக கன்னிகை (Lady of the Lake) என்னும் அழகிய பனுவலின் முனனிறபது.

'வடபுலதது நல்யாழே! நீரூறறினுக்கு நிழலளிக்கும் இம மரக்கிளைமீது நெடிது தஙகினை இலையொலியும அருவிநீரொலியும இசையியமப, நினனரமபுகள் இசையின்றித் துயிலுதல முறையாகுமா? முன்னுளிலே வீசுகினற காறறிலே இசையமிழதத்தை உகுததனையே நின்பாற பொருமையுறற பசுங்கொடி படர்நது நின் நரமபுகளை ஒவவொனறுகக கட்டிவிடடமையினுலே பேசாதிருககின்றனையா? வீரர் முகததிலே புன்னகை தவழவும், அரிவையர் நாட்டங்களிலிருநது உவகைக கண்ணீர் கலுழவும நினது இனிய குரலினுலே பேசலாகாதா?

'முன்னுளிலே, கலிடோனியாவிலே, விழாககொண்டாடுவோா மத்தியிலே, நீ மௌனஞ சாதிததநில்லையே காதலையும வெறறியையும் பாடி அச்சத்தையும் பெருமிததைதையும அளவுபடுத்தினையே நினது இசைகேட டுருகும்வண்ணம் காவலரும் காரிகைநல்லாரும் சூழ்நது நின்றனரன்றே? வீரரது தீரச்செயலும, காரிகையாரது ஒப்பறற கண்ணிணைகளுமே நினது பாடறபொருளாக அமைந்தன

'நல்யாழே! துயிலொழிந்தெழுவாயாக. நினது நரம்புகளிற் படருங் கையானது பயிற்சியற்ற கையெனினும், செழிய பழம்பாடலகளின் இன்னெலியினை ஒரளவிற்காவது இசைததலாகாதா? நின் இசைக்குருகி ஓர் இதயமாவது துடிப்புறுமெனின், நின்செயல் வீண்செயலாகாதல்லவா? நீ இன்னும் வாய்திறவாதிருததல் தகுதி அன்று சிதததைதைக கவரும் வனமோகினியே! எழுந்திரு, இன்னும் ஒரு முறை எழுநதிரு'

'வடபுலதது நல்யாழே!' என்றிருபபது 'தென்புலத்து நலயாழே' என விருப்பின், தமிழநாடடுப் பாணரிசைதத யாழுககு இப்பாடல் ஏற்புடையதாகுமனறே?

---

11. நூல் தோன்றிய வரன்முறையும், அவையடக்கமும், நூற்பயனும

நூலெழுதுவோர் மரபின்வண்ணம் இதுவரையுந் தன்மைப்பன்மை வழங்கியதனை நிறுததிக்கொண்டு, தன்மையொருமையில் நின்றுகூறும் இச்சின்மொழிகளுக்கும் அறிஞர் செவிசாய்த்தருள்வாராக.

ஐயிரண்டு ஆணடுகளாக நேரங கிடைககும்போதெல்லாம் முயன்று, குருவருளினுலும், தமிழ்த தெய்வத்தின் கடைக்கண் நோக்கினுலும் இவ்வாராய்சசி நூலினை ஒருவாறு எழுதி முடிததேன். யாழ்க்கருவியொழிநத பிற இசைக்கருவிகளைக் குறித்தும், இசையிலக்கணம், இசைப்பாட்டிலக்கணம், இசைக்கலைவளர்ச்சி யென்னும்

பொருள்களைக் குறிததும ஆராய்ந்து கண்ட முடிபுகள் சில கையிலுளளன , காண வேண்டியன இன்னும் பலவுள இறைவன் திருவருள் பாலிப்பாறுயின், ஏறற காலததிலே அம்முடிபுகள் மற்றொரு நூலுருவாக வெளிவருதல கூடும்

இவ்வாராய்ச்சி நடந்துகொணடிருக்குமபொழுதே, மதுரைத தமிழச சஙகத திலும, கரநதைத் தமிழச் சஙகததிலும, சென்னைப் பல்கலைக் கழகத்திலும், யாழப் பாணத்து ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச சஙகததிலும, பிற கல்விக கழகஙகளி லும் இப்பொருளபற்றிய விரிவுரைகள செயய நோந்தது அவவுரைகளைக கேட்ட அறிஞர் பலர் இவ்வாராய்சசி நூலுருவாதலை விரும்பி எழுதி முடிக்குமபடி என்னைப் பணித்தாாகள் அப்பணியினை மேறகொண்டு கரநதைத் தமிழ்ச சஙகத்து வெளி யீடாகிய தமிழ்ப்பொழிலிலே, விககிரம ஆணடு மாசிததிஙகள் முதலாகப் 'பண்ணுந் திறனும', 'குழலும யாழும', 'எண்ணும இசையும' 'பாலைததிரிபு', 'சுருதிவீணை' யென்னுந தலைபபெயர்களைத் தநது இவவாராயசசியினைத தொடாபாக எழுதிக் கொண்டுவநதேன

மதுரைத் தமிழச சஙகதது வெளியீடாகிய 'செந்தமிழ'ப் பத்திரிகையிலும், 'சங்கீத மகரந்தம்', 'இசைககிரமம்', 'எணணலளவை' என்னுந் தலைபபெயாக கீழச் சில பொருளுரைகளை வெளியிடடேன் அணமையிலே, திருசசிராபபள்ளி வானொலி நிலையத்திலே இருமுறையும், சென்னை நகா ஒலிபரப்பு நிலையததிலே ஒருமுறையும் இப்பொருளபறறிப பேசினேன 'தமிழ்பபொழி'லிலும, 'செநதமிழி'லும் வானொலிப் பேச்சுகளிலும் வெளியிடட, உரைகளும கருத்துகளும் இந்நூலிற சோக் கப்பட்டன சோத்துககொள்ள அநுமதிதத அதிகாரிகளுககு எனது நனறி யுரியது

என்னை இபபணியிலே பெரிதும ஊக்கிய கரநதைத தமிழச சஙகத் தலைவர் தமிழவேள் திரு த வே உமாமகேசுவரம் பிள்ளை யவாகள் இதன் நிறைவு பேற றினைக காணுமுன் பிரிநது சென்றமையினை நினைக்குமபோது என்னுள்ளம பெரி தும் துயருறுகின்றது அவாகளது அனபுககுரிய நிலையமாகிய இததமிழப பெரு மன்றத்திலும், இதனைச் சார்நதிருககும் அகத்தியர் திருமடத்திலும இருநது இந் நூலினை எழுதி முடித்தமை அவாகளது பிரிவினுலெய்திய மனததுயரினை ஓரளவிறகு நீக்கிவிட்டது

ஆயிரம ஆண்டுகளாக மறைநது கிடந்த அருங்கலை நிதியததின பெருமையினை யும், அதனைத தேடிக் காணப்புகுநத எனது சிறுமையினையும் ஒப்பவைதது நோககும சான்றோர் என்னை எளளி நகையாடுதல இயல்பேயாம் 'வையமென்னை யிகழவும் மாசெனக கெய்தவும்' இவ்வாராய்ச்சியினை யான் எழுதத துணிநதது, 'பொய்யில காட்சிப் புலமையினோ'ராகிய இளங்கோவடிகள தமிழ்த தெய்வததின் திருவடி களுககு அணியாகப் புனைந்தளித்த தெய்வமாககவியாகிய சிலப்பதிகாரததின் மாட்சி யினை என்னு லியன்றவரை உலகிறகுத தெரிவிக்கும பெருவிருப்பினுலேயாம் இயற றமிழ நூலகளிலே பரநதுகிடககும் இசைநூன் முடிபுகளை என்போன்ற தமிழ் மாணவர்கள் ஓரளவிறகு உணாந்துகொளள இவவாராய்சசி உதவுமாயின், எயதும பயனும் பெறுதற்குரிய பேறும் அதுவேயெனக் கொண்டு உளமகிழவுறுவேன்

தமிழ் நாடு செய்த தவப்பயனாகத் தோன்றிச், சங்கநூற் செல்வத்தைத் தமிழுலகிற் கீந்த அறிவுக்கொடைப் பெருவள்ளலும், பெரும்பேராசிரியர், தென்னாட்டுக் கலைச்செல்வர், எழுத்தறி புலவர் என்னும் சிறப்புப் பெயர்களுக்குச் சிறப்பளித்த பெரும்புலவருமாகிய சாமிநாதையர் அவர்கள் சிலப்பதிகாரத்தினை முதன்முறையாக அச்சிட்டது 1892 ஆம் ஆண்டிலாகும். அந்த ஆண்டிலே யானும் பிறந்தேனாதலினாலே, பள்ளியிற் படிக்குங் காலத்திலே, மூத்தோர் கையிலே அந்நூற்பிரதி யிருக்கக் காண்பதும், என் கையினாலே அதனைத் தீண்டுவதும் எனக்குப் பேருவகையினைத் தரும் செயல்களாக இருந்தன.

அஃதன்றியும், ஈழ நாட்டின் குணபாலிலே, என் முன்னோர்க்கு உறைவிடமாகிய காரேறு தீவிலே, கடல் சூழ் இலங்கைக் கயவாகு மன்னன் வழிவந்த மன்னர்களாலே நிறுவப்பட்ட பழைமையான கண்ணகியார் கோயில் ஒன்று உளது. அதன் வழியாகவும் சிலப்பதிகாரத்தின்மீதுள்ள ஆர்வம் பெருகியது.

கொழும்புமாநகரிற் கல்விகற்கும் காலத்திலே, இலங்கையரசினராலே பெருமதிப்புப்பெற்ற கலைச் செல்வராகிய கைலாசபிள்ளை முதலியாரவர்களைச் சந்தித்துச் சிலப்பதிகாரத்தைப் பாடங்கேட்கும் பேற்றினைப் பெற்றேன். பரம்பரைக் கலைவாணர் குலத்திலே யுதித்த முதலியாரவர்கள் பழைய இசைமரபு தவறாது கம்பீரமான குரலிலே மங்கலவாழ்த்துப் பாடலினைப் பாடக்கேட்டது இன்னும் என் அகச்செவியிலே ஒலித்துக்கொண்டிருக்கிறது.

1924 ஆம் ஆண்டிலே, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழாவிற் கலந்து கொள்ளவும், ‘நாடகத்தமிழ்’ என்னும் பொருள்பற்றி ஒரு விரிவுரை செய்யவும் வசதி யேற்பட்டது. சங்கத்துக் கௌரவ காரியதரிசியாராகிய திரு T. C. சீனிவாச ஐயங்காரவர்கள் அவ் விரிவுரையினை நூலுருவாக்கித் தரும்படி பணித்தார்கள். ‘மதங்கசூளாமணி’ எனப் பெயரிட்டு எழுதிக் கொடுத்தேன். சிலப்பதிகாரத்திலுள்ள நாடக நூன்முடிபுகளை ஓரளவிற்கு விளக்குகின்ற அந்நூலினைச் சங்கத்தார் உவந்தேற்று வெளியிட்டார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே, தமிழ்ப்பகுதித் தலைவராகவிருந்த காலத்திலே, இசைப்பகுதிக் கல்விமுறையினையும் மேற்பார்வையிடும் கடமை ஏற்பட்டது. அக்காலத்திலே, தஞ்சைத் திருவாளர் க. பொன்னையா பிள்ளை யவர்களிடம் கருநாடக சங்கீதமென இந்நாளில் வழங்கும் இசையினது அமைப்பினை ஓரளவிற்கு அறிந்து கொண்டு இவ்வாராய்ச்சியினைத் தொடங்கினேன்.

1936 ஆம் ஆண்டு, மாசித் திங்களிலே, பழந் தமிழரின் இசை, சிற்பம், கலையறிவு என்னும் பொருள்பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதரவிலே ஆறு விரிவுரை செய்தேன். அவ்விரிவுரைகள் பல்கலைக் கழகத்துப் பட்டிமண்டபத்திலே (Senate House) ஆங்கில மொழியில் நிகழ்ந்தன. பிற மொழியாளர்களும் பலர் வந்து கேட்டார்கள். எல்லா விரிவுரைகளும் இந்து (The Hindu) என்னும் ஆங்கில பத்திரிகையிலே வெளிவந்தன. அவற்றைக் கண்ட அறிஞர் பலர் ஆங்கிலத்திலே நூலுருவாக்கித் தரும்படி என்னைக் கேட்டார்கள். ஈழ நாட்டிலே, ஸ்ரீ இராம

கிருஷ்ண சங்கத்துப் பாடசாலைகள் பதினேழினை நடத்தும் பொறுப்பு என முழு நேரத்தையும் பற்றினமையினாலே, இசையாராய்ச்சி ஓரளவிற்குத் தடைப்பட்டு நின்றது.

பின்பு திருமடத்துப் பெரியோர்கள் இமயமலைச் சாரலிலுள்ள அத்துவைத ஆச்சிரமத்திற்குச் சென்று, 'பிரபுத்த பாரதா' எனனும் ஆங்கில மாத வெளியீட்டினுக்கு ஆசிரியராக விருக்கும்படி பணித்தார்கள் தமிழ்த்தொண்டு செய்தற்கு வேண்டிய வசதி இமயத்தி லேற்பட்டது மலைமகளாகிய எம்பெருமாட்டியின் திருவருளினாலே இசையாராய்ச்சியும் ஒருவாறு நிறைவேறியது வெளியிடுங் காலமும் வந்து கைகூடியது.

எனது பிரிய நண்பரும் கோனூர் சமீன்தாரும் ஆகிய திருவாளர் பெ ராம. ராம. சிதம்பரஞ்செட்டியாரவர்கள் இந்நூல் சிறந்தமுறையிலே வெளிவருதற்கானவை எல்லாஞ் செய்தார்கள். திருக்கொள்ளம்பூதூர்த் திருப்பணிச்செல்வராகிய தந்தையாரைப்போல அறிவும், ஒழுக்கமும், அறம்வளர்க்கும் சிந்தையும் வாய்க்கப்பெற்ற இத் தமிழன்பர் சௌந்தரநாயகி சமேத வில்வவனநாதருடைய திருவருளினாலே எல்லா நலன்களும் எய்தப்பெற்று நீடுவாழ்வாராக

சித்திரபானு ஆண்டு }
ஆனித் திங்கள் }

விபுலாநந்தா



II. வில யாழ

உ—யாழுறுப்பியல்

1. வில்யாழ்

பழந்தமிழ்நாட்டுப் பஃறுளி யாற்றங்கரைக்குச் செல்வோமாக. மிகமிகப் பழையகாலம். முல்லைநிலம். மரங்களடர்ந்த சோலையின் பாங்கர் ஒரு பசும்புற்றரை. புற்றரையிலே, பசுக்களுங் கன்றுகளும் மேய்கின்றன. கார்காலம், செடி கொடிகளிலே பூக்கள் நிரம்பியிருக்கின்றன. இடைய னொருவன் வருகிறான். காலிலே செருப்பு அணிந்திருக்கிறான். உறுதியான உடல், மயிரடர்ந்த தோட்கட்டு, பால்மணம் நாறுகின்ற தலைமயிர். அரையிற்கட்டிய ஆடையின் ஒரு தலைப்பினைத் தோளிற்போட்டிருக்கிறான். பலநிறமாகிய கோட்டுப் பூக்களையும் கொடிப் பூக்களையும் கலம்பகமாகத் தொடுத்த மாலையொன்று தோளிற்கிடக்கிறது. இடுப்பிலே ஒரு மூங்கிற்குழல் செருகப்பட்டிருக்கிறது. ஒரு கையிலே கோல், மற்றொரு கையிலே வில்வடிவமான ஒரு பொருள். ஒரு வில்லல்ல, பலவிற்கள் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கக் காண்கின்றோம்.

நண்பகற்காலமாகிறது. இடைச்சி ஒரு குடுவையிலே பாலிட்டுக் காய்ச்சிய கூழ் கொண்டுவருகிறாள். இடையன் கூழினை யுண்டு நீரருந்துகிறான். பின்பு கையிலே குழலை எடுக்கிறான். சிலநாட்களுக்குமுன் அம் மூங்கிற்குழல் இடையனால் இசைக்கருவியாக்கப்பட்டது. தீக்கடை கோலினாலே, புகையெழக் கைமுயன்று தீயைக் கடைந்துகொண்டு, அக் கடைகோலிலுள்ள தீயினாலே மூங்கிலிலே துளையிட்டான். குழலிலே பாலைப்பண் வாசிக்கிறான். இடைச்சி கேட்டு மகிழுகிறாள்.

அவள் போனபின்பு வில்வடிவமான கருவியை யெடுக்கிறான். அஃது ஒரு **வி**ல்யாழ். அக் கருவியையும் இடையன் தானே செய்துகொண்டான். உள்ளே துளையுடைய *குமிழமரக் கொம்புகளை வில்லாக வளைத்து, †மரல் நாரினாலே திரித்த கயிற்றினை நாணாகக் கட்டியிருக்கிறான். ஒரே அளவான ஏழு விற்கள் இருக்கின்றன. நாண்கள் மாத்திரம் தாழ்த்தியும் உயர்த்தியுங் கட்டப்பட்டனவாய், அளவு வேறுபட்டிருக்கின்றன. வில்யாழின் உருவத்தைப் படத்திற்காண்க. இடையன் நரம்புகளைத் தெறித்து இசையொப்புமையினை ஆராய்கிறான்.

மாலைக்காலமாய்விட்டது. குழலிலே முல்லைப்பண் வாசித்துக்கொண்டு, பசுக்களையுங் கன்றுகளையும் ஓட்டிக்கொண்டு தன் குடிசைக்குச் செல்கிறான். உணவுக்குப்பின், தான் இசைகூட்டிவைத்த வில்யாழினை யெடுத்து, இனிய குறிஞ்சிப்பண் வாசிக்கிறான். இடைச்சி கேட்டு மகிழுகிறாள்.

இடையனுடைய வரன்முறை நமது சொந்தக் கனவு அல்ல. தலைச் சங்கத்துக்குமுன் னடந்த இந் நிகழ்ச்சியினைக் கடைச்சங்க காலத்துப் புலவராகிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் கனவுகண்டு, தாம் தொண்டைமான் இளந்திரையனைப்

*குமிழ்-பெருங்குமிழமரம், Gmelina Asiatica. †மரல்-மருள்; Sanjevicria Roxburghiana.

பாடிய பெரும்பாணாற்றுப்படையி னுள்ளே பொதிந்துவைத்தா அவவாறு பொதிந்துவைதத செய்யுட்பகுதியினைத தருகின்ரும

தொடுதோல மரீஇய வடுவாழ நோனடி
விழுததண டூனறிய மழுததின வனகை
உறிக்கா வூர்கத மறுப்படு மயிாசசுவல
மேமபா லுரைதத ஓரி ஓஙகுமிசைக்
கோடடவும கொடியவும விரைஇக காடட
பலபூ மிடைநத படலைக கணணி
ஒனறமா உடுககைக கூழாா இடையன
கனறமா நிரையொடு கானத தலகி
அநது ணவிாபுகை கமழக கைமமுயனறு
ஞெலிகோற் கொணட பெருவிறன ஞெகிழிச
செநதீத தொடட கருநதுளைக குழலின
இனறீம பாலை முனையிற குமிழின
புழறகோட்டுத தொடுதத மாறபுரி நாமபின
விலயாழ இசைக்கும விரலெறி குறிஞசிப
பலகாற பறவை கிளைசெத தோாககும
புலலாா வியனபுலம போகி.

பல்காற்பறவை யென்றது தேனவணடினை இடைய னிசைதத குறிஞ்சி யிசையினைக் கேடட வண்டுகள், அவவிசை தமது சுறறததின ஓசையெனக கருதிச செவிகொடுத்துக கேடடனவெனப் புலவா கூறுகினருா

வணடின் இமிர்தல, சேய்மையிலுளளோர் செவிப்படாது, அண்மையிலுள ளோருககு மாததிரம புலப்படுதலபோல, விலயாழின இசையும் மெலலெனற முரற்சி யாய அணமையிலுள்ளோருககு மாததிரம புலப்படுவது இதறகுக காரணமெது வெனில, உளளே துளையுடைய குமிழநகொமபு விலயாழிலே பததராகவும கோடாக வும அமைநதுநினறதாதலின, ஒலி பலகுதறகு இடமிலலாது போய்விடடது பத்த ரென்னும் உறுப்புத தனியாக அமைநது, அளவிற பெரிதாகுமிடத்து, ஒலி பல்கும். முதலிலே விலயாழிற்குப் பயன்பட்ட குமிழங்கொம்பு இனிய ஓசை பிறததற்கு இடமாயிருததலினைக் கண்ட இசைககருவியாளாகள, பததா செயதறகு அம மரமே தகுதியுடையதெனக் கொண்டார்கள மரம பருததபின்பு கொம்பிலே இயல்பாக அமைந்த உடடுளை மறைந்துவிடும. இமமரததினை வேணடிய கணககுககுத துணட மாக அறுததெடுதது, இலக்கணமமைநத உருவாககி, உளளே குடைந்து வறுவா யாக்கி, அவ் வறுவாயினைப போர்வைத தோலினுல் மூடி, அததோல இறுகும் வண் ணம் சுளளாணிகளை முடுக்கிப் பததரினை அமைததுககொண்டார்கள இவவாறு அமைநத பத்தர் ஒலியினை நன்ருகப் பல்கசசெயதது மற்றைய யாழகளைக கூறும் போது இப்பொருளினை இனனும விரிப்பாம்

நரம்புகள் தளரின் அவற்றில் எழுகின்ற நாதம் மநதசுரமாதலையும், இறுகக் கட்டப்படின் நாதம் உச்சசுரமாதலையும், நரம்புககருவிகளனைததினிலும் காணலாகும உசசசுரமாக்குதல், மந்தசுரமாக்குதலென இககால வழக்கிலே கூறப்படுஞ் செயல்

களைப் பழந்தமிழர் 'வலித்தல்', 'மெலித்தல்' என வழங்கினார்கள். மாடகம் என்னும் முறுக்காணி சிற்சில கருவிகளிலே நரம்பினை வலித்தல, மெலித்தல் செயதற்குப் பயன்பட்டது கோட்டிலே அமைந்து நரம்பு துவக்குவதற்கு இடமாய்நின்ற வார்க கட்டுச் சில கருவிகளிலே வலிததல, மெலித்தல் செயதறகும் பயன்பட்டது இவற்றின் விரிவெல்லாம பின்னாககூறுதும் வில்யாழிலே நரம்பினை வலிததல், மெலித்தல் செயதறகுரிய உறுப்பு எவவாறு அமைந்து நின்றது எனக் காணுமபொருட்டு வில்யாழின் அமைப்பினைச் சிறிது உற்றுநோககுவோமாக

இக்கருவி முறறிலுங குமிழுங் கொமபினுலும மரல நாரினாலும் அமைநதது இதன் அளவுகளை ஆராயந்து காணபபுகுவாம். பழைய காலதது அளவுகோல இரு சாண் அளவானது. ஒரு சாண பன்னிரணடு விரலாகப் பிரியும இக்காலத்து மேனாட்டு அளவினபடி, சாண் என்பது 9 அங்குலம் (Inch), விரல் ¾ அங்குலம். பழையகாலத்துச செய்தி கூறுகின்றோமாதலினாலே, பழைய அளவுகோலைக் கொள்வதே முறையாகும்.

ஆறு சாண நீளமும், ஆறு விரலுககுக் குறையாத சுறறளவுமுளள நேரிய குமிழுங் கொமபுகள் ஏழு தேடிககொளக மேலும, முன்னர்க் குறித்த சுறறளவுள்ளன வாய் ஐஞ்சாண நீளததில் இரணடு, இருசாண் நால்விரல் நீளததில் ஒன்று, இருசாண் நீளததில் பதினாறு, ஒருசாண் நால்விரல் நீளத்தில இரண்டு ஆக இருபததொரு கொம்புகளை தேடிக்கொள்க

நரமபுக்குப் பயன்படுகினற மரலநார்க் கயிறு, சுத்தமான நாரினை மெல்லிய நூலாக நூற்றுக், கொடும்பின்றிக் கயிறுகத திரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும. அதன் பருமனை அநுபவத்திற கண்டறிந்துகொளக கொம்புகளைக கட்டுதற் கியன்ற கயிறு சணறகயிற்றுப் பருமனாக விருக்கலாம்.

ஐஞ்சாண் நீளததுண்டு இரண்டினையும், இருசாண் நீளத்துணடுகளில் இரண்டினையும் எடுததுக்கொள்க இவறறை நேர்கோண நாற்கோண வடிவாக வைத்து நார்க கயிற்றினாலே இறுககமாகக கடடிக்கொளக கட்டுதற்குமுன் துண்டுகளின் இரு தலைகளிலும் தடை வெட்டிககொள்க

அறுசாண் நீளத்துண்டு இரணடினை எடுதது, வில் வடிவாக வளைதது, நாற்கோணத்தினுள்ளே இருமருங்கிலும் வைத்து, விலநடுவையும், ஐஞ்சாண் நீளத்துண்டின் நடுவையும இணைததுநிற்பனவாக, ஒருசாண் நால்விரற றுணடிரண்டினையும் பககத்துககு ஒன்றாக வைததுக் கட்டுக. இவற்றினைக் கணை யெனபாம் அறுசாண் நீளத்துணடுகள் எஞ்சிநின்ற ஐந்தினையும் எடுதது, வில்லாக வளைதது, இடையிலே நிரையாக வைத்து, நாற்கோணத்தின் இருதலையிலும நின்ற குறுக்குத் தடிகளில் ஏழு விற்களின் இருதலையினையும் நன்றாக வரிந்து கட்டிவிடுக.

இனி, நரமபு கடடுதலைக் கூறுவாம் மிகமேலே நிற்கும் நரம்பு வில்லினுள்ளே நாலுசாணளவாக நிற்கும்படி, வில்லினிருதலையிலும் மெலலிய துளையிட்டு, நரம்பினைத் துளைகளினூடே செலுததி, வலக்கைப் பக்கததிலே நரமபின் தலைப்பினுக்கு நேராக

இருசாண் துண்டொன்றினை ஏழு விற்களுக்கும் அணையவைத்து, இருதலையினும் நின்ற விற்களோடு கட்டி, அத்துண்டிலே நரம்பின் தலைப்பினை நன்றாகக் கட்டி விடுக. மற்றத் தலைப்பிலே முறுக்காணி அமைக்கும் முறையினைப் பின்பு கூறுவாம். இனி, ஏழாவது வில்லிலே, அஃதாவது, படத்தில் நமக்கு அணிமையாக விருக்கிற வில்லிலே, நரம்பானது இருசாண் இருவிரல் நீளம் வில்லிடையே நிற்பதாகவும், வில்லின் நடுவிலிருந்து இருதலைப்பும் சமதூரத்தில் நிற்பதாகவு மமைத்துத், துளையிட்டு, நரம்பினைச் செலுத்தி, முன்போல வலப்புறத்துத் தலைப்பினை இருசாண் துண்டொன்றிற் கட்டி, அத் துண்டினை விற்களோடு அணையவைத்து, இருதலையினுங் கட்டிவிடுக. முதல் நரம்பு ஏழாம் நரம்புத் துளைகளை இணைக்கின்ற நேர்கோடொன்றினை ஏழு விற்களின்மீதும் இடப்புறத்தில் வரைந்துகொள்க. அத்தகைய நேர்கோட்டினை வலப்புறத்திலும் வரைந்து கொள்க. குறித்த நேர்கோட்டு நிரையிலே, இருபுறத்திலும், முன்போலவே துளையிட்டு, நரம்புகளைச் செலுத்தி, வலப்புறத்துத் தலைப்புகளை முன்போலவே இருசாண் துண்டுகளிற் கட்டி, அத் துண்டுகள் விற்களில் அழகுற அணையும்படி வைத்துக் கட்டிவிடுக.

இனி, முறுக்காணி அமைக்கும் முறையினைக் கூறுவாம். இருசாண் துண்டுகளில், எஞ்சிநின்ற ஏழினையு மெடுத்து, ஒருதலை ஆறுவிரற் சுற்றளவாக இருக்க, மற்றத்தலை மூன்றுவிரற் சுற்றளவாகும்படி, சுற்றிலும் சாய்வாகச் சீவி (இழைத்து)க் குறைத்துக்கொள்க. ஏழு துண்டினையும் இவ்வாறு சீவியெடுக்க, அவை ஏழு முறுக்காணியாயின. ஏழினையும் நரம்புக்கு ஒன்றாக வைத்து, வில்லினின்று நரம்பு வெளிவருமிடத்துக்கு நேரே துளையிட்டு, நரம்பினைத் தொடுத்து, மூன்றுநான்கு சுற்று முறுக்காணியிலே சுற்றியபின்பு, நரம்பு இறுகும் வண்ணமாகக் கட்டிக்கொள்க. ஏழு முறுக்காணிகளையும் நிரலாக வைத்து, இருதலையினும் நின்ற விற்களிலே செம்மையாகக் கட்டிக்கொள்க.

இனி ஒற்றுறுப்பு அமைக்கும் முறையினைக் கூறுவாம். இருசாண் நால்விரல் நீளமாகிய துண்டினைச் சுற்றிலும் நன்கு சீவி உருட்டும்பொழுது முட்டின்றி உருளுவதாக்கிக்கொள்க. இத்துண்டினை ஏழு நரம்புகளின் கீழும் நெல்லளவு இடைவெளி நிற்கும்படி கணையிரண்டிலும் அணையவைத்து இறுக்கிக் கட்டிக்கொள்க. இவ்வொற்றுறுப்பிலே நரம்புகளழுத்தப்படின், அவை தமது நீளத்திற் செம்பாலாதல் வேண்டும். அதற்குத் தகவாகக் கணையிரண்டினையும் இடம்பெயர்த்துக் கட்ட வேண்டியிருப்பின், அப்படிச் செய்துகொள்க. கட்டுக்களையெல்லாம் இறுக்கமாக்கி, அவற்றின்மீது பிசின் பூசி உலரவிடுக.

வில்யாழிலே இசைகூட்டும் முறையினை இனி ஆராய்வாம். முறுக்காணி சாய்வாகச் சீவப்பட்டன வாதலினாலே, தலையினைப்பற்றி முன்னாக இழுக்கக் கட்டில் நின்று நெகிழ்தலும், பின்னாகத் தள்ளக் கட்டிலே யிறுகுதலும் அவை தமக்கு இயல்பாகும். முறுக்காணியை முறுக்கி நரம்பினை வலித்தல், மெலித்தல் செய்தபின், அதனைப் பின்னாகத் தள்ளி யிறுக்கிக்கொள்ளுதல்வேண்டும். நரம்புகளை உழைமுதற் கைக்கிளை யிறுவாக இசை கூட்டவேண்டும். அது செய்யும் முறையினைச் சுருக்க

மாகக் குறிப்பிடுவாம், இசைநரம்பியலிலே கூடடலையாழினைக் குறித்துப் பேசு மிடதது இபபொருள் இன்னுந தெளிவடையும். யாழிசைககு அளக்குங்கோல் குழ லிசை யெனபதைப் பண்டையோர் அறிநதிருந்தனா

நரமபின தீஙகுரல நிறுக்குந குழலபோல

எனப் பாலைககலியினுளளே கூறியதனை மேலே எடுததுக காட்டினும் குழலிலே கேடகும உழைநரமபிசையோடு ஒப்பிடடு, இடையன தனது விலயாழிலுளள உழை நரம்பிற்கு இசை கூடடினன் நாமும் அப்படியே செயவோம் குழலமைககுங் கணககு இசைநரமபியலுட் கூறப்படும உழைக்குக கிளையாக ஒன்றி நிற்குமபடி ஐநதாம நரம்பாக நின்ற குரல்நரமபினுககு இசை கூட்டவேண்டும் உழைக்கு நட பாக ஒனறி நிறகும்படி நான்காம நரம்பாகி நின்ற தார நரம்புக்கு இசை கூடட வேண்டும் கிளைநடபாக இசைகூடடும் முறை இசைநரம்பியலிலே கூறப்படும. பிறகாலததா கிளையினை ஷட்ஜ பஞசம சம்வாதிதவம் எனவும், நட்பினை ஷடஜ மத் திம சமவாதிதவம் எனவும வழங்கினர் குரலுககுக கிளையாக இளிநரம்பிறகு இசை கூடடவேண்டும. இரணடாம் நரமபாகிய இளி மெலிவுத்தானததிலே நின்றதாத லின், குரலுககுக் கிளையாகிய சமன் தானத்து இளி அதன் செம்பாலாகும. அங்ஙன மாதலின், இளிநரமபினை ஒற்றுறுப்பிலே யழுத்திககொணடு இசையைக் கேடக வேண்டும் இளிக்குக கிளையாகத துததததுககு இசை கூட்டவேண்டும. துததத துககுக் கிளையாக விளரிக்கு இசை கூடடவேண்டும விளரி மெலிவுததானததில் நிற றலின, நரமபினை ஒற்றுறுப்பிலழுததி அதன் செம்பாலிலே இசையைக் கேடகவேண் டும் விளரிககுக கிளையாக ஏழாம நரமபாகிய கைககிளைக்கு இசை கூடடவேணடும். ஏழு நரம்புகளும் அவை தமது செமபாலுமாகப பதினன்கு இசைநரம்புகள் வில் யாழிலே பெறப்படுவன இவை, மெலிவு நான்கு, சமன் ஏழு, வலிவு மூனருகக் கொளளப்படுவன மெலிவு நான்காவன முதலநான்கு நரம்புகளும், சமன் ஏழாவன ஐநதாம் ஆறும் ஏழாம நரமபுகளும, முதல்நான்கு நரம்புகளின செம்பால்களும், வலிவு மூன்ருவன ஐந்தாம ஆறும் ஏழாம் நரம்புகளின் செம்பால்களும் ஆம.

குறிஞ்சிப் பண்ணினியலபு பணணியலினுளளே கூறபபடும. இங்கு ஏழ் பெரும் பாலைகளின் இயல்பைச சுருககமாக ஆராயவாம. விலயாழிலே கட்டப்பட் டிருக்கினற நரமபுகளை முதனரம்பிலிருந்து ஏழாம நரம்பு வரை யியக்கி, ஈற்றிலே முதனரமபின செம்பாலினையும இயககப பெறுவது உழைகுரலாகிய அருமபாலை யாகும இககாலத்துக குறியீடடெழுததுகளினலே எழுதின், இது **நி ச ரி க ம ப த நி** என நிறகும. இளி முதல இளி யீருக, அஃதாவது, இரணடாவது முதல ஏழாவது நரம்புவரை யியககி, முதலிரணடு நரமபுகளின செம்பாலினையும் இயககப் பெறுவது **கோடிப்பாலை**யாகும் இது **ச ரி க ம ப த நி ச** என நிறகும். விளரி முதல் விளரி யீருக, அஃதாவது, மூனறுமுதல் ஏழுவரை யியககி, முதலமூன்று நரம்புகளின செம்பாலினை யும் இயக்கப் பெறுவது **விளரிப்பாலை**யாகும். இது **ரி க ம ப த நி ச ரி** என நிற்கும். தாரம முதல தாரம ஈருக, அஃதாவது, நான்குமுதல் ஏழுவரை யியக்கி, முதல்நான்கு நரம்புகளின் செம்பாலினையும் இயக்கப் பெறுவது **மேற**செமபாலையாகும். இது **க ம ப த நி ச ரி க** என நிறகும். குரலமுதற் குரலீருக, அஃதாவது, ஐந்து, ஆறு

ஏழு என நின்ற நரம்புகளை யியககி, முதலைந்து நரம்பின் செம்பாலையை யு மியக்கப பெறுவது செம்பாலையாகும். இது **மபதநிசரிகம** என நிறகும் துததம் முதற றுத்த மீருக, அஃதாவது, ஆறும் ஏழாம் நரம்புகளை யியக்கி, முதலாறு நரமபின் செம பாலினை இயக்கப பெறுவது படுமலைப்பாலையாகும இது **பதநிசரிகமப** என நிற்கும் கைககிளை முதற் கைக்கிளை யீருக, அஃதாவது, ஏழாம் நரம்பினை இயககிய பின் ஏழு நரம்புகளின் செம்பாலையையும இயககப் பெறுவது செவவழிப்பாலையாகும. இது **தநிசரிகமபத** என நிறகும் இஙஙனம் ஏழபெருமபாலையு மாயினவாறு காண்க.

விலயாழ் என்னும இத தலைபபெயாக்கீழ யாம இதுவரையும் எழுதியது,

குமிழின
புழறகோட்டுத் தொடுத்த மரறபுரி நரமபின
விலயா ழிசைக்கும விரலெறி குறிஞசி

என நினற பெரும்பாணாறறுப்படை யடிகளுக்கு விளகக வுரையாக அமையும.

வில்யாழ்க் கருவியிலே, நரமபாகக கடடப்பட்ட மரலானது, 'மரையா மரல் கவர மாரிவறப்ப' எனப் பாலைக்கலி ரு-ஆம் பாடலினும், 'மரல்சாய மலைவெம்ப மந்தியுயஙக' எனப் பாலைக்கலி கஉ-ஆம் பாடலினும் சுட்டிக் கூறப்பட்டது இது பாலை நிலததிற்குரியது மறற நிலஙகளினும வளாவது தமிழநாட்டுக குன்றுகளி லும் பிறவிடங்களிலும் இனனும் வளருகின்ற மருள என்னும் செடியின் நீளமான தோடுகளிலிருந் தெடுககும் நார நரம்புபோல இசைதருகிறதாதலின இககாலதது 'மருள' பழைய 'மரல்' எனககொள்ள இடமுண்டு படடுநூற கயிறறினை நரம் பாகக கட்டுமிடதது நல்ல நாதம் பிறகககக காண்கின்ருேமாதலின், மரற் கயிறு கிடையாதிருப்பின், படடுநூற் கயிற்றினை நரம்பாகக கட்டி, இசைகூட்டி இடையன வாசிதத குறிஞ்சிப் பணணை நாமும வாசிக்கலாம

இடையனமைததுக்கொண்ட விலயாழ், ஏழு நரம்போடு கூடிக், குறிஞ்சிப் பண் வாசிததற்குத் தகவுடையதா யிருந்தது. அதற்குமுன் ஐந்து நரமபோடுகூடிய கருவியும் இருநதிருக்கவேண்டும் அவ்வாறு கொளவதற்கு ஆதாரம் நமககுப் பரி பாடலிலே கிடைககிறது. எட்டாம் பரிபாடலிலே, 'ஏழ்புழை', 'ஐம்புழை' என வருவன, ஏழு துளையுடைய குழற்கருவியையும், ஐந்து துளையுடைய குழற்கருவியை யுங் குறிப்பன. ஐநதுதுளைக கருவியே முன்னர் உணடாயிருககவேண்டும அதனேடு கூட, ஐந்து நரம்புடையதாய, விலயாழ்போன்ற அமைப்பினையுடைய கருவியுந் தோற்றியிருக்கலாம் ஆடவருடைய குரலினை யொதத தாரம, மகளிரது குரலினை யொதத குரல் என்னுமிவற்ருேடு, உழை, இளி, துததம, என்னும மூனறுஙகூடிய ஐந்து நரம்புமே முதலில உணடானவை ஐநது நரம்பிலே பிறக்கும் இனிய இரா கங்கள் சிலவுள குரலமுதலாக எடுதது, விளரி, கைககிளையை நீககிப்பாட, 'மது மாதவி' என்னும் இராகமாம் எனறும், தாரம முதலாகவெடுத்து, விளரி, கைக கிளையை நீக்கிப்பாட, 'இராமகிருதி' என்னும் இராகமாமெனறும், இளிமுதலெடுதது, விளரி, கைககிளையை நீக்கிப்பாடத், 'தங்யாசி' என்னும் இராகமாமென்றும் நாரத சஙகீதமகரந்தம் கூறும் இவை இவ்வாருதலைப் பணணியலினுட் காட்டுதும.

மேலும், ப்ரதமம், த்விதீயம, த்ருதீயம், சதுர்த்தம் என்னும் நான்கினோடு மந்த்ரம என ஒன்று சேர்த்து ஐந்து சுவரஙகளே இருக பிராதிசாக்கியத்திலே வழங்கப்பட்டனவென வடமொழியறிஞர் கூறுவர். பின்னுளிலே, க்ருஷ்டம், அதிஸ்வரம் என இரண்டு முறையே முதலிலும் ஈற்றிலும் சேர்க்கப்பட்டுச் சுவரஙகள் ஏழாயின என்பர் இதனுல், வடமொழி யிசைமரபிலும, ஆதியிலே ஐநது சுவரங்கள் மாத்திரமே யிருந்தன என்னும் உண்மை தெளிவாகின்றது சீனதேசத்தார் இன்றும் ஐந்து சுவரங்களோடுகூடிய இசையினையே வழங்கி வருகின்றனரென அறிகின்ரும்.

2. பேரியாழ்

அமராவதி நகரிலுள்ள சிலப்பதிகார காலததுக் கல்லோவியம ஏழின்மிக்க நரமபுகளுள்ள யாழினுருவததை நமககுக் காட்டுகிறது இவ்வோவியததின் நிழற் படததினைக கண்ணுற்ற திரு ஆனநத குமாரசுவாமி யெனனும் ஈழ நாட்டுப் பேரறிஞர் பழைமையான இககருவி சிலப்பதிகார காலததிலும் அதற்கு முனனும பின்னும் தமிழநாட்டிலே வழஙகிவநதது எனபதையும், மிகபபழைமையான இசைமரபொன்று தமிழகததிலே இருந்து இறநததென்பதையும் உலகிலுள்ள பேரறிஞரககு வெளியிட்டார

ஆக்சுபாாட பல்கலைக் கழகப் பதிப்பகத்தார் வெளியிட்ட இநதியாவின் கலை முது நிதியம் (The Legacy of India, Oxford Press) என்னும் ஆஙகில நூலிலே, 329 ஆம் பககததிலே, 'வேதத்திற கூறபபடடதும, பஞ்சசிகன் என்னும் இசைவல்லோன் ஏழு சுவரஙகளையும, இருபத்தொரு மூர்ச்சனைகளையும் ஒரே ந்ரம்பிலே வாசிததுக காட்டுதறகு இயைநததும, பரதமுனிவர் கையாண்டதும் வீணையே' என்னும் உணமை சாதிககப்படடிருப்பதோடு, யாழககருவிக்கும் வீணைக்கருவிக்கு மிடையே யுள்ள வேறுபாடுந தெளிவுபடுததப்பட்டிருககிறது.

'புத்தசமயமானது எவ்விடததிலும் பரவத தொடங்கிய காலத்திலே, அச் சமயத் தலைவர்கள் வேத ஒழுககங்களையும், அவைதமக்குரிய குரு வகுப்பினரையும, பழைய ஆரிய மொழியையும் ஒதுககிவிட்டுப், பொதுமக்கள வழங்கிய மொழியைத் தழுவிப் புதிய குரு வகுப்பையும், ஒழுகக முறைகளையும் வகுத்துக்கொண்டார்கள். அதுபோலவே, ஆரிய வீணையையும் ஒதுககிவிட்டுப், பொதுமக்கள கைக்கருவியாகிய வில்யாழையும், பிறவறறையும் திருவிழாக கொண்டாட்டங்களிலே வழஙகும்படி செய்தார்கள ஆறும் நூற்றுண்டிலே, புதத சமயம் நாட்டிலே ஒளி குன்றியதோடு, பழைய யாழும் மறைந்துபோயினது' என்னுங் கருத்தும மேற்குறித்த நூலிலே கூறப்பட்டிருக்கிறது.

முன்னுளிலே பாணன் கையிலும் பாடினி கையிலுமிருந்த யாழக் கருவியானது, இளங்கோவடிகள காலத்திலே இசை யாசிரியன் கையிலும் நாடக மகள் கையிலும் போய்ச சேர்ந்துவிட்டது அதற்கேற்ப அக்கருவியும் 'சித்திரப் படத்துட் புக்குச செழுங்கோட்டின் மலர்புனைநது, மைத்தடங்கண் மணமகளிர் கோலம் போல் வனப்பெய்தி' விளங்கியது ஆளுடையபிள்ளையாருடைய காலத்திலே, தெய்வ

மீந்த பொற்பலகைமீதேறி அன்பருள்ளத்தை யுருக்கிய அருட்கருவி யாயிற்று. கொங்குவேளும், திருத்தக்க தேவரும் நூலெழுதிய காலத்திலே, அரசிளங் குமரிகள் கையிலேறி, அவர் மனம் விரும்பிய காதலரை அவருக்கு அளிக்குங் கருவியாயிற்று

சரித்திரகால வெல்லைக் கெட்டாத காலத்திலே, 'விலயாழ்' எனப் பெயரிய குழவியா யுதித்து, மழலைச் சொற் பேசி, இடையர் இடைச்சியரை மகிழ்வித்துச், 'சீறி யாழ்' என்னும் பேதைப் பருவச் சிறுமியாகிப், பாணனொடும் பாடினியொடும் நாடெங்குந் திரிந்து, ஏழைகளும் இதயங் களிப்பெய்த இன்சொற் கூறிப், பின்பு 'பேரியாழ்' என்னும் பெயரோடு பெதும்பைப் பருவ மெய்திப், பெரும்பாணரோடு சென்று, குறுநில மன்னரும், முடிமன்னரும், தமிழ்ப் புலவரும், கொடைவள்ளல் களும்கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயம்பட உரை பகர்ந்து, அதன்பின், மங்கைப் பருவ மெய்தி, அப் பருவத்திற் கேற்ப, புதிய ஆடையும் அணிகலனும் பூண்டு, நாடக அரங்கத்திலே திறமை காட்டி, மடந்தைப் பருவம் வந்து எய்துதலும், திருநீல கண்டப் பெரும்பாணரோடும், மதங்கசூளாமணியாரோடும் அம்மையப்பர் உறை கின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம் வந்து, தெய்வ இசையினாலே அன்பருள ளத்தினை யுருக்கி, மூத்ததமிழ் விரகரால் பாராட்டப்பட்டு, அரிவைப் பருவம் வந்து எய்துதலும், அரசிளங் குமரிகளுக்கு இன்னுயிர்ப் பாங்கியாகி, அவர்க் கேற்ற தலை வரை அவர்பாற் சேர்த்திச், சீருஞ் சிறப்பு மெய்திநின்ற 'யாழ்' என்னும் மென் மொழி நங்கை இருந்தவிடந் தெரியாமல் மறைந்து போயினள்

பழைமை பொருந்திய இவ் விசைக்கருவி மறைந்ததோடு, அதன்வழி யெழுந்த பண் மரபும் மறைந்துபோயிற்று யாழ் வாசித்த பாணனுந் தன் தொழிலினை இழந்துவிட்டான்

திருமுறை கண்ட சோழ மன்னன், செல்லரித்த ஏடுகளிலிருந்து தேவாரச் செழும்பாடல்களை எழுதுவித்துக்கொண்டு, பண் வகுக்க இசை வல்லாரைக் காணு மையினாலே, கவல்கின்ற தருணத்திலே, ஆண்டவனுடைய திருவருளினாலே, திருநீல கண்டயாழ்ப்பாண நாயனார் மரபிலே யுதித்த பெண்ணொருத்தி பண் வகுத்துத் தந் தனளென அறிகின்றும் பழைய இசை யிலக்கணம் வல்லாரோ, அவ் விசையினைக் கூறும் நூலோ அக்காலத்திலிருந்திருப்பின், அரசன் கவற்சி யின்றித் தான் எடுத்த காரியத்தை நிறைவேற்றியிருப்பான் ஆதலினாலே, பழந் தமிழிசை யிலக்கணம் அக் காலத்திற்றானே வழக்கு வீழ்ந்துவிட்டதெனக் கொள்ளவேண்டியிருக்கிறது முற்றி லும் வீழ்ந்துவிடவில்லை யென்பதற்குச் சில சான்றுகள் உள. அவற்றினுட் சிறந்த தொன்று பதின்மூன்றும் நூற்றாண்டிலே யிருந்த சாரங்கதேவர் தாமியற்றிய சங்கீத ரத்தினாகரத்திலே தேவாரப் பண்கள் சிலவற்றுக்கு இலக்கணங் கூறி, இவை தேவா ரத்திற் காணப்படுவனவெனக் குறிப்பிடுதலேயாம்

சங்கமருவிய பத்துப்பாட்டினிலும் தொகை நூல்களினும் ஆங்காங்குக் கிளந் தோதப்பட்டிருக்கும் இசைக் கருவியி னிலக்கணங்களைத்தானும் இடைக் காலத்துப் பேரறிஞர் ஆராய்ந்துணர முயன்றாரல்லர் 'பழையதோர் பொலம் பொதிந்த பத் தர்' எனவும், 'நெடுங்கொடிக் குறுங்காயப் பத்தர்' எனவும், திருவிளையாடற் புரா ணத்திலே பரஞ்சோதி முனிவர் கூறுதலை நோக்குமிடத்து, அவர் காலத்திலே

வரலாற்று முறை எவவளவு தூரம் மறககப்பட்டிருந்ததென்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

பத்துபபாட்டினுள யாழுறுப் புணர்ததும பகுதிகளை ஒருங்கு நிறுவி, அவற்றின் உதவிகொணடும், வெளிநாட்டு இசை வரலாறுகளோடு ஒப்பு நோக்கியும், யாழுறுப்புகளின் இயல்பினை ஆராயந்தறிய முயலவோமாக.

குளபபுவழி யனன கவடுபடு பததல
விளககழல உருவின விசியுறு பசசை
எயயா இளஞசூற செயயோள அவவயிற(று)
ஐதுமயிர ஒழுகிய தோறறம போலப
பொலலம பொததிய பொதியுறு போரவை
அளைவாழ அலவன கணகண டன்ன
துளைவாய தூரநத துரப்பமை ஆணி
எணணாட டிஙகள வடிவிற றாகி
அணணா விலலா அமைவரு வறுவாய
பாமபணந தனன ஓஙகிரு மருபபின
மாயோள முன்கை ஆயதொடி கடுககும
கணகூ டிருககைத திணபிணித திவவின
ஆயதினை யரிசி யவையல அனன
வேயவை போகிய விரலுளர நரமபின
கேளவி போகிய நீளவிசித தொடையல
மணஙகமழ மாதரை மணணி யன்ன
அணஙகுமெயந நினற அமைவரு காட்சி
ஆறலை களவர படைவிட அருளின
மாறுதலை பெயாககும மருவின பாலை —பொருநராறறுபபடை, 4-22

பததலினையும், பொலலம்பொததிய பசசையாகிய போர்வையினையும், ஆணியினையும், வறுவாயினையும், மருப்பினையும், திவவினையும், நரமபின் தொடர்ச்சியினையும், காட்சியினையுமுடைய யாழ.

அகலிரு விசுமபிற பாயிருள பருகிப
பகலகான றெழுதரு பலகதிாப பருதி
காயசினந திருகிய கடுநதிறல வேனிற
பாசிலை யொழிதத பராஅரைப பாதிரி
வளளிதழ மாமலா வயிறறிடை வகுததகன
உளளகம புரையும ஊட்டுறு பசசைப
பரியரைக் கமுகின பாளையம பசுமபூக
கருவிருந தனன கணகூடு செறிதுளை
உருககி யன்ன பொருததுறு போாவைச
சுனைவறந தன்ன இருளதூங்கு வறுவாயப
பிறைபிறந தனன பினனேநது கவைக்கடை

நெடும்பணைத் திரள்தோள் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கும் மெலிந்துவீங்கு திவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பின்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
தொடையமை கேள்வி —பெரும்பாணாற்றுப்படை, 1-16

பச்சையாகிய போர்வையினையும், வறுவாயினையும் கவைக்கடையினையும், திவவினையும், மருப்பினையும், நரம்பின் தொடர்ச்சியினையுமுடைய யாழ்

பைங்க ணூகம் பாம்புபிடித் தன்ன
அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்துவீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறுசேர் பொழுகிய வகையமை அகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்து
அமிழ்துபொதிந் திலிற்றும் அடங்குபுரி நரம்பின்
பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்விக்
கூடுகொள் இன்னியம் —சிறுபாணாற்றுப்படை, 221-229

பச்சையோடே வாயமைக்கப்பட்டு, வனப்பினையும், திவவினையும், அகளத்தினையும், நரம்பினையுமுடைய இன்னியம்

தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவிற்
கடிப்பகை யனைத்துங் கேள்வி போகக்
குரல்ஓர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின்
அரலைதீர உரீஇ வரகின்
குரல்வார்ந் தன்ன நுண்டுளை யிரீஇச்
சிலம்பமைபத்தல் பசையொடு சேர்த்தி
இலங்குதுளை செறிய ஆணி முடுக்கிப்
புதுவது புனைந்த வெண்கையாப் பமைத்துப்
புதுவது போர்த்த பொன்போற் பச்சை
வதுவை நாறும் வண்டுகம ழைம்பால்
மடந்தை மாண்ட நுடங்கெழி லாகத்து
அடங்குமயிர் ஒழுகிய அவ்வாய் கடுப்ப
அகடுசேர்பு பொருந்தி அளவினிற் றிரியாது
கவடுபடக் கவைஇய சென்றுவாங்கு உந்தி
நுண்கோல் நுவறிய நுண்ணீர் மாமைக்
களங்கனி யன்ன கதழ்ந்துகிளர் உருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ் —மலைபடுகடாம், 21-37

திவவினையும், நரம்பினையும், பசையினையும், உந்தியினையும், மருப்பினையுமுடைய பேரியாழ்



III. ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் னிருந்த யாழ்க் கருவி

கடைச் சங்க காலத்திலும், அதற்கு முன்னுந் தோன்றிய சான்றோர் செய்யுட்களினுள்ளே, வில்யாழும், சீறியாழும், பேரியாழுமே குறிக்கப்பட்டிருக்கின்றன. சகோட்யாழும், மகரயாழும், செங்கோட்டியாழும், சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும், பெருங்கதையிலும், சீவகசிந்தாமணியிலும் காணப்படுவ.

இலண்டன் மாநகர்ப் பழம்பொருட் காட்சிச்சாலையிலே யுள்ள அமராவதி நகரக் கல்லோவியத்திலே காட்டப்பட்டிருப்பது சகோட்யாழ். இதிலே, திவவு என்னும் உறுப்பு இல்லது. நரம்புகளை வலித்தல் மெலித்தல் செய்யும் மாடகம் என்னும் முறுக்காணி பத்தரிலே அமைக்கப்பட்டிருத்தல்வேண்டும். பத்தர் யாழ் வாசிக்கும் பெண்ணின் உடலினால் மறைவுண்டிருத்தலின், நாம் பத்தரினையும், மாடகத்தினையும் காணமுடியவில்லை. கோடும் நரம்புமே தோற்றுகின்றன. கோட்டினுருவத்தையும், யாழ் வாசிக்கும் பெண்ணின் உருவத்தோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்துப் பெறப்படுகிற கோட்டின் நீளத்தினையுங்கொண்டு, இக்கருவியின் வடிவம், அளவு முதலியவற்றை ஒருவாறு கணித்தறியலாம். இரண்டாம் நூற்றாண்டுக் கல்லோவியத்திலே சகோட்யாழுருவத்தினை நாம் காணப்பெற்றது, இசை மடந்தை நமக்கு அளித்த பெரியதோர் அருட்கொடையே. சென்னை மாநகர்ப் பழம்பொருட் காட்சிச்சாலையிலே யுள்ள யாழேந்திய ஓவியங்களின் உருவத்தை VI-ஆம் படத்திற் காண்க. பேரியாழினைப் பொறுத்தவரையில், அதனுருவத்தினை நமது நாட்டிலே காணப்பெற்றிலேமெனினும், கடல்கோளின்பின் தமிழர் கடல்கடந்து சென்று குடியேறிய பிற நாடுகளிலே இக்கருவியின் உருவத்தினைக் காணக்கூடியதாயிருக்கிறது.

எகிப்தியரும், பழந்தமிழரைப் போலவே, தாரம் முதலாக நரம்புகளைப் பிறப்பித்தாரகளென அறிகின்றோம். எகிப்து நாட்டிலே இறந்த மன்னர்களுடைய உடலினைப் பாதுகாத்து வைத்திருக்கும் ஈமக் கோபுரங்களிலே (Pyramids) வரையப்பட்ட யாழ் வடிவங்களைக் கண்ட மேனாட்டறிஞர் அவற்றின் உருவச் சாயல்களை வெளியிட்டிருக்கின்றனர். எகிப்திய மொழியிலே யாழ் ‘நங்கா’ எனப்பட்டதென்பர். இற்றைக்கு மூவாயிரத்தைஞ்ஞூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த எகிப்திய யாழ்கள் சிலவற்றைப் பிரித்தானியக் காட்சிச்சாலை (British Museum) யிலே நாம் இன்றுங் காணலாம். இக்காலத்திலே மெசப்பொட்டேமியா என வழங்கும் நாட்டில் ஒரு பாலிலே, முன்னாளிலிருந்த சாலதேயாவின் தலைநகராகிய ஊர் நகர மிருந்தவிடத்தினை அகழ்ந்து ஆராய்ந்தபோது கண்டெடுத்த அழகிய யாழ்க்கருவியொன்று பாக்தாத் நகரத்துக் காட்சிச்சாலை (Baghdad Museum) யிலே வைக்கப்பட்டிருக்கிறது. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த இக்கருவியின் உருவத்தினை III-ஆம் படத்திற் காண்க.

பழைய எகிப்திய யாழ்களிலும், போர்வைத்தோல் இருகூறாகி, நடுவிலே பொல்லம் பொத்தப்பட்டிருந்தது. போர்வையின் கீழுள்ள யாப்புறுப்பிலே கட்டப்பட்ட நரம்பு பொல்லம் பொத்தலினூடாக வெளியே கொண்டுவரப்பட்டுக் கோட்டிலமைந்த முறுக்காணிகளிலே தொடுக்கப்பட்டிருந்தது. பத்தரானது தோணி வடிவாகவும், மகரமீன் வடிவாகவும், குடத்தின் வடிவாகவும் பலதிறப்பட்டிருந்ததெனக் காண்கின்றோம். போர்வைத் தோலினை நீக்கப் பத்தரின் வறுவாய் தோற்றும். தமிழ்

நாட்டு யாழ்களிலே இது எண்ணுட்டிஙகள் வடிவிறறுக விருந்தடுதெனத தமிழப் புலவர் வாய்மொழியால அறியக்கிடக்கின்றது இதனுற் பததரினது மேற்புறத்தில்



1. பததா, கோடு, வறுவாய

ஒருபாதியே வறுவா யாக்கப்பட்டதென்பதும், இதனூடாக மற்றப் பாதி மரமுங் குடைந்தெடுககப்பட்டமையின், ‘இருள்தூஙகு வறுவா’ யாயிற்று எனவும் அறிகின்

ரும் மலை முழைகளிலிருக்கும் நீர்ச் சுனைகள், நீர் வற்றிய காலத்து, இருள்தூங்கிய வறுவாயாகத் தோற்றுவதை மலையில வாழ்வோர் அறிவர் 'குளப்புவழி யன்ன கவடு படு பத்தல்' எனப் பத்தாப் புறத்தின் கீழ்ப்பாகம் கூறப்பட்டது போர்வைத் தோலினைப் பத்தரொடு பொருத்தும சுள்ளாணிகளின் தலை நண்டின் கண்ணைப் போலப் புறப்பட்டுத் தோற்றும்



2(a) போாவை

வறுவாயுந் துளையுமமைந்து, போர்வைததோல் சேர்ககப்படாதிருக்கும் பத்த ரின் மேறபுறததோற்றம் மேலே காட்டப்படடது 'குளப்புவழியன்ன கவடுபடு பததல்' எனப் பததர்பபுறத்தின் கீழ்ப்பகுதியின் தோற்றம கூறப்பட்டது. மான் குளம்பு அழுந்திய இடம், நடுவுயர்ந்து, இருபுறமும் தாழ்ந்திருக்கும் தோற்றம்போலப், பததரின் கீழப்புறம அமைந்திருப்பதனை IV-ஆம் படததிறகாண்க. அப் படத்திலே யுள்ள போர்வைததோல் இரு துண்டாக அமைந்து முழுநீளமும் பொல்லம் பொத்தப்

பட்டிருக்கிறது. மேலே காட்டிய படத்திறபோல, வறுவாய எண்ணுடடிங்கள வடிவிறரக அமையுமிடததுப், பொல்லம் பொத்துதல போர்வைததோலின ஒரு பாதியில், அஃதாவது, வறுவாயை மூடுகிற பாதியில மாத்திரம அமையும, நரமபு நிற்கும்பகுதி அதுவாதலின்

வதுவை நாறும வணடுகம ழைமபான
மடநதை மாணட நுடஙகெழி லாகதது
அடஙகுமயிா ஒழுகிய அவவாய கடுபப　　　எனவும,

எயயா இளஞ்சூற செயயோள அவவயிறறு
ஐதுமயிா ஒழுகிய தோறறம போல　　　எனவும

கூறியிருத்தலின, மடநதையது மார்பிடதலைதயணுகிப், பின்பு இலலையான மயிா ஒழுஙகுபட்டுக்கிடககினற அழகிய வயிறறிடததின் தோற்றம, பொலலமபொததிய போர்வையின தோறறம் என்பது பெறப்படடது வறுவாயினை வயிறறிடமாகவும், மேற்பாதியினை மார்பிடமாகவுங் கொண்டு நோககப், பொல்லமபொததுதல் வயிற்றிடத்திலே மயிா ஒழுஙகுபோல அமைநதுகிடபபது தெளிவாகின்றது அவவாறு அமைந்த போர்வைத தோலின உருவத்தை 2(a) படததிற காணக

பரியரைக கமுகின பாளையம பசுமபூ
கருவிருந தனன கணகூடு செறிதுளை　　　எனவும,

வரகின குரலவாா் தனன நுணடுளை　　　எனவும

கூறியது பொல்லம பொததுமிடநதிற றுளையினையாம 'பாதிரி வளளிதழ மாமலா வயிறறிடை வகுததநன், உளளகம புரையும ஊடடுறு பசசை' எனவும, 'பொன் போற பசசை' எனவும், 'விளக்கழ லுருவின விசியுறு பசசை' எனவும கூறினமையின், போாவையாககுதறகுரிய தோலாகிய பசசை, துவருடடபபெறறு, அழகிய சிறநத தோற்றததினை யுடையதாயிருநததெனபது பெறப்படடது

யாப்பு என்பது, பததரின் குறுககளவே நீளமாகச, சிறுவிரற பருமனுக, யானைத் தநததததினுலே செய்யபபடடு, நரம்பு தொடுபபதறகும நரமபி னசைவினைப பததரிலே தாக்கி ஒலியைப் பெருககுதறகும அமைந்ததோருறுபபு இது பததரினுள்ளே செறிக்கப்படும்

2(b) யாபபு

உந்தி யென்பது, போர்வைத தோலிற்கும யாப்புறுப்புககு மிடையே யமைந்து நிற்பதோ ருறுப்பு 'சென்று வாஙகு உந்தி' யெனறமையின, இது, உயர்ந்து, வளைநது. பொல்லம் பொத்துதலின் கீழே போாவைத தோலினைத தாஙகி நிற்பது. யாப்பிற கட்டிய நரமபுகள் இதனூடாக வருவ வாதலின், இதனொரு பகுதி பகுக்கப்

படடிருககும (படததைப் பார்கக) ‘உந்தி’ யென்னுஞ் சொல ‘உந்து’ என்னும் வினையடியாகப் பிறந்ததெனபது, ‘சென்று வாஙகு உந்தி’ என்பதனாற் றெளிவாகின்றது. அங்ஙனமாதலின், உந்தி யென்னும பெயர் கொப்பூழுககு உளதாதலபறறிக், கொப்பூழ போன்ற வட்ட வடிவாகிய யாழ்ப் பததற றுளையினை யுணர்த்திற்று எனக் கொணட மயிலைநாத ருரை பொருந்தா வுரையாதல காண்கின்றாம.



2(c) உநதி

இனி, ‘மருபபு’ எனப்பட்ட யாழக்கோடு எததகையதென ஆராயவாம ‘பாமபணந் தனன ஓஙகிரு மருபபு’ எனபது வடிவுபற்றிய உவமம் ‘மணிவார்ந தன்ன மாயிரு மருப்பு’ எனபதும், ‘களஙகனி யன்ன கதழ்ந்துகிளா உருவின், வணர்ந தேந்து மருப்பு’ எனபதும் நிறமபற்றிய உவமஙகளாதலின, யாழக கோடானது, கருங்காலியினாற செய்யப்பட்டு, அழுத்தம பணணபபடடதாய்ப், பாமபு படமெடுததாற் போன்று தலை தூககி நிற்கும என்பது பெறபபடடது

பழைமை பொருந்திய சீறியாழ, பேரியாழகளிலே, ‘மாடகம்’ எனப் பிற்காலத்து வழங்கிய முறுக்காணி அமைககப்படவில்லை நரம்புகளைத துவககும வார்க்கடடாகிய திவவு அவைதம்மை வலிததல, மெலிததல செய்தறகும பயன்படடது

மாயோளா முனகை ஆயதொடி கடுக்கும
கணகூ டிருககைத திணபிணித திவவு எனவும,

நெடுமபணைத திரடோளா மடநதை முனகைக்
குறுநதொடி யேயககும மெலிநதுவீஙகு திவவு எனவும,

பைஙக ணூகம பாமபுபிடித தனன
அஙகோடடுச செறிநத அவிழநதுவீஙகு திவவு எனவும

வருதலின், கரிய நிறததததாகிய கோடடின்மீது கட்டப்பட்ட திவவானது, கரிய நிறமுடைய பெணணின கையிலணியப்படட வளையலபோலவும், கருங்குரஙகின் கையினைச சுற்றிய பாமபுபோலவும வடிவுபெறறிருநததென அறிகின்றாம் I ஆம், IV ஆம் படங்களிலே, ஒன்பது நரம்புகளைத துவக்கிய ஒன்பது திவவுகள் கோடடிலே அமைந்து நிறறலைக் காண்க

இனி, நரம்பின் தன்மையினை ஆராய்வாம் நூல் நூற்கும் மகளிர் பஞ்சினை யுடைப்பதறகுப் பயன்படுததும் வில்லிலே கட்டப்பட்டிருக்கும நரம்பானது யாழ் நரம்பின் மநத சுரததை ஒலிததலைக கேட்டிருக்கின்றோம் அந்நரம்பு புதிதாகவிருக்கும்போது, பொன்போன்று ஒளிருவதையும், இரு புரிகள ஒருஙகுசேரத திரிக்கப்பட்டிருப்பதையும் கண்டிருக்கின்றோம் யாழ் நரமபும இததகையது. பஞ்சுடைக்கும்

நரம்பு பருமனுயிருக்கும், யாழ் நரம்பு மெல்லிதாயிருக்கும், இதுவே இரண்டினுக்கும் வேறுபாடாகும்.

> ஆயிழை யரிசி யவைய லன்ன
> வேயவை போகிய விரலுளர் நரம்பு — எனவும்,
>
> பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பு — எனவும்,
>
> கடிப்பகை யனைத்துங் கேள்வி போகாக்
> குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பு — எனவும்

கூறினமையின், வெண் சிறு கடுகளவும் குற்றமின்றிக், கொடும்முறுக்கில்லாது செவ்விதாகத் திரித்துச் செய்யப்பட்ட நரம்பினியல்பு கூறப்பட்டது. நரம்பினின்றெழும் இசையினினிமையை நரம்பிற்கு ஏற்றித், 'தேம்பெய்து அமிழ்து பொதிந்து இலிற்றும் அடங்குபுரி நரம்பு' என்றார். மலைபடுகடாத்தினின்று மேலே எடுத்துக்காட்டிய பகுதி, 'தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவின்' எனத் தொடங்கி, 'வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்' என முடிந்து நின்றதாதலின், இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் கண்ட பேரியாழ் ஒன்பது நரம்புகளுடையதென அறிகின்றாம். 'தொண்டுபடு திவவு' என்றமையின், திவவுக்கு ஒன்றாக நரம்பும் ஒன்பது உள என்பது பெறப்பட்டது. ஆசிரியமாலையினுள்ளும், 'தொண்டுபடு திவவின் முண்டக நல்யாழ்' எனக் கூறப்பட்டது. அளவிற் பெரிதாய், ஒன்பது நரம்போடு கூடிப், பேரியாழ் எனப் பெயர் பெற்ற கருவியொன்று முன்னுளிருந்த உண்மையினை மேற்காட்டியவற்றினாலே துணிகின்றாம். சகோடயாழ் பதினான்கு நரம்போடு கூடியதென்பதைப் பாயிர வியலினுள்ளே காட்டினோம். மெலிவு நான்கு, சமன் ஏழு, வலிவு மூன்றாக, மொத்தம் பதினான்கு நரம்பாயின. 'இருபத்தொரு நரம்பினாற் றொடுக்கப்படும் பேரியாழ்' எனப் புறநானூறு, 152 ஆம் செய்யுளுரையினுள்ளே கூறப்படுதலானும், 'இருபத்தொரு கோவை முதலாக, நான்கு கோவையீறாகக் கிடந்த கோவைகளுள்' என வேனிற்காதை யுரையினுள்ளே அரும்பதவுரையாசிரியர் கூறுதலானும்,

> ஒன்று மிருபதும் ஒரேழும் பத்துடனே
> நின்ற பதி னொன்றேழு நேடுங்கால்—குன்றாத
> நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொல் முறையே
> மேல்வகை நூலோர் விதி

என அரங்கேற்றுகாதை யுரையினுள்ளே அடியார்க்குநல்லார் காட்டும் மேற்கோட் சூத்திரத்தினாலும், 'ஒன்பதும் பத்துடனே, நின்ற பதினொன்றும்' என மேலைச் சூத்திரத்திற்குப் பாட பேதமுளதாதலானும், பேரியாழ் இருபத்தொரு நரம்புடையதென்பதும், சகோடயாழ் ஒரோவழி பதினாறு நரம்போடு நிற்குமென்பதும், இவற்றிடையே நின்ற மகரயாழ் பத்தொன்பது அல்லது பதினேழு நரம்புகளோடு கூடியிருந்ததென்பதும் பெறப்படுகின்றன. ஆசிரியமாலை யுரைத்த திவவுத் தொகையினைச் சீறியாழுக்குக் கொள்ளுமிடத்து, அது ஒன்பது நரம்பினை யுடையதாதல் வேண்டும்.

பெரும்பாணாற்றுப்படையினுள்ளே, 'பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை' என்றது, பேரியாழினை நிறுத்துதற்குத் தகவாக, அதன் பின்னே யமைக்கப்

படுவதோர் உறுப்பு. இதனைப் படத்திற் காண்க. சிறுபாணாற்றுப்படையினுள்ளே 'அகளம்' என்றது பத்தரினை.



2(d) கவைக்கடை

பத்தர் குமிழ மரத்தினாற் செய்யப்பட்டதென்பதை, மேலே, '**வில் யாழ்**' என்னும் பகுதியுட் கூறினோம். அது முருக்கு, தணக்கு என்னும் மரங்களினாலும் ஆக்கப்படுவதுண்டு. கோடு கருங்காலியினாற் செய்யப்பட்டதென்பதை மேலே கூறினோம். அது கொன்றை மரத்தினாலும் செய்யப்படுவதுண்டு. 'கோட்டிற்கு மரம் கொன்றையும், கருங்காலியுமாம், பத்தற்கு மரம் குமிழும், முருக்கும், தணக்குமாம்' என நச்சினார்க்கினியர் பொருநராற்றுப்படை உரையினுட் காட்டினார். பண்ணோடு உளராது, இன்பமில்லாத ஓசையாக விசைக்கின்ற செம்பகையும், அளவிறந் திசைக்கின்ற ஆர்ப்பும், மழுங்கி யிசைக்கின்ற கூடமும், இழுமென வின்றிச் சிதறி யுச்சரிக்கின்ற அதிர்வும் மரக்குற்றத்தினாலாவன வென்பதும், அக்குற்றங்கள் மரமானது நீரிலே நிற்றல், அழுகுதல், நெருப்பில் வேதல், திணை மயங்கிய நிலத்தில் நிற்றல், இடி வீழ்தல், நோய்ப்படல் என்னுங் காரணங்களினாலாவன வென்பதும், சீவகசிந்தாமணி யுரையினுள்ளே, நச்சினார்க்கினியரால் காட்டப்பட்டன. அப்பொருள்பற்றிய செய்யுட்களும், உரையிற் காட்டிய மேற்கோட் சூத்திரங்களும் வருமாறு

நீர்நின் றிளகிற் றிதுவேண்டா நீரின் வந்த திதுபோக
வார்நின் றிளகு முலையினாய் வாட்புண் ணுற்ற திதுநடக்க
ஒரு முருமே றிதுவுண்ட தொழிக ஒண்பொ னுகுகொடியே
சீர்சால் கணிகை சிறுவன்போற் சிறப்பின் றம்ம விதுவென்றான்.

கலசேர் பூண்கொள் கதிர்முலையாய் காமத் தீயால் வெந்தவர்போற்
கொலைவே லுழவர் சுடப்பட்டுக் குரங்கி வெந்த திதுகளிறு
புல்ல முரிந்த தெனப்போக்கித் தாம மார்ந்த துகிலுறையுள்
நல்யாழ் நீட்ட வதுகொண்டு நங்கை நலத்த திதுவென்றான்.

நீரிலே நிற்றல் அழுகுதல் வேதல் நிலமயக்குப்
பாரிலே நிற்றல் இடிவீழ்தல் நோய்மரப் பாற்படல்கோள்
நேரிலே செம்பகை ஆர்ப்பொடு கூடம் அதிர்வுநிற்றல்
சேரில்நோ பண்கள் நிறமயக்கப்படுஞ் சிற்றிடையே

செம்பகை யென்பது பண்ணோ டுளரா
இன்பமி லோசை என்மனார் புலவர்

ஆர்ப்பெனப் படுவது அளவிறந் திசைக்கும்.

கூடம் என்பது குறியுற விளம்பின்
வாய்வதின் வாராது மயங்கி யிசைப்பதுவே.

அதிர்வெனப் படுவது இழுமெனல் இன்றிச்
சிதறி யுரைக்குநர் உச்சரிப் பிசையே

நரம்பினுள் மயிர், தும்பு என்றிவையிருத்தலும், அது கொடும்புரியாகவோ, ஏறிய முறுக்காகவோ இருத்தலுங் குற்றமாம். இப்பொருள், 'கொடும்புரி மயிர் தும்பு முறுக்கிவைநான்கும், நடுங்காமரபிற் பகையென மொழிப' என்னும் சீவக சிந்தாமணியுரை மேற்கோளினுட் காட்டப்பட்டது.

பணிவரும் பைம்பொற் பத்தர் பல்வினைப் பவள வாணி
மணிகடை மருப்பின் வாளார் மாடக வயிரத் தீந்தேன்
அணிபெற ஒழுகியன்ன அமிழ்துறழ் நரம்பி னல்யாழ்
கணிபுகழ் காளை கொண்டு கடலகம் வளைக்க லுற்றான்

என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுளுரையிலே, மாடகமென்பது நால்விரலளவான பாலிகை வடிவாய், நரம்பினை வலித்தல், மெலித்தல் செய்யுங் கருவியெனக் கூறப்பட்டது.

மாடக மென்பது வகுக்குங் காலைக்
கருவிளங் காழ்ப்பினை நால்விரல் கொண்டு
திருவியல் பாலிகை வடிவாக் கடைந்து
சதுர மூன்றுகத் துளையிடற் குரித்தே

என அரும்பதவுரையாசிரியர், வேனிற்காதை யுரையினுள்ளே, மாடகத்தி னிலக்கணங் கூறினார். 'வலக்கைப்பதாகை கோட்டொடு சேர்த்தி, இடக்கை நால்விரல் மாடகந் தழீஇ' என அக் காதையினுட் கூறியதற் கியைபுடைத்தாகிய நிலையினை நோக்குமிடத்து, 'மாடகம்' பத்தரிலே அமைக்கப்பட்டிருந்ததென்பது புலப்படுகிறது. அத்தகைய கருவிகளிலே திவவு என்னும் உறுப்பு அமையாது 'கோட்டே பத்தர் ஆணி நரம்பே, மாடகம் எனவரும் வகையின தாகும்' எனக் கூறப்பட்ட உறுப்புக்களே அமைந்துவரும்.

3. மகரயாழ்

தீந்தொடை மகரவீணைத் தெள்விளி யெடுப்பித் தேற்றிப்
பூந்தொடி யரிவை தன்னிற் புலமிகுத் துடைய நம்பிக்(கு)
ஈந்திடும் இறைவ ராதி மூவகைக் குலத்து ளார்க்கும்
வேந்தடு குருதி வேற்கண் விளங்கிழை தாதை யென்றான்

—சீவகசிந்தாமணி-காந்தருவதத்தை, 608

தகரக் குழலாள் தன்னொடு மயங்கி
மகரயாழின் வான்கோடு தழீஇ
வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்
எட்டி குமர னிருந்தோன் —மணிமேகலை, ௪, 55-58

மகரவீணையின் கிளைநரம்பு வடித்த
இளிபுணர் இன்சீர் எஃகு உளங்கிழிப்ப —மணிமேகலை, ௧௧, 25-26



3. மகர வெல்கொடி

யானாக கூட்டத் தியவனக் கைவினை
மாணப புணாநதோா மகரவீணை —பெருங்கதை, ௩-௧௫, 22-23

மேலே காட்டிய நூலகள் எழுநத காலததிலே, மகரவீணை எனப பெயரிய கருவி யொன்று இருநததாக அறிகின்றும சஙகச செயயுட்களிலே அது குறிக்கப்பட டிலது பெருங்கதையிலே, 'யவனக கைவினை மகரவீணை' என வருதலின், அக் கருவி யவனபுரததிலிருந்து தமிழ நாட்டிறகுக் கொண்டுவரபபட்டதென எண்ணு தற கிடமுண்டு தமிழ நாட்டிறகும, யவனபுரம் எனப்படும கிரேகக நாடடிற்கும், பண்டைக் காலததிலே, நெருங்கிய தொடாபிருந்தது மதுரைக கணககாயனுா மகனுர் நககீரனுா பாணடியன் இலவநதிகைபபளளித் துஞ்சிய நனமாறனைப் பாடிய (௫௬ ஆம்) புறப்பாட்டினுளளே,

யவனா, நனகலந தநத தணகமழ தேறல
பொனசெய புனைகலத தேநதி நாளும
ஒணடொடி மகளிா மடுப்ப மகிழசிறநது
ஆஙகினி தொழுகுமதி யோஙகுவாண மாற

எனக கூறியிருககிறுர் 'யவனா நலல குப்பியிற கொடுவரபபடட குளிாநத, நறு நாறறததையுடைய தேறலைப் பொன்னுற செய்யப்படட, புனைநத கலததினகணணே ஏந்தி, நாடோறும ஒள்ளிய வளையையுடைய மகளிா ஊடட, மகிழசசி மிகககு இனி தாக நடப்பாயாக' எனபது செய்யுளின் பொருள் யவனபுரததிலிருநது நறு நாற் றததினையுடைய தேறல் நலல குபபியிலே கொண்டுவரப்படடதென இசசெய்யுள கூறுகிறது இங்குத் தேறல் எனக் குறிக்கப்பட்ட பொருள், கொடிமுந்திரிப்பழச் சாறறிலிருந்து ஆககப்பட்ட உவைன் (Wine) ஆக விருக்கலாம் சிலப்பதிகாரம், அந்திமாலைச்சிறப்புசசெய் காதையிலே வரும், 'குடதிசை மருஙகின் வெள்ளயிர்' என்பதற்கு, அடியார்க்குநல்லார் 'யவன தேசத்துக் கண்டு சருக்கரை' எனப் பொருள் கூறினர் சிலப்பதிகாரம், நடுகற்காதையிலே, 'வன்சொல் யவனர் வளநா டாண்டு' எனவும, பதிறறுப்பததது, இரண்டாம்பத்தின் பதிகத்தினுளளே, 'நயனில் வனசொல் யவனர்ப் பிணித்து' எனவும், சேர மன்னரது மெய்ககீர்த்தி கூறியிருபபதனை நோக்கு மிடததுச், சேர குலத்தார் கடல கடந்து சென்று, யவனபுரததி லொருபகுதியினைக் கைப்பற்றி ஆளுகை புரிந்தார்களென்னும் உண்மை புலப்படுகின்றது

'மணிமலர்' என்னுங் கட்டுரைத தொகுதியினுள்ளே, 'பணடைத் தமிழர் பெருமை' யென்னும் உரையினை யெழுதிய சென்னைப் பல்கலைக் கழகத்து வரலாற் றுப்பகுதி யாசிரியர், திரு வி ஆர் இராமச்சந்திர தீட்சிதர் அவர்கள், 'தென்னுட்டி லிருநது தமிழ் நாகரீகம் உரோமாபுரிக்கும், கிரேக்க நாட்டிற்கும் பரவியது இன் னும் தக்கிண பீடபூமியைச் சேர்ந்த வேட்டுவர் என்ற குறிஞ்சி மக்கள் யவன தேசத் திற்குச் சென்று தங்கள் அரசை நிலைநிறுததித் தங்கள் பெயரையும் அந்நாட்டிற்குக் கொடுத்தார்கள் இதுவே கிரீட் (Crete) தேசம். இதன் நாகரீகத்திற்கும தமிழ் நாக ரீகத்துக்கும் ஒப்புமை மிகுதியாயுள்ளது' என எழுதியிருக்கிறுர்கள் 'வில்லவர்' என்னுஞ் சேரர் குடிப்பெயரை 'Hunters' என மேனுட்டார மொழிபெயர்க்க, அது திரும்பவும் தமிழிற்கு மொழிபெயர்க்கப்படும்போது, 'வேட்டுவர்' என அமைவது

இயல்பு ஆதலினாலே, 'தக்கிண பீடபூமியைச் சேர்ந்த வேட்டுவர் என்ற குறிஞ்சி மக்கள்' எனத் தீட்சிதரவர்களுடைய உரையிலே குறிக்கப்பட்டோர் வில்லவராகிய சேரர் குலத்தவரே என்பது தெளிவாகின்றது. சிலப்பதிகாரத்திலும், பதிற்றுப்பத்திலும் காணப்படும் சேரர் மெய்க்கீர்த்தி இவ்வுண்மையினை நிலைநிறுத்துகின்றது. சேர நாடு கேரளம் எனத் திரிபுபட்டதுபோலச், சேரர் தீவு 'க்ரீத' ஆயிருக்கலாம். தமிழ் நாட்டு வேந்தர் யவனர்களைத் தமது கோட்டை வாயில்களிலே காவலாளர்களாக வைத்திருந்த செய்தியும், உரோமாபுரி வேந்தனாகிய ஆகஸ்டஸ் மன்னனுக்குப் பாண்டியன் தூதனுப்பிய செய்தியும், பிறவும் ஆதாரமாகத் தீட்சிதரவர்கள், 'மத்திய தரைக்கடல் நாகரீகம் என்று இப்போது வழங்கப்படுவது தென்னிந்தியா நாகரீகம் அல்லது தமிழ் நாகரீகம் என்று துணிவாய்ச் சொல்லலாம்' என முடிவு கூறுகிறார்.

> யவன ரியற்றிய வினைமாண் பாவை
> கையேந் தையகல் நிறையநெய் சொரிந்து
> பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி

என நின்ற நெடுநல்வாடைக்குப், பிற்காலத்து உரையாசிரியர், 'சோனகர் பண்ணின தொழில்மாட்சிமைப்பட்ட பாவை' எனப் பொருள் கூறினர். பிற்காலத்திலே, 'சோனகர்' எனப்பட்ட அராபி நாட்டார் மாட்சிமைப்பட்ட பாவை பண்ணுந் தொழிலரல்லராதலின், இங்குச் சோனகர் என்றதை 'யோனகர்' என்னும் மொழிச் சிதைவாகக்கொண்டு, கிரேக்கர்மேலேற்றவேண்டும். 'யவனர் ஓதிம விளக்கு' எனப் பெரும்பாணாற்றுப்படையினில் வருதலையுங் காண்க.

உருவமமைக்கும் ஓவியக் கலையிலும், இசைக் கலையிலும் வல்லுநராயிருந்த யவனர் அழகுபெறச் செய்த மகரவீணையானது, அவர் நாட்டு மகரமீன் உருவத்ததாக இருந்ததென்று கொள்ளலாம். 'யவனமஞ்சிகை' யும், 'யவனப்பேழை' யும், 'யவனப்பாவை' யும் பெருங்கதையுட் குறிப்பிடப்பட்டன.

மகர வீணையெனவும், மகர யாழெனவும் வழங்கப்பட்ட கருவி பேரழகுடையதாயிருந்ததென்பதும், அரச குமரர், பரத குமரர் முதலிய செல்வர் வீட்டிலே, மகளிர்களாலே வாசிக்கப்பட்டதென்பதும், இப்பிரிவின் தொடக்கத்திலே தந்த மேற்கோட் செய்யுட்களினாலே தெளிவாகின்றது. இதற்கு நரம்பு பத்தொன்பதாகுமிடத்து, அந்நரம்புகள், **க ம ப த நி ச ரி க ம ப த நி ச ரி க ம ப த நி** என நிற்கலாம்.

4. சீறியாழ், செங்கோட்டியாழ்

'வணர்கோட்டுச் சீறியாழ்' என நடுகற்காதையினுள்ளும், 'செந்திறம்புரிந்த செங்கோட்டியாழ்' எனப் புறஞ்சேரியிறுத்த காதையினுள்ளும் கூறியிருத்தலை நோக்குமிடத்து, இளங்கோவடிகள் காலத்திலே, இவ்விரண்டும் இருவேறு கருவிகளாகக் கருதப்பட்டனவென எண்ணவேண்டியிருக்கிறது. 'பாடும்பாணர்—அம்பணவர், செங்கோட்டியாழ்—அம்பணவர் யாழ்' என்பது அரும்பதவுரையாசிரியர் கூற்று. மேலே நாம் காட்டிய சிறுபாணாற்றுப்படைப் பகுதியிலே, சீறியாழுக்குக்



IV சீறி யாழ்

கோடும், திவவும, பததரும, போர்வையும், நரம்பும் என்னும் ஐந்துறுப்புங் கூறப் பட்டன புறஞ்சேரியிறுத்த காதையுரையினுள்ளே, 'செஙகோட்டியாழே செவவிதிற் றெரியின், அறுவகை யுறுபபிறருகுமென்ப', 'அவைதாம், கோடே திவவே யொற்றே தநதிரிகரமே நரம்போடாறே' என மேற்கோள் காட்டப்பட்டது இன்றியமையாத உறுப்பாகிய 'பததா' புள்ளியிட்ட இடத்தினை நிரப்புமென்பது வெளிப்படை. செங்கோட்டியாழிலே, 'ஒற்று', 'தந்திரிகரம்' என ஈருறுப்புச் சிறப் பாக நிற்கின்றன. சீறியாழ் உறுப்புககளுள் ஒன்ருகிய போாவைத்தோல் செங் கோட்டியாழில இலது இரண்டிலும் மாடகம் என்னும் முறுககாணி இலது. நரமபுகளை வலித்தலும, மெலிததலும் திவவினுற் செய்யப்பட்டது

தநதிரிகரமென்பது, நரமபு துவக்குவதறகுத தகைப்பொழிய இருசாண நால் விரல நீளமாகக குறுககிடத்துச சோதது அமைப்பதோருறுப்பு. [அசசுப் புத்தகத் திற கணட பாடத்தினைப் பொருட பொருத்தமாகச் சிறிது மாற்றி யமைத்துக் கொணடாம் 'சோததமைப்பதோருறுப்பு' என்பதனை ஏடெழுதுவோா 'சேர்தது மைமபததோருறுப்பு' எனப் பிழைபட எழுதுதலியலபே 'அறுவகை யுறுபபிற் ருகுமென்ப' எனக காடடியதனேடு, 'ஐமபததோருறுப்பு' என்னும பாடம பொருந் தாமை வெளளிடைமலையாகும்]

5 சகோடயாழ்

'கேளவி' யென்பது யாழுக் கருவிககு ஒரு பெயா 'ஈரேழ தொடுதத செம் முறைக் கேள்வி' யெனவும், 'பிழையா மரபி னீரேழ் கோவை' யெனவும் போறறப் பட்ட சகோடயாழ பலவழியிலும சிறப்புடையது அரஙகேறறு காதையினுள்ளும், வேனிற காதையினுள்ளும் இசைககப்படுவது இக்கருவி

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனுர் கையிலிருந்த இத் தெய்வக்கருவி முத் தமிழ விரகராகிய திருஞானசம்பநதப் பிள்ளையாரராலே பாராட்டப்பபடடது. இத் தகைய சிறப்பு வாயநத கருவியின் இசையினை மீடடு மொரு முறை தோற்றுமாறு செயதல் தமிழகததின் மறுமலாசசிக்குச சிறநததோ ரேதுவாகும

இசை மடந்தையின பேரருளினுலே, இக்கருவியின் உருவபபடம அமராவதி ஓவியததிலே நமக்குக கிடைததிருககிறது யாழிசைக்கும் பெண்களின் உருவத் தோடு ஒபபநோக்குமபொழுது, இககருவியின உயரம், அஃதாவது, எடுதது நிறுத்து மிடதது எய்தும உயரம, மூனறரையடி (42 இஞ்சு) ஆகும்போற் றெரிகிறது கோட்டினுருவம் Ellipse எனப்படுகிற 'ஆயதவட்ட' வடிவாகக் காணப்படுகிறது. ஆயதவடடததிறகு இரு மையஙகள் (Foci) உள இவற்றினூடாகச் செல்லும் நீள் விடடம, நாம் முன்பு காடடியபடி, 42 இஞ்சு இநத நீள விட்டததின நடுவி லிருந்து நோகோணமாக இருபுறமுஞ் செலலும குறுககுவிட்டம் 28 இஞ்சு வரை யிருககலாம் இநத அளவு பொருந்த ஓர் ஆயதவடடததினைக் கீறிககொள்ளின், யாழுககோடு அதிற் பொருந்திநிற்கும் காணப்படாத பததரும் ஆயதவட்டததி னுலே எல்லைப்படுததப்பட்டு நிற்கிறதென்று கொள்ளலாம் குறுக்குவிட்டததிற்கு

30 பாகை சாயவாகிய நேர்கோடானது பததரின் நடுவே போர்வைத்தோலிற் பொல்லம் பொத்தப்பட்ட இடமெனக் கொள்ளலாம் நரம்பு கட்டியிருக்குந் தோறறததையும், பிறவற்றையும் படததிற காண்க படததிலே முறுக்காணிகள் கோட்டிலமைந்து நின்றன.

இக்கருவியிலே, நரம்புகள் பதினன்கு, அந்தரக் கோலகள் பதது உளளன. இந்நரம்புகளுககு இசைகூட்டும் முறை இசைநரமபியலினுட் கூறப்படும இசை கூட்டியபின் அவை எயதிநிறகின்ற அசைவெண்களைக கீழே தருகின்ரும். அநதரக கோல்கள் அடைப்பினுள்ளே நிறுத்தப்பட்டிருககின்றன நரமபுகள் உழைமுதற கைக்கிளை யீருக நி ச ரி க ம ப த, நி ச ரி க ம ப த என நிற்பன நாம் பாயிர வியலினுள்ளே குறிப்பிட்டபடி, அவை மெலிவு நானகு, சமன் ஏழு, வலிவு மூன்று எனக கொளளப்படுவன அசைவெண் முதலியவறறைக கணக்கிடுவதறகு அவை தம்மை இருபடியாக வைக்கலாம். முனனேழு நரமபுகளும், ஐநது அநதரக கோலகளும் பெறுகின்ற அசைவெண்களின இரட்டியே பின்னேழு நரமபுகளும, ஐநது அநதரக் கோல்களும பெறுவன

நி		ச	ரி		க		ம		ப	த	
240	243	270	288	$303\frac{3}{4}$	320	324	360	384	405	432	$455\frac{5}{8}$
480	486	540	576	$607\frac{1}{2}$	640	648	720	768	810	864	$911\frac{1}{4}$

நரம்புகளும், அநதரக கோல்களும மேலே காட்டிய கணககின்படி நிறறலினுலே, இககருவிககு எய்துஞ் சிறப்பு உரியவிடததுக கூறப்படும



A. சகோட யாழ்

ட—இசைநரம்பியல்

1. பூதநூல்; அளக்கும் முறையும் அளவுகோலும்; ஓசையினியக்கமும் வேகமும்; துளைக்கருவியிலக்கணம்; கட்டளையாழ்.

அனல், ஒளி, ஓசை, காந்தசத்து, மின்சத்து என்னும் இவைதம்மை ஆராய்ந்து கூறும்நூல் பூதநூல் எனப்படும் பூதநூலிலே நிறுவப்படும் உண்மைக ளெல்லாம் முறைப்படி அளந்து துணிதற்கு இயைந்தனவாதலின், 'அறிவெனப் படுவது அளந்து துணிதல்', 'Science is measurement' என மேனாட்டு அறிவியற் புலவர் கூறுவர் கண்ணினும், செவியினும் நுண்ணிதினுணரும் மாந்தர்க்கு அவை யிரண்டும் சிறந்த அளவுகோல்களாக அமைந்தன 'நுண்மா ணுழைபுலம்' என ஆன்றோரால் பாராட்டப்பட்ட கூர்ந்த நுண்மதியானது, மற்ற அளவுகோல்களின் குணமும், குணமின்மையுங் கண்டறிதற்கமைந்த மேலான அளவைக்கருவி யென்ப தற்கு ஐயப்பாடில்லை கூர்ந்த நுண்மதியும், நுணுகிநோக்கும் கண்ணுஞ் செவியும் உடையராய்ப், பயிற்சி பெற்ற கைகளையுடையராயப், புறவுலகத்திலமைந்த பல்வேறு பொருட்களையும், அவைதம்மை யியக்கித் தொழிற்படுத்துஞ் சத்திகளையும் ஆராய்ந் தறியப் புகுவோர், தமது ஆராய்ச்சிக்கு ஏற்புடைய கருவிகளைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும் பூதநூலறிவென்பது புத்தகத்தை நெட்டுருப்பண்ணிப் பெறுதற்குரிய அறிவன்று அதற்கென அமைந்த கருவிச்சாலையினுள்ளே புகுந்து, கருவிகளைப் பயன்படுத்தி, அளக்கும் முறையறிந்து அளந்து, அளந்து கண்ட முடிபுகளிலே அமைந்துநின்ற விதிகளை ஓர்ந்துணர்ந்து, தீர்ப்பிடுவதுவே பூதநூலும், பிற அறி வியல் நூல்களுங் கற்றற்குரிய மரபாகும்

சிறந்த இலக்கண நூல்கள் சிலவும், அழகிய தொடர்நிலைச் செய்யுட்கள் சிலவும், சங்கத்துச் சான்றோர் செய்யுட்களைத் தொகுத்த தொகைநூல்கள் சிலவும், சமயநூல், ஒழுக்கநூல்கள் சிலவும், வைத்திய நூல்கள் சிலவும், புராணங்கள் பலவும், பிரபந்தம் என்னும் வகையினைச் சேர்ந்தனபலவும் ஒருங்கியைந்த தொகுதியே இக் காலத்திலுள்ள தமிழ்நூற் கருவூலமாகும்

சிறப்புடையுயிர்கட்குக் கண்ணென்று சொல்லப்படும் கணித அறிவு மேனாட்டு மொழிகளிலே எவ்வளவு பரந்துகிடக்கிறது! அணுமுதல் அண்ட மீறாகவுள்ள பொருள்களை யளந்தறியவும், எந்திரவண்டி, மரக்கலம், வானவூர்தி யென்னு மிவற் றினை யமைக்கவும், முன்பு காணப்படாத நாண்மீன்களும், கோண்மீன்களும், வால் வெள்ளிகளும் இன்னநாளிற் றோன்றுவவெனக் கணித்தறியவும் இயன்ற கணித முறைகளும், நாம் மேலே குறிப்பிட்ட பூதநூற்றுறைகள் வெளியிடும் உண்மைகளை ஆராய்ந்து, முறைப்படுத்திப், புத்தம்புதிய உண்மைகளைக் காணுதற்கியன்ற கணித முறைகளும் எத்தனையோ பலவாக மேனாட்டு மொழிகளிலே பரந்துகிடக்கின்றன அவைதம்மைத் தமிழ்நூற் கருவூலத்திலே சேர்த்துவைத்தற்கு நாம் முயலுதல் வேண்டும்.

'சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின், வகைதெரிவான் கட்டே யுலகு' எனக் கூறிய ஐந்தனுள்ளும், ஒளியும், ஓசையும் சிறப்புடையன. ஊற றுணர்ச்சி மரம் செடிகொடிகளுக்கும் உண்டு, அதன்பின் முறையே தோன்றும் சுவையுணர்ச்சியும், நாற்றவுணர்ச்சியும் சிற்றுயிர்களுக்கும் அமைந்திருப்பன. அதன் பின் ஒளியுணர்ச்சி தோன்றிச், சிறப்புடையுயிர்களுக்கே ஓசையுணர்ச்சி தோன்று கிறது. அவ்வோசையின் வழியாகவே, எழுத்தறிவும், இசையறிவும், பிற அறிவும் பெற்று மனிதன் சிறப்புடையவனாகின்றான். ஒளி, ஓசைகளின் இலக்கணங்களையும், அவை தம்மைச் செய்கைப்படுத்தும் முறைகளையும் பூதநூல் தெளிவாகக் கூறும். பூதநூற் கருவிச்சாலைகளிலே, இசையொலியினை அளத்தற்கியன்ற கருவிக ளிருக்கின் றன. அவைதம்முள் ஒன்றாகிய 'Tuning Fork' என்பதனை இசைக்கோல் என வழங்குவாம். முழக்கோல் துணியினை அளந்து கணக்கிட உதவுவதுபோல, 'இசைக் கோல்' இசைநரம்பினோசையினை அளந்து கணக்கிட உதவும். அதற்குத் துணைக் கருவியாக ஒலியளப்பான் (Sonometer) என ஒரு கருவியுண்டு. இதனை யாம் 'கட்டளையாழ்' என வழங்குவாம். கட்டளைக்கல் என்னும் உரைகல்லானது பொன்னின்மாற்று இத்துணையது என்று காட்டுதல்போல, இசைச் சுவரங்களின் அலகுநிலையினை யறிதற்கு இக்கருவி பயன்படுதலின், கட்டளையாழ் என்னும் பெயர் இக்கருவிக்குப் பொருத்தமுடையதாம்.

பிழம்புகளின் நீளம், அகலம், உயரங்களைத் தனித்தனி அளந்தறிதற்கியன்ற நீட்டலளவையும், தராசுத் தட்டிலிட்டு அவைதமது நிறையினைக் காணுதற்கியன்ற நிறையளவையும், காலவெல்லையைக் கணிக்கும் கால அளவையும் எனும் மூன்றும் மூல அளவையெனப்படுவ. நீட்டலளவையின் சிற்றெல்லை இட்டிடை (point) எனப் படும்; நிறையின் சிற்றெல்லை சின்னம் (particle) எனப்படும், காலத்தின் சிற்றெல்லை கணம் (instant) எனப்படும். தூரம், பாரம், நேரம் எனக் கணிதத்தில் வழங்குதற் குரிய நீளம், நிறை, காலம் என்னும் மூன்றினையும் அளத்தற்கியன்ற அலகுகள் (units of measurement) நாடுதோறும் வேறுபடுவன. அறிவியல் நூலோர் பொது வழக்காகக் கொள்வது, பிரான்சுதேசத்திலே தொடங்கப்பட்ட மீத்தர் முறை யென்பதுவேயாம். நமது நாட்டிலே அரசியலார் கைக்கொள்ளும் முறை பிரித்தா னிய முறை எனப்படும். இதில் நீட்டலளவையலகு அடி யெனப்படும். ஓரடி யிலே பன்னிரண்டு இஞ்சுகள் உள. நுண்ணிய அளவைகளுக்கு இஞ்சும், அதன் பத்தின்கூறும், நூற்றின் கூறும் பயன்படுவன. மீத்தர்முறையிலே, மீத்தரின் நூற்றிலொருகூறாகிய செந்திமீத்தர் நீட்டலளவை யலகாகும். ஆங்கிலர் முதலிய பிறமொழியாளர்கள் செய்துகொண்டதுபோலவே, நாமும் 'செந்திமீத்தர்' என்னும் பிரான்சிய மொழியினை இயன்றவரை தமிழெழுத்துக்களால் எழுதினும் இம்மொழி யைச் சுருக்கமாகச் 'செமீ' என்பாம். இதிற் பத்திலொருகூறு, அஃதாவது, மீத்த ரின் ஆயிரத்திலொருகூறு மில்லிமீத்தர் எனப்படும். இதனைச் சுருக்கமாக 'மிமீ' என்பாம். ஒரு மீத்தர் 39.2 இஞ்சு எனக்கொள்ளலாம், அஃதாவது, முப்பத் தொன்பது இஞ்சும், இஞ்சிற் பத்திலிருகூறும். பத்திலொரு கூற்றினைப், புள்ளி யொன்று (·1) எனவும், நூற்றிலொரு கூற்றினைப் புள்ளி வெற்றிலக்கம் ஒன்று (01)

எனவும், ஆயிரததிலொரு கூற்றினைப் புள்ளி வெற்றிலக்கம் வெற்றிலக்கம் ஒன்று (001) எனவும் கீழ்வாயக் கணக்கிலே குறிப்பிடுவது வழக்கம் ஒழிபியலிலே இப்பொருளைச் சற்று விரிவாகக கூறுவாம்

செமீகளும், மிமீகளுமாக வரையிட்டுக் காட்டப்பட்ட மீத்தர் அளவைக் கோல்கள், பூதநூற கருவிசசாலைகளிலும், கணிதநூற் கருவிகள விற்கும் இடங்களி லுங் கிடைப்பன இவற்றைக் கையாளுவதினாலே அளவுகளை நாம நுணுகியளததல் கூடும் ஒரு செமீயிலே ஏழு கடுகுகளை நிரல்படச் செறித்து வைக்கலாம ஆதலி னாலே மிமீயினளவு கடுகினுஞ் சிறிது என்பது தெளிவாகினறது நாம் செய்யப் போகின்ற கட்டளையாழிலே இசை நரம்புகளின் நீளங்களைக் கணககிடுவதற்காக மீததா அளவைக்கோல் ஒன்று தேடிக்கொளளுதல் வேண்டும்.

இனி, மூல அளவைகள் என நாம் கூறியவற்றுள்ளே, கால அளவையினை எடுததுககொள்வோம. ஒரு நாள இருபத்துநான்கு மணியாகவும், ஒரு மணி அறுபது மினிட்டுககளாகவும, ஒரு மினிட்டு அறுபது செக்கண்டுகளாகவும பகுக்கப்பட் டுளளன நேரததைக்காட்டுங் கருவி 'மணிககூடு' எனபபடும் கையில வைத் திருககுஞ் சிற்றளவான கருவியினைக 'கைககடிகாரம்' எனபா. மணி, மினிட் டோடு செககண்டினையுங காட்டுகிற மணிககூடுகளும, கைககடிகாரங்களும் உளளன

ஓசை செலலுகிற வேகததை நாம அளப்பதற்கு, இவ்வளவு நேரத்திலே இவவளவு தூரஞ் செல்லுகிறதென அளநது கண்டு, ஒரு செககணடுககு இவவள வெனக கணககிட்டுககொளளவேண்டும ஒளி மிக விரைவாகச செல்லுவதாதலின், அதன் வேகத்தினை அளபபதற்குப், பெரிய பூதநூறகருவிச்சாலைகளிலே மிக நுண் ணிய முறைகள கையாளப்படுவன. ஒளியானது ஒரு செக்கண்டுக்கு ஓரிலடசத்து எண்பததாறாயிரம மைலதூரம் செலலுமென அறிஞர் அளவிட்டிருக்கின்றனர்.

ஓசையினுடைய வேகத்தை யாரும் அளநதறிந்து கொள்ளலாம். இரணடு மைல தூரத்திற்கபபாலுள்ள ஒரு குனறின உசசியிலிருந்து ஒரு போர்வீரன் ஒரு பீரங்கியினைச் சுடுகிறான் பீரங்கிவாயிலே ஒளிதோன்றிப் பத்துச செககண்டெலலை யிலே பீரங்கியின முழக்கம் நம செவியைச சேருகிறது ஓசையின் வேக மென்ன வென்பது வினா ஒரு மைல 5,280 அடிகளாமாதலின, இரண்டு மைல 10,560 அடிக ளாகும ஓசை 10 செக்கண்டிலே இத தூரததைக் கடககிறதெனின, அதன் வேகம் ஒரு செககண்டுக்கு 1,056 அடியாகின்றது இது பருமட்டான முடிபு நுணுக்கமாக அளந்து கண்டோா, ஒரு செக்கண்டுக்கு 1,081 அடியெனத் தீர்ப்பிட்டிருக்கின்றனர். நாம நேரததினையளநத கைககடிகாரம் வழுவறறதென வைததுக்கொள்ளுமிடத்துப், பீரஙகியிருநத தூரம இரண்டு மைலும இருநூற்றைமபது அடியும் எனக கொளள வேண்டும் போாககளததிலே, இமமுறையினாலே, பீரங்கிகள் வைக்கப்பட்டிருககும் தூரங்களை நிச்சயிபபதுண்டு

நம்மைச சூழவிருககும பவனததிலே, ஓசையானது, ஒரு செககண்டுக்கு, 1,081 அடி அல்லது 331 மீததர் வேகமாகச செலலுகிறது என்று கொள்ளலாம். பவனத் தின் அமுக்க வேறுபாட்டினாலும, வெப்ப தட்ப வேறுபாட்டினாலும், இவ வேகம்

வேறுபடுதற் குரியது. நீரிலே ஓசை செல்லும் வேகம் ஒரு செககண்டுக்கு 1,435 மீத்தர் என அறிஞர் அளவிட்டிருக்கின்றனர். ஆகவே, நீரிற் செல்லும் வேகம் பவனத்திற் செல்லும் வேகத்தைப் பார்க்கினும் நான்கு மடங்கிற்கு மேற்பட்டது என்பது தெளிவாகின்றது. உலோகங்களிலும், பிற திண்மங்களிலும் (solids), பவன மொழிந்த பிற நொய்மங்களிலும் (gases) ஓசை செல்லும் வேகங்கள் அளந்தறியப் பட்டிருக்கின்றன. திண்ம, நீர்ம, நொய்மங்களாகிய சடப்பொருள்களின் வழியாகத்தான் ஓசை பரவும். வெறு வெளியாகிய வானிலே (ஆகாயத்திலே) அது பரவாது. பவனத்தின் அமுக்கத்தைத் தாங்கத் தக்க தடித்த பக்கங்களையுடைய ஒரு கண்ணாடிக் கூடமினுள்ளே, ஒலியெழுப்புகின்ற மணிக்கூடொன்றினைப் பட்டு நூற் கயிற்றினாலே கட்டித் தூக்கிவிட்டபின், வளிவாங்கு கருவி (air pump) யினாலே அதனுள்ளிருக்கும் பவனத்தையகற்றி, வெற்றிடமாக்க, மணிக்கூடானது இயங்கிக் கொண்டிருந்தும், அதன் ஒலி நின்று விடும். ஒலி நமது செவிப்புலத்தை யடையும் வண்ணம் இயங்கி வருதற்குப் பற்றுக்கோடாக விருந்த பவனம் நீக்கப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

ஓசையானது பவனத்தினூடே சிற்றலைகளின் வடிவமாகப் பரவும். ஒரு பக்கம் மூடப்பட்ட துளைக்கருவி யொன்றினை (புல்லாங்குழலினை) நாம் ஊதி யிசை யெழுப்பும்பொழுது, குழலின் நீளத்தினைப்போல நான்குமடங்கு நீளமுடைய அலைகள் குழலினின்று எழும். இங்குக் குழலின் நீளம் என்றது அதன் முழு நீளம் அன்று. அடைக்கப்பட்ட இடப்புறத்து முகத்திற்கும் இசை யெழும்புகின்ற துளைக்கு மிடையேயுள்ள தூரமே, தோற்றுகின்ற சுவரத்திற்குரிய குழல நீளமாகும். அரங்கேற்றுகாதை யுரையினுள்ளே, அடியார்க்குநல்லார் காட்டுகிற வங்கியத்தின் நீளத்தினை எடுத்துக்கொள்வாம். ‘நீளம் இருபது விரல; சுற்றளவு நாலரை விரல; இது துளையிடுமிடத்து நெல்லரிசியில் ஒருபாதி மரனிறுத்திக் கடைந்து வெண்கலத்தாலே அணைசுபண்ணி இடமுகத்தை யடைத்து வலமுகம் வெளியாக விடப்படும். இனித் துளையளவிலக்கணம். அளவு இருபது விரல். இதிலே தூம்புமுகத்தின் இரண்டு நீக்கி முதலவாய் விட்டு இம் முதலவாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினு மிரண்டு நீக்கி நடுவினின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளை யிடப்படும். இவற்றுள் ஒன்று முத்திரையென்று கழித்து நீக்கி நின்ற ஏழினும் ஏழுவிரல்வைத்து ஊதப் படும். துளைகளின் இடைப்பரப்பு ஒருவிரலகலங் கொள்ளப்படும்.’

எல்லா இடைப்பரப்புகளும் ஓரளவாக இருத்தல் பொருந்தாது. அவை என்ன கணக்காக இருக்கவேண்டு மென்பதை ஒழிபியலிலே கூறுவாம். இப்பொழுது நாம் காணவேண்டியது, இக் குழலிலே யெழும் முதற் சுவரத்தின் நாதம் ஒரு செக் கண்டுக்கு எத்தனை சிற்றலைகளை யுண்டுபண்ணிப் பவனத்திலே பரவுகிறது என்பதே யாம்.

இங்குக் கூறிய விரலளவு, அங்குலம் என்பவை, ஒரு சாணின் பன்னிரண்டி லொரு கூறாகிய முக்கால் இஞ்சு ஆகும். வளைவாயிலிருந்து இரண்டு விரல் கீழாக நிற்பது முத்திரையென்னும் துளை. அதனினின்று ஒரு விரல் தாழ்ந்து நிற்பது முதற் சுவரத்தின் துளை. இதற்கும் அடைக்கப்பட்ட இடப்புறத்து முகத்திற்கும் தூரம்

பதினேழு விரலாகும் இதுவே முதற் சுவரத்திற்குரிய குழல் நீளமாகும். இதனை நான்கிற பெருககக கிடைபபது அலை நீளம் அங்ஙனமாதலின், அலை நீளம் 68 விரல் அல்லது 51 இஞ்சு ஆகிறது ஒரு செக்கண்டு என்னுங் காலவெல்லையின் முத லிலே புறப்பட்ட அலையானது 1,081 அடி (ஓசை ஒரு செககணடிலே செல்லுந் தூரம்) அகனறு நிற்ப, செக்கணடின இறுதியிலே புறப்படட அலை துளைவாயிலே நிற்கும் இநத எல்லைகளுககிடையே எததனை அலைகளுண்டெனறு காணபதற்கு, 1,081 அடி, அஃதாவது, 12,972 இஞ்சுகளை 51 இஞ்சுகளால வகுததுக காணவேண டும அவ்வாறு வகுததுப் பெறற பேறு 254 மேனுடடார ஷடஜததிறகு 256 முதல 261 வரையும அசைவெண் (frequency of vibration) கொளவா ஆதலினல், நாம ஆராயநத குழலிலிருநது எழுகினற முதற சுவரத்தினேசை இளிநரம்பினேசை யென்பது பெறப்பட்டது இனி, ஏழாவது துளையினின்றும் எழுகினற சுவரததினை அளவிடப புகுவாம தூமடுமுகததிலிருந்து 9 விரலில் ஏழாவது துளை நிற்கிறது. இதன அலை நீளம 36 விரல் அலலது 27 இஞ்சு ஆகும ஆதலின், அதன அசை வெண 12,972÷27=480 ஆகிறது முதற் சுவரததின் அசைவெணணினை 256 எனக கொள்ளலாம அபபடிக கொளளுமிடதது ஏற்படுகின்ற வழு நூறறுக கொரு வீதமாதலின, கொளவதிற் றவறில்லை ஏழாஞ் சுவரததிறகும முதற சுவரத்திறகு மிடையேயுள்ள அசைவெண விகிதம $\frac{480}{256}$ ஆகும் இதனைப் பொதுசசினை நீக் கிககொளளக கிடைபபது $\frac{15}{8}$ ஆகும இதுவே 19ஆம சுருதியாகிய காகலிநிஷாதத் திறகு உரிய விகிதவெண இது பழந்தமிழிசையிலே உழையெனப்படுமெனப் பாயிர வியலினுட் காட்டினும்.

அடியாாககுநல்லார காடடிய வங்கியம் இளிமுதல உழையீறுக இசைததது எனபதைக கணிதநூல கருவியாக மடடிட்டறிந்துகொண்டோம. பழந்தமிழிசைக் கருவிகளும மறைநது, அவறறைக கூறிய நூலகளும் மறைந்து, அவற்றை யிசைத்த பாணனும மறைநத நிலையிலே, வழியறியாது துன்புற்றலைகின்ற நமக்குக் கணித மென்னுங கண் வழியினைக காட்டுகிறது

மேறகூறிய வங்கியத்தை அழுத்தமாக ஊதினல, அதினினறு எழும் அலைகளின் தொகை முனனையிலும மூன்றுமடஙகாகும என்பதனைக கீழே (பக்கம் கூக) தந்த படததினை உறறு நோககி உணாந்துகொளக முன்னின்ற அசைவெண் 256 ஆயின், இபபொழுதுள்ள அசைவெண் 768 ஆகும். இது மேறறுனத்துப் பஞ்சமத்திற்கு உரியது பஞ்சமததைப் பண்டையோர் துததம் என்றனா. இளியினுளளே துத்தம் தோன்றுமெனப் பழைய இசையாசிரியர்கள் கூறிய உண்மையினை இவ் வங்கியக் கருவி காட்டுகின்றது ஊதபபடுகிற ஏழு துளைகளிலும், நடுவில் நின்ற துளையிலே, முன்பு குரல் (மததிமம்) இசைததது இப்பொழுது இளி (ஷட்ஜம்) இசைக்கின்றது. குரலினுளளே இளிதோனறும என்னும் உண்மையினை இது நமக்கு வெளியிட்டுக் காட்டுகினறது ஏழாந துளையினுளளே முன்பு உழை பிறநதது இப்பொழுது அத் துளையினினறு குரல் நரம்பினிசை பிறககினறது உழையினுள்ளே குரல் தோன்று மென்னும் உண்மையினை இது நமககுக காட்டுகின்றது. உழையினுட் குரல், குரலி னுள் இளி, இளியினுள் துத்தம் என்பவற்றை நினைவில் வைப்போமாக.

மேனாட்டார் ஏழிசைகளை C D E F G A B என்னும் ஏழு எழுத்துக்களாற் குறியீடு செய்வார். இவை முறையே இளி முதல உழைவரையு மமைந்த ஏழு நரம்புகளாம். சமன் தானத்திலே, இளியின் அசைவெண் 256 எனவும், உழையின் அசைவெண் 480 எனவும் மேலே காட்டினும் இவை முறையே C, B என நின்றன. மற்ற ஐந்து சுரங்களின் அசைவெண்கள், மேனாட்டார் கணக்கின்படி, D 288, E 320, F 341·3, G 384, A 426·7 என நின்றன. இவ் வசைவெண்களுடைய இசைக்கோல்கள் (tuning forks) பூதநூற் கருவிச் சாலைகளிலே எளிதிற் கிடைப்பன. இவற்றை உள்ளங் கையிலே உறைப்பாகத் தட்டிச், செவிக்கு அணிமையாகப் பிடித்தால், இவற்றாற் குறிக்கப்படுகிற சுரம் தெளிவாகக் கேட்கும்.

இசை நரம்பில் எழுகின்ற இசையின் அசைவெண்ணினை இசைக்கோல் கொண்டு அளத்தற்குரிய முறையினைக் கூறும்பொருட்டு, முதலிலே கட்டளையாழினது அமைப்பினைத் தருவாம்.



4 கட்டளையாழ்

ஒரு இஞ்சுக் கனத்தில் 6 இஞ்சுச் சதுரமான இரண்டு பலகைகள் எடுத்துக் கொள்க. 3½ அடி, அஃதாவது, 42 இஞ்சு நீளம், 6 இஞ்சு அகலம், ¼ இஞ்சு அல்லது அதினும் சிறிது குறைந்த கனமுள்ள பலகைகள் நான்கு தேடிக்கொள்க. மேற்குறித்த சதுரத்துண்டுகளை இருதலையிலும் வைத்து, நான்குபுறமும் நான்கு நீளப் பலகைகளையும் வைத்து, மூடிய பெட்டியுருவாகச், சிறிய ஆணிகளைக் கடாவி, அமைத்துக்கொள்க. செமீகளும், மிமீகளும் வரையிட்டுக் காட்டப்பட்ட மீத்தர் அளவைக்கோல் ஒன்றினைப் பெட்டியின் மேற்புறத்தில் ஒரு பக்கமாக அமைத்துக்கொள்க. இரண்டு இஞ்சு நீளமும், ஓரிஞ்சுச் சமமுக்கோண முகமு முடைய நான்கு மரத்துண்டுகளைச் செம்மையாகச் சீவியெடுத்துக்கொள்க. இவற்றை மெட்டு எனபோம். மெட்டுகளின் முக்கோண முகத்தினை இரண்டு சமகூறுசெய்யும் வரிகளை முகத்திடையே வரைந்துகொள்க. இவை நரம்பு நிற்குமிடத்தினை மீத்தர் அளவைக் கோலிற் காட்டுதற் கியன்றன. மெட்டுகள் அளவைக்கோலினை அணைந்துநிற்க,

அவற்றினமேல் நிற்பதாக ஒரு தந்தியும், அவற்றுக்கு வெளியே நிற்பதாக ஒரு தந்தியு மாக, இரண்டு எஃகுத் தந்திகளை அமைத்துக்கொள்க தந்திகளை வலித்தல், மெலித் தல் செய்தற்கியன்ற முறுக்காணிகளிரண்டினைப் பெட்டியின் ஒரு தலையிலும், அவற் றைத் துவக்குதற்கமைந்த புரியாணிகள் (screw) இரண்டினை மற்றத் தலையிலும் அமைத்து, அவற்றிலே தந்திகளைக் கட்டிக்கொள்க இவ்வளவோடு கூட்டையாழ் அமைகின்றது

இசைக்கோலிலுள்ள சுவரத்தினை நரம்பிலே தோற்றுவிக்கும் முறையினைத் தருவாம் எஃகுத் தந்திகளையும், இசை பிறப்பிக்குஞ் சாதியொருமைபற்றி, 'நரம்பு' என வழங்குவாம். 'சுரம்', 'சுவரம்' என்றிக்காலத்தில் வழங்குவதனை, 'இசை நரம்பு' எனவும், 'நரம்பு' எனவும் பண்டையோர் வழங்கினர் கூட்டையாழிலே ஒரு நரம்பினைக் கட்டி, அதன்கீழ் 50 செமீக்குக் குறையாத இடைவெளியமைய இரண்டு மெட்டுகளை வைத்துக்கொள்க நரம்பினை ஓரளவிற்கு வலித்து, மெட்டு களினிடையேயுள்ள பகுதியைத் தெறித்துச், செவியினால் இசையினை ஓர்க அதனி லும்பார்க்கச் சற்று ஏற்றமாக இசைக்கின்ற இசைக்கோலினை எடுத்து, நரம்பினை வலித்தோ, மெட்டுகளிடையேயுள்ள இடைவெளியைக் குறைத்தோ, நரம்பினின் றெழும் நாதத்தினை உயர்த்தி, இசைக்கோலிசையோடு ஒன்றும்படி செவியினு லோர்ந்து செய்தற்கு முயல்க அதன்பின், Λ வடிவமான கடிதத் துண்டுகள் இரண்டினை வெட்டி எடுத்துக்கொள்க அவற்றுள் ஒன்றினை, நரம்பின் இடை வெளிநடுவிலே தங்கும்படி வைத்து, இசைக்கோலை உள்ளங்கையிலே தட்டி, இசை யெழுப்புக நரம்பு மெட்டினைச்சேர்ந்து நிற்குமிடத்திலே இசைக்கோலினடியினை அழுத்திப் பிடித்துக்கொள்க இசைக்கோலும், நரம்பும் இசை யொருமித்து நிற் பின், நரம்பிலே இசை யியங்கக், கடிதத்துண்டு குதித்துக் கூத்தாடும்; சிலபோது வீசி யெறியவும் படும் இசையொன்றுவிடின், இது நிகழாது இசைக்கோலை இசைகூட்டி, முன்போல நரம்பின்மீது மெட்டிலே யழுத்திக்கொண்டு, மற்ற மெட்டினைத்தள்ளி, இடைவெளியினைக் கூட்டுதல், குறைத்தலினாலே நரம்பினை மெலித்தல், வலித்தல் செய்க இசையொன்றுமிடம் வந்தபோது, காகிதத்துண்டு முன்கூறியபடி இயக்கமெய்தும் இதனால இசைக்கோலினிசையும் நரம்பினிசை யும் ஒன்றும்படி செய்துகொள்க கருவியினாலே இதனைத் துணிந்து கொண்டபின், காதினாலுங்கேட்டு ஒப்புமையைக் கண்டுகொள்க மெட்டுகளின் இடைவெளி யினைக் கருவியிலே நுணுகி நோக்கிக் குறித்துக்கொள்க ஒரு மெட்டின் நடுவரை 12 செமீ 8 மிமீ யிலும், மற்ற மெட்டின் நடுவரை 67 செமீ 5 மிமீ யிலும் நிற்ப தாக வைத்துக்கொள்வோம் 10 மிமீ ஒரு செமீ யாதலின், அவை தம்மைப் புள்ளி யின்பின் செமீ யோடு சேர்த்து, 67 5 செமீ, 12 8 செமீ என்று எழுதிக்கொள்ள லாம். சிறிய எண்ணைப் பெரிய எண்ணினின்று கழிக்கக் கிடைப்பது 54 7 செமீ இது மெட்டுகளின் இடைவெளியினைக் குறிக்கும், இதுவே நரம்பின் இயக்க நீளம். இதனை ஒருபடியாகவும், இசையினைத்தந்த இசைக்கோலின் அசைவெண்ணினை மற் றொரு படியாகவும் எழுதிக்கொள்க. நாம் பயன்படுத்தியது E என்னும் கோலாயின், அதன் அசைவெண் 320 ஆகும் நரம்பின் முடுக்கத்தை வேறுபடுத்தாது, மெட்

டினை இயக்கி, நீளத்தினை மாத்திரம் வேறுபடுத்தி, D இசைகோலோடும், அப்படியே F இசைகோலோடும இசையொன்றி நிறகும நரம்பு நீளஙகளைக் கண்டறிக. இவை, முறையே, 60 8 செமீ யும், 51 3 செமீ யும் எனக காணகினறேம் D, F இசைக் கோல்களின் அசைவெண்கள், முறையே, 288, 341 3 என முனனமே கூறினும். ஒவ்வோர் இசைக்கோலோடும் ஒன்றிய நரமபு நீளததினை அவவவ் விசைககோலின் அசைவெண்ணினுற் பெருக்கிப் பெற்ற பேற்றினைப் பேறு எனவைதது, அதனையும் பிறவற்றையும் பின்வருமாறு அடடவணைப் படுத்துவாம.

இசைக்கோல	அசைவெண	நரமபு நீளம	பேறு
D	288	60 8	17510
E	320	54 7	17504
F	341·3	51 3	17509
		சராசரிப பேறு	17508

[பதின் புள்ளிபெற்ற எணகளைப் பெருக்கும முறையினையும், சராசரி காணும் முறையினையும் ஒழிபியலிலே கண்டுதெளிக.] சராசரிப் பேறறினையும தனிப் பேறு களையும் நோக்கும்போது, அவறறிடையேயுள்ள வேறுபாடு ஆயிரததிலொன்று அள வாகவும் இல்லையென்பது காணப்படுகின்றது ஆதலினாலே, பேறு நிலையானது எனத் தீர்ப்பிடலாம

அளநது கண்ட முடிபுகளிலிருந்து பிறிதொரு இசைக்கோலுக்குரிய நரமபு நீளத்தினைக் கணக்கிட்டறிந்துகொள்ளும வழியினை ஆராயவாம. C இசைபேசும் நரம்பின் நீளம எவவளவென்பது வினு. C இசைககுரிய அசைவெண 256. இந்த எண்ணினாலே சராசரிப்பேறாகிய 17508 இனைப் பிரிக்கக் கிடைப்பது 68 4 இதுவே நரம்பின் நீளம இங்கு நரம்பின் முடுககம் வேறுபடாதிருக்கிறது அது வேறுபடின், கணக்கு வேறுபடும் என்பது வெளிப்படை.

முடுககம் வேறுபடாதிருக்க, C நரம்பிறகு நாம கணிததுக்கணட நரம்பு நீளத் தின் செமபாலிலே (அரைவாசியிலே) என்ன அசைவெணணுடைய சுவரம பிறக்கு மெனறு கணித்தறிவோமாக. C நரம்பின் நீளமென நாம கணிததுக்கண்ட 68 4 செமீயின் செமபால 34 2 செமீயாகும். இந்த எணணினாலே சராசரிப்பேறறினைப் பிரிக்கக் கிடைப்பது 512. நரம்பு நீளத்தின செம்பாலிலே பிறக்கும சுவரம் இரட் டிப்பான அசைவெண்ணினை யுடையதெனக் காண்கின்றேம சமன்தானததின் முதற்சுவரம் 256 அசைவெண்ணுடையதெனில, வலிவுததானம் எனப் பண்டை யோர் வழங்கிய உச்சத்தானத்தின் முதறசுவரம் 512 என்னும் அசைவெண்ணினை யுடையதாகும் என்பது பெறறப்படுகின்றது. நரமபு நீளம இரட்டிக்க, அசைவெண் பாதியாகும, நரம்பு நீளம் பாதியாக அசைவெண இரட்டிக்கும். நரம்பு நீளம் மூன்றிலொருகூறாக அசைவெண் மும்மடங்கு ஆகும்.

2. நரம்பின் முதலிசையைச் சார்ந்து தோற்றும் வழியிசைகள்.

மேலே நாம் சுட்டிய பொருளினைத தெளிவு செய்யும்பொருட்டு, வங்கியத் திலே இசை தோற்றும் முறையினைப் பின்னும் ஒருசிறிது ஆராய்வாம். வஙகியம் என்னும குழல்கள இருவகைய ஒன்று தூமபுமுகம அடைககப்பட்டு வளைவாய் திறந்திருக்கும வஙகியம, மறறொன்று இருவாயுந திறந்திருக்கும் வஙகியம். இரண் டிலும் எழும வழிச்சுவரங்கள் வெவ்வேறியலபின. குழலிசையினுலே பவனத்தி லெழும் முழு அலையினைப் பின்வருமாறு குறியீடு செய்யலாம்.



5. தூமபுமுகம அடைககபபட்ட வஙகியஙகள



6 இருவாயுந திறநத வஙகியஙகள

முதலிலும நடுவிலும் கடையிலும் (அ, இ, உ என்னுமிடங்களிலே) பவனம் அமுக்கமுற்றும், காறகூற்றிலும, முக்காற் கூற்றிலும் (ஆ, ஈ என்னுமிடங்களிலே) அகற்சியடைந்தும் நிறகிறது மூடப்பட்ட தூம்பு முகத்திலே அமுககமும், திறந்த ளைவாயிலே அகற்சியும் இயைந்து நிற்குமாதலின், இருவகை வங்கியத்திலும் எழும் லையுருவங்கள் படத்திற் காட்டியபடி அமைவன. குற்றெழுத்து நிற்குமிடங்களில் முக்கம், நெட்டெழுத்து நிற்குமிடங்களில் அகற்சி. ஈரெழுததுகளினிடைவெளி, லையின் காற்கூறு.

அடியார்க்குநல்லார் உரையிலே குறிப்பிட்ட குழற்கருவியிலே, உழைநரம்பு 480 என்னும் அசைவெண்ணுடையதெனக் கண்டாம் இதனோடு இயைபுடைய தாரநரம்பு 320 என்னும் அசைவெண்ணுடையதாதல் வேண்டுமென்பதைப் பின்னர் வருவனவற்றாற் றெளிந்துகொள்ளலாம். மேலே குறித்த அசைவெண்ணிரண்டினை யும் முறையே பெற்ற B, E என்னும் இசைக்கோல்கள் பூதநூற்சாலைகளிற் கிடைப் பன. செவியினாலே இசையினை ஓர்ந்துணரவல்லாருக்கு இவற்றின் உதவி வேண்டிய தில்லை. வல்லாரல்லாதார்க்கும் பயன்படும் வண்ணமே கருவியினைக் குறிப்பிடு கின்றோம்.

இசைக்கோல் இரண்டினையுந் தனித்தனி யிசைத்து இசையினை ஓர்வதோடு கூட, அவைதம்மை ஒருங்கிசைத்து இசையியைந்து நிற்பதை யுணர்ந்துகொள்க. இயைபு எதனாலாயிற்றென்பதைச் சிறிது சிந்திப்போமாக தார நரம்பிசை தரும் E இசைக்கோல், ஒரு செக்கண்டுக்கு 320 அலைகளைப் பரப்புகிறது. உழை நரம் பிசையினைத்தரும் B இசைக்கோல், ஒரு செக்கண்டுக்கு 480 அலைகளைப் பரப்புகிறது. முன்னையதன் இரண்டு அலைகள் பின்னையதன் மூன்றலைகளோடு ஒன்றிநிற்கின்றன. இவ்வாறு ஒன்றிய உருவமுடைய அலைகள், ஒரு செக்கண்டுக்கு 160 ஆக அமைந்து நிற்கின்றன. இது மெலிவுத்தானத்துத் தாரநரம்பின் இசையாகும். அஃதன்றியும், இவ்வியைபு செவிக்கு இனிமையினைத் தருகிறது இதற்கு ஒரு தனி நீர்மையுண்டு. அந்நீர்மையினைச் செவிக்கருவியாக ஓர்தலே கிளையியைபாக நரம்புகளைப் பிறப்பிக்கும் வழியாகும்.

கட்டளையாழினை யெடுத்து, நாம் இவ்வியலின் முதற்பிரிவிலே காட்டிய முறை யாக, ஒரு நரம்பின்கீழ் இரு மெட்டுகளை அமைத்து, நரம்பினை முடுக்கி, ஒரு மெட் டினைத் தள்ளித், தாரநரம்பின் இசையைப் பிறப்பித்துக்கொள்க அதன்பின், முடுக் கத்தை வேறுபடுத்தாது, நரம்பின் நீளத்தை மூன்றி லிருகூறாக்கி, மெட்டுகளை அமைத் துக்கொள்க. அஃதாவது, தாரமிசைத்த நரம்பின் நீளம் 81 செமீயாகவிருந்தால், மெட்டினைத் தள்ளி, நீளத்தை 54 செமீ ஆக்கிக்கொள்க நரம்பைத் தெறித்து, அது உழைநரம்பிசைப்பதைச் செவியினாற் கேட்பதோடுகூட, இசைக்கோலோடும் ஒப் பிட்டு அறிந்துகொள்க. உழைநரம்பு நீளத்தின் மூன்றி லிருகூறாகிய 36 செமீ நீள மான நரம்பிலே குரலிசை தோற்றும். இந்நீளம், முதலில் நின்ற தாரநரம்பு நீளத் தின் செம்பாலாகிய $40\frac{1}{2}$ செமீயினின்றும் குறைந்ததாதலின், 36 செமீயிற் பிறப்பது மேற்றானத்துக் குரலாகும். இதன் இரட்டியாகிய 72 செமீயிலே சமன்தானத்துக் குரல் பிறக்கும். மெட்டுகளை அகலவைத்து, நரம்பு நீளத்தினை 72 செமீயாக்கி, நரம் பினைத் தெறித்துக், குரலிசையினைக் கேட்டுணர்வதோடு, அது உழை இசைக் கோலோடு இயைந்து நிற்றலையும் நோக்குக கட்டளையாழின் இரண்டாவது நரம் பிலும் உழையைத் தோற்றுவித்து, அதன்பின், முறைப்படி குரலைத் தோற்றுவித்துக் கொள்க. முதல் நரம்பில் மெட்டுகளை நெருக்கி, நரம்பு நீளம் 72 இன் மூன்றிலிரு கூறாகிய 48 ஆகும்படி செய்துகொள்க இதில், இளியிசை கேட்கும். இரண்டாம் நரம்பிலுள்ள குரலினோடு இளியியைபுற்று நிற்ப, இரு நரம்புகளையும் ஒருங்கு தெறித்து ஓர்ந்துகொள்க. பின்பு, இரண்டாம் நரம்பிலும் இளியிசையைத் தோற்று

ந்ததுக்கொள்க 48 இன மூன்றி லிருகூருகிய 32 இலே மேற்ருனத்துத் துத்தம்
றக்குமாதலின், 32 இன் இரட்டியாகிய 64 செமீ நரம்பு நீளமாகும்படி மெட்டுகளை
மைததுத், துததவிசையினைக கேட்டு, அது இளியோடு இயைந்து நிற்பதையும்
ரநதுகொளக

ஐநது நரம்புகளும், மேற்ருனததுத் தாரமும பின் வருமாறு அமைந்து நின்
ன ·

தா	கு	து	உ	இ	தா
81	72	64	54	48	$40\frac{1}{2}$

ரமபு நீளங்களை முதனரமபின் நரமபு நீளத்திஞலே பிரிக்கக் கிடைப்பன, அவ்வந
ரம்புக்குரிய நரம்பு நீளவிகிதவெண்களாம். அவை வருமாறு

$\frac{81}{81}$ $\frac{72}{81}$ $\frac{64}{81}$ $\frac{54}{81}$ $\frac{48}{81}$ $\frac{40\frac{1}{2}}{81}$

பாதுசசினை நீக்கிப், பின்னங்களைச சுருக்கும் முறையினை, ஒழிபியலிலே, 'எண்ண
ளவை' என்னும் பிரிவினுட் காணக. அவ்வாறு செய்யக்கிடைப்பன.

1 $\frac{8}{9}$ $\frac{64}{81}$ $\frac{2}{3}$ $\frac{16}{27}$ $\frac{1}{2}$

ரமபு நீளததிற சுருங்க, அசைவெண பெருகுமென முன்னர்க குறிப்பிட்டாம ஆத
லிஞலே, நரம்புநீள விகிதங்களின தலைப்பின்கீழ்ப் பின்னங்கள் அசைவெண் விகிதங்
ளாம். அவையாவன

1 $\frac{9}{8}$ $\frac{81}{64}$ $\frac{3}{2}$ $\frac{27}{16}$ 2

இவ்வசைவெண் விகிதஙகளெல்லாம் முதனரம்பினை நோக்கியன. அடுததுவரும்
இருநரம்புகளுக்கிடையேயுளள அசைவெண் விகிதத்தினைக கணிப்பதற்குப், பின்
ரதை நிறுத்தி, முன்னதாற பிரிக்கவேணடும

$\frac{9}{8}\div 1=\frac{9}{8}$, $\frac{81}{64}\div\frac{9}{8}=\frac{9}{8}$, $\frac{3}{2}-\frac{81}{64}=\frac{32}{27}$, $\frac{27}{16}\div\frac{3}{2}=\frac{9}{8}$, $2-\frac{27}{16}=\frac{32}{27}$

பின்னவெண்களின் பிரிததல முறையினை, ஒழிபியலிலே, 'எண்ணலளவை' என்னும்
பிரிவினுட காணக மேலேகண்ட முடிபுகளைத் திரட்டிவைக்கக கிடைப்பது,

$\frac{9}{8}$ $\frac{9}{8}$ $\frac{32}{27}$ $\frac{9}{8}$ $\frac{32}{27}$

தாரநரம்பின் அசைவெணணினை $\frac{9}{8}$ இஞற் பெருக்க, அடுத்து நிறகும குரல நரம்பின்
அசைவெண் கிடைக்கும் $320\times\frac{9}{8}=360$ குரலநரம்பின் அசைவெண 360 எனக்
கண்டாம் இதனை $\frac{9}{8}$ இஞற் பெருக்க, அடுத்து நிற்கும துத்தநரம்பின் அசைவெண்
ணுகிய $360\times\frac{9}{8}=405$ கிடைக்கும். இதனை $\frac{32}{27}$ இஞற் பெருக்க, அடுத்து நிற்கும்
கைகிளை நரம்பின் அசைவெணணுகிய $405\times\frac{32}{27}=480$ கிடைக்கும் இதனை $\frac{9}{8}$ இஞற்
பெருக்க, இளிநரம்பின் அசைவெண்ணுகிய $480\times\frac{9}{8}=540$ கிடைக்கும். இதனை
$\frac{32}{27}$ இஞற பெருகக, மேறருனததுத் தாரநரம்பின் அசைவெண்ணுகிய $540\times\frac{32}{27}=640$
கிடைககும்

பெற்ற அசைவெண்களை முறையாக நிறுத்துவாம்.

தாரம	குரல்	துத்தம	உழை	இளி	தாரம
320	360	405	480	540	640

குரல்நரம்பு ஒரு செக்கண்டுக்கு *360* அலைகளையும், துததநரமபு *405* அலைகளையும், உழைநரம்பு *480* அலைகளையும், இளிநரம்பு *540* அலைகளையும் தோற்றுவிககும் எனக் கண்டாம். ஓசையின் வேகம் ஒரு செக்கண்டுககு *1080* அடி (*12960* இஞ்சு) என வைத்து, ஒவவொரு நரமபிறகுமமைநத அலை நீளததினைக் கணிததறிவாம். *12960* ஐ அலைத்தொகையிறை பிரிககக் கிடைப்பது அலைநீளமாகும. $12960 \div 320 = 40\frac{1}{2}$, $12960 \div 360 = 36$, $12960 \div 405 = 32$, $12960 \div 480 = 27$, $12960 \div 540 = 24$, $12960 - 640 = 20\frac{1}{4}$ பெற்ற அலைநீளஙகளை நிரலாக வைப்பாம்.

தாரம	குரல	துததம	உழை	இளி	தாரம	
$40\frac{1}{2}$	36	32	27	24	$20\frac{1}{4}$	இஞசு

இனி, விளரி, கைக்கிளை யென்னும இரண்டு இசைநரமபுகளையும் பிறபபிப்பாம் மேலே கட்டளையாழில *64* செமீ நரம்பு நீளமாகத் துத்தவிசை பிறநதது. இதனுட் பிறககும விளரியிசை *64* இன மூன்றி லிருகூறுகிய $42\frac{2}{3}$ செமீ நீளமான நரம்பிலே பிறக்கும இந்நீளமமைய மெட்டுகளை வைதது, விளரியைப பிறபபிதது, அது துத்தத்தோடு இயைபுறறு நிறறலை நோககுக $42\frac{2}{3}$ இன் மூன்றி லிருகூறுகிய $28\frac{4}{9}$ இல் விளரியுட் பிறக்கும கைககிளை தோற்றும் இது இரண்டாந்தானததில் நிற்கிறது. முதற்றானத்திலே காணபதறகு, எண்ணினை இரடடிககவேணடும். இரட்டித்துப் பெறறது $56\frac{8}{9}$ செமீயாகும். இந்நீளமமைய மெட்டுகளை வைத்துக, கைககிளை யிசையைககேடடு, அது விளரியோடு இயைபுறறு நிறறலை நோககுக $56\frac{8}{9}$ செமீ என்னும் நரம்பு நீளம் *64* ககும் *54* ககும இடைநின்றதாதலின, கைககிளை நரமபு துததத்திற்கும் உழைக்கும இடையில் நினறதென அறிகின்றும் $42\frac{2}{3}$ செமீ என்னும நரம்பு நீளம் *48* க்கும் $40\frac{1}{2}$ ககும் இடைநின்றதாதலின, விளரி நரம்பு இளிககும் மேற்றனத்துத் தாரத்துககும் இடைநின்றதென அறிகினறும் கைக்கிளை, விளரிகளின் நரம்பு நீளங்களைத தாரவிசையின் நரமபு நீளததினுலே தனித்தனி பிரிதது, இவற்றின் நரம்பு நீளவிகிதவெண்களைக் காணலாம்.

$$\frac{56\frac{8}{9}}{81} = \frac{512}{729}\,; \quad \frac{42\frac{2}{3}}{81} = \frac{128}{243}$$

நரம்புநீள விகிதவெண்களின் தலைகீழெண்கள அசைவெண் விகிதங்களாம் அங்ஙனமாதலின், கைக்கிளையின் அசைவெண் விகிதம் $\frac{729}{512}$, விளரியின் அசைவெண் விகிதம $\frac{243}{128}$ எனப் பெறுகின்றும் இவவெண்களைத தாரநரமபின் அசைவெணணுகிய *320* ஆற் பெருககி, இவ்விரு நரமபுகளின அசைவெண்களைப் பெறலாம

$$320 \times \frac{729}{512} = 455\frac{5}{8}, \quad 320 \times \frac{243}{128} = 607\frac{1}{2}$$

இவற்றினின்று பிறக்கும் ஒலியலைகளின் நீளத்தையும் மற்ற நரம்புகளுக்குச் செய்ததுபோலவே கணித்தறியலாம்.

$$12960 \div 455\tfrac{5}{8} = 28\tfrac{4}{9}; \quad 12960 \div 607\tfrac{1}{2} = 21\tfrac{1}{3}$$

ஏழிசை நரம்புகளின நரம்பு நீளங்கள், நரம்புநீள விகிதங்கள், அசைவெண் விகிதங்கள், அசைவெண்கள், அலைநீளங்கள் என்னுமிவற்றை அட்டவணைப்படுத்துவாம

நரம்பின் பெயர்	தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
நரம்பின் நீளம்	81	72	64	$56\frac{8}{9}$	54	48	$42\frac{2}{3}$	$40\frac{1}{2}$
நரம்பின் நீளவிகிதம்	1	$\frac{8}{9}$	$\frac{64}{81}$	$\frac{512}{729}$	$\frac{2}{3}$	$\frac{16}{27}$	$\frac{128}{243}$	$\frac{1}{2}$
அசைவெண் விகிதம்	1	$\frac{9}{8}$	$\frac{81}{64}$	$\frac{729}{512}$	$\frac{3}{2}$	$\frac{27}{16}$	$\frac{243}{128}$	2
அசைவெண்	320	360	405	$455\frac{5}{8}$	480	540	$607\frac{1}{2}$	640
அலை நீளம் (இஞ்சு)	$40\frac{1}{2}$	36	32	$28\frac{4}{9}$	27	24	$21\frac{1}{3}$	$20\frac{1}{4}$

இவற்றுள்ளே, நரம்பின் நீளம் தாரநரம்பிற்குக்கொண்ட நரம்புநீளத்திற்கியைய வேறுபடும் நீர்மையது. தனித்தனி பெற்ற நரம்புநீளங்களைத் தாரநரம்பின் நீளத்தினாற் பிரித்துப் பெறுகின்ற நரம்புநீள விகிதங்கள் நிலைபேறுடையன. இவற்றின் தலைகீழெண்களாகிய அசைவெண் விகிதங்களும் நிலைபேறுடையன. அசைவெண் விகிதங்களைத் தாரநரம்பின் அசைவெண்ணினாலே தனித்தனி பெருக்கிப் பெற்ற அசைவெண்கள், தாரநரம்பு வேறுபடுங்கால் வேறுபடும் நீர்மைய. அலைநீளங்களும் அத்தகையனவே.

அடுத்துவரும் இருநரம்புகளின் இடையே யமைந்த அசைவெண் விகிதத்தினைக் கணிப்பதற்குப், பின்னதை நிறுத்தி, முன்னதாற் பிரிக்கவேண்டும். இச்செய்கைமுறையிலே, அசைவெண் விகிதத்தையோ அசைவெண்ணையோ வைத்துக் கணிக்கலாம். பெற்ற முடிபு இடைவிகிதம் (interval) எனப்படும். அசைவெண் விகிதத்தை வைத்துச் செய்யும் முறையினை மேலே காட்டினும். அசைவெண்ணினை வைத்துச் செய்யும் முறை இதுவாகும்: 'குரலுக்குந் துத்தத்துக்கு மிடையே யமைந்த இடைவிகிதம் யாது?' என்பது வினா.

$$\frac{\text{துத்தத்தினசைவெண்}}{\text{குரலினசைவெண்}} = \frac{405}{360} = \frac{9}{8}$$ முன் பெற்ற முடிபும் இதுவே.

பின் வரும் வினாக்களுக்கு விடை காண்பாம்.

துத்தத்திற்கும் கைக்கிளைக்குமிடையே யமைந்த இடைவிகிதம் யாது?

$$\frac{455\frac{5}{8}}{405} = \frac{3645}{405 \times 8} = \frac{9}{8}$$

இவற்றினின்று பிறக்கும் ஓலியலைகளின் நீளத்தையும் மற்ற நரம்புகளுக்குச் செய்ததுபோலவே கணித்தறியலாம.

$$12960 \div 455\tfrac{5}{8} = 28\tfrac{4}{9}; \quad 12960 \div 607\tfrac{1}{2} = 21\tfrac{1}{3}$$

ஏழிசை நரம்புகளின் நரமபு நீளஙகள், நரம்புநீள விகிதங்கள், அசைவெண் விகிதஙகள், அசைவெண்கள், அலைநீளஙகள் என்னுமிவற்றை அட்டவணைப்படுத்துவாம்

நரமபின் பெயா	தாரம	குரல்	துத்தம	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம
நரபின நீளம்	81	72	64	$56\frac{8}{9}$	54	48	$42\frac{2}{3}$	$40\frac{1}{2}$
நரமபின் நீளவிகிதம	1	$\frac{8}{9}$	$\frac{64}{81}$	$\frac{512}{729}$	$\frac{2}{3}$	$\frac{16}{27}$	$\frac{128}{243}$	$\frac{1}{2}$
அசைவெண விகிதம	1	$\frac{9}{8}$	$\frac{81}{64}$	$\frac{729}{512}$	$\frac{3}{2}$	$\frac{27}{16}$	$\frac{243}{128}$	2
அசைவெண	320	360	405	$455\frac{5}{8}$	480	540	$607\frac{1}{2}$	640
அலை நீளம (இஞ்சு)	$40\frac{1}{2}$	36	32	$28\frac{4}{9}$	27	24	$21\frac{1}{3}$	$20\frac{1}{4}$

இவற்றுள்ளே, நரம்பின் நீளம தாரநரம்பிறகுக்கொண்ட நரம்புநீளத்திற்கியைய வேறுபடும நீர்மையது தனித்தனி பெறற நரம்புநீளங்களைத் தாரநரம்பின் நீளத்தினுற் பிரித்துப் பெறுகின்ற நரம்புநீள விகிதங்கள் நிலைபேறுடையன. இவற்றின் தலைகீழெண்களாகிய அசைவெண விகிதங்களும் நிலைபேறுடையன அசைவெண் விகிதங்களைத தாரநரமபின் அசைவெண்ணினுலே தனித்தனி பெருக்கிப் பெற்ற அசைவெண்களை, தாரநரம்பு வேறுபடுங்கால் வேறுபடும நீர்மைய. அலை நீளங்களும் அத்தகையனவே

அடுத்துவரும இருநரம்புகளின் இடையே யமைந்த அசைவெண் விகிதத்தினைக் கணிப்பதற்குப், பின்னதை நிறுத்தி, முன்னதாற் பிரிக்கவேண்டும் இச் செய்கைமுறையிலே, அசைவெண் விகிததததையோ அசைவெண்ணையோ வைத்துக் கணிக்கலாம். பெறற முடிபு இடைவிகிதம் (interval) எனப்படும் அசைவெண் விகிதத்தை வைததுச் செய்யும முறையினை மேலே காட்டினும் அசைவெண்ணினை வைத்துச் செய்யும் முறை இதுவாகும் 'குரலுக்குந் துத்தத்துக்கு மிடையே யமைந்த இடைவிகிதம் யாது?' என்பது வினு

$$\frac{\text{துத்ததினசைவெண்}}{\text{குரலினசைவெண்}} = \frac{405}{360} = \frac{9}{8}$$ முன் பெற்ற முடிபும் இதுவே.

பின் வரும் வினுக்களுக்கு விடை காண்பாம்.

துத்தத்திற்கும் கைக்கிளைக்குமிடையே யமைந்த இடைவிகிதம் யாது?

$$\frac{455\frac{5}{8}}{405} = \frac{3645}{405 \times 8} = \frac{9}{8}$$

கைக்கிளைக்கும் உழைக்கு மிடையே யமைந்த இடைவிகிதம் யாது ?

$$\frac{480}{455\frac{5}{8}} = \frac{480 \times 8}{3645} = \frac{256}{243}$$

இளிக்கும் விளரிக்கும் இடையே யமைந்த இடைவிகிதம் யாது ?

$$\frac{607\frac{1}{2}}{540} = \frac{9}{8}$$

விளரிக்கும் தாரத்துக்கும் இடையே யமைந்த இடைவிகிதம் யாது ?

$$\frac{640}{607\frac{1}{2}} = \frac{256}{243}$$

குரலுக்கும் துத்தத்திற்கும் இடையே யமைந்த இடைவிகிதம், குரலிசையின் இறுதி தொடங்கித், துத்தவிசையின் இறுதி வரையும் இயைந்துநின்றதாதலின், அதனைத் துத்தவிசைக்கு உரியதாகக்கொள்வது மரபு

தாரம்	குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{256}{243}$	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{256}{243}$

என ஏழிசைக்கும் இடைவிகிதங்கள் அமைந்தன. தாரம், குரல், துத்தம், உழை, இளி என்னும் ஐந்து நரம்புமே வழங்கிவந்த காலத்திலே, இவ்விடைவிகிதங்கள் எவ்வாறு நின்றனவென்பதை மேலே காட்டிறும் அதனை இங்குக் குறிப்பிடுவாம்

தாரம்	குரல்	துத்தம்	உழை	இளி	தாரம்
	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{32}{27}$	$\frac{9}{8}$	$\frac{32}{27}$

உழைநரம்பு முன்னுளிற் கொண்டிருந்த இடைவிகிதமாகிய $\frac{32}{27}$, பின்னுளிற் கைக்கிளையும் உழையும் பெற்ற இடைவிகிதங்களைப் பெருக்கிப் பெற்ற பேறுகும் $\frac{32}{27} = \frac{9}{8} \times \frac{256}{243}$ அவ்வாறே, முன்னுளில் தாரநரம்பு கொண்டிருந்த $\frac{32}{27}$ என்னும் இடைவிகிதத்திலே, தாரமானது விளரிக்கு $\frac{9}{8}$ என்னும் விகிதத்தைக் கொடுத்துவிட்டுத், தான் $\frac{256}{243}$ என்னும் இடைவிகிதத்தோடு நின்றது எனக் காண்கின்றோம்

சமன்தாரத்தின் அசைவெண் 320, வலிவுத்தாரத்தின் அசைவெண் 640. இவற்றிடையே யமைந்த இடைவிகிதம் $\frac{640}{320} = 2$ இது ஏழிசைகளின் இடைவிகிதங்களைப் பெருக்கிப் பெற்ற பேறுகும் இதனைத் தானத்திடைவிகிதம் என்பாம

$$\frac{9}{8} \times \frac{9}{8} \times \frac{9}{8} \times \frac{256}{243} \times \frac{9}{8} \times \frac{9}{8} \times \frac{256}{243} = 2$$

ஐந்திசைகள் மாத்திரம் இருந்த காலத்திலும்

$$\frac{9}{8} \times \frac{9}{8} \times \frac{32}{27} \times \frac{9}{8} \times \frac{32}{27} = 2$$

எனத் தானத்திடைவிகிதம் வேறுபடாதிருந்தது

நம் முன்னோர் கையாண்ட அலகெண் முறையினை இப்பொழுது ஆராய்வாம். $\frac{9}{8}$ என்னும் இடைவிகிதத்தினை 4 அலகு என வைத்தார்கள்.

$\frac{256}{243}$ என்னும் விகிதம் 1 அலகு எனக் கொள்ளப்பட்டது. அங்ஙனமாதலின், தாரம் முதல் தார மீருக நின்ற எட்டு நரம்பினிடையே யமைந்த இடைவிகிதங்களேழும்,

4+4+4+1+4+4+1=22 என நின்றன.

இத்தகைய நரமபுநிரல் **தாரக்கிரமம்** எனப்பட்டது

இனித், தாரககிரமத்திலே, தாரம்முதற் ருரமீருகியஎட்டு நரமபுகளும் எய்தி நின்ற அலகு நிலைகள் இவையென ஆராய்வாம் அலகு நிலையினை இக்காலத்தார் சுருதிததானம் என்பர். தொடக்கததிலுளள தாரம் 0 இடத்திலும், முடிவுத்தாரம் 22 இலும் நின்றன குரல் 4 இல் நினறது; துத்தம் அதன்மேல் 4 பெறுதலின், 8 இல் நின்றது, கைக்கிளை அதன்மேல் 4 பெறுதலின், 12 இல் நின்றது, உழை அதன்மேல் 1 பெறுதலின, 13 இல் நின்றது, இளி அதன்மேல 4 பெறுதலின், 17 இல் நின்றது, விளரி அதன்மேல் 4 பெறுதலின், 21 இல் நின்றது; தாரம் அதன் மேல் 1 பெறுதலின், 22 இல நின்றது, இவையே தாரககிரமத்தில் நரம்புகள் நின்ற இடங்கள். மேற்ருனததில் நரம்புகள் நின்ற நிலையினைக் காணபதற்கு ஒவ்வொன்றுககும் 22 கூட்டிக காணக

	தா	கு	து	கை	உ	இ	வி
முதறறுனம	0	4	8	12	13	17	21
இரணடாநதானம	22	26	30	34	35	39	43

தொடங்குமிடமாகிய 0 இல தாரம் நிற்றலின், அதன் கிளையாகிய உழை 13 இல நின்றது உழையின் கிளையாகிய குரல 13+13=26 இல் நின்றது; இது மேற்ருனத்து நிலை 26 இல் 22 ஐக் கழிததுப பெறுகின்ற 4 முதற்ருனத்திற் குரல் நின்றவிடமாகும் குரலினுள்ளே தோன்றும இளி 4+13=17 இல் நின்றது. இளியினுள்ளே தோன்றும் துத்தம் 17+13=30 இல நின்றது. அங்ஙனமாதலின், முதற்ருனத்திலே 30−22=8 இல நின்றது துததததினுள்ளே தோன்றும் விளரி 8+13=21 இல் நின்றது விளரியுட் டோன்றும கைக்கிளை 21+13=34 இல நின்றது அஙஙனமாதலின், முதற்ருனததிலே 34−22=12 இல் நின்றது

பாணன, சகோடயாழிலே, பதினைகு நரம்புகளைக் கடடி, இவற்றைத் தாரம் முதல் விளரி யீருக இரு தானததிலே இசை கூட்ட விரும்புகிருனென்று வைத்துக் கொள்வோம் தாரததிற்கு இசை கூட்டி, அதனேடு இயைபுற்று நிற்கும்படி, ஐந்தாம நரம்பாகிய உழைக்கு இசை கூடடுகிருன். ஐநதாம் நரம்பிறகு ஐந்தாம் நரம்பாகிய ஒன்பதாம் நரம்பு உழைக்குக் கிளையாக இயைந்து நிற்கும் குரலநரமபாகும். உழையோடு இயையும்படி, குரலுக்கு இசை கூட்டுகிருன். ஒன்பதாம் நரம்பாகிய குரலிசையோடு ஒன்ற இரண்டாம நரம்பாகிய குரலுக்கு இசை கூட்டுகிருன். இரண்டாம நரம்பிறகு ஐந்தாம நரம்பாகிய ஆரும் நரம்பிலே குரலுக்குக் கிளையாகிய

இளி நிற்கிறது. குரலோடு இயைபுற இளிநரம்பிற்கு இசை கூட்டுகிறான். ஆறாம் நரம்பிற்கு ஐந்தாம் நரம்பாகிய பத்தாம் நரம்பிலே துத்தம் நிற்கிறது இளியோடு இயைபுறத் துத்தத்திற்கு இசை கூட்டுகிறான். பத்தாம் நரம்பாகிய துத்தத்தோடு ஒன்றும்படி, மூன்றாம் நரம்பாகிய துத்தத்துக்கு இசை இட்டுகிறான். மூன்றாம் நரம்பிற்கு ஐந்தாம் நரம்பாகிய ஏழாம் நரம்பிலே விளரி நிற்கிறது. துத்தத்தோடு இயையும்படி, விளரிக்கு இசை கூட்டுகிறான் ஏழாம் நரம்பிற்கு ஐந்தாம் நரம்பாகிய பதினோராம் நரம்பிலே விளரிக்குக் கிளையாகிய கைக்கிளை நிற்கிறது விளரியோடு இயையும்படி, கைக்கிளைக்கு இசை கூட்டுகிறான். பதினோராம் நரம்பாகிய கைக்கிளையோ டொன்றும்படி, நான்காம் நரம்பாகிய கைக்கிளைக்கு இசை கூட்டுகிறான் இதன் மேல், ஐந்தாம் நரம்பாகிய உழையோடு ஒன்றும்படி, பன்னிரண்டாம் நரம்பாகிய உழைக்கும், ஆறாம் நரம்பாகிய இளியோ டொன்றும்படி, பதின்மூன்றாம் நரம்பாகிய இளிக்கும், ஏழாம் நரம்பாகிய விளரியோ டொன்றும்படி, பதினான்காம் நரம்பாகிய விளரிக்கும் இசை கூட்டி முடிக்கிறான். இங்கு 'இயைபு' என்றது ஷட்ஜ பஞ்சம சம்வாதித்வம் என இக்காலத்தார் வழங்கும் கிளையியைபினை 'ஒன்றல' என்றது இரு தானத்திலும் ஒரே இசைநரம்பினை இசைத்து, இசை யொற்றுமையினை ஓர்தலை.

4. கிளையியைபினாற் பிறக்கும் பதினோரிசைநிலைகள் ; நட்பியைபு ; நட்பியைபினாற் பிறக்கும் பதினோரிசைநிலைகள் ; மேனாட்டில் வழங்கும் விளரிக்கிரமம் ; சுருதிவீணை.

தாரம் முதற் கைக்கிளை யிறுவாக நரம்புகள் பிறந்த முறையிலே அவைதம்மை நிறுத்தி, நரம்புகளின் அசைவெண் விகிதங்களையும், அலகு நிலைகளையும் உடன் வைப்போமாக.

நரம்பு	அலகுநிலை	அசைவெண் விகிதம்
தாரம்	0	1
உழை	13	$\frac{3}{2}$
குரல்	4	$\frac{9}{8}$
இளி	17	$\frac{27}{16}$
துத்தம்	8	$\frac{81}{64}$
விளரி	21	$\frac{243}{128}$
கைக்கிளை	12	$\frac{729}{512}$

அலகுநிலைக்கு 13 கூட்டுமிடத்து, அசைவெண் விகிதம் $\frac{3}{2}$ இனாற் பெருக்கப்படுகிறது. அலகு நிலையிலே தானத்தலகு நிலையாகிய 22 கழிபடுமிடத்து, அசைவெண் விகிதம் தானத்திடை விகிதமாகிய இரண்டினாற் பிரிபடுகின்றது

கிளையின்கிளை கிளையிருகோடு; கிளையின்கிளையின்கிளை கிளைமுக்கோடு என் றிவ்வாறு பெயர் பெறுவ.

நரம்பு	அலகுநிலை	அசைவெண்விகிதம்
நின்றநரம்பு	0	1
கிளைநரம்பு	13	$\frac{3}{2}$
கிளையிருகோடு	$\begin{cases} 26 \\ 26-22=4 \end{cases}$	$\frac{3}{2}\times\frac{3}{2}=\frac{9}{4}$ $\frac{9}{4}—2=\frac{9}{8}$
கிளைமுககோடு	$4+13=17$	$\frac{9}{8}\times\frac{3}{2}=\frac{27}{16}$
கிளைநாற்கோடு	$\begin{cases} 17+13=30 \\ 30-22=8 \end{cases}$	$\frac{27}{16}\times\frac{3}{2}=\frac{81}{32}$ $\frac{81}{32}\div2=\frac{81}{64}$
கிளையைங்கோடு	$8+13=21$	$\frac{81}{64}\times\frac{3}{2}=\frac{243}{128}$
கிளையறுகோடு	$21+13=34$ $34-22=12$	$\frac{243}{128}\times\frac{3}{2}=\frac{729}{256}$ $\frac{729}{256}-2=\frac{729}{512}$

தாரததினின்று உழையும, உழையினின்று குரலும, குரலினின்று இளியும, இளியினின்று துததமும், துதததினின்று விளரியும, விளரியிளின்று கைக்கிளையும், கிளையிற பிறப்புமுறையாகத் தோன்றுதல கண்டாம கைககிளைககுக் கிளையாக என்ன பிறககுமெனபது வினு ? இளஙகோவடிகள அரஙகேறறுகாதையிற கூறிய படி, இளிககிரமததிலே 'வனமையிற கிடநத தார பாகமும, மென்மையிற கிடந்த குரலின் பாகமும, மெயககிளை நரம்பிற கைககிளை கொள்'ளுமு அஃதாவது, கைக் கிளையின் கிளைநரமபு தாரததுக்கும குரலுககும் இடையே நிற்கும 'தாரத்தாக்கம்' கூறுமிடததில், இப்பொருள் இன்னும தெளிவுபடும கணிதநூல் என்ன முடிவு தரு கிறதென்று பாாபபோம்

கிளையெழுகோடு	$\begin{cases} 12+13=25 \\ 25-22=3 \end{cases}$	$\frac{729}{512}\times\frac{3}{2}=\frac{2187}{1024}$ $\frac{2187}{1024}\div2=\frac{2187}{2048}$

3 எனபபடும அலகுநிலை தாரததிறகும குரலுக்கு மிடையே நிறகிறது. இசை நரமபு ஏழேயாதலின், இடை நிற்குமிது **அந்தரக்கோல்** எனப்பட்டது. அந்தரக் கோல ஐந்து ஆதலின் மேலும நான்குமுறை யுறழ்ந்து, நான்கு அந்தரக்கோலகளைப் பிறப்பிககலாம் அவற்றின் அலகுநிலைகளாவன.

கிளையெணகோடு	$3+13=16$
கிளையொன்பதின்கோடு	$\begin{cases} 16+13=29 \\ 29-22=7 \end{cases}$
கிளைபதின்கோடு	$7+13=20$
கிளைபதினோராங்கோடு	$\begin{cases} 20+13=33 \\ 33-22=11 \end{cases}$

அறுகோட்டுக்கும் எழுகோட்டுக்கும நாம மேலே பெற்ற அசைவெண்கள் உளங் கொள்ளுதற்கரிய பான்மையாக எண் பல்கிவிட்டன. மேற்செல்லுமுன், இவற் றைச் சுருக்குதற்கு ஒருவழி காணவேண்டும். எண் சுருங்கினுலும் மதிப்பு வேறு

ப்டுதல் கூடாது. இவ்வாறு செய்தற்கு அறுகோட்டு அசைவெண் விகிதத்தினை $\frac{32768}{32805}$ இனாற் பெருக்கவேண்டும். ஏன் இவ்வாறு செய்யவேண்டுமென்பதை ஒழிபியலிலே, இசைக்கணிதம் என்னும் பிரிவினுள்ளே தெளிவுபடுத்துவாம்.

$$\frac{729}{512} \times \frac{32768}{32805} = \frac{64}{45}$$

$\frac{64}{45}$ ஐ அறுகோடாக வைத்துப் பதினொருகோடு வரையும் பிறப்பிப்போமாக.

	அலகுநிலை	அசைவெண்விகிதம்
கிளையறுகோடு	12	$\frac{64}{45}$
கிளையெழுகோடு	$12+13=25$	$\frac{64}{45} \times \frac{3}{2} = \frac{32}{15}$
	$25-22=3$	$\frac{32}{15} \div 2 = \frac{16}{15}$
கிளையெண்கோடு	$3+13=16$	$\frac{16}{15} \times \frac{3}{2} = \frac{8}{5}$
கிளையொன்பதின்கோடு	$16+13=29$	$\frac{8}{5} \times \frac{3}{2} = \frac{12}{5}$
	$29-22=7$	$\frac{12}{5} \div 2 = \frac{6}{5}$
கிளைபதின்கோடு	$7+13=20$	$\frac{6}{5} \times \frac{3}{2} = \frac{9}{5}$
கிளைபதினொராங்கோடு	$20+13=33$	$\frac{9}{5} \times \frac{3}{2} = \frac{27}{10}$
	$33-22=11$	$\frac{27}{10} \div 2 = \frac{27}{20}$

ஏழு நரம்புகளின அலகுநிலைகளையும், ஐந்து அந்தரக்கோல்களின் அலகுநிலைகளையும் இருபடியாக நிரல்பட வைப்பாம்

நரம்புகள்	தா		கு		து		கை	உ		இ		வி
	0		4		8		12	13		17		21
அந்தரங்கள்		3		7		11			16		20	

மேற்றானத்துத் தாரத்தின் அலகுநிலையாகிய 22 இனையுஞ் சேர்த்து, அனைத்தையும ஒன்றாக எழுதி, அவைதமக்குரிய அசைவெண் விகிதங்களையும, நரம்பு விகிதங்களையும் ஒருங்குவைப்பாம

அலகு நிலைகள்	0	3	4	7	8	11	12	13	16	17	20	21	22
அசைவெண் விகிதங்கள்	1	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	$\frac{6}{5}$	$\frac{81}{64}$	$\frac{27}{20}$	$\frac{64}{45}$	$\frac{3}{2}$	$\frac{8}{5}$	$\frac{27}{16}$	$\frac{9}{5}$	$\frac{243}{128}$	2
நரம்பு நீள விகிதங்கள்	1	$\frac{15}{16}$	$\frac{8}{9}$	$\frac{5}{6}$	$\frac{64}{81}$	$\frac{20}{27}$	$\frac{45}{64}$	$\frac{2}{3}$	$\frac{5}{8}$	$\frac{16}{27}$	$\frac{5}{9}$	$\frac{128}{243}$	$\frac{1}{2}$

நின்ற நரம்பினை ஷட்ஜம் எனக்கொண்டால், மேலே கணித்துக்கண்ட நரம்பு நீள விகிதங்களுள, $\frac{15}{16}$ சுத்த ரிஷபமாகும, $\frac{8}{9}$ சதுசுருதி ரிஷபமாகும், $\frac{5}{6}$ சாதாரண காந்தாரமாகும், $\frac{64}{81}$ அந்தர காந்தாரமாகும், $\frac{20}{27}$ சுத்த மத்திமமாகும், $\frac{45}{64}$ பிரதி மத்திமமாகும, $\frac{2}{3}$ பஞ்சமமாகும, $\frac{5}{8}$ சுத்த தைவதமாகும, $\frac{16}{27}$ சதுசுருதி தைவதமாகும, $\frac{5}{9}$ கைசிகி நிஷாதமாகும, $\frac{128}{243}$ காகலி நிஷாதமாகும, $\frac{1}{2}$ மேற்றானத்து ஷட்ஜமாகும். அசைவெண் விகிதங்கள் நரம்பு நீள விகிதங்களின் தலைகீழெண்களாதலின், சுத்த ரிஷபம் $\frac{16}{15}$, சதுசுருதி ரிஷபம் $\frac{9}{8}$ ஆவன பிறவும இவ்வாறே பெறப்படுவ.

இந்த நரம்பு நிரலானது, நாம் பின்பு கூறப்போகின்ற பன்னிருபாலைகளிலே கன்னிப்பாலை யெனப்படும் இது முற்றிலும் கிளைநரம்புகளா லாயினமையின், இத னிடையே 11 ஆம் அலகாக நின்ற சுத்தமத்திமம் சிறிது அளவிற் கூடிநிற்கும். இஃதொழிந்த பதினொரு பாலைகளிலும் வரும் சுத்தமத்திமம் 9 ஆம் அலகாக $\frac{4}{3}$ என் னும் அசைவெண் விகிதமும, $\frac{3}{4}$ என்னும் நரமபு நீள விகிதமும் பெறறுவரும். இஃது இவவாறு வருதலைக காடடும்பொருட்டு, நரமபுகளின் நட்பியைபினை ஆராயப் புகு வாம் நட்பியைபினை இக்காலததார் ஷட்ஜமத்திம சமவாதிதவம் எனபா

தாரம முதல விளரியீருகக கடடப்படட பதினொறகோவையிலே, குரல, உழை, இளி, மேற்ருனததுக குரல என்னும் நான்கிளையும் எடுத்து, அவைதமது அலகுநிலை யெண்கள், அசைவெண் விகிதஙகளோடு வைப்போமாக எடுக்கப்படாத நரம்புகள் உடுப்புள்ளியாற காட்டப்படடன.

	குரல்	*	*	உழை	இளி	*	*	குரல்
அலகுநிலை	4			13	17			26
அசைவெண்விகிதம்	$\frac{9}{8}$			$\frac{3}{2}$	$\frac{27}{16}$			$\frac{9}{4}$

குரலிசைககும் உழையிசைக்கு மிடையே யியைந்த இடைவிகிதம $\frac{3}{2}\div\frac{9}{8}=\frac{4}{3}$; அலகெண் 9 இவவலகெண் துத்தம், கைககிளை, உழை யென்னும் மூனறின் அலகு களின் கூட்டுத் தொகையாகும் இளியிசைக்கும குரலிசைகக மிடையே யியைந்த இடைவிகிதம் $\frac{9}{4}\div\frac{27}{16}=\frac{4}{3}$, அலகெண 9 விளரி, தாரம், குரல் என்னும மூன்றின் அலகுகளின் கூடடுத் தொகையாகும் குரலிசைககும் இளியிசைக்கு மிடையே யியைந்த இடைவிகிதம் $\frac{27}{16}\div\frac{9}{8}=\frac{3}{2}$, அலகெண் 13 உழையிசைக்கும் குரலிசைக்கும் இடையேயியைநத இடைவிகிதம $\frac{9}{4}\div\frac{3}{2}=\frac{3}{2}$; அலகெண் 13

குரலுக்கு உழை நட்பு, உழைக்குக் குரல் கிளை, நட்பலகெண் 9; கிளையல கெண் 13, மொததம் 22 நட்பிடைவிகிதம $\frac{4}{3}$; கிளையிடைவிகிதம் $\frac{3}{2}$. பேறு $\frac{4}{3}\times\frac{3}{2}=2$ நட்புக் கிளை யலகெண்களின் மொத்தம் தான அலகெண்ணுகிய 22. நட் புக் கிளை யிடைவிகிதங்களின் பேறு தான இடைவிகிதமாகிய 2.

பதினொரு கோடு வரையும் நட்பு நரம்புகளைப் பிறப்பிப்பாம்

நரம்பு	அலகுநிலை	அசைவெண்விகிதம்
நின்ற நரம்பு	0	1
நட்பு நரம்பு	9	$\frac{4}{3}$
நடபிருகோடு	18	$\frac{4}{3}\times\frac{4}{3}=\frac{16}{9}$
நடபு முக்கோடு	$18+9=27$ $27-22=5$	$\frac{16}{9}\times\frac{4}{3}=\frac{64}{27}$ $\frac{64}{27}\div2=\frac{32}{27}$
நட்பு நாறகோடு	$5+9=14$	$\frac{32}{27}\times\frac{4}{3}=\frac{128}{81}$
நட்பு ஐங்கோடு	$14+9=23$ $23-22=1$	$\frac{128}{81}\times\frac{4}{3}=\frac{512}{243}$ $\frac{512}{243}\div2=\frac{256}{243}$
நட்பு அறுகோடு	$1+9=10$	$\frac{256}{243}\times\frac{4}{3}=\frac{1024}{729}$

முன்பு கிளையறுகோட்டினை $\frac{32768}{32805}$ இனால் பெருக்கினோம். கிளைநட்பியையினை நோக்கி, இங்கு அவ்வெண்ணினால் பிரிக்கவேண்டும். அஃதாவது, அதன் தலைகீழெண்ணினால் பெருக்கவேண்டும்—$\frac{1024}{729} \times \frac{32805}{32768} = \frac{45}{32}$ இவ்வெண்ணினை நட்புஅறுகோடாக வைத்து மேற்செல்லுவாம்.

நட்பு அறுகோடு	10	$\frac{45}{32}$
நட்பு எழுகோடு	$10+9=19$	$\frac{45}{32} \times \frac{4}{3} = \frac{15}{8}$
நட்பு எண்கோடு	$19+9=28$	$\frac{15}{8} \times \frac{4}{3} = \frac{5}{2}$
	$28-22=6$	$\frac{5}{2} — 2 = \frac{5}{4}$
நட்பு ஒன்பதின்கோடு	$6+9=15$	$\frac{5}{4} \times \frac{4}{3} = \frac{5}{3}$
நட்பு பதின்கோடு	$15+9=24$	$\frac{5}{3} \times \frac{4}{3} = \frac{20}{9}$
	$24-22=2$	$\frac{20}{9} — 2 = \frac{10}{9}$
நட்பு பதினோராங்கோடு	$2+9=11$	$\frac{10}{9} \times \frac{4}{3} = \frac{40}{27}$

முன்பு கிளையலகுகளுக்குச் செய்ததுபோல, நட்பலகுகளின் அலகுநிலைகள், அசைவெண் விகிதங்கள், நரம்புநீள விகிதங்க ளென்னு மிவற்றை அட்டவணைப்படுத்துவாம்

அலகுநிலைகள்	0	1	2	5	6	9	10	11	14	15	18	19	22
அசைவெண் விகிதங்கள்	1	$\frac{256}{243}$	$\frac{10}{9}$	$\frac{32}{27}$	$\frac{5}{4}$	$\frac{4}{3}$	$\frac{45}{32}$	$\frac{40}{27}$	$\frac{128}{81}$	$\frac{5}{3}$	$\frac{16}{9}$	$\frac{15}{8}$	2
நரம்புநீள விகிதங்கள்	1	$\frac{243}{256}$	$\frac{9}{10}$	$\frac{27}{32}$	$\frac{4}{5}$	$\frac{3}{4}$	$\frac{32}{45}$	$\frac{27}{40}$	$\frac{81}{128}$	$\frac{3}{5}$	$\frac{9}{16}$	$\frac{8}{15}$	$\frac{1}{2}$

நின்ற நரம்பினை ஷட்ஜம் எனக்கொண்டால், மேலே கணித்துக்கண்ட நரம்பு நீள விகிதங்களுள், $\frac{243}{256}$ சுத்த ரிஷபமாகும், $\frac{9}{10}$ சதுசுருதி ரிஷபமாகும், $\frac{27}{32}$ சாதாரண காந்தாரமாகும், $\frac{4}{5}$ அந்தர காந்தாரமாகும், $\frac{3}{4}$ சுத்த மத்திமமாகும், $\frac{32}{45}$ பிரதி மத்திமமாகும், $\frac{27}{40}$ பஞ்சமமாகும், $\frac{81}{128}$ சுத்த தைவதமாகும், $\frac{3}{5}$ சதுசுருதி தைவதமாகும், $\frac{9}{16}$ கைசிகி நிஷாதமாகும், $\frac{8}{15}$ காகலி நிஷாதமாகும் அசைவெண் விகிதங்கள், சுத்த ரிஷபம் $\frac{256}{243}$, சதுசுருதி ரிஷபம் $\frac{10}{9}$ ஆவன பிறவும் இவ்வாறே தலைகீழ் எண்களாகப் பெறப்படுவ

இந்த நரம்பு நிரலானது நாம் பின்னே கூறப்போகின்ற பன்னிரு பாலையிலே குரம்பப்பாலை எனப்படும் இது முற்றிலும் நட்பு நரம்புகளா லாயினமையின், இதனிடையே 11 ஆம் அலகாக நின்ற பஞ்சமம் சிறிது அளவிற் குறைந்து நிற்கும். இஃதொழிந்த பதினொரு பாலைகளிலும், பஞ்சமமானது 13 ஆம் அலகாக $\frac{3}{2}$ என்னும் அசைவெண் விகிதமும், $\frac{2}{3}$ என்னும் நரம்புநீள விகிதமும் பெற்றுவரும் ' இக்காலத்து வீணைக்கருவி செய்வோர், இப்பாலையினைக் கைக்கொண்டு, சுத்த ரிஷப, பஞ்சம, தைவதங்களை மாத்திரம் கன்னிப்பாலையிலிருந் தெடுத்துக்கொள்வார் அங்ஙனமாதலின்,

இக்காலத்து வீணைககருவிகளிலே, பன்னிரண்டு சுவர ஸ்தானங்களும் பின்னர்க் காட்டிய நரம்புநீள விகிதஙகளைப் பெற்றுவருவனவாம

ஷட்ஜம்	சுத்த ரிஷபம	சதுச்ருதி ரிஷபம.	சாதாரண காநதாரம்	அந்தர காந்தாரம	சுத்த மத்திமம்	பிரதி மத்திமம	பஞ்சமம்	சுத்த தைவதம்	சதுச்ருதி தைவதம்	கைசிகி நிஷாதம	காகலி நிஷாதம்	ஷட்ஜம்
1	$\frac{15}{16}$	$\frac{9}{10}$	$\frac{27}{32}$	$\frac{4}{5}$	$\frac{3}{4}$	$\frac{32}{45}$	$\frac{2}{3}$	$\frac{5}{8}$	$\frac{3}{5}$	$\frac{9}{16}$	$\frac{8}{15}$	$\frac{1}{2}$

இப்பொருளினைப், **பாலைத்திரிபியலிலே**, பன்னிருபாலை கூறுமிடத்து மீண்டும் ஆராய்வாம்

தனித்துக கிளையியைபாகப் பிறந்த கன்னிபபாலைககும, தனித்து நட்பியை பாகப் பிறந்த குமபப்பாலைககும இடையேயுளள தொடர்பினை இன்னும சிறிது ஆராய்தல கருதிக, கனனிப்பாலையை ஆரோகணமாகவும், கும்பபபாலையை அவரோகணமாகவும ஒருங்கு நிறுத்தி, அணை ந்துநிற்கும் அசைவெண் விகிதங்களைப் பெருககிப் பெறறபேறு, அலகுநிலையெண்களின் கூட்டுத்தொகை யென்னு மிவற்றைக் காண்பாம.

கன்னிப்பாலை ⟶

அலகுநிலைகள	0	3	4	7	8	11	12	13	16	17	20	21	22
அசைவெண் விகிதங்கள்	1	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	$\frac{6}{5}$	$\frac{81}{64}$	$\frac{27}{20}$	$\frac{64}{45}$	$\frac{3}{2}$	$\frac{8}{5}$	$\frac{27}{16}$	$\frac{9}{5}$	$\frac{243}{128}$	2
அசைவெண் விகிதங்கள்	2	$\frac{15}{8}$	$\frac{16}{9}$	$\frac{5}{3}$	$\frac{128}{81}$	$\frac{40}{27}$	$\frac{45}{32}$	$\frac{4}{3}$	$\frac{5}{4}$	$\frac{32}{27}$	$\frac{10}{9}$	$\frac{256}{243}$	1
அலகுநிலைகள்	22	19	18	15	14	11	10	9	6	5	2	1	0

⟵ கும்பப்பாலை

$1\times2=2$, $\frac{16}{15}\times\frac{15}{8}=2$, $\frac{9}{8}\times\frac{16}{9}=2$, $\frac{6}{5}\times\frac{5}{3}=2$; $\frac{81}{64}\times\frac{128}{81}=2$; $\frac{27}{20}\times\frac{40}{27}=2$; $\frac{64}{45}\times\frac{45}{32}=2$; $\frac{3}{2}\times\frac{4}{3}=2$; $\frac{8}{5}\times\frac{5}{4}=2$; $\frac{27}{16}\times\frac{32}{27}=2$; $\frac{9}{5}\times\frac{10}{9}=2$; $\frac{243}{128}\times\frac{256}{243}=2$; $2\times1=2$.

இரு பாலையிலும் அணைந்து நிற்கிற அசைவெண் விகிதங்களைப் பெருக்கிப் பெற்றபேறு தானத்திடைவிகிதமாகிய 2 என வருதல் காண்க.

0+22=22;   3+19=22;   4+18=22;   7+15=22;
8+14=22;   11+11=22,   12+10=22;   13+ 9=22;
16+ 6=22;   17+ 5=22;   20+ 2=22;   21+ 1=22

என நிற்றலின், இரு பாலையிலும் அணைந்து நிற்கிற அலகுநிலையெண்களின் கூட்டுத் தொகைகள் தானத்து அலகெண்ணாகிய 22 ஆதல் காண்க.

தானத்து அலகெண்ணாகிய 22 இரண்டு கூறாகப் பிரியும்போது, கிளை 11 உம், நட்பு 11 உம் ஆகவும், கி3—ந19, கி4—ந18, கி7—ந15, கி8—ந14, கி12—ந10, கி13—ந9, கி16—ந6, கி17—ந5, கி20—ந2, கி21—ந1 என்றிவ்வாறும் பிரிந்து நிற்கு மெனக் காண்கின்றோம்.

இனிச், சுருதிவீணையின் அமைப்பினை ஆராயவாம் இங்கு நாம் கிளையியை பினாற் பிறப்பித்த பதினொரிசைகளும், நட்பியைபினாற் பிறப்பித்த பதினொரிசைகளும் ஆகிய இருபத்திரண்டுமே, பழந்தமிழிசை மரபில் வழங்கிய இருபத்திரண்டு அலகு நிலைகள் (சுருதித் தானங்கள்) பன்னிரு பாலைகளை யுறழும்போது, இவை இயல்பாகத் தோன்றுதலைப், பாலைத்திரிபியலினுட் காணலாம் இவற்றைப் பயன்படுத்தும் முறை யும் அவ்வியலினுட் கூறப்படும் தொடங்குமிடமாகிய (0) வெற்றிலக்கம் இருபத் திரண்டு சுருதிகளுள் ஒன்றாகக் கருதப்படமாட்டாது மேற்றானத்துத் தொடங்கு மிடமாகிய 22 உம் அத்தகையதே. 11 (நட்பு)மெலிந்த பஞ்சமமாகவும், 11 (கிளை) வலிந்த மத்திமமாகவும் நிற்றலின், 11 என்னும் எண்பெற்ற சுருதி இருவேறு மதிப்புப்பெறும் பாலைகளிலே, முன்னையது 13 நிற்குமிடத்தில் வரும், பின்னையது 9 நிற்குமிடத்தில் வரும்

வீணைக்கருவியிலே மெட்டு வைக்கும் கணித முறையினை, ஓழிபியலிலே இசைக்கணிதம் என்னும் பிரிவிலே கூறுவாம் இருபத்திரண்டு சுருதிகளையும் எவ வாறு கருவியிலே நிறுத்திச், சுருதிவீணை அமைக்கலா மென்பதை இங்கு ஆராயவாம்.

நட்பியைபிற் பிறக்கும் பதினொரிசைநிலைக ளடங்கிய கும்பப்பாலையினையும், கிளையியைபிற் பிறக்கும் பதினொரிசைநிலைக ளடங்கிய கன்னிப்பாலையினையும் ஒருங்கு வைத்தால், இருபத்திரண்டு சுருதிகளும் பெறப்படுவன என்பதை அவற்றின் அலகு நிலைகள் காட்டுகின்றன.

கன்னிப்பாலை	0	3	4	7	8	11	12	13	16	17	20	21	22
கும்பப்பாலை	0	1	2	5	6	9	10	11	14	15	18	19	22

ஒரே அளவான இரண்டு தந்திகளுக்கு ஒரே ஆதார சுருதியாக இசை கூட்டி, இரு பாலைகளுக்கும் தனித்தனி ஏற்பட்ட கணக்கின்படி மெட்டுகளை வைத்தால், எல் லாச் சுருதிகளுந் தோற்றுவ வென்பது வெளிப்படை அங்ஙனமாயினும், வீணைத் தண்டத்திலே இருவேறு வகையாக மெட்டுகளமைந்து நிற்பது பொருத்தமாகாது. இனி, ஒரு தந்தியிலே எல்லாச் சுருதிகளையும் நிறுத்தினால், விரல் வைத்து வாசிக்கத்

தகக இடைவெளி யிராது. கன்னி, கும்பப் பாலைகளுக் கிடையே யுள்ள இயைபு நமக்கு மற்றொரு வழியைப் புலப்படுத்துகின்றது அந்த இயைபினைக காணுதற்குக், கிளை பன்னிரண்டாங் கோட்டினைத தோற்றுவிப்போமாக.

	அலகுநிலை	அசைவெண்விகிதம்
கிளை பதினோராஙகோடு	11	$\frac{27}{20}$
கிளை பன்னிரண்டாஙகோடு	11+13=24	$\frac{27}{20} \times \frac{3}{2} = \frac{81}{40}$
	24−22=2	$\frac{81}{40} \div 2 = \frac{81}{80}$

கிளை 2 இன அசைவெண் விகிதம் $\frac{81}{80}$; இதனை வடநூலார் பிரமாண சுருதி யென்பர். நடபியைபாகத தோன்றிய பதினோரிசைநிலைகளாகிய 1, 2, 5, 6, 9, 10 11, 14, 15, 18, 19 என்பவறறுககுக் கிளை 2 இனைத தனித்தனி கூட்டக கிடைக்கும் 3, 4, 7, 8, 11, 12, 13, 16, 17, 20, 21 கிளையியைபிற் றோன்றிய பதினோரிசை நிலையாதல் காண்க. நட்பிசை நிலைகளின் அசைவெண் விகிதங்களாகிய $\frac{256}{243}$, $\frac{10}{9}$, $\frac{32}{27}$, $\frac{5}{4}$, $\frac{4}{3}$, $\frac{45}{32}$, $\frac{40}{27}$, $\frac{128}{81}$, $\frac{5}{3}$, $\frac{16}{9}$, $\frac{15}{8}$ எனபவற்றைக கிளை 2 இன் அசைவெண் விகிதமாகிய $\frac{81}{80}$ இனால் தனிததனி பெருககக் கிடைப்பன ' $\frac{16}{15}$, $\frac{9}{8}$, $\frac{6}{5}$, $\frac{81}{64}$, $\frac{27}{20}$, $\frac{729}{512}$, $\frac{3}{2}$, $\frac{8}{5}$, $\frac{27}{16}$, $\frac{9}{5}$, $\frac{243}{128}$

கிளையறுகோட்டிலே, $\frac{729}{512}$ கருப் பதிலாக, $\frac{64}{45}$ நிற்கலாமென மேலே காட்டினும். அஙஙனமாதலின், நட்பிசை நிலைகளின் அசைவெண விகிதஙகளைப் பிரமாண சுருதியினாலே தனிததனி பெருக்கக கிடைப்பன, கிளையிசை நிலைகளின் அசைவெண் விகிதஙகளாமெனக கண்டாம் ஆதலினாலே, கும்பப்பாலையாக அமைநத மெட்டுகளின் மீது, ஷட்ஜமாக இசை கூட்டிய தந்தியிலே நட்பிசை நிலைகள பதினொன்றும் பிறக்குமெனபதும், ஷட்ஜததின்மேற் பிரமாண சுருதி ஏறறமாய் நிற்குந் தந்தியிலே கிளையிசை நிலைகள பதினொன்றும் பிறக்குமென்பதும் முடிபாகின்றது ஷட்ஜத்தின் மேற் பிரமாண சுருதி யேறி நிறகும்படி, இசை கூட்டுவது எப்படி என்ற வினா எழுகின்றது கும்பப்பாலையிலே, மெலிந்தபஞ்சமம் எனப்பட்ட 11 ஆம் அலகு நிற்கும் மெட்டிலே, கன்னிப்பாலையின் 13 ஆம அலகாகிய சுத்தபஞ்சமம நிற்றற்குரியது. இந்த மெட்டிலே, இரணடாங் தந்தியைப பிடிதது, முதல் தந்தியிலேயுளள ஷட்ஜத்துக்குப பஞசமம இரணடாந தந்தியிலே பேசும்படி செயக அப்படிச செய்தலினாலே, இரண்டாந தநதி ஷட்ஜததின்மேற பிரமாண சுருதி ஏற்றமாக நிற்கும். ஆதலினாலே, ஷட்ஜமொழிந்த பதினொரு மெட்டிலும் கிளையியைபாகத தோன்றிய பதினோரிசை நிலைகளும தோறறுவ மூன்றாந தநதியினை மந்தர ஷட்ஜமாகவும், நான்காந தந்தியினை மநதர ஷட்ஜததின்மேல பிரமாண சுருதி யேற்றியும இசை கூட்டுக. இவவாறமைநத வீணையே சுருதிவீணையாம்

கும்பப்பாலை 11 முதல் கன்னிப்பாலை 11 வரை, வாதி சம்வாதியாக இசைந்து நிறபதைக, கீழே காட்டியவண்ணம, இவ்விரணடாக இசைத்துக் காணலாம்.

(கும்பம) 11—2, 2—15, 15—6, 6—19, 19—10, 10—1, 1—14, 14—5, 5—18, 18—9, 9—0, 0—13, 13—4, 4—17, 17—8, 8—21, 21—12, 12—3, 3—16, 16—7, 7—20, 20—11 (கன்னி)

5. இசைநரம்புகளின் சிறறெல்லையும் பேரெல்லையும் ; ஏழு தானங்கள், முற்றிசையின் பிரிவுகள் பன்னிரு வீட்டிலும் இசைநரம்புகள் நிற்கும் முறை.

மெலிவுத்தானதது முதலிலே நிற்கும் தாரநரம்பினை 160 அசைவெண்ணுடையதென வைத்தால், சமன்தாரம 320 அசைவெண்ணுடையதாகும, வலிவுத தாரம் 640 அசைவெண பெறும் மெலிவில் நின்று கீழ்நோககிச சென்ருல், மெலிவின் மெலிவு 80 அசைவெண் பெறுமபெறும, மெலிவின் மெலிவின் மெலிவு 40 அசைவெண் பெறும் இதுவே ஓசையின் சிறறெலலை இதனகீழ ஓசை செவிககுப் புலப் படாது வலிவில நின்று மேனேக்கிச சென்ருல், வலிவின் வலிவு 1280 அசைவெண் பெறும் வலிவின வலிவின் வலிவு 2560 அசைவெண் பெறும் அதன்மேல, வலிவு நாறகோடு 5120 அசைவெண் பெறும். வலிவு ஐஙகோடு 10240 அசைவெண் பெறும இததானததின் ஈற்றிலே 20480 அசைவெண பெறும் தாரவிசை நிறகும. இது செவிககுப் புலப்படாது. 20000 அசைவெணணே ஓசையின பேரெல்லையென் பது விஞ்ஞான நூலோர் பொதுவாகக கைககொணட முடிபு

மெலிவில் மூன்றும், சமன் ஒன்றும், வலிவில் ஐநதுமாக, ஒன்பது தானங்கள் இருத்தல் கூடுமெனினும, ஈரெலலைகளிலும நினற தானஙகளை நீக்கிவிட்டு, எஞ்சிய ஏழு தானங்களையுமே பியானே (piano) முதலிய கருவிகளில வைப்பாாகள்

80	முதல்	160	வரை	மெலிவின மெலிவு
160	,,	320	,,	மெலிவு
320	,,	640	,,	சமன்
640	,,	1280	,,	வலிவு
1280	,,	2560	,,	வலிவின வலிவு
2560	,,	5120	,,	வலிவு முககோடு
5120	,,	10240	,,	வலிவு நாறகோடு

பேரியாழ்க் கருவியிலே, மேலே காட்டிய மெலிவு, சமன், வலிவு எனனும் மூன்று தானததிலுள்ள இருபத்தொரு நரமபுகள நின்றனவெனக் கொள்ளவேண்டும. சகோடயாழிலே, உழை, இளி, விளரி, தாரம என மெலிவில நான்கும, குரல, துததம், கைககிளை, உழை, இளி, விளரி, தாரம் எனச சமன்தானத்திலேழும், குரல், துததம, கைககிளையென வலிவில் மூன்றும நினறன "'மெலிவிறகெல்லை மந்தக் குரலே' என்பதனுன், உழைகுரலான மந்தமும, 'வலிவிறகெல்லை வனகைக்கிளையே' என்பதனுற், கைககிளை யிறுவான வலிவும" என அரும்பதவுரையாசிரியர், வேனிற் காதை யுரையினுள்ளே கூறுதலை நோக்குக.

சகோடயாழ நரம்புகள பெறும் அசைவெண்கள இவையாகும்

மெலிவு, நி240, ச270, ரி288, க320, சமன், ம360, ப405, த432, நி480, ச540, ரி576, க640; வலிவு, ம720, ப810, த864 இவை இளிக்கிரமமெனப்படும் ஷட்ஜககிராமத்தில் நின்றன. அந்தரக்கோல்கள பத்தும் பெறும் அசைவெண்களை, யாழுறுப்பியலின் இறுதியிலே காண்க.



A1. சகோட யாழ்

நரம்பு நீளங்களைக் கருதுமிடத்து, எந்த நரம்பும் சமன்தானத்திற் பெறும் நீளத்தின் இரட்டியை மெலிவுத்தானத்திலும், அதன் இரட்டியை மெலிவின் மெலிவிலும் பெற்று நிற்கும். அவ்வாறே, சமன்தானத்து நீளத்திற் செம்பாலினை வலிவுத் தானத்திலும், வாரத்தை வலிவின் வலிவிலும், வாரச்செம்பாலினை வலிவு முக்கோட்டிலும், வாரவாரத்தை வலிவு நாற்கோட்டிலும், பெற்றுநிற்கும் (செம்பால் $\frac{1}{2}$, வாரம் $\frac{1}{4}$, வாரச்செம்பால $\frac{1}{8}$, வாரவாரம $\frac{1}{16}$).

அலகு, மாத்திரை, சுருதி யென்பன ஒருபொருட் சொற்கள் இரண்டு இசைச் சுவரங்களினிடையே யமைந்த ஓசை வேறுபாட்டினை அளத்தற் கியைதலின், அலகு அப்பெயர்பெற்றது வாக்கியத்தின் இறுதியில் நிற்கும் நிறைவுபெற்ற நிறுத்தத்தினை முற்றுப்புள்ளி யென்கிறோம் அவ்வழக்குப்பற்றி, நான்கலகினை முற்றிசை யென்போம் நான்கலகு இருகூறுகப் பிரியும்போது, ஓரலகுபெற்ற ஒரு குற்றிசையாகவும், மூவலகுபெற்ற ஒரு பற்றிசையாகவும் பிரியும் இவற்றுட் குற்றிசை நட்பியைபிற் றோன்றியது, பற்றிசை கிளையியைபிற் றோன்றியது 'பற்றுப்பாடுகின்றுள' என ஆய்ச்சியர் குரவையினுள்ளும், 'ஒற்றுமைப்புடைமையிற் பற்றுவழிச் சோந்தி' எனப் புறஞ்சேரியிறுத்த காதை யுள்ளுங் கூறப்படுதலின், கிளையியைபினைப் 'பற்று' என வழங்குதல் காண்கின்றும்.

முற்றிசையின் இடைவிகிதம $\frac{9}{8}$
பற்றிசையின் இடைவிகிதம் $\frac{16}{15}$
குற்றிசையின் இடைவிகிதம $\frac{9}{8} \div \frac{16}{15} = \frac{135}{128}$
இது $\frac{256}{243}$ எனவும் நிற்கும்

குற்றிசைக்கு அமைந்த இருமதிப்பும செவிக்குப் புலப்படாத மிக நுண்ணிய வேறுபாடுடையனவாதலின், இரண்டினையுங் கொள்வது தவருகாது இவை இவ்வாறுதலை, ஒழிபியலிலே, இசைக்கணிதம் என்னும் பிரிவினுள்ளே தெளிவுபடுத்துவாம். மேற்செலலுமுன, கனளிபபாலையில அமைந்த பன்னிரண்டு இடைவிகிதங்களையுங் கணித்துக காணபாம் அலகுநிலைகளும, அசைவெண் விகிதங்களும் இவை·

0	3	4	7	8	11	12	13	16	17	20	21	22
1	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	$\frac{6}{5}$	$\frac{81}{64}$	$\frac{27}{20}$	$\frac{64}{45}$	$\frac{3}{2}$	$\frac{8}{5}$	$\frac{27}{16}$	$\frac{9}{5}$	$\frac{243}{128}$	$\frac{1}{2}$

$\frac{16}{15} — 1 = \frac{16}{15}$, $\frac{9}{8} \div \frac{16}{15} = \frac{135}{128}$; $\frac{6}{5} — \frac{9}{8} = \frac{16}{15}$; $\frac{81}{64} \div \frac{6}{5} = \frac{135}{128}$,
$\frac{27}{20} — \frac{81}{64} = \frac{16}{15}$, $\frac{64}{45} — \frac{27}{20} = \frac{256}{243}$, $\frac{3}{2} \div \frac{64}{45} = \frac{135}{128}$, $\frac{8}{5} \div \frac{3}{2} = \frac{16}{15}$;
$\frac{27}{16} — \frac{8}{5} = \frac{135}{128}$; $\frac{9}{5} — \frac{27}{16} = \frac{16}{15}$; $\frac{243}{128} \div \frac{9}{5} = \frac{135}{128}$, $\frac{1}{2} \div \frac{243}{128} = \frac{256}{243}$

இவ்வாறு கணித்துககண்ட பன்னிரணடு இடைவிகிதத்தின் பெருக்கம், தானத்து இடைவிகிதமாகிய 2 ஆதல் வேண்டும்.

$$\frac{16}{15} \times \frac{135}{128} \times \frac{16}{15} \times \frac{135}{128} \times \frac{16}{15} \times \frac{256}{243} \times \frac{135}{128} \times \frac{16}{15} \times \frac{135}{128} \times \frac{16}{15} \times \frac{135}{128} \times \frac{256}{243} = 2$$

பின்னலகெண்களிலிருந்து முன்னலகெண்களைக் கழித்தலினாலேற்படும் பன்னிரல கெண்களும், 3 1 3 1 3 1 1 3 1 3 1 1 என நின்றன. அவை அவ்வாறாதலின், ஐந்து பற்றிசையும், ஏழு குற்றிசையுங் கொண்டது ஒரு தானமெனவும், $\frac{16}{15}$ என்னும் இடைவிகிதத்தினையுடைய பற்றிசையானது 3 அலகுடையதெனப் பண்டைநாளி லிருந்த வடநாட்டுத தென்னாட்டு இசையாசிரியர்களாற் கொளளப்பட்டதெனவும் அறிகின்றோம். பற்றிசையாகிய $\frac{16}{15}$ இனை 2 சுருதியெனக்கொண்ட பிற்காலத்து நூலா சிரியர், அஃது அவ்வாறாயின், பற்றிசையைந்தின் மொத்த அலகு பத்தாகக், குற்றிசை யேழின் அலகு ஏழாகித, தானத்து மொத்த அலகு பதினேழாகும என்பதை மறந்து விட்டனர். பற்றிசையினை 3 சுருதியென்றே கொள்ளவேணடு மென்பது தெளிவா கின்றது அஃதன்றியும, முற்றிசை யிருகூறாகும்போது, பற்றிசையும் குற்றிசையு மாகப் பிரிதலின், குற்றிசையினை ஓரலகாகக் கொள்ளுமிடத்துப், பற்றிசை மூன் றலகாக வேண்டுமெனபதும் வெளிப்படை குற்றிசை, பற்றிசை என்னும் இரண் டின் சேர்க்கையினாலேதான் எல்லா இசை நிலைகளும் பிறக்கின்றன

பற்றிசையிலிருந்து குற்றிசையை நீக்கினால், எஞ்சி நிறபது எதுவெனப் பார்ப்போம்.

$\frac{16}{15} \div \frac{256}{243} = \frac{81}{80}$ என அமைதலின், எஞ்சிநிற்பது $\frac{81}{80}$ என்னும இடைவிகித முடைய கிளை 2 ஆகும இதனை வடநூலார் பிரமாண சுருதி யென்பார் நாம் விதி யிசை யென்பாம

குற்றிசை யிரண்டின் சேர்க்கையினாலாகியது, $\frac{10}{9}$ என்னும இடை விகிதத் தினையுடைய நட்பு 2 ஆகும். இதனை நெட்டிசையென வழங்குவாம் குற்றிசை $\frac{135}{128}$, $\frac{256}{243}$ என அளவு வேறுபடாத இரு மதிப்பினைப் பெறுமென்று முன்னர்க் கூறி னோம்.

$\frac{135}{128} \times \frac{256}{243} = \frac{10}{9}$ ஆதல காண்க

கிளை 2 ஆகிய விதியிசையினையும், நட்பு 2 ஆகிய நெட்டிசையினையும் ஒன்று சேர்க்கக் கிடைப்பது முற்றிசை.

$\frac{81}{80} \times \frac{10}{9} = \frac{9}{8}$

தாரக்கிரமம், குரற்கிரமம், இளிக்கிரமம எனப் பண்டையோர் கொண்ட மூன்று கிரமங்களிலும, மேனாட்டாருக்குரிய புதிய விளரிக்கிரமத்திலும் ஏழு இசை களும் அமைந்து நிற்கும் அமைப்பினை மேற்கணட முடிபுகளோடு ஒட்டி ஆராய்வோ மாக.

தாரக்கிரமம், 1 4 4 4 1 4 4 என நின்றதாதலின், அது ஐந்து முற்றிசைகளும் இரு குற்றிசைகளும் பெற்றது

குரற்கிரமம, 4 3 4 2 4 3 2 என நின்றதாதலின், அது முற்றிசை பற்றிசை முற்றிசை நெட்டிசை முற்றிசை பற்றிசை நெட்டிசை யென மூன்று முற்றிசையும், இரண்டு நெட்டிசையும், இரண்டு பற்றிசையும் பெற்று நின்றது

இளிக்கிரமம, 4 3 2 4 4 3 2 என நின்றதாதலின், அது முற்றிசை பற்றிசை நெட்டிசை முற்றிசை முற்றிசை பற்றிசை நெட்டிசை யென மூன்று முற்றிசையும், இரண்டு நெட்டிசையும, இரணடு பற்றிசையும பெற்று நின்றது

புதிய விளரிக்கிரமம, 4 2 3 4 2 4 3 என நினறதாதலின், அது முற்றிசை நெட்டிசை பற்றிசை முற்றிசை நெட்டிசை முற்றிசை பற்றிசை யென மூன்று முற றிசையும், இரண்டு நெட்டிசையும், இரணடு பற்றிசையும் பெற்று நின்றது

குரற்கிரமம், இளிக்கிரமம், விளரிக்கிரமம் என்னும் மூன்றும் ஒரே தொகையினவாகிய முற்றிசை, நெட்டிசை, பறறிசைகளைப் பெற்று நிற்பினும், நிரலவேறு பாட்டினாலே, இயலபு வேறுபட்டன நான்கு கிரமததுக்குமுரிய இருபத்தெட்டுப் பாலை (மூர்ச்சனை) களையும், குமபப்பாலையாக அமைந்த ஒரு நரம்பிலே காட்டலாமாதலினாலே, இவை தம்முள்ளே தொடர்புடையவென்பது பெறப்படும். இதனைப் பாலைத்திரிபியலினுளளே விரித்துக கூறுவாம் முறறிசை, Major Tone, நெட்டிசை, Minor Tone, பற்றிசை, Major Semitone, குறறிசை, Minor Semitone, Pythagorean Limma, விதியிசை, Comma, தானம, Octave, கிளை, Fifth, நட்பு, Fourth என்பது மேனாட்டு இசையாசிரியர் வழக்கு.

விதியிசையானது, சகோடயாழின் அநதரக்கோலொனறில் நிறகும் வீணை முதலிய கருவிகளிலே அது தனிநிற்பதிலலை குறறிசையினைப் பற்றிசையாககுதற்கும், நெட்டிசையினை முறறிசையாக்குதற்கும் விதியிசை பயன்படும்.

பன்னிரணடு சுவரததானங்களையும் பன்னிரண்டு வீடென வைப்பாம. சுருதிகள் இருபததிரண்டாதலின், ஷட்ஜவீடொழிந்த பதினொரு வீட்டிலும் இவ்விரண்டு சுருதிகள் நிற்கவேணடுமென்பது வெளிப்படை நட்பலகு ஒனறும், கிளையலகு ஒன்றும ஒவ்வொரு வீட்டிலும் நிற்குமென்பதை நமது ஆராய்ச்சி காட்டிற்று. பரத முனிவரும இவவாறே கொண்டார் ஒரு வீட்டினுள நிற்கும் ஈரிசைக்கும் இடை விகிதமாகிய விதியிசை அளவிற சிறியதாதலின், இசைவாணர் கமகததிலே ஒரு வீட்டில நின்ற ஈரிசையினையும பயன்படுத்துவர் வீணை நரம்பினை மெட்டிலழுத்தி யிழுப்பதனாலே, வைணிகாகள கும்பப்பாலை யலகுகளிலே கன்னிப்பாலை யலகுகளைத் தோறறுவிப்பார்கள

முதல் வீட்டிலே, சுத்தரிஷபம் பற்றிசையாகிய $\frac{16}{15}$ என்றுவது, குற்றிசையாகிய $\frac{256}{243}$ என்றுவது நிற்கலாம் இரண்டாம் வீட்டிலே, சதுசுருதிரிஷபம் முற்றிசை யாகிய $\frac{9}{8}$ என்றுவது, நெட்டிசையாகிய $\frac{10}{9}$ என்றுவது நிறகலாம் மூன்றும் வீட்டிலே, சாதாரண காநதாரம முற்றிசை பற்றிசைச் சேர்க்கையினாலாகிய $\frac{6}{5}$ என்றுவது, முறறிசை குறறிசைச் சேர்க்கையினாலாகிய $\frac{32}{27}$ என்றுவது நிற்கலாம் நான்காம் வீட்டிலே, அந்தர காநதாரம் இரு முறறிசையாகிய $\frac{81}{64}$ என்றுவது, முறறிசை நெட்டிசைச் சேர்க்கையினாலாகிய $\frac{5}{4}$ என்றுவது நிற்கலாம். ஐந்தாம் வீட்டிலே, இரு முற்றிசையும ஒரு பறறிசையுஞ் சோநத $\frac{27}{20}$ என்னும வலிந்தமத்திமமாவது, இரு முற்றிசையும் ஒரு குற்றிசையுஞ் சேர்ந்த $\frac{4}{3}$ என்னும் சுத்தமத்திமமாவது நிற்கலாம்.

ஆறும் வீட்டிலே, பிரதிமத்திமமானது மூன்று முற்றிசைகள் சேர்ந்த $\frac{729}{512}$ (இது $\frac{64}{45}$ என மேலே காட்டினும். அடுத்துவரும் வீடுகளிலும மூன்று முறறிசைக்கு இம்மதிப்பினையே கொள்க.) என்றுவது, இரு முற்றிசையும ஒரு நெட்டிசையுஞ் சேர்ந்த $\frac{45}{32}$ என்றுவது நிற்கலாம் ஏழாம் வீட்டிலே, மூனறு முறறிசையும் ஒரு குற்றிசையுஞ் சேர்நத $\frac{3}{2}$ என்னும் சுததபஞ்சமமாவது, இரு முற்றிசையும் ஒரு நெடடிசையும் ஒரு குற்றிசையுஞ் சேர்நத $\frac{40}{27}$ என்னும மெலிநதபஞசமமாவது நிறகலாம் வலிந்தமததிமமும் மெலிந்தபஞ்சமமும சாதாரண வீணைகளிலே வைக்கப்படாவிடினும, மூாச்சனைகளிலே தோன்றுகின்றன வென்பதைப் பாலைத்திரிபியலிலே காணலாம். எடடாம் வீட்டிலே, நான்கு முறறிசை சோநத $\frac{8}{5}$ என்றுவது, மூன்று முற்றிசையும் ஒரு நெட்டிசையும் சேர்ந்த $\frac{128}{81}$ எனறுவது சுததகைவதம நிறகலாம். ($\frac{64}{45} \times \frac{9}{8} = \frac{8}{5}$ எனவும், $\frac{64}{45} \times \frac{10}{9} = \frac{128}{81}$ எனவும் நிற்பதை நோக்குக) ஒன்பதாம வீடடிலே, நான்கு முற்றிசையும் ஒரு குற்றிசையும் சோநத $\frac{27}{16}$ என்றுவது, மூனறு முற்றிசையும் ஒரு நெடடிசையும் ஒரு குறறிசையுஞ் சேர்ந்த $\frac{5}{3}$ எனறுவது சதுசுருதி தைவதம நிறகலாம ($\frac{128}{81} \times \frac{135}{128} = \frac{5}{3}$ என்பதை நோக்குக) பத்தாம வீட்டிலே, ஐநது முறறிசை சேர்நத $\frac{9}{5}$ என்றுவது, நான்கு முறறிசையும் ஒரு நெட்டிசையுஞ் சேர்ந்த $\frac{16}{9}$ என்றுவது கைசிகி நிஷாதம் நிற்கலாம். பதினோராம் வீடடிலே, ஐந்து முற்றிசையும் ஒரு குறறிசையுஞ் சேர்ந்த $\frac{243}{128}$ என்றுவது, நான்கு முறறிசையும ஒரு நெடடிசையும ஒரு குறறிசையுஞ் சேர்ந்த $\frac{15}{8}$ என்றுவது காகலிநிஷாதம நிறகும் பன்னிரண்டாம வீடடிலே, ஐந்து முற்றிசையும ஒரு நெட்டிசையுஞ சேர்நத மேற்றுனதது ஷடஜம நிற்கும். இவற்றினைப் பயன்படுத்தும முறை பாலைததிரிபியலினுள்ளே தெளிவாகும.

இருபததிரண்டு இசைநிலைகளின் அலகெண்களையும் மேலே நாம காட்டிய இசை விபரங்களையும் அட்டவணைப்படுததுவாம

(முற்றிசை, மு. நெட்டிசை, நெ. பறறிசை, ப குற்றிசை, கு விதியிசை, வி)

வீடு	குமபம்: அலகு நிலை	இசை விபரம்	அசை வெண் விகிதம்	கனனி: அலகு நிலை	இசை விபரம்	அசை வெண் விகிதம்
முதல்	1	கு 1	$\frac{256}{243}$	3	ப 1	$\frac{16}{15}$
இரண்டாம்	2	நெ 1	$\frac{10}{9}$	4	மு 1	$\frac{9}{8}$
மூன்றும்	5	மு 1, கு 1	$\frac{32}{27}$	7	மு 1, ப 1	$\frac{6}{5}$
நான்காம்	6	மு 1, நெ 1	$\frac{5}{4}$	8	மு 2	$\frac{81}{64}$
ஐந்தாம்	9	மு 2, கு 1	$\frac{4}{3}$	11	மு 2, ப 1	$\frac{27}{20}$
ஆறும்	10	மு 2, நெ 1	$\frac{45}{32}$	12	மு 3	$\frac{64}{45}$

வீடு	அலகு நிலை	இசை விபரம்	அசை வெண் விகிதம்	அலகு நிலை	இசை விபரம்	அசை வெண் விகிதம்
ஏழாம்	11	மு 2, நெ 1, கு 1	$\frac{40}{27}$	13	மு 3, கு 1	$\frac{3}{2}$
எட்டாம்	14	மு 3, நெ 1	$\frac{128}{81}$	16	மு 4	$\frac{8}{5}$
ஒன்பதாம்	15	மு 3, நெ 1, கு 1	$\frac{5}{3}$	17	மு 4, கு 1	$\frac{27}{16}$
பத்தாம்	18	மு 4, நெ 1	$\frac{16}{9}$	20	மு 5	$\frac{9}{5}$
பதினோராம்	19	மு 4, நெ 1, கு 1	$\frac{15}{8}$	21	மு 5, கு 1	$\frac{243}{128}$



௬—பாலைத்திரிபியல்

1. பாலையென்னுஞ் சொல்வழக்கு ; ஏழ்பெரும்பாலை ; இசைநிலையிராசிகள்

தமிழ்ப் பொருளிலக்கணத்திலும, இசையிலககணத்திலும், பாலை யென்னும மொழி பலவேறு பொருள்களில் வழங்கப்படுதலின், முதலிலே, பொருட்டுய்மை செய்துகொள்ளுதல் இன்றியமையாததாகும்.

ஐந்திணையினுள்ளே, நடுவுநிலைததிணை பாலை எனப்படும் தொல்லாசிரியர் இதறகு நிலம் வகுத்திலா. பிற்காலத்தார் சுரமுஞ், சுரஞ்சார்ந்தவிடமும் பாலை யென்பர். நண்பகலும், வேனிலும் பாலைக்குரிய பொழுதுகள். பாலைக்கு உரிப் பொருள் பிரிவு. இவை இவ்வாறுதலைப் பொருளிலக்கண நூல்களுடகண்டு தெளிக.

இனி, இசைமரபினை நோக்குவாம. நாலவகைப் பெரும் பண்களுள் ஒன்று பாலையாழ எனபபடும். 'ஆயப்பாலை, சதுரப்பாலை, திரிகோணபபாலை, வட்டப்பாலை யெனப் பாலை நான்கு' என்னுமிடத்துப், பாலை மற்றொருபொருள் பெறுகிறது. 'ஏழ் பெரும்பாலை', 'பன்னிருபாலை' யென்னுமிடததுப், பாலை முற்குறிததவையனைததி னும் வேருகிய பிறிதொரு பொருளினைப் பெற்று நின்றது. இவை யாவும இந் நூலகத்து ஆராய்தற்குரிய.

முதலிலே, ஏழபெரும் பாலைகளை எடுத்துக்கொள்வாம் மூவகைக கிரமங் களிலே, முதலிற்றோன்றியது தாரக்கிரமம் இக்கிரமத்தில், இசை கூட்டப்படட பேரியாழ்ககருவியிலே, முதற் பதினுன்கு நரம்புகளின் அலகுநிலைகளாவன.

தா	கு	து	கை	உ	இ	வி	தா	கு	து	கை	உ	இ	வி
0	4	8	12	13	17	21	22	26	30	34	35	39	43

இவைதம்மைத் தாரம்முதற் றுரமீறுகக், குரல்முதற் குரலீறுக என்றிவ்வாறு எடுதது, ஏழுநிரலாக வைப்பாம்.

தா-தா	0	4	8	12	13	17	21	22
கு-கு	4	8	12	13	17	21	22	26
து-து	8	12	13	17	21	22	26	30
கை-கை	12	13	17	21	22	26	30	34
உ-உ	13	17	21	22	26	30	34	35
இ-இ	17	21	22	26	30	34	35	39
வி-வி	21	22	26	30	34	35	39	43

குரல் என்னுஞ் சொல அப்பெயருடைய நரம்பினைக் குறிப்பதோடு, முதலி லெடுக்கும் நரம்பினையுங் குறிக்குமெனப் பாயிரவியலினுள்ளே காட்டினும்.

மேலே தந்த ஏழு நிரலகளுள், முதல் நிரலிலே, தாரம் குரலாயது. இரண்டாம் நிரலிலே, குரல் குரலாயது. மூன்றும் நிரலிலே, துததம் குரலாயது நான்காம நிரலிலே, கைக்கிளை குரலாயது. ஐநதாம் நிரலிலே, உழை குரலாயது ஆறும் நிரலிலே, இளி குரலாயது ஏழாம் நிரலிலே, விளரி குரலாயது இம்முறையாக இவற்றைக் கருவியிலிசைத்து, ஏழு பாலைகளின் இசையமைதியைக கேடகலாம் முதலிலெடுக்கும் நரம்பினை இக்காலத்தார ஆதாரசுருதி யென்பார இதனைத் தொடங்குமிடமாகக்கொண்டு, ஏனைய நரமபுகளின் அலகுநிலைகளைக் காண்பதறகு, இதன் அலகுநிலை யெண்ணினை நிரலிலுளள அலகுநிலை யெண்கள ஒவவொன்றினின்றுங கழித்தெழுதவேண்டும் இவ்வாறு கழிதநெழுதுமிடத்திற கிடைப்பவற்றைச சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவையினுட் கூறபபட்ட பெயர்களைத் தந்து நிறுவுவாம்

தாரங்குரலாக மேறசெம்பாலை

0	4	8	12	13	17	21	22

குரல் குரலாகச் செமபாலை

0	4	8	9	13	17	18	22

துத்தங் குரலாகப் படுமலைப்பாலை

0	4	5	9	13	14	18	22

கைக்கிளை குரலாகச் செவவழிப்பாலை

0	1	5	9	10	14	18	22

உழை குரலாக அருமபாலை

0	4	8	9	13	17	21	22

இளி குரலாகக் கோடிப்பாலை

0	4	5	9	13	17	18	22

விளரி குரலாக விளரிப்பாலை

0	1	5	9	13	14	18	22

நரம்புகள பிறக்கும் முறையிலே, அஃதாவது, தாரம, உழை, குரல், இளி, துததம், விளரி, கைக்கிளை என்ற முறையிலே, ஏழு பாலைகளையும் வைக்கக் கிடைப்பது :

தாரம்–மேற்செம்பாலை	0	4	8	12	13	17	21	22
உழை–அரும்பாலை	0	4	8	9	13	17	21	22
குரல்–செம்பாலை	0	4	8	9	13	17	18	22
இளி–கோடிப்பாலை	0	4	5	9	13	17	18	22
துத்தம்–படுமலைப்பாலை	0	4	5	9	13	14	18	22
விளரி–விளரிப்பாலை	0	1	5	9	13	14	18	22
கைக்கிளை–செவ்வழிப்பாலை	0	1	5	9	10	14	18	22

தாரம் முதலாகிய மேற்செம்பாலையிலே யுள்ள அலகுநிலைகளெல்லாம், கிளை முறையிற் றோன்றியன அவை தோன்றிய முறை 0—13—4—17—8—21—12 ஆகும்

அரும்பாலையிலே 9 ஆம் அலகுநிலையும், செம்பாலையிலே 18 ஆம் அலகுநிலையும், கோடிப்பாலையிலே 5 ஆம் அலகுநிலையும், படுமலைப்பாலையிலே 14 ஆம் அலகுநிலையும், விளரிப்பாலையிலே 1 ஆம் அலகுநிலையும், செவ்வழிப்பாலையிலே 10 ஆம் அலகுநிலையும் தோன்றி நிலைபெறுகின்றன. இவை தோன்றிய முறை நட்புமுறையாமெனக் காண்கின்றோம் மேற்செம்பாலையிலுள்ள கிளையலகு ஆறினையும், எஞ்சிய ஆறு பாலைகளிலும் அடைவே ஒவ்வொன்றாகத் தோன்றிய நட்பலகு ஆறினையும் இருபடியாக வைப்பாம்

13— 4—17— 8—21—12

9—18— 5—14— 1—10

13+9=22, 4+18=22, 17+5=22, 8+14=22, 21+1=22, 12+10=22 என வருதலின், கிளையும் நட்பும் ஒன்றினையொன்று பற்றி நிற்பவென இசைநரம்பியலினுட் காட்டினும் தொடங்குமிடமாகிய 0 உம், முடியுமிடமாகிய 22 உம், கிளை, நட்பு என்னும் இருபகுதிக்கு முரிய

மேலே தோன்றிய நட்பலகுகளுள்ளே, 10 என்னும் அலகு, கிளையலகாகிய 12 இனின்றும் பெரிதும் வேறுபட்டதல்லவென இசைநரம்பியலினுட் கூறப்பட்டது. அஃதொழித்து எஞ்சிய 9—18—5—14—1 என்னும் ஐந்தும், ஐந்து அந்தரம் எனப் பட்டுத், தாரம் முதல விளரி யீறாகிய ஏழினோடுங் கூடிப், பன்னிரண்டு இராசி வீடுகளிலும் நிற்ப.

இளியிடபங் கற்கடக மாம்விளரி சிங்கம்
தளராத தார மதுவாம்—தளராக
குரல்கோற் றனுத்துத்தம் கும்பங் கிளையாம்
வரலா லுழைமீன மாம் எனவும்,

குரறுலை விற்றுத்தம் கைக்கிளையே கும்பம்
பரிய வுழைமீனம் பாவாய—அரிதாரம்
கொல்லே றிளிவிளரி கற்கடகங் கோப்பமைந்த
தொல்லே ழிசைநரம்பிற் காம் எனவும்,

அரும்பதவுரையாசிரியர், ஆய்ச்சியர் குரவையுரையிற் காட்டிய மேற்கோட் சூத்திரங் களினாலும்,

துலைநிலைக் குரலும் தனுநிலைத் துத்தமும்
நிலைபெறு கும்பத்து நேர்கைக் கிளையும்
மீனத் துழையும் விடைநிலத் திளியும்
மானக் கடகத்து மன்னிய விளரியும்
அரியிடைத் தாரமும் அணைவுறக் கொளலே

என அடியார்க்குநல்லார் காட்டிய மேற்கோட் சூத்திரத்தினாலும், தாரக்கிரமத்திலே,

இசைநிற்கு மிராசிகளிவையென அறிகின்றாம். குறிக்கப்படாத இராசிகளைந்திலும் அந்தரம் ஐந்தும் அடைவே நிற்பன: மேடம் அந்தரம், இடபம் இளி, மிதுனம் அந்தரம், கற்கடகம் விளரி, சிங்கம் தாரம், கன்னி அந்தரம், துலாம் குரல், விருச்சிகம் அந்தரம், தனு துத்தம், மகரம் அந்தரம், கும்பம் கைக்கிளை, மீனம் உழை என நின்றன.

இராசி வீடு	நரம்பு, அந்தரக்கோல்	அலகுநிலை யெண்	அலகெண்
மேடம்	அந்தரம்	14	1
இடபம்	இளி	17	3
மிதுனம்	அந்தரம்	18	1
கற்கடகம்	விளரி	21	3
சிங்கம்	தாரம்	0, 22	1
கன்னி	அந்தரம்	1	1
துலாம்	குரல்	4	3
விருச்சிகம்	அந்தரம்	5	1
தனு	துத்தம்	8	3
மகரம்	அந்தரம்	9	1
கும்பம்	கைக்கிளை	12	3
மீனம்	உழை	13	1

0 1 4 5 8 9 12 13 14 17 18 21 22

எனச் சிங்கத்திற் றொடங்கிச், சிங்கத்தில் முடிகின்ற நிரல் சிங்கப்பாலை யெனப்படும். பன்னிரு பாலையி லொன்றாகிய சிங்கப்பாலையினை முதன்முறையாகக் குறிப்பிடு கின்றோமாதலின், அஃது எவ்வாறு அமைந்தது என்பதைச் சற்று உற்றுநோக்குவோமாக.

கிளைமுறையாகத் தோன்றி, மேற்செம்பாலையாகின்ற ஏழினோடு, மேற்றானத் துத்த தொடக்கமாகிய 22 இனையுஞ் சேர்த்து, ஒருபடியாக வைத்து, நட்புமுறையாகத் தோன்றிய அந்தரம் ஐந்தினையும் எண்ணின்ற அடைவாக அவற்றிடையே நிறுத்தக் கிடைப்பது சிங்கப்பாலை

	தா		கு		து		கை	உ		இ	வி		தா
மேற்செம்பாலை	0		4		8		12	13		17	21		22
அந்தரம்		1		5		9			14			18	
சிங்கப்பாலை	0	1	4	5	8	9	12	13	14	17	18	21	22

சிங்கப்பாலையினை, வீணைத்தண்டத்திலே முறைப்படி யளந்து மெட்டுவைத்து நிறுத்தினால், அதனிடத்தே, நாம் மேலே குறிப்பிட்ட ஏழ் பெரும்பாலைகளையும் இசைக்கலாம். அவற்றுட், கைக்கிளை குரலாகிய செவ்வழிப்பாலையினை இசைத்தற்கு,

அப்பாலையினுள்ள வந்த 10 என்னும் அலகுநிலையிலே கிளையிற் பிறந்த 12 இனை வைத்தல்வேண்டும்.

மேற்றந்த அட்டவணையிலே, கடைசிப் பத்தியில் நின்ற எண்கள் அவ்வவ் விராசிகளுக்குரிய அலகெண்களாம். ஒவ்வொரு வீட்டிற்குமுரிய அலகெண்ணினைக் காண்பதற்கு, அவ்வீட்டின் அலகுநிலையெண்ணிலிருந்து, அதற்கு முந்திய வீட்டின் அலகுநிலையெண்ணினைக் கழித்தல்வேண்டும். மேடத்தின் அலகெண் $14-13=1$, இடபத்தின் அலகெண் $17-14=3$ பிறவு மிப்படியே.

அட்டவணையினை நோக்கும்போது, அந்தரம் ஐந்தும், சிங்கமும், மீனமும் ஒவ்வோர் அலகு பெறுதலையும், இடபம், கற்கடகம், துலாம், தனு, கும்பம் என்னும் ஐந்தும் மும்மூன்று அலகு பெறுதலையுங் காண்கின்றோம். $3 \times 5+7=22$ ஆதலின், மொத்த அலகு 22 ஆயின.

2 பன்னிருபாலை (பொதுவுருவங்கள்)

சிலப்பதிகாரம், வேனிற்காதையுரையிலே, 'அந்தரம் ஐந்தும் நீக்கி உறழ்ந்து கண்டுகொள்க' என்று ஏழ்பெரும்பாலை பிறக்குமுறை கூறப்பட்டதாதலின், அந்தரம் ஐந்துஞ் சோத்து உறழுமிடத்துப் பன்னிரு பாலையும் பிறக்குமென்பது தெளிவாகின்றது. ஏழ்பெரும் பாலைகளைப் பிறப்பித்தமுறையாகவே பன்னிருபாலைகளையும் பிறப்பிக்கலாம். அவ்வாறு செய்தற்குச், சிங்கப்பாலையினை இரண்டு தானத்தில் வைத்துக், கன்னிமுதற் கன்னியீறாகத், துலாமுதற் றுலாமீறாக, என்றிவ்வாறெடுத்து எழுதல்வேண்டும். முதற்றானத்து அலகுகளோடு 22ஐக் கூட்டி, இரண்டாந்தானத்து அலகுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

சிங்கம்	கன்னி	துலாம்	விருச்சிகம்	தனு	மகரம்	கும்பம்	மீனம்	மேடம்	இடபம்	மிதுனம்	கற்கடகம்
0	1	4	5	8	9	12	13	14	17	18	21
22	23	26	27	30	31	34	35	36	39	40	43

கன்னி	1	4	5	8	9	12	13	14	17	18	21	22	23
துலாம்	4	5	8	9	12	13	14	17	18	21	22	23	26
விருச்சிகம்	5	8	9	12	13	14	17	18	21	22	23	26	27
தனு	8	9	12	13	14	17	18	21	22	23	26	27	30
மகரம்	9	12	13	14	17	18	21	22	23	26	27	30	31
கும்பம்	12	13	14	17	18	21	22	23	26	27	30	31	34

மீனம்	13	14	17	18	21	22	23	26	27	30	31	34	35
மேடம்	14	17	18	21	22	23	26	27	30	31	34	35	36
இடபம்	17	18	21	22	23	26	27	30	31	34	35	36	39
மிதுனம்	18	21	22	23	26	27	30	31	34	35	36	39	40
கற்கடகம்	21	22	23	26	27	30	31	34	35	36	39	40	43

தொடங்குமிடத்தை வெற்றிலக்கம் (0) ஆக்குதற்பொருட்டு, முன்பு ஏழு பெரும் பாலைக்குஞ் செய்ததுபோல, ஒவ்வொரு நிரலிலும், முதலில்நின்ற அலகுநிலை யெண்ணினை அந்நிரலிலுள்ள எல்லா எண்களினின்றும் கழித்தல் வேண்டும். அவ்வாறு கழித்து நிறுத்தக் கிடைப்பன

சிங்கம்	0	1	4	5	8	9	12	13	14	17	18	21	22
கன்னி	0	3	4	7	8	11	12	13	16	17	20	21	22
துலாம்	0	1	4	5	8	9	10	13	14	17	18	19	22
விருச்சிகம்	0	3	4	7	8	9	12	13	16	17	18	21	22
தனு	0	1	4	5	6	9	10	13	14	15	18	19	22
மகரம்	0	3	4	5	8	9	12	13	14	17	18	21	22
கும்பம்	0	1	2	5	6	9	10	11	14	15	18	19	22
மீனம்	0	1	4	5	8	9	10	13	14	17	18	21	22
மேடம்	0	3	4	7	8	9	12	13	16	17	20	21	22
இடபம்	0	1	4	5	6	9	10	13	14	17	18	19	22
மிதுனம்	0	3	4	5	8	9	12	13	16	17	18	21	22
கற்கடகம்	0	1	2	5	6	9	10	13	14	15	18	19	22

இசைக்கிரமத்திலே பன்னிரு பாலையுந் தோற்றுதலை மேலுந் தெளிவு செய்யும் பொருட்டு, சிங்கப்பாலையின் இரண்டு தானங்களைப் பியானோ என்னும் மேனாட்டு இசைக்கருவியிலே வைப்போம்.



ஒரு தானத்தில் நரம்பு (வெள்ளைக்கட்டை) ஏழு, அந்தரம் (கறுப்புக்கட்டை) ஐந்து உள்ளன. மொத்தம் பன்னிரண்டு. இவை ஒவ்வொன்றும் முதலாய் வருத

வின், பாலை பன்னிரண்டாயின தாரககிரமததிலே, கன்னி, விருசசிக, மகர, மேட, மிதுனப்பாலைகள் ஐநதும் அந்தரத்தைதத தொடங்குமிடமாகக் கொண்டமையின், சிறுபாலை யெனப்படுவ வெளிளைக கட்டையிற் றொடங்கும் ஏழும் ஏழ்பெரும் பாலைகளாம்.

இசைநரமபியலிலே, சுருதிவீணைககு நாம அமைததுககொண்ட கிளைநரம்பு நிரலும, நட்புநரமபு நிரலும, பின்வருமாறு அமைநது நினறன

கிளை நிரல்	0	3	4	7	8	11	12	13	16	17	20	21	22
நட்பு நிரல	0	1	2	5	6	9	10	11	14	15	18	19	22

இவை, மேலே நாம கணிததுககணட பன்னிருபாலைகளுள்ளே, கனனிப்பாலை யும, குமபப்பாலையுமாக அமைநதுநிற்றல் காண்க

சோதிட நூன்மரபின்படி, நின்ற வீட்டினையுஞ் சேர்தது எணணுமிடதது, நட்பு ஆறாமிடமெனவும, கிளை எட்டாமிடமெனவும பெறப்படுவ கீழே தந்த இராசி வடடததை நோககுக

மீனம்	மேடம	இடபம	மிதுனம
கும்பம			கடகம
மகரம்			சிஙகம
தனு	விருச்சிகம	துலாம	கன்னி

கன்னிக்கு எதிராகிய வீடு மீனம், இதனைச சோதிடா ஏழாமிடமென்பர். ஆதலின், கன்னிககு எடடாமிடம் மேடமாகும மேடததிற்கு எட்டாமிடம விருச் சிகம் விருச்சிகத்திறகு எட்டாமிடம் மிதுனம் மிதுனததிற்கு எட்டாமிடம் மக ரம் மகரத்திற்கு எட்டாமிடம் சிஙகம. சிங்கத்திற்கு எட்டாமிடம மீனம் மீனத் திற்கு எடடாமிடம துலாம் துலாத்திறகு எட்டாமிடம் இடபம். இடபத்திற்கு எட்டாமிடம் தனு. தனுவிறகு எட்ட ாமிடம கறகடகம் கறகடகத்திறகு எட்டா மிடம கும்பம, பன்னிரு வீடுகளையும் இம்முறையில் நிறுத்தி, அவைதம்முள நின்ற நரம்பு, அந்தரங்கள, அலகுநிலையெண்கள் என்னு மிவறறை அட்டவணைப்படுத்து வாம்.

கன்னி	அந்தரம்	1
மேடம்	அந்தரம்	14
விருச்சிகம்	அந்தரம்	5
மிதுனம்	அந்தரம்	18
மகரம்	அந்தரம்	9
சிங்கம்	தாரம்	0
மீனம்	உழை	13
துலாம்	குரல்	4
இடபம்	இளி	17
தனு	துத்தம்	8
கற்கடகம்	விளரி	21
கும்பம்	கைக்கிளை	12

அலகுநிலையினைகள் கிளைமுறையாகத் தொடர்ந்து நிற்றலையும், அந்தரம் ஐந்தும் தோற்றியபின், நரம்பு ஏழும் பிறப்புமுறையாகத் தோற்றி, அவைதமக்குக் குறிப்பிட்ட இராசி வீடுகளிலே நிற்றலையும் நோக்குக

நாம் கணித்துக்கண்ட பன்னிரு பாலைகளையும் மேலே பெற்ற கிளையிற் பிறப்பு முறையிலே நிறுத்துவோமாக.

கன்னி	0	3	4	7	8	11	12	13	16	17	20	21	22
மேடம்	0	3	4	7	8	9	12	13	16	17	20	21	22
விருச்சிகம்	0	3	4	7	8	9	12	13	16	17	18	21	22
மிதுனம்	0	3	4	5	8	9	12	13	16	17	18	21	22
மகரம்	0	3	4	5	8	9	12	13	14	17	18	21	22
சிங்கம்	0	1	4	5	8	9	12	13	14	17	18	21	22
மீனம்	0	1	4	5	8	9	10	13	14	17	18	21	22
துலாம்	0	1	4	5	8	9	10	13	14	17	18	19	22
இடபம்	0	1	4	5	6	9	10	13	14	17	18	19	22
தனு	0	1	4	5	6	9	10	13	14	15	18	19	22
கற்கடகம்	0	1	2	5	6	9	10	13	14	15	18	19	22
கும்பம்	0	1	2	5	6	9	10	11	14	15	18	19	22

மேடத்தில் 9, விருச்சிகத்தில் 18, மிதுனத்தில் 5, மகரத்தில் 14, சிங்கத்தில் 1, மீனத்தில் 10, துலாத்தில் 19, இடபத்தில் 6, தனுவில் 15, கற்கடகத்தில் 2, கும்பத்தில் 11 என்னும் அலகுநிலைகள் தோன்றி நிலைபெறுகின்றன இவை யாவும் நட்பு முறையிற் பிறந்தன.

கன்னிப்பாலையில் அமைந்தும் கிளைநரம்புகள் மேடத்தில் ஒரு நட்பு. விருச்சிகத்தில் இரண்டு. மிதுனத்தில் மூன்று மகரத்தில் நான்கு சிங்கத்தில் ஐந்து. மீனத்தில் ஆறு துலாத்தில் ஏழு. இடபத்தில் எட்டு தனுவில் ஒன்பது. கற்கட

கத்தில் பத்து கும்பத்தில் பதினொன்று. இவ்வகையாக நட்புநரம்புகள் நின்றன. 0 உம் 22 உம் கிளைக்கும் நட்புக்கும் பொதுவாதலின், கும்பத்தில் அனைத்தும் நட்பு என்பாம் அடுத்துவரும் இரு பாலைகளுள், ஓரேயொரு நரம்புமாத்திரம் வேறுபட, மற்றவை ஒன்றிநிற்கக் காண்கின்றும்

இனி, மேலே காட்டிய அலகுநிலையெண்களிலிருந்து, ஒவ்வொரு பாலையிலு முள்ள பன்னிரண்டு வீட்டிற்கும் தனித்தனி யமைந்த அலகெண்களைக் கணக்கிட லாம் ஒரு வீட்டின அலகுநிலையெண்ணிலிருந்து, அதற்கு முன்னுள்ள அலகுநிலை யெண்ணைக் கழிக்க, அவ்வீட்டிற்குரிய அலகெண் கிடைக்கும் இப்படிப் பெற்ற அலகெண்களாவன

கன்னி	3	1	3	1	3	1	1	3	1	3	1	1
மேடம்	3	1	3	1	1	3	1	3	1	3	1	1
விருச்சிகம்	3	1	3	1	1	3	1	3	1	1	3	1
மிதுனம்	3	1	1	3	1	3	1	3	1	1	3	1
மகரம்	3	1	1	3	1	3	1	1	3	1	3	1
சிங்கம்	1	3	1	3	1	3	1	1	3	1	3	1
மீனம்	1	3	1	3	1	1	3	1	3	1	3	1
துலாம்	1	3	1	3	1	1	3	1	3	1	1	3
இடபம்	1	3	1	1	3	1	3	1	3	1	1	3
தனு	1	3	1	1	3	1	3	1	1	3	1	3
கற்கடகம்	1	1	3	1	3	1	3	1	1	3	1	3
கும்பம்	1	1	3	1	3	1	1	3	1	3	1	3

இவ்வலகெண்களை நோக்குமிடத்துக், கன்னியில் வலமுறையாக (ஆரோகண மாக) நிற்கும் எண்கள், கும்பத்தில் இடமுறையாக (அவரோகணமாக) நிற்கக் காண் கின்றும் இப்படியே, மேடத்திற்குக் கற்கடகம், விருச்சிகத்திற்குத் தனு, மிதுனத் திற்கு இடபம், மகரத்திற்குத் துலாம், சிங்கத்திற்கு மீனம், எதிர்நிரனிறையாக அமைந்தன.

இடமுறைப்பாலை பன்னிரண்டினையும் இடமுறையாக (அவரோகணமாக) எழுதுவாம்.

கும்பம்	3	1	3	1	3	1	1	3	1	3	1	1
கற்கடகம்	3	1	3	1	1	3	1	3	1	3	1	1
தனு	3	1	3	1	1	3	1	3	1	1	3	1
இடபம்	3	1	1	3	1	3	1	3	1	1	3	1
துலாம்	3	1	1	3	1	3	1	1	3	1	3	1
மீனம்	1	3	1	3	1	3	1	1	3	1	3	1
சிங்கம்	1	3	1	3	1	1	3	1	3	1	3	1
மகரம்	1	3	1	3	1	1	3	1	3	1	1	3

மிதுனம	1	3	1	1	3	1	3	1	3	1	1	3
விருச்சிகம்	1	3	1	1	3	1	3	1	1	3	1	3
மேடம்	1	1	3	1	3	1	3	1	1	3	1	3
கன்னி	1	1	3	1	3	1	1	3	1	3	1	3

இவ்வெண்கள், வலமுறைப்பாலைகளின வலமுறை (ஆரோகண) எண்களை ஒத்துநிற்றல காண்க. அஃதன்றியும, கும்பம, கற்கடகம, தனு, இடபம், துலாம் மீனம், சிங்கம், மகரம், மிதுனம, விருச்சிகம், மேடம், கன்னி யென்பன ஒன்றினபின ஒன்றாய் ஆறும வீடாகத தொடர்ந்து வருதலையும நோக்குக நின்ற வீட்டினுககு ஆறும் இடம நட்பாகும. ஆதலின, இடமுறைப்பாலைகள் நட்புமுறையாகத் தொடர்ந்து வருவனவெனக கண்டாம ஆயப்பாலையிலே இடமுறையலகுநிலைகள ஈற்றினின்று எண்ணப்படுவ

கும்பம	22	19	18	15	14	11	10	9	6	5	2	1	0
கற்கடகம	22	19	18	15	14	13	10	9	6	5	2	1	0
தனு	22	19	18	15	14	13	10	9	6	5	4	1	0

பிறவும் இப்படியே

வலமுறை, இடமுறைப்பாலைகளின அலகெண்கள், அலகுநிலையெண்கள் என்னும் அனைத்தினையும இராசிவட்டத்திலே எளிதாகக காணலாம

மீ 1	மே 1	இ 3	மி 1
கு 3			கற 3
ம 1			சிங 1
த 3	வி 1	து 3	கன 1

நாம முன்பு குறிப்பிட்டபடி, இடபம், கற்கடகம், துலாம், தனு, கும்பம் மும் மூன்று அலகு பெறுவ, ஏனைய ஒவவோர் அலகு பெறுவ வலமுறையிலே கன்னிப் பாலையின அலகெண்களை எழுதுவதற்கு, அதனை யடுததுநின்ற துலாத்தினின்று தொடங்கிக், கன்னிமுடிய எடுக்கவேண்டும்

3 1 3 1 3 1 1 3 1 3 1 1

பிறவும் இப்படியே யென அறிக

அலகுநிலையெணகளைக காணபதறகு, 0 ஐ முதலில நிறுததி, அலகெண்களை ஒவவொனறுகக் கூட்டிச் செலலவேணடும இவவாறு கன்னிப்பாலைககுக் கணக்கிடக் கிடைப்பது

0 3 4 7 8 11 12 13 16 17 20 21 22

பிறவும இப்படியே யென அறிக

ஆயப்பாலை யிடமுறையிலே குமபப்பாலையின் அலகெண்களை எழுதுவதறகுக், கும்பத்திலிருந்து தொடங்கி, இடமுறையாகச சென்று மீனம் முடிய எடுககவேண்டும

3 1 3 1 3 1 1 3 1 3 1 1

அலகுநிலையெண்களைக காணபதற்கு, 22 ஐ முதலில நிறுததி, ஒவவொனறுகக கழிததுச செல்லவேணடும இவவாறு குமபப்பாலைக்குக கணக்கிடக் கிடைபபது

22 19 18 15 14 11 10 9 6 5 2 1 0

பிறவும் இப்படியே என அறிக

3. ஏழ் பெருமபாலைகளை மூன்று கிரமங்களிலும நிறுததல

1. தாரககிரமம.

மேறசெலலுமுன், தாரககிரமத்திலே நாம கணிததுக்கண்ட ஏழ் பெருமபாலைகளின் அலகெண்களை வைதது நோககுவோமாக

மேறசெம்பாலை	4	4	4	1	4	4	1
செம்பாலை	4	4	1	4	4	1	4
படுமலைப்பாலை	4	1	4	4	1	4	4
செவவழிபபாலை	1	4	4	1	4	4	4
அருமபாலை	4	4	1	4	4	4	1
கோடிப்பாலை	4	1	4	4	4	1	4
விளரிப்பாலை	1	4	4	4	1	4	4

மேறசெம்பாலை யெனனும நிரலின ஈறறில நிற்பது தாரநரம்பு இதனைத் தொடஙகுமிடம் 0 ஆக வைகக, 4 இல் குரலும், $4+4=8$ இல துததமும, $8+4=12$ இல கைக்கிளையும, $12+1=13$ இல் உழையும, $13+4=17$ இல இளியும், $17+4=21$ இல் விளரியும, $21+1=22$ இல் தாரமும் நின்றன. பன்னிரு பாலையுள் இது சிஙகப்பாலையில நினறது. செம்பாலை துலாத்திலும், படுமலைப்பாலை தனுவிலும், செவ்வழிப்பாலை கும்பததிலும், அரும்பாலை மீனத்திலும், கோடிப்பாலை இடபத்

திலும், விளரிப்பாலை கற்கடகததிலும் நின்றன இக்காலதது இராகங்களோடு ஒப்பு நோக்கி யறியும்பொருட்டுப், பன்னிரண்டு இசைநிலை வீடுகளிலே (சுவரஸ்தானங களிலே) ஒவ்வொரு பாலையும் அமைந்து நின்ற ஏழு வீட்டினையும் காணவேண்டும். சிஙகப்பாலையிலே மேலே கணட எண்கள நின்ற வீடுகளை வைத்துககொண்டு, மறற ஐந்தினையும் வெற்றிடமாக விட்டால, கொள்ளும் வீடு இவை, தள்ளும வீடு இவை யென்பது தெளிவாகும. பிறவு மிபபடியே. இக்காலதது இராகங்களைக காணப போகின்றேமாதலினலே, வீடுகளை இககாலததுச சுவரஸ்தானங்களின் பெயராற குறி யீடு செய்வாம்.

	ஷட்ஜம	சுத்த ரிஷபம	சதுச்ருதி ரிஷபம	சாதாரண காந்தாரம	அந்தர காந்தாரம	சுத்த மத்திமம	பிரதி மத்திமம	பஞ்சமம	சுத்த தைவதம	சதுச்ருதி தைவதம	கைசிகி நிஷாதம	காகலி நிஷாதம	ஷட்ஜம
சிஙகம—மேறசெமபாலை	0	—	4	—	8	—	12	13	—	17	—	21	22
துலாம—செமபாலை	0	—	4	—	8	9	—	13	—	17	18	—	22
	து	17	இ	26	து	17
	கை	20	வி	29	கை	20
	—	—	—	—	—	—

தானம்	கோடிப் பாலை		செம்பாலை		வம்புறு மரபிற செம்பாலை	
	நரம்புகள்	அலகு நிலைகள்	நரம்புகள்	அலகு நிலைகள்	நரம்புகள்	அலகு நிலைகள்
சமன்	உ	22	தா	31	உ	22
	—	—	—	—	—	—
	இ	26	கு	35	இ	26
	வி	29	—	—	—	—
	—	—	து	39	வி	30
	தா	31	கை	42	—	—
*	—	—	—	—	தா	33
வலிவு	கு	35	உ	0	கு	35
	—	—	—	—	—	—
	து	39	இ	4	து	39
	கை	42	வி	7	கை	42
	—	—	—	—	—	—

* 'வன்மையிற் கிடந்த தாரபாகம்' ஆனது தாரம் 31 க்கும் குரல் 35 க்கு மிடையே வலிவுத் தானத்தில் அமைந்த அந்தரக்கோலிலே குரலின் பாகத்தோடு

கூடி நின்றது. ‘மென்மையிற் கிடந்த குரலின் பாகம்’ ஆனது தாரம் 9 க்கும குரல் 13 க்கு மிடையே மெலிவுத்தானத்தி லமைந்த அந்தரக்கோலிலே தாரபாகததோடு கூடி நின்றது. இவ்விரிடத்தும் கைக்கிளை யமையுமென்றதை உரைசாலடிகள திட்ப நுட்பஞ் செறியக் கூறுகிருர்.

தாரங் கைக்கிளையாகுமிடத்து, விளரி துத்தமாதலும், குரல உழையாதலும, பிறவுந் தத்தங் கிளையாதலும் வேண்டப்படும். தாரம் தன்னேரலகை விளரிக்குக் கொடுக்க, நான்கலகுபெற்ற விளரி, தன்னீாமைதிரிநது, துத்தத்தின் நீர்மையினை யடைந்தது. எஞ்சிநின்ற தன்னேரலகினேடு, குரலினின்று ஈரலகு பெற்ற தாரம் கைக்கிளையின் நீர்மையுறறது ஈரலகோடுநின்ற குரல உழைநீர்மை யெய்திற்று. குரற்பின்னின்ற துத்தம, கைக்கிளை, உழை, அலகுவேற்றுமை யின்றி, முறையே இளி, விளரி, தாரம் ஆயின. பண்டை விளரியின் முன்னினற உழையும் இளியும், தாரமும் குரலும் ஆயின. தாரங கைக்கிளையாயிறறு என்பதும், தாரமழிய, அத னிடத்தினைக கைக்கிளையடைந்தது என்பதும ஓரே முடிபின. அலகெண்களை வைத்து, மேற்கூறிய தாரத்தாக்கததினைத தெளிவுபடுததுவாம்

பணடைநிலை	இ	வி	தா	கு	து	கை	உ
	4	3	2	4	4	3	2
	4	4	3	2	4	3	2
திரிநதநிலை	கு	து	கை	உ	இ	வி	தா

அலகுநிலையெண்கள் பின்வருமாறு அமைவன

பண்டைநிலை	0	4	7	9	13	17	20	22
திரிந்தநிலை	0	4	8	11	13	17	20	22

ஆதலினுலே, தாரத்தாக்கம செயதறகு, 7, 9 என்னும் நரம்புகளை யிசையாமல, 8, 11 என்னும் அந்தரககோல்களை யிசைத்தலவேணடும மேற்குனததிலே 29, 31 என்னும் நரம்புகளை யிசையாது, 30, 33 என்னும அநதரக்கோல்களை யிசைததல வேண்டும். இம்மாற்றத்தினுலே, உழைமுதலாக நின்ற கோடிப்பாலை, தன்னீர்மை திரிநது செம்பாலை யாயிறறு. இது தனனீாமை திரிநது புதியநீர்மையைப் பெற்ற தாதலின், ‘வமபுறுமரபிற செமபாலை’ யெனப்படடது 9 அலகு, 13 அலகுகளால வேறுபடட நரம்புகள் நடபாகவும், கிளையாகவும அணையும் நீர்மைய.

தாரம்முதற் செம்பாலையாக நின்ற நரம்பு பதினுன்கினையும் வைத்து, ஒவ்வொன்றிலும 9 அலகைக் கழிதது நோககுவோமாக. வலிவுத்தானத்தில் நின்ற மூன றுக்கும தனிததனி 44 அலகைச சோத்தபின், 9 ஐக கழிக்கவேண்டும்.

	தா	கு	து	கை	உ	இ	வி
முதலேழு நரம்புகள்	9	13	17	20	22	26	29
9 ஐக கழிக்க வருவன	0	4	8	11	13	17	20

மற்ற ஏழு நரம்புகள்	31	35	39	42	44	48	51
9 ஐக் கழிக்க வருவன	22	26	30	33	35	39	42

தாரம் முதலாகிய செம்பாலையினை வைத்து, 9 ஐக் கழித்துப் பெற்ற எண்கள் வம்புறுமரபிற் செம்பாலையில் நின்ற எண்களாதல் காண்க.

ஆதலினாலே, செம்பாலையில் நின்ற பதினொன்றினையும் வம்புறுமரபிற் செம்பாலையில் நின்ற பதினொன்றினையும் இணைநரம்பாகச் சேர்த்து இசைக்கலாம் என்பது பெறப்படுகின்றது.

பொருளுணர்ச்சிக்கு இன்றியமையாத இசை முடிபுகளை ஆராய்ந்து உணர்ந்து கொண்டோம். இனிச், செய்யுட்பாகத்தை யெழுதி அதன் பொருளைக் காணப் புகுவாம்.

ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியின்
ஓரேழ் பாலை நிறுத்தல் வேண்டி
வன்மையிற் கிடந்த தார பாகமும்
மென்மையிற் கிடந்த குரலின் பாகமும்
மெய்க்கிளை நரம்பிற் கைக்கிளை கொள்ளக்
கைக்கிளை யொழிந்த பாகமும் பொற்புடைத்
தளராத் தாரம் விளரிக் கீத்துக்
கிளைவழிப் பட்டனள் ஆங்கே கிளையுந்
தன்கிளை யழிவுகண் டவள்வயிற் சேர
ஏனை மகளிருங் கிளைவழிச் சேர
மேலது உழையிளி கீழது கைக்கிளை
வம்புறு மரபிற் செம்பாலை யாயது
இறுதி யாதி யாக ஆங்கவை
பெறுமுறை வந்த பெற்றியி னீங்காது
படுமலை செவ்வழி பகரரும் பாலையெனக்
குரல்குர லாகத் தற்கிழமை திரிந்தபின்
முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்கு
இளிமுத லாகிய ஏர்படு கிழமையுங்
கோடி விளரி மேற்செம் பாலையென
நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கையின்
இணைநரம் புடையன அணைவுறக் கொண்டாங்கு
யாழ்மேற் பாலை யிடமுறை மெலியக்
குழல்மேற் கோடி வலமுறை மெலிய
வலிவு மெலிவுஞ் சமனு மெல்லாம்
பொலியக் கோத்த புலமையோனை

—சிலப்பதிகாரம், அரங்கேற்றுகாதை, 70—94

'ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வியின்
ஓரேழ் பாலை நிறுத்தல் வேண்டி'

கேள்வி-யாழ்க்கருவி. 'தொடையமை கேள்வி யிடவயிற் றழீஇ' (பெரும்பாணாற்றுப்படை, 16) என்னும் வழக்கினை நோக்குக.

ஈரேழ்தொடுத்த செம்முறைக்கேள்வி-சகோடயாழ் 'கோஷாவதி', 'சகோஷ' என்னும் வடமொழிப்பெயர்கள் 'கோடபதி', 'சகோடம்' எனத்திரிந்து, பிற்காலத்திலே தமிழ் வழக்கில் வந்தனவெனக் கொள்ளலாம். செம்முறைக்கேள்வி யென்ற தமிழ் வழக்கு, மொழிபெயர்ப்பினாலே, 'கோஷாவதி', 'சகோஷ' ஆகிப், பின்பு 'கோடபதி', 'சகோடம்' எனத் தமிழில் வந்து வழங்கியதெனக் கொள்ளுதலும் பொருந்தும். 'செம்முறைக்கேள்வி' யென்பதே சகோடயாழுக்கு இயைந்த பழைய தமிழ்ப்பெயர் 'பிழையாமரபின் ஈரேழ்கோவை' என வேனிற்காதையுட் கூறியதனை நோக்கச், சகோடயாழுக்கு 'ஈரேழுகோவை' என்னும் பெயரும் உளதென்பது தெளிவாகின்றது.

ஓரேழ்பாலை-செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை எனபன. கருவியிலமைந்த முறையில ஏழு நரம்புகளை யிசைக்க ஒரு பாலையாகும் ஆரோசையாக இசைத்துச் செல்வது ஆயப்பாலை வலமுறை, அமரோசையாக இசைத்துச் செல்வது ஆயப்பாலை இடமுறை. செம்பாலை முதல மேற்செம்பாலை யீறாக இசைத்துச் செல்வது ஆயப்பாலை வலமுறை; மேற்செம்பாலை முதல செம்பாலை யீறாக இசைத்துச் செல்வது ஆயப்பாலை இடமுறை

நட்பியையிற் றொடர்ந்து, செம்பாலை, அரும்பாலை, மேற்செம்பாலை, அந்தரச் செவ்வழிப்பாலை, அந்தர விளரிப்பாலை, அந்தரப் படுமலைப்பாலை, அந்தரக் கோடிப்பாலை, அந்தரச் செம்பாலை, செவ்வழிப்பாலை, விளரிப்பாலை, படுமலைப்பாலை, கோடிப்பாலை யென நிற்பது வட்டப்பாலை இடமுறை ஈற்றில் நின்ற கோடிப்பாலையிலே நட்பியையுச் செய்யுமிடத்து, முதலில் நின்ற செம்பாலை பிறக்குமாதலின், இவை வட்டப்பாலை எனப்பட்டன.

கிளையியையிற் றொடர்ந்து, செம்பாலை, கோடிப்பாலை, படுமலைப்பாலை, விளரிப்பாலை, செவ்வழிப்பாலை, அந்தரச் செம்பாலை, அந்தரக் கோடிப்பாலை, அந்தரப் படுமலைப்பாலை, அந்தர விளரிப்பாலை, அந்தரச் செவ்வழிப்பாலை, மேற்செம்பாலை, அரும்பாலை என வருவது வட்டப்பாலை வலமுறையாகும். ஈற்றில் அரும்பாலையைக் கிளையியையுச் செய்யச், செம்பாலை பிறக்குமாதலின், இவை வட்டப்பாலை யாயின. இவற்றையெல்லாம் சுருதிவீணையிலே தனித்தனி பிறப்பித்தற்கியன்ற அலகுநிலையெண்களை இவ்வியலின் நான்காம் பிரிவிலே தந்தாம். அடுத்துநின்ற இரு பாலைகளை இயைய வைப்பது யாழ்க்கருவியிற்றான் அமையும் என்பதையும் அங்குக் குறிப்பிட்டாம்.

ஓரேழ் பாலை நிறுத்தல் வேண்டி-ஏழு பெரும் பாலையினையும், அவைதம்முள் அரும்பாலை, மேற்செம்பாலை யொழிந்த ஐந்தின் வேறாகியும், வேறாகாதும் நிற்கும்

அந்தரப்பாலை ஐந்தினையும் வட்டப்பாலையாக நிறுத்தல்வேண்டி என்பது பொருள். நிறுத்தும் முறையினைப் பின்னர்த் தருவாம்.

‘ வனமையிற கிடநத தார பாகமும
மெனமையிற கிடநத குரலின் பாகமும
மெயககிளை நரமபிற கைக்கிளை கொள்ளக
கைக்கிளை யொழிநத பாகமும பொற்புடைத
தளராத தாரம விளரிக கீததுக்
கிளைவழிப் பட்டனள் ’

எனத் தாரத்தாக்கங் கூறினா. இது உரை தொடங்குமுன்னரே தெளிவுபடுத்தப் படடது. ‘ கிளைவழிப்பட்டனள் ’ எனப் பெண்பால் வினைமுறறு வருதலை ஆராய வேண்டும் ஆய்ச்சியர் குரவையினுள்ளே, இடைமுதுமகள், படைத்துக் கோட் பெயரிடுவாளாய், எழுவர் மகளிர்க்குக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயரிடடு, மேலும் குரற்பெயரினளை மாயவன் எனவும், இளிப் பெயரினளைப் பலபததிரனெனவும், துததப் பெயரினளைப் பின்னைப்பிராட்டி யென வும் நிறுத்தினளென்றும், குரறபெயரினள், தன் கிளையாகிய இளிப் பெயரினளை நோககி, ‘ யாம் முல்லைத்தீமபாணி பாடுதும ’ என்றாள் எனவும்கூறிய வழக்கினை நோககும்போது, ஆடலிலும், பாடலிலும மகளிர்க்கு இசைநரம்புப் பெயரிடடு, இசைக் கிரியைகளைக் குறிப்பிடும் வழககு இருநதமை புலப்படுகின்றது இசை நரம்புகளை மகளிராககி, இணை, கிளை, பகை, நட்பு என்னு மிசைத் தொடர்புகளை யுரைக்கும் செய்யுள்வழக்குப் பண்டைநாளி லிருந்திருக்கவேண்டும பாயிரவியலுட் காட்டிய ‘ நீரரமகளிர் இன்னிசைப்பாடலி ’ னுள்ளே இவ்வழக்கு எடுததாளப்பட் டது பாடடு நின்ற ஆதார சுருதிக்குக் கிளையாகவோ நட்பாகவோ அமைந்த சுவரத்திலெடுத்து, ‘ இணைநரமபுடையன அணைவுறக்கொண்டு ’ பாடுதல் பற்றுப் பாடுதல் எனப்படும் பற்றுப்பாடுபவள், தன் கிளையினைச் சேர்ந்து, அக்கிளை நீரமையளாக, ஏனைமகளிருந் தத்தமது கிளை நீர்மையராதல் வேண்டும்.

‘ ஆஙகே கிளையும
தனகிளை யழிவுகணடு அவள்வயிற சேர
ஏனை மகளிரும கிளைவழிச சேர
மேல துழையிளி கீழது கைக்கிளை
வமபுது மரபிற செமபாலை யாயது ’

‘ கைக்கிளை ’ தொகுத்தல் விகாரத்தினலே ‘ கிளை ’ யென நின்றது ‘ ஒரு பாதி மால கொள மறறொரு பாதி யுமையவள கொணடு, இரு பாதியாலும இறைதான புரரி ’ எனப் பிற்காலததுப் புலவரொருவா இறைவனைப் பாடுதற்கு இயைந்தது போன்ற நிகழ்ச்சியொன்று தாரநரம்பிற்கு எய்தியது கைக்கிளை தன் கிளையாகிய தாரத் தின் ஒரு பாதியைக் கொளள, விளரி மறறுப்பாதியைக் கொளளத், தாரநரம்பு அழிவுற்றது தன் கிளையாகிய தாரம் அழிவுற்றதனைக் கண்ட கைக்கிளை தாரம் நின்ற இடத்தினைச் சேரத, துத்தமென்னும் மகள் விளரியினிடத்தினையும், உழை யென்பாள் குரலினிடத்தினையுஞ் சேர்ந்தனர். துத்தம், கைக்கிளை, உழை நின்ற

விடங்களிலே, முறையே, இளி, விளரி, தாரம என்னும் மூவரும் எய்தினர் (அர மகளிராதலினால் இசைமகளிர் அழிந்தும் அழிவதில்லை யென்பது ஈண்டுக் குறிப்பிடற குரியது) பண்டை இளி, உழை நின்ற விடங்களாக குரலும், தாரமும் அடைந்தன அவ்வாறடைதலினாலே, உழைமுதல உழையீறாக அமைந்துநின்ற கோடிப்பாலை, தன னீரமை கெட்டுத, தாரமமுதற் றாரமீறாக நின்ற செமபாலையின் நீர்மையினை யெய்தி யது. மேலது உழையிளி யெனறதனால, வலமுறைச செமபாலையாதல பெற்றாம். இடமுறைச செம்பாலை உழை, கைக்கிளை, துததம என அமரோசையாகச செல்லும் இயல்பினமைந்த செம்பாலையோடு உடனிறறலின, இது 'வமபுறு மர பிற செம்பாலையாயிற்று'

> 'இறுதி யாதி யாக ஆங்கவை
> பெறுமுறை வநத பெறறி நீஙகாது'

இறுதி யென்றது தார நரம்பினை இளிக்கிரமததிலே, தாரம் முதலாகச செம்பாலை பிறக்கும படுமலை முதலிய மற்றப் பாலைகள முறையே தொடர்நது வருவன பாலை களையும, இளிககிரமததிலே அவற்றிறகு இயைநத குரனரமபுகளையும் முறையாக வைப்பாம.

குரனரம்புகள	பாலைகள
தாரம்	செமபாலை
குரல்	படுமலைப்பாலை
துத்தம்	செவவழிப்பாலை
கைககிளை	அருமபாலை
உழை	கோடிப்பாலை
இளி	விளரிபபாலை
விளரி	மேறசெம்பாலை

பொருளைத தெளிவுசெய்தல கருதி, இககாலதது வழங்கும் குறியீட் டெழுத துக்களினாலே இவற்றைக் காட்டுவாம் யாழ்ககருவியிலே நரம்பு கட்டப்பட்டிருப் பது **நி ச ரி க ம ப த நி ச ரி க ம ப த** என்னும முறையிலே யாகும நாலாம் நரம்பாகிய காந்தாரத்திலிருந்து பதினோராம் நரமபாகிய காந்தாரம்வரையு மிசைத துச, செமபாலையினைப் பெறலாம. அடுதத மததிமமமுதல மததிமமீறாகப் படுமலைப் பாலையும, பஞ்சமமமுதற பஞ்சமமீறாகச செவவழிபபாலையும, தைவதமமுதல தைவத மீறாக அருமபாலையும பெறுதற்குரிய முதலநரமபாகிய நிஷாதமமுதல எட்டாம நரமபாகிய நிஷாதமவரை யிசைததுக் கோடிப்பாலையும, அதற்கடுதத ஷட்ஜமமுதல ஷட்ஜமீறாக இசைதது விளரிப்பாலையும, ரிஷபமமுதல் ரிஷபம ஈறாக விசைதது மேற் செம்பாலையும பெறுதற்குரியன ஆதலினாலே, தாரத்தாக்கத்தினால திரிபுபடாது நின்ற நிலையிலே, இளிககிரமமாக இசைகூட்டப்பட்ட சகோடயாழ்க்கருவியிலே, நிஷாதமமுதலாக நரமபு கட்டப்பட்ட நிரலிலே, பின்வரும் பாலைகள் முறையே தோன்றுவனவாம்.

நி ச ரி க ம ப த நி	கோடிப்பாலை
ச ரி க ம ப த நி ச	விளரிப்பாலை

பாலைத்திரியியல்

ரி க ம ப த நி ச ரி	மேற்செம்பாலை
க ம ப த நி ச ரி க	செம்பாலை
ம ப த நி ச ரி க ம	படுமலைப்பாலை
ப த நி ச ரி க ம ப	செவ்வழிப்பாலை
த நி ச ரி க ம ப த	அரும்பாலை

தாரத்தாக்கத்தினாலே ரிஷப, காந்தாரங்கள், தாம் நின்ற 7 ஆம், 9 ஆம் அலகு நிலைகளை விட்டு, 8 ஆம், 11 ஆம் அலகுநிலைகளாகிய அந்தரக்கோல்களை (கறுப்புக் கட்டைகளை) அடைந்தன இவ்வாறு அவை வேறுபட்டதனைக் காட்டுவதற்கு 'ரி க' வின்கீழ்க் கோடிட்டுக் குறிப்பாம்.

நி ச ரி க ம ப த நி	செம்பாலை
ச ரி க ம ப த நி ச	படுமலைப்பாலை
ரி க ம ப த நி ச ரி	செவ்வழிப்பாலை
க ம ப த நி ச ரி க	அரும்பாலை
ம ப த நி ச ரி க ம	கோடிப்பாலை
ப த நி ச ரி க ம ப	விளரிப்பாலை
த நி ச ரி க ம ப த	மேற்செம்பாலை

என ஏழு பாலைகளும் நின்றன

'படுமலை செவ்வழி பகரும் பாலையெனக்
குரல் குரலாகத் தற்கிழமை திரிந்தபின்
முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்கு
இளிமுத லாகிய ஏர்படு கிழமையும்
கோடி விளரி மேற்செம் பாலையென
நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கையின்'

உழை, இளி முதலாயின தாரத்தாக்கத்தினாலே தாரம், குரல் முதலியவற்றின் நீர்மைபெற்று நின்றனவன்றோ, அவைதம்மை அந்நீர்மையவாக வைத்துப், பின்னுமொரு முறை தாரத்தாக்கஞ் செய்வதுவே, 'முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்கு' எனக் கூறப்பட்டது அலகெண்களைவைத்து, இரண்டாம் திரிபினாலே எய்துகின்ற நீர்மையினை உய்த்துணர்வாம்

பண்டை நிலை	இ	வி	தா	கு	து	கை	உ	இ
	4	3	2	4	4	3	2	4
முதற்றிரிபினாலெய்திய நிலை	கு	து	கை	உ	இ	வி	தா	கு
	4	4	3	2	4	3	2	4

இரண்டாந் திரிபினால் எய்திய நிலை	உ	இ	வி	தா	கு	து	கை	உ
	2	4	3	2	4	4	3	2

பண்டைநிலையிலே, கீழ்க்கோடிட்டுக் காட்டப்பட்ட விளரி, தாரம், குரல் முறையே பெற்றுநின்ற 3, 2, 4 என்னும அலகுகள், தாரத்தாக்கததினுலே, 4, 3, 2 என நின்றமையினுலே, அந்நரம்புகள துத்தம, கைக்கிளை, உழையின் நீர்மையினை எய்தியனவென்றும், பிறவும் அலகுதிரியாது தத்தம் கிளைநரம்பின் நீர்மையினை எய்தினவென்றும் மேலே காட்டினும் பண்டை நிலையிலே, கைககிளை, உழை, இளி என நின்ற மூன்றும், அலகு திரியாது, விளரி, தாரம, குரலாயின இவை பெற்று நின்ற 3, 2, 4 என்னும் அலகுகள், இரண்டாந்திரிபினுலே, 4, 3, 2 ஆக, இவை துத்தம், கைக்கிளை, உழையின் நீர்மை யெய்தின பிறவும் முறையே திரிபுற்றன

கருவியிலே, பணடை நிலையிலே, கைக்கிளை, உழை, இளி, முறையே, 20 ஆம், 22 ஆம, 26 ஆம் அலகுநிலைகளில நின்றன இவை நிலைமாருமலே, முதற்றிரிபின் விளரி, தாரம், குரலென நின்றன. முதறறிரிபினுலெய்திய தாரம், தான் பெற்று நின்ற 21 ஆம், 22 ஆம் அலகுகளில, 21 ஆம் அலகை விளரிக்குக கொடுக்க, விளரி துத்தமாயிறறு எஞ்சிய 22 ஆம் அலகோடு குரலின 23, 24 ஆம் அலகுகளைப் பெற்ற தாரம், கைக்கிளையாயிற்று 25, 26 ஆம அலகுகளோடு நின்ற குரல், உழை யாயிற்று

இந்த நீர்மைகளைப் பின்வருமாறு காட்டலாம்.

பண்டை நிலை	கை	உ	இ
	20	22	26
முதற்றிரிபினபின் எய்திய நிலை	வி	தா	கு
	20	22	26
இரண்டாநதிரிபின்பின எயதிய நிலை	து	கை	உ
	21	24	26

முற்றிசையாகிய 4 அலகு இருகூறுகுமபோது, விதியிசையாகிய கிளை 2 உம், நெட்டிசையாகிய நட்பு 2 உம ஆகப் பிரியுமென மேலே இசைநரம்பியலினுட் காட்டினும குரலின் ஒருகூறுகிய நெட்டிசை உழையாயிறறு மற்றககூறுகிய விதியிசை தாரத்தின் கூறுகிய குறறிசையோடு சேர்தலினுல எயதிய பறறிசை கைக்கிளை யாயிறறு.

24, 26 என்னும் அலகுநிலை யெண்களில தானததலகாகிய 22 ஐக் கழிக்கப் பெற்றன 2, 4 ஆகும். கருவியிலே 2 உழையினநதரததில் நிற்கும மேலும, 21 கைக்கிளையினந்தரத்தில் நிறகும் கைக்கிளையையும உழையையும் நரம்பிலிசைககாது, அந்தரததிலிசைப்பதே இரண்டாந் தாரததாக்கததின் முடிபாகும் இக்காலதது வழக்குசசொற்களிற கூறின், தைவத, நிஷாதஙகளைக் கறுப்புக்கட்டையி லிசைக்க வேணடுமென்பது. முதற்றிரிபின் பின்பே இரண்டாந்திரிபு எய்தியதாதலின, ரிஷப,

காந்தாரங்களைக் கறுப்புக்கட்டையில் வைத்தபின்பே, தைவத, நிஷாதங்களைக் கறுப்புக கட்டையில் வைக்கவேணடும.

இவ்வாறு திரித்தபின், இளி முதலாக எடுககக், கோடிப்பாலையாகும்; விளரி முதலாக, விளரிப்பாலையும் பிறவும அடைவே தோன்றுவன

ச ரி க ம ப த நி ச	கோடிப்பாலை
ரி க ம ப த நி ச ரி	விளரிப்பாலை
க ம ப த நி ச ரி க	மேறசெம்பாலை
ம ப த நி ச ரி க ம	செம்பாலை
ப த நி ச ரி க ம ப	படுமலைப்பாலை
த நி ச ரி க ம ப த	செவ்வழிப்பாலை
நி ச ரி க ம ப த நி	அரும்பாலை

சகோடயாழக்கருவியிலே உழையினந்தரம முதலாக அரும்பாலை நிற்றல் காண்க ஏழு பாலைகளும் மும்மூன்று உருவமெய்துதலின், மொத்தம் இருபததோருருவமாயின.

வினைமுடிபுசெய்து செய்யுடபொருளைக் காண்பாம்.

(1) ‘படுமலை செவ்வழி பகரரும் பாலையென நீடிககிடநத கேள்விக் கிடககை’,

(2) ‘குரல் குரலாகத தற்கிழமை திரிந்தபின் (படுமலை செவ்வழி பகரரும் பாலை திரிபெய்திக்) கோடி விளரி மேற்செம்பாலையென நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கை’,

(3) ‘முன்னதன் வகையே முறைமையிற் றிரிந்தாங்கு, இளி முதலாகிய ஏர்படு கிழமையும் கோடி விளரி மேற்செம்பாலையென நீடிக் கிடநத கேளவிக்கிடக்கை’,

எனப்

(1) பண்டைநிலைககும,

(2) முதறறிரிபினுலெய்திய நிலைக்கும்,

(3) இரண்டாந்திரிபினுலெயதிய நிலைக்கும,

வைத்துப் பொருள் கொளளவேண்டும் இரண்டு திரிபினுலும எய்திய ஈரேழ் பாலைகள் இடநிலைப்பாலை யெனப்படுவன

கேள்விக்கிடக்கை-யாழினகதது நரம்பினதமைதி

பண்டைநிலையிலே, குரல்முதல மூன்றும்

ம ப த நி ச ரி க ம	படுமலைப்பாலை
ப த நி ச ரி க ம ப	செவ்வழிப்பாலை
த நி ச ரி க ம ப த	அருமபாலை

என நின்றன

முதற்றிரிபின்பின், குரல்முதல் மூன்றும், (கீழ்க்கோடிடப்பட்ட 'ரி க' வோடு),

ம ப த நி ச ரி க ம	கோடிப்பாலை
ப த நி ச ரி க ம ப	விளரிப்பாலை
த நி ச ரி க ம ப த	மேற்செம்பாலை

எனவும்,

இரண்டாம் திரிபின்பின், இளிமுதல் மூன்றும், (கீழ்க்கோடிடப்பட்ட 'ரி க', த நி' யோடு)

ச ரி க ம ப த நி ச	கோடிப்பாலை
ரி க ம ப த நி ச ரி	விளரிப்பாலை
க ம ப த நி ச ரி க	மேற்செம்பாலை

எனவும் நின்றன

தாரக்கிரமத்திலே, இளிநரம்பு கோடிப்பாலைக்கு முதனிலையாகும். இளிக் கிரமத்திலே, இரண்டாந்திரிபினாலே, இளிநரம்பு மீட்டும் கோடிப்பாலைக்கு முதனிலை யாகு முரிமையினைப் பெறுதலினாலே, அவ்வுரிமை 'ஏற்பட்டு' என்னும் அடைமொழி யாற் சிறப்பிக்கப்பட்டது.

'இணை நரம்புடையன அணைவுறக் கொண்டாங்கு'

இணையும்நரம்பு, இணையாநரம்பு என இருவகைப்படுத்துமிடத்துப், பகை நரம்பினை இணையாநரம்பு எனவும், இணை, கிளை, நட்பு என்னும் மூன்றினையும் இணை யும் நரம்பு எனவுங் கொள்ளவேண்டும் இவற்றின் விரிவைப் பண்ணியலினுட் கூறுவாம் வலமுறையாக ஒருபாலையையும், இடமுறையாக அதன் எதிர்நிரனிறைப் பாலையினையும் வைக்கும்போது, இரண்டும் இயைந்து நிற்கின்ற மற்றொரு வகை யணைவும் இங்குக் கொள்ளப்பட்டது

இவ்வியலின் நான்காம் பிரிவிலே காட்டிய நிரனிறை, எதிர்நிரனிறைப் பாலை களின் இயைபுமுறையினைச் சகோடயாழ்க் கருவியிலே நரம்புகள்நின்ற அடைவாக இங்குத் தருவாம்

நிரனிறை	குரனரம்பு	எதிர்நிரனிறை
கோடிப்பாலை	உழை	கோடிப்பாலை
விளரிப்பாலை	இளி	அரும்பாலை
மேற்செம்பாலை	விளரி	செவ்வழிப்பாலை
செம்பாலை	தாரம்	படுமலைப்பாலை
படுமலைப்பாலை	குரல்	செம்பாலை
செவ்வழிப்பாலை	துத்தம்	மேற்செம்பாலை
அரும்பாலை	கைக்கிளை	விளரிப்பாலை

'குழல்வழி யாழெழீஇத் தண்ணுமைப் பின்னர், முழவியம்பல் ஆமந்திரிகை' (சீவகசிந்தாமணி, 675 ஆம் பாடல நச்சினார்க்கினியருரை மேற்கோள்) என்றமையின, பல கருவிகளும் ஒருங்கிசைக்கும் ஆமநதிரிகை (Orchestra) யிலே, முதலிற் குழலே யிசைததல் மரபு குழலிலே வடடப்பாலை வலமுறையாகச செலல, யாழிலே இடமுறையாகச் செல்லும் வடடப்பாலை வலமுறை யிடமுறையும், ஆயப்பாலை வலமுறை யிடமுறையும் ஒருஙகியைநது நிற்றலோடு, வலிவுத்தானததும, சமன் தானத்தும், மெலிவுததானததும் நின்ற நரம்புகள இணை, கிளை, நடபு என்னும இசை மரபு தவறாது அமையவைததாறுதலின, யாழாசிரியன் 'வலிவு மெலிவுஞ் சமனு மெலலாம் பொலியககோதத புலமையோ' னுயினன்.

குழல	யாழ்
கோடிப்பாலை	கோடிப்பாலை
படுமலைபபாலை	செம்பாலை
விளரிபபாலை	அருமபாலை
செவவழிப்பாலை	மேறசெம்பாலை
மேறசெமபாலை	செவ்வழிபபாலை
அருமபாலை	விளரிபபாலை
செமபாலை	படுமலைப்பாலை
கோடிப்பாலை	கோடிப்பாலை

முதலிலே யாழிற கோடிப்பாலை யிசைததல் வேணடாவெனினும, வடடப் பாலையாக நிறைவுபெறுதலைக் காடடுதறகாக எழுதினும்

ஒவவொரு பாலைககுந தநதிருக்கும ஆறு உருவஙகளும இணைநரம்பு அணையும் நீரமைய

நிஷாதம் முதலாகவுள்ள கோடிப்பாலையை ஒரு குழலோனும், நிஷாதத்தின் பஞ்சமமாகிய மததிமம் முதலாகவுள்ள கோடிப்பாலையை மறறொரு குழலோனும், மததிமத்தின பஞ்சமமாகிய ஷட்ஜம் முதலாகவுள்ள கோடிப்பாலையை மறறொரு குழலோனும் எழுதெழுததாக இசைதது வாசிகக, அவை அணைந்துநினறு இன்பம் பயபபன

இவை அணைவனவெனபதைக கணிதவாயிலாகக காட்டுமபொருட்டுச், சுவரங்கள பெற்ற அசைவெண்களை மூன்றுநிரலாக வைப்பாம. இவவெணகள் 'சகோட யாழ்ககருவிக்கு இசைகூடடுதல' என்னும 6 ஆம் பிரிவினின்று எடுககப்பட்டன. மேறறுனதது அசைவெணகள கீழ்ததானதது அசைவெண்களின் இரட்டியாவன

நி ச ரி க ம ப த நி	240	270	288	320	360	405	432	480
ம ப த நி ச ரி க ம	360	405	432	480	540	$607\frac{1}{2}$	648	720
ச ரி க ம ப த நி ச	270	$303\frac{3}{4}$	324	360	405	$455\frac{5}{8}$	486	540

முதல்நிரலிஎெண்களை 8 இனுலும், இரண்டாம்நிரலிலெண்களைப் 12 இனு லும், மூன்ரும்நிரலிலெண்களை 9 இனுலும் பிரித்து நிறுத்தக்கிடைப்பது இதுவாகும்.

முதல நிரல்	30	33¾	36	40	45	50⅝	54	60
இரண்டாம் நிரல்	30	33¾	36	40	45	50⅝	54	60
மூன்ரும் நிரல்	30	33¾	36	40	45	50⅝	54	60

மூன்று நிரலிலும் ஒததுவருகின்றன , ஆதலினுலே, இவை அனைத்தும் ஒரே பாலையென்பது பெறப்படுகின்றது கருவிககு இசைகூட்டிய கணிதமுறையும் சரி யான முறையே யென்பதையும் இம்முடிபு காட்டுகின்றது மூன்றும் அணையுமெனி னும், மூன்றினையும் ஒருஙகுவைப்பதிலும் பார்கக, முதலினையும் இரண்டினையும அலலது இரண்டினையும் மூன்றினையும் ஒருங்குவைபபது கூடிய இன்பம் பயப்பது.

$\frac{8}{12}=\frac{2}{3}$; $\frac{12}{9}=\frac{4}{3}$ ஆதலின, முதல நிரல் நரமபுகளிலிருந்தெழும் 2 அலைகள், இரண்டாம் நிரல் நரம்புகளிலிருநதெழும் 3 அலைகளோடு ஒனறுவன. இரண்டாம் நிரல் நரம்புகளிலிருந்தெழும் 4 அலைகளை, மூன்றும நிரல் நரம்புகளிலிருந்தெழுும 3 அலைகளோடு ஒனறுவன இவ்வாறு சிறிய எணகளாக நின்று அணைவது சிறப் புடையது

யாழிற், செம்பாலை இடமுறைமெலிய, அது படுமலைப்பாலையாகிக், குழலிலே வலமுறை வலிந்து செல்லும படுமலைப்பாலையிஞேடு அணைவுறும்.

முதற்றிரிபின்பின் எயதிய நிலையில் அவை இவவாருவன

நிரனிறை	குரலநரமபு	எதிர்நிரனிறை
கோடிப்பாலை	குரல்	கோடிப்பாலை
விளரிப்பாலை	துத்தம்	அரும்பாலை
மேற்செம்பாலை	கைக்கிளை	செவவழிப்பாலை
செம்பாலை	உழை	படுமலைப்பாலை
படுமலைப்பாலை	இளி	செமபாலை
செவவழிப்பாலை	விளரி	மேறசெம்பாலை
அரும்பாலை	தாரம்	விளரிப்பாலை

இரண்டாந்திரிபின்பின் எய்திய நிலையில் அவை இவ்வாருவன :

நிரனிறை	குரல்நரமபு	எதிர்நிரனிறை
கோடிப்பாலை	இளி	கோடிப்பாலை
விளரிப்பாலை	விளரி	அரும்பாலை
மேற்செம்பாலை	தாரம	செவவழிப்பாலை
செம்பாலை	குரல்	படுமலைப்பாலை
படுமலைப்பாலை	துத்தம்	செம்பாலை
செவ்வழிப்பாலை	கைக்கிளை	மேறசெம்பாலை
அரும்பாலை	உழை	விளரிப்பாலை

பாலைத்திரிபியல்

இணை நரம்புடையன அணைவுறக்கொள்ளும்பொருட்டு, ஒவ்வொரு பாலைக்கு மெய்திய அவ்வாறு உருவங்களையும் உடன்வைத்து, ஏழுபாலைகளும், வட்டப்பாலையாகவும், ஆயப்பாலையாகவும், இடமுறையிலும் வலமுறையிலும் அமையுமாறு அவை தம்மை முறைப்படி நிறுத்துவாம்.

செவ்வழிப்பாலை

வலமுறை	இடமுறை
ப த நி ச ரி க ம ப	ரி ச த நி ப ம க ரி
ரி க ம ப த நி ச ரி	த ப ம க ரி ச நி த
த நி ச ரி க ம ப த	க ரி ச நி த ப ம க

விளரிப்பாலை

ச ரி க ம ப த நி ச	த ப ம க ரி ச நி த
ப த நி ச ரி க ம ப	க ரி ச நி த ப ம க
ரி க ம ப த நி ச ரி	நி த ப ம க ரி ச நி

படுமலைப்பாலை

ம ப த நி ச ரி க ம	க ரி ச நி த ப ம க
ச ரி க ம ப த நி ச	நி த ப ம க ரி ச நி
ப த நி ச ரி க ம ப	ம க ரி ச நி த ப ம

கோடிப்பாலை

நி ச ரி க ம ப த நி	நி த ப ம க ரி ச நி
ம ப த நி ச ரி க ம	ம க ரி ச நி த ப ம
ச ரி க ம ப த நி ச	ச நி த ப ம க ரி ச

செம்பாலை

க ம ப த நி ச ரி க	ம க ரி ச நி த ப ம
நி ச ரி க ம ப த நி	ச நி த ப ம க ரி ச
ம ப த நி ச ரி க ம	ப ம க ரி ச நி த ப

அரும்பாலை

த நி ச ரி க ம ப த	ச நி த ப ம க ரி ச
க ம ப த நி ச ரி க	ப ம க ரி ச நி த ப
நி ச ரி க ம ப த நி	ரி ச நி த ப ம க ரி

மேற்செம்பாலை

ரி க ம ப த நி ச ரி	ப ம க ரி ச நி த ப
த நி ச ரி க ம ப த	ரி ச நி த ப ம க ரி
க ம ப த நி ச ரி க	த ப ம க ரி ச நி த

மேலையவற்றோடு அந்தரப்பாலையைந்துஞ் சேரப், பன்னிரு பாலையாகும. அந்தரங்களைப் பாடும்போது, அவற்றின் முதலில நின்ற நரமபை ஈற்றிலும பெய்து பாடுங்கால், அவை தத்தமது பெரும்பாலைகளினுருப் பெறுவன.

ஏழ பெரும்பாலைகளையும் வட்டப்பாலையாக நிறுததுமிடததுஇடமுறையிலே, மேற்செம்பாலையிலிருந்து செவ்வழிப்பாலைக்கும், வலமுறையிலே, செவவழிப்பாலையிலிருநது மேறசெம்பாலைககுஞ் செலலவேண்டும்

'யாழமேற பாலை இடமுறை மெலியக
குழலமேற கோடி வலமுறை வலிய
வலிவும் மெலிவும சமனு மெலலாம
பொலியக் கோதத புலமையோன'

நிறுததலவேண்டி அணைவுறககொண்டு கோதத புலமையோன் என விணை முடிவு செய்க.

'யாழ்மேறபாலை இடமுறைமெலிய' எனபது 'குழல்மேற் கோடி வலமுறை வலிய' என்பதனை அவாவிநினறதாதலின், யாழமேறபாலை வலமுறை வலியக், குழலமேற்கோடி இடமுறைமெலியும் என்பது பெறப்பட்டது

இளியெதிர்க கிரமமாகிய துததக்கிரமததிலே இசைகூட்டபபட்ட யாழ் இடமுறை மெலியுமிடததுஇளிககிரமமாக இசைகூட்டபபட்டு வலமுறை வலியும் குழலிேனாடு செவவிதின் அமைநது நிறகும். துதத, விளரிக கிரமங்களிலே யாழுககு இசைகூட்டும் மரபினை ஒழிபியல இசைக்கணிததததினுட் காண்க.

இவவமைப்பின்கண் பொருநதிய இசை நலஙகள பலவுள கருவியிலமைத்து அந்நலங்களைக் காணுதல எளிதாதலின, இஙகுக கூறுதமைகினறும

மகாமகோபாததியாய ஐயரவாகள், பிரதிபேதமாக அடிககுறிப்பிற்றநத 'ஏாபடு', 'பெறறி', 'வலிய' என்னும பாடஙகள கிடையாதிருபபின, இபபகுதிககு உரைகண்டறிதல முடியாததாகும சிறநதமுறையிலே பழநதமிழ நூலகளை அசசியறறித்தந்த புலனழுககறற அநதணாளராகிய சாமிநாதப் பெருநதகையாருககு மனமுவந்த நன்றிகூறி, இளங்கோவேநதனருளிசசெயத சிலபபதிகாரம என்னும் பெருங்காப்பியத்தின் அரங்கேறறுகாதையினமைநத ஐயைநதடிகளுக்குக், குருவருளை முன்னிட்டுக, கணிதநூல் கருவியாகக கணடுரைதத இசசிறறுரையினை இவவளவோடு முடிக்கின்றும்.



VI. அமராவதி, கோலி என்னும் இடங்களிற் கண்டெடுக்கப்பட்டுச், சென்னைக் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கும் பாடினி யுருவங்கள்

௫—பண்ணியல்

1. நாற்பெரும் பண்; இருபத்தொரு திறம்; பெரும்பண்ணும் திறமும் அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என வகைப்படுதல்

* 'ஈரிரு பண்ணும் எழுமூன்று திறனும்' (பிங்கலந்தை, கஉ௮௰) என்றாராகலின், நாற்பெரும் பண்ணுக்கும் இருபத்தொரு திறங்கள் அமைந்துள்ளன. இவற்றினுள், பாலை யாழ்த்திறன் ஐந்து, குறிஞ்சி யாழ்த்திறன் எட்டு, மருத யாழ்த்திறன் நான்கு, செவ்வழி யாழ்த்திறன் நான்கு, ஆக இருபத்தொன்று.

இவை, அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என வகைக்கு நான்காகி, எண்பத்து நான்காவன. இவற்றின் பெயரும் முறையும் நிகண்டு நூல்களிலே பலவாறு சிதைவுற்றுக் காணப்படுகின்றன. பாட வேறுபாடுகளை யுடன்வைத்து ஒப்பு நோக்கி, இயன்றவரை, சரியான உருவத்தைப் பெற முயல்வாம்.

நிறைந்திடு மராகத்தோடு நேர்திற முறுப்பு மற்றைக
குறுங்கலி யாசானோந்தும் குறித்தபா லைத்திறங்கள்

எனச் சூடாமணி நிகண்டு கூறும் முதலடியின் மோனைத் தொடையை நோக்க, 'நேர்திறம்' என்பதே பொருத்தமான பாடமெனவும், அஃதன்றி, 'நோதிறம்' எனப் பாடங்கொண்டார் வழுவுற்றார் என்பதும் புலப்படும்.

அராக நேர்திற முறுப்புக குறுங்கலி
ஆசா னைந்தும பாலையாழ்த திறனே

எனப் பிங்கலந்தையும், சேந்தன் திவாகரமும் கூறுகின்றன. அங்ஙனமாதலின், அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி, ஆசான் என்னும் ஐந்தும் பாலையாழ்த் திறமாமென உணர்கின்றாம்.

தக்க ராக மந்தாளி பாடை
அந்தி மன்றல் நேர்திறம் வராடி
பெரிய வராடி சாயரி பஞ்சமம்
திராடம் அழுங்கு தனுசி சோமராகம்
மேக ராகம் துக்க ராகம்
கொல்லி வராடி காந்தாரம் சிகண்டி
தேசாக்கிரி சுருதி காந்தார மிவை
இருபதும் பாலை யாழ்த்திற மெனப.

எனப் பிங்கலந்தை (கஉ௮க) யுட் கூறிய இருபதையும், நந்நான்கு ஒரு படியாக, ஐந்து படி செய்து நிறுத்தித், தலைத்தானத்திலே முன்னர்க் காட்டிய அராகமுதல் ஆசா

---

* தமிழ்ப் பொழிலிலே, விக்கிரம ஆண்டு, மாசி, பங்குனித் திங்களிலே வெளிவந்த 'பண்ணுந் திறனும்' என்னும் பொருளுரையின் முற்பகுதி பாயிரவியலின் 9 ஆம் பிரிவினுள்ளே சேர்க்கப்பட்டது. பிற்பகுதி இங்குச் சேர்க்கப்படுகிறது.

னீருகிய ஐந்தினையும் நிறுத்தி நோக்குக. பெரும்பண் வகை பதினாறும் பின்னர்த் தருதுமாதலின், மேல் வருபவற்றைப் பதினேழு முதலாக எண்ணிட்டுக்கொள்க.

	அகநிலை	புறநிலை	அருகியல	பெருகியல
அராகம்	(17) தக்கராகம்	(18) அநதாளிபாடை	(19) அநதி	(20) மனறல
நேர்திறம்	(21) நோதிறம்	(22) வராடி	(23) பெரிய வராடி	(24) சாயரி
உறுபபு	(25) பஞ்சமம	(26) திராடம	(27) அழுங்கு	(28) தனுசி
குறுஙகலி	(29) சோம ராகம	(30) மேக ராகம	(31) துகக ராகம	(32) கொலலி வராடி
ஆசான	(33) காநதாரம	(34) சிகணடி	(35) தேசாக்கிரி	(36) சுருதிகாநதாரம

'குறுங்கலி யென்பது சோமராகம்' எனப் பிங்கலந்தை (கஙஅஅ) யுட் கூறப்பட்டது. ஆதலினாலே, நான்காம் படியில முதற்கண் ணின்ற 'குறுங்கலி' ககு அகநிலை 'சோமராகம்' என்க 'ஆசான்றிறம, காந்தாரம், ஆசானென்று ஒரு பண் ணிற்குப் பேராகவும் இசைத் தமிழிற் கூறுப' எனச் சிலப்பதிகார அருமபத வுரையி னுள்ளும், 'ஆசான் சாதி நால்வகையாவன ஆசானுக்கு அகசசாதி காந்தாரம, புறச்சாதி சிகண்டி, அருகுசாதி தசாக்கிரி, பெருகுசாதி சுத்த காந்தார' மென அடி யாாக்குநலலா ருரையினுள்ளும் (புறஞ்சேரியிறுதத காதை) காணலாகும

சாரற் றிறமெனி னதுகாந தாரம.

எனப் பிஙகலந்தை (கஙஅகூ) அசசுப் புத்தகத்தினுட் காணப்படுகிற சூததிரம், 'ஆசான றிறமெனி லதுகாந தாரம்' என்றிருததல்வேணடுமெனபது மேற்காட்டிய சிலப்பதி கார உரைப்பாகத்தாற றெளிவாகின்றது

துகக ராக நோதிறமாகும.

எனப் பிங்கலந்தை (கஙஅகூ)ப் பதிப்பினுட காணப்படுவது வழுவான பாடமென்பது வெளிப்படை, பாலைககுரிய திறமெனக் காட்டிய இருபதினுளளும, 'துக்கராகம', 'நேர்திறம்' என்பன ஒருபொருட கிளவி யெனக கொள்ளிற், பாலைததிறம பத் தொன்பதாகி, வழுப்படுமாதலின், அகநிலைசசாதி ஐந்தினுள்ளே, நோதிறம ஒன்றினை யொழித்து, ஒழிந்த நான்கிறகும பரியாய நாமங கூற வெழுந்த சூத்திரஙகளுள்ளே, முதனின்ற இசசூததிரம், 'தகக ராக மராகத் திறமாகும' என்றிருததல பொருத தமா மென்க. இதனையடுத்த சூத்திரம், 'உறழப்புக் காந்தார பஞ்சம மாகும்' பிஙகலந்தை (கஙஅஎ) என அச்சுப் புத்தகததினுட காணப்படுகினறது. அதனை 'உறுப்புக் காந்தார பஞ்சம மாகும்' எனத் திருததிககொள்க பாலை யகநிலைச்சாதி யாகிய பஞ்சமம் 'காந்தார பஞ்சமம்' என இசசூத்திரததினுற பெறப்படுகின்றது; ஆயினும், மருதயாழ்த் திறததினுள்ளே யொரு 'காந்தார பஞ்சமம' காணப்படு கிறது இனிக், குறிஞ்சி யாழ்த்திறன் வகையை ஆராய்வா னெடுத்துக்கொள்வாம்.

நைவளங் காந்தாரம் மெய்ப்படு மலையம்
பஞ்சுர மருளயிரப் பாற்றுச் செந்திறம்

எனச் சேந்தன் திவாகரப் பதிப்பினுட் காணப்படுகின்றது இப்பாடத்தினைப் பின் பற்றிப்போலும், சூடாமணி நிகண்டுப் பதிப்பினுள்ளும்,

பறைந்த நைவளங் காந்தாரம் படுமலை மருளயிர்ப்புச்
செறிந்த பஞ்சுரமெய் யாற்றுச் செந்திறங் குறிஞ்சி யென்ப

என்னும் மூலபாடமும், 'குறிஞ்சியாழ்த்திறத்தின் பெயர் நைவளம், காந்தாரம், படுமலை, மருள், அயிர்ப்பு, பஞ்சுரம், மெய், ஆற்றுச்செந்திறம்' என்னும் உரையுங் காணப்படுகின்றன மூலபாடத்தின் ஈற்றடி, 'செறிந்த பஞ்சுர மரற்றுச் செந்திறங் குறிஞ்சி யென்ப' என்றிருத்தல் பொருத்தமாகும்.

பிங்கலந்தை நூலாசிரியர், குறிஞ்சி யாழ்த் திறத்தின் பெயர்—நைவளம், காந்தாரம், படுமலை, மருள், அயிர்ப்பு, பஞ்சுரம், அரற்று, செந்திறம்' எனக் கூறுவதோடு, சில திறங்களுக்குப் பரியாயப் பெயர்களுந் தருகின்றார் அவை வருமாறு.

'நைவள மென்பது நட்ட பாடை'	(கங்கo)
'படுமலை யென்பது பகரிற்கவ் வாணம்'	(கங்கஉ)
'அயிர்ப்பு அறுத்திர பஞ்சம மாகும்'	(கங்கங)
'அரற்றுக் குறிஞ்சி. .. . .'	(கங்கச)
'செந்திறஞ் செந்துருதி...... ....'	(கங்கரு)

குறிஞ்சி யாழ்த்திறன் வகை முப்பத்திரண்டினையுங் கூறுகிற சூத்திரம் பதிப்பினுள்ளே மிகச் சிதைந்து காணப்படுகிறது அது வருமாறு.

'நட்டபாடை யந்தாளி மலகரி
விபஞ்சி காந்தாரஞ் செருத்தி கௌடி
உதய கிரிபஞ் சுரமபழம் பஞ்சுரம்
மேக ராகக் குறிஞ்சிகே தாளி
குறிஞ்சி கொள்ள வாணம பாடை சூர்துக்க ராகம்
நாக மருளபழந் தக்க ராகம்
திவ்விய் வராடி முதிர்ந்த விந்தள
மறுத்திர பஞ்சமம் தமிழ்க்குச் சரியருட்
புரிநா ராயணி நட்ட ராக
மிராமக் கிரிவி யாழக் குறிஞ்சி
பஞ்சமம தக்கணுதி சாவகக் குறிஞ்சி
யாநந்தை யெனவிவை முப்பத் திரண்டுங்
குறிஞ்சி யாழ்த்திற மாகக் கூறுவர்' —பிங்கலந்தை, கங அஉ.

இதனுள் எட்டாமடியிலுள்ள 'தமிழ்க்' என்னும் பதத்தை நீக்கி, ஒன்பதாமடி முதலிலுள்ள 'புரி' என்னு மசையை எட்டாமடி ஈற்றிற் பெய்து, 'நாராயணி', 'நட்ட' என்னுஞ் சொற்களுக்கிடையே 'குறிஞ்சி' யென்றொரு சொற்பெய்து, 'பஞ்சமம்' என்பதைச் செந்திறமென மாற்றிப் பாடங்கொண்ட பின்னர், முன்பு செய்ததுபோல, அட்டவணைப்படுத்தி நோக்குவோமாக

	அகநிலை	புறநிலை	அருகியல்	பெருகியல்
நைவளம்	37. நட்டபாடை	38. அந்தாளி	39 மலகரி	40. விபஞ்சி
காந்தாரம்	41. காந்தாரம்	42 செருந்தி	43 கௌடி	44. உதயகிரி
பஞ்சுரம்	45. பஞ்சுரம்	46 பழம் பஞ்சுரம்	47. மேகராகக் குறிஞ்சி	48. கேதாளிக் குறிஞ்சி
படுமலை	49. கௌவாணம்	50. பாடை	51 சூர்துங்க ராகம்	52. ராகம்
மருள்	53 மருள்	54 பழந்தக்க ராகம்	55. திவ்விய வராடி	56. முதிர்ந்த இந்தளம்
அயிரப்பு	57. அந்தர பஞ்சமம்	58 குச்சரி	59 அருட்புரி	60. நாராயணி
அராறு	61 குறிஞ்சி	62 நட்ட ராகம்	63 இராமகிரி	64. வியாழக்குறிஞ்சி
செந்திறம்	65. செந்திறம்	66. தக்கணதி	67 சாவகக் குறிஞ்சி	68. ஆநந்தை

அந்தாளிக் குறிஞ்சியெனத் தேவாரத்துள் வழங்கும் பண் (38) அந்தாளியா, அன்றேல், (48) கேதாளிக் குறிஞ்சியா என ஐயுறற்பாலது.

பஞ்சுரமும் பழம்பஞ்சுரமும், அகநிலையும் புறநிலையுமாகி, இருவேறு சாதியாய் நிற்றலின், 'பஞ்சுரம் பழம் பஞ்சுரமாகும்மே' யெனப் பிங்கலந்தை (கஙகக) நூல் ஒன்றாக்கிக் கூறிய சூத்திரப் பொருள் புலப்படவில்லை. 'ஆரிய குச்சரி' யென வொன்று மருதயாழ்த் திறத்தினுட் கூறப்படுமாதலின், ஈண்டு, அடையடுக்காது, வாளா, 'குச்சரி' யென்று நிற்பதே பொருத்தமாயிற்று.

தேவாரத்துள் வரும் கொல்லிக் கௌவாணம் ஈண்டுக் கூறிய கௌவாணமா யிருக்கலாம்.

இனி, மருதயாழ்த்திறன் வகை யிவையென ஆராயப்புகுவாம்.

'நவிர்படு குறிஞ்சி பியந்தையிந் நான்கும்
மருத யாழின் திறனா குமமே'

என்னுஞ் சேந்தன் திவாகரப் பதிப்பினை நோக்கிப்போலும், சூடாமணி நிகண்டுப் பதிப்பாசிரியரும், 'பெருநவிர் படுகுறிஞ்சி பியந்தையென இருந்த நான்கும்' என மூலபாடமும், 'மருதயாழ்த்திறத்தின் பெயர்-நவிர், படு, குறிஞ்சி, பியந்தை' என உரையுங் கொண்டார். மருதயாழ்த்திறத்தினுள்ளே, குறிஞ்சியென வொன்று புகுவது பொருந்தாதாகலின், 'பெருநவிர் படுகுறிஞ்சி' யென்பதை 'பெருநவிர் வடுகு வஞ்சி' எனத் திருத்தி யமைத்துக்கொள்ளுதல் முறையாகும். பியந்தைக்குச் செய்திறமென மற்றுமொரு பெயருண்டென்பது,

'நவிர்வடுகு வஞ்சி செய்திற நான்கும்
மருத யாழக்கு வருந்திற னாகும்'

என்னும் பிங்கலந்தை (கஙஎஅ)ச் சூத்திரத்தா னறியக்கிடக்கின்றது.

'நவிர் தக்கேசி' (௧௩௬௪)
'இந்தளம் வடுகெனல' (௧௩௬௭)
'வஞ்சி பாக்கழி' (௧௩௬௮)

என்னும் பிங்கலந்தைச் சூத்திரங்களால், நவிர், வடுகு, வஞ்சி யென்பவற்றிற்கு, முறையே, தக்கேசி, இந்தளம், பாக்கழி யென்பன பரியாயப் பெயர்களாமென அறிகின்றும்.

'தக்கேசி கொல்லி யாரிய குச்சரி
நாகதொனி சாதாளி யிந்தளந் தமிழ்வேளர்
கொல்லி காந்தாரங் கூரந்த பஞ்சமம் பாக்கழி
தத்தள பஞ்சம மாதுங்க ராகம்
கௌசிகஞ் சீகா மரஞ்சாரல் சாங்கிமம்
எனவிவை பதினறு மருதயாழ்த் திறனே' —பிங்கலந்தை, ௧௩௮௩

இரண்டாமடியில், 'சாதாளி யிந்தளம' என்றிருப்பதை 'யிந்தளஞ் சாதாளி' யென மாற்றுக ஈற்றயலடியிற் 'கௌசிகம்', 'சீகாமரம்' என்பவற்றிடையே 'பியந்தை' என்னும் மொழியைப் பெய்துகொள்க. ஈற்றடியிலுள்ள 'என விவை' என்பதை நீக்கி, ஈற்றயலடி யிறுதியிலுள்ள 'சாங்கிமம்' என்னும் மொழியினை நிறுத்திப், பின்னர் அட்டவணைப்படுத்திக் கொள்ளக் கிடைப்பது

	அகநிலை	புறநிலை	அருகியல்	பெருகியல்
நவிர்	(69) தக்கேசி	(70) கொல்லி	(71) ஆரியகுச்சரி	(72) நாகதொனி
வடுகு	(73) இந்தளம்	(74) சாதாளி	(75) தமிழ்வேளர் கொல்லி	(76) காந்தார பஞ்சமம்
வஞ்சி	(77) பாக்கழி	(78) தத்தள பஞ்சமம்	(79) மாதுங்கராகம்	(80) கௌசிகம்
செய்திறம்	(81) பியந்தை	(82) சீகாமரம்	(83) சாரல்	(84) சாங்கிமம்

'செய்திறஞ் சிகண்டி' யெனப் பிங்கலந்தை (௧௩௬௬)ப் பதிப்பினுட் காணப்படுவதனைச், 'செய்திறம் பியந்தை' யெனக் கொள்ளவேண்டுமென்பது இவ்வாராய்ச்சியாற் பெறப்படுகின்றது

'குறண்டி நோதிறம்' என மற்றொரு சூத்திரம் பிங்கலந்தையுள்ளே இருந்திருக்கவேண்டும்.

இனிச், செவ்வழியாழ்த்திறம் இவையென ஆராய்வாம்.

'குறண்டி யாரிய வேளர் கொல்லி
தனுக்காஞ்சி யியந்தை யாழ்பதங் காளி
கொண்டைக் கிரிசேவனி யாமை சாளர

> பாணி நாட்டம தாணு முலலை
> சாதாரி பைரவம் காஞ்சி யெனவிவை
> பதினாறு செவவழி யாழ்ததிற மெனப'

எனப் பிஙகலநதை (கஉஅச)ப் பதிப்பு கூறுகிறது

'முலலை சாதாரி பைரவம் காஞ்சி' யென்றுராகலின், முல்லையும, சாதாரியும், ஓரே வகையில், அகநிலையும், புறநிலையுமா மெனபது பெறப்பட்டது.

'யாமை சாளர் பாணிநாடடம தாணு' என நின்றமையின், 'யாமை' அகநிலை வகையைச சாாநததென்பது பெறபபடடது.

> 'நோதிறம பெயாதிறம யாமையாழ சாதாரி
> எனறிவை நானகும முலலையாழத திறனே'

எனச் சேநதன் திவாகரம் கூறும்.

> 'நோதிறம பெயாதிறம சாதாரி முல்லையென
> நாலுஞ செவவழி நலயாழத திறனே'

எனப் பிஙகலநதை (கஉஎகூ) கூறும்

> 'வருக்குநோ திறததினொடு தருபெயாத திறமே
> யாமை சாதாரி நானகு முலலை'

எனச சூடாமணி நிகணடு கூறும

புறநீர்மையாகிய நோதிறம பள்ளியெழுசசிககுரிய பாலையாழத்திறப் பண்ணுதலின, எறபாடு, மாலைக்குரிய செவவழியாழததிறமாகாது ஆதலினால், ஈண்டுக கூறபபடடது 'நோதிறம' என்றறிக 'பண்ணோ திறம்' எனப் பரிபாடற பதிப்பினுட் கண்ட தொடாமொழியைப் பிரிததெழுதுங்கால், அது பண் + நோதிறம் எனப் பிரிநது நிறபதையும, பண் + நோதிறம எனப் பிரிபடாமையும உற்று நோககுக நோதிறம, குறண்டி யென்பன பரியாயபபெயர்கள

இஙஙனம் ஆராயவுழி, மேறகாடடிய பிங்கலநதைச சூததிரம்,

> 'நோதிறம பெயாதிறம யாமை முலலையென
> நாலுஞ செவவழி நலயாழத திறனே'

என நிறகும

செவவழியாழ முல்லையாழ எனவும வழஙகும எனபதும், முல்லை, சாதாரி என்னும பண பெயர்கள் தமமுள் வேறுபாடின்றி வழஙகப்படுவனவா மென்பதும், மேற்கண்ட ஆராயசசியினாலே தெளிவாகின்றது

மேலே திறங்கூறிய சூததிரததினுள், 'யியநதை', 'காளி' என நிறபனவற்றை, முறையே, 'வியநதம்', 'தாளி' என மாற்றிக்கொள்க

மேற்காட்டிய குறிப்புக்களோ டுடனபட்டு, அட்டவணைப்படுத்தி நோக்குங் கால், யாம் பெறுகின்ற செவ்வழியாழ்த் திறங்களாவன

	அகநிலை	புறநிலை	அருகியல	பெருகியல
சோதிறம	(85) குறண்டி	(86) ஆரியவேளா கொல்லி	(87) தனுக்காஞ்சி	(88) வியாதம்
பெயாதிறம்	(89) யாழபதம	(90) தாளி	(91) கொணடைக் கிரி	(92) சிவனி
யாமை	(93) யாமை	(94) சாளாபாணி	(95) நாட்டம	(96) தானு
மூலலை	(97) மூலலை	(98) சாதாரி	(99) பைரவம்	(100) காஞ்சி

இவ்விப், பெரும்பண் நான்கும், அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்னும் வேறுபாட்டினாலே, பதினாறும் அவைதமமைக் கூறும பிங்கலந்தைச் சூத்திரம் வருமாறு

‘ ஈரிரு பணணும எழுமூனறு திறனு
மாகின் றனவிவை யிவறறுட் பாலையாழ்
சொநது மணடலி யாழபவுரி மருதயாழ
தேவ தாளி நிருபதுஙக ராகம
நாக ராக மிவற்றுட குறிஞசியாழ்
ஆசாரி சாய வேளா கொலலி
கின்னராகளு செவவழி மௌசாளி சீராகம
சாதி யிவைபதி னாறும பெருமபண் ’ —பிஙகலநதை, கஙஅ௰

சிலப்பதிகாரதது, ஊர்காண் காதை, அடியார்க்குநல்லாருரையினுள் ஆளப்பட்ட பெயர்களைக்குறிதது நோக்குமிடத்து, இச்சூத்திரத்தின் மூன்றுமடியினை ஐந்தாம் அடி ஆக்கவேணடுமென்பதும், ‘ ஆசாரி ’ என்பதனை ‘ ஆகரி ’ எனவும, ‘ கின்னராகம் ’ என்பதனைக் ‘ கின்னரம் ’ எனவும், ‘ மௌசாளி ’ என்பதனை ‘ வேளாவளி ’ எனவும், ‘ பவுரி ’ என்பதனை ‘ அரி ’ எனவும், மாற்றுதல்வேண்டுமெனவுங் காண்கின்றோம். இத் திருத்தங்களோடு சூத்திரததை எழுதப்பெறுவது

‘ ஈரிரு பணணு மெழுமூனறு திறனு
மாகின் றனவிவை யிவறறுட் பாலையாழ
தேவ தாளி நிருபதுஙக ராகம
நாக ராக மிவற்றுட குறிஞ்சியாழ
செநது மணடலி யாழரி மருதயாழ்
ஆகரி சாய வேளா கொல்லி
கின்னரஞ் செவவழி வேளாவளி சீராகம்
சாதி யிவைபதி னாறும் பெரும்பண் ’

மேற்காட்டிய குறிப்புக்களோ டுடன்பட்டு, அட்டவணைப்படுத்தி நோக்குங்கால், யாம் பெறுகின்ற செவ்வழியாழத் திறங்களாவன

	அகநிலை	புறநிலை	அருகியல்	பெருகியல்
நோதிறம்	(85) குறண்டி	(86) ஆரியவேளா கொல்லி	(87) தனுககாஞ்சி	(88) வியாழம்
பெயாதிறம்	(89) யாழ்பதம	(90) தாளி	(91) கொண்டைக் கிரி	(92) சீவனி
யாமை	(93) யாமை	(94) சாளாபாணி	(95) நாட்டம	(96) தானு
முல்லை	(97) முல்லை	(98) சாதாரி	(99) பைரவம	(100) காஞ்சி

இனிப், பெரும்பண நான்கும், அகநிலை, புறநிலை, அருகியல், பெருகியல் என்னும் வேறுபாட்டினுலே, பதினுருகும் அவைதம்மைக் கூறும பிங்கலந்தைச் சூத்திரம் வருமாறு

‘ ஈரிரு பணணும எழுமூன்று திறனு
மாகின றனவிவை யிவறறுட் பாலையாழ
செநது மணடலி யாழபவுரி மருதயாழ்
தேவ தாளி நிருபதுஙக ராகம
நாக ராக மிவறறுட குறிஞசியாழ்
ஆசாரி சாய வேளா கொலலி
கினனராகஞ் செவவழி மௌசாளி சீராகம
சநதி யிவைபதி னுறும பெருமபண ’ —பிஙகலநதை, கரு-அ

சிலப்பதிகாரத்து, ஊாகாண் காதை, அடியார்க்குநல்லாருரையினுள் ஆளப்பட்ட பெயர்களைக்குறிதது நோக்குமிடதது, இசசூத்திரத்தின் மூன்றுமடியினை ஐந்தாம் அடி ஆக்கவேண்டுமென்பதும், ‘ஆசாரி’ என்பதனை ‘ஆகரி’ எனவும், ‘கின்னராகம்’ என்பதனைக ‘கின்னரம்’ எனவும், ‘மௌசாளி’ என்பதனை ‘வேளாவளி’ எனவும், ‘பவுரி’ என்பதனை ‘அரி’ எனவும், மாற்றுதல்வேண்டுமெனவுங் காண்கின்றும. இத் திருததங்களோடு சூததிரத்தை எழுதப்பெறுவது

‘ ஈரிரு பணணு மெழுமூன்று திறனு
மாகின றனவிவை யிவறறுட் பாலையாழ்
தேவ தாளி நிருபதுஙக ராகம
நாக ராக மிவறறுட் குறிஞசியாழ
செநது மண்டலி யாழரி மருதயாழ
ஆகரி சாய வேளா கொல்லி
கின்னரஞ் செவவழி வேளாவளி சீராகம்
சநதி யிலைபதி னுறும பெருமபண ’

இதனை அட்டவணைப்படுத்தி நிறுத்தப் பெறுவது :

அகநிலை	புறநிலை	அருகியல்	பெருகியல்
1. பாலையாழ்	2. தேவதாளி	3 நிருபதுங்கராகம்	4. நாகராகம்
5. குறிஞ்சியாழ்	6. செந்து	7 மண்டலியாழ்	8. அரி
9. மருதயாழ்	10. ஆகரி	11. சாயவேளாகொல்லி	12. கின்னரம்
13. செவ்வழியாழ்	14. வேளாவளி	15. சீராகம்	16. சந்தி

இவ்வதிகாரத்தினுள் கூறியவற்றைத் தொகுத்துக் கூறுமிடத்துப் பெறப்படுவன :

தொகைப்பெயர்	குறியீட்டெண்	
நாற்பெரும்பண்	1, 5, 9, 13	
பெரும்பண் வகை (16)	1 முதல் 16 வரை.	
இருபத்தொரு திறன்	17, 21, 25, 29, 33	(பாலை)
	37, 41, 45, 49, 53, 57, 61, 65	(குறிஞ்சி)
	69, 73, 77, 81	(மருதம்)
	85, 89, 93 97	(செவ்வழி)
திறன் வகை (84)	17 முதல் 100 வரை.	
பண் (103)	1 முதல் 100 வரையும், (101) தாரப் பண் டிறம், (102) பையுள் காஞ்சி, (103) படுமலை, என்னும் மூன்று மெனப,	

நூற்றுமூன்று எனத் தொகைபெற்று நின்ற பண்களுள்ளே, தேவாரத்துட் காணப் படுவன :

செவ்வழி (13),
தக்கராகம் (17),
நோதிறம் (புறநீர்மை) (21),
பஞ்சமம் (25),
காந்தாரம் (33, 41 ?),
நட்டபாடை (37),
அந்தாளிக்குறிஞ்சி (38),
பழம்பஞ்சுரம் (46),
மேகராகக்குறிஞ்சி (47),
கொல்லிக்கௌவாணம் (49),
பழந்தக்கராகம் (54),
குறிஞ்சி (61),
நட்டராகம் (62),
வியாழக்குறிஞ்சி (64),
செந்திறம் (செந்துருதி) (65),
தக்கேசி (69),
கொல்லி (70),
இந்தளம் (73),
காந்தார பஞ்சமம் (76),
கௌசிகம் (80),
பியந்தை (81),
சீகாமரம் (82),
சாதாரி (98),

எனு மிவையாம்.

திருவாவடுதுறை யாதீன ஏட்டுப்பிரதி யொன்றிற் காணப்பட்டதாகத் திரு. பொன்னுதுவாமூர்த்திகள குறிப்பிட்டன வருமாறு:

பகற்பண்கள் பத்து; இவை ஒவ்வொன்றினுக்கும் முறையே மும்மூன்று நாழிகையாக மேலேற்றிக் காலவரையறை கொள்க.

பகல்

கால வரையறை நாழிகை	பண்	இராகம்
0— 3	புறநீர்மை	ஸ்ரீகண்டி
3— 6	காநதாரம, பியந்தை	இசிசசி
6— 9	கௌசிகம்	பயிரவி
9—12	இந்தளம, திருக்குறுநதொகை	நௌிதபஞசமி
12—15	தககேசி	காம்போதி
15—18	கட்டராகம, சாதாரி	பநதுவராளி
18—21	நடடபாடை	நாட்டைக்குறிஞ்சி
21—24	பழமபஞசுரம	சஙகராபரணம
24—27	காநதார பஞசமம	கேதாரகௌளை
27—30	பஞசமம	ஆகிரி

இராப்பண்கள எட்டு, ஒவ்வொன்றிற்கும் மூன்றேமுக்கால் நாழிகையாக மேலேற்றிக் காலவரையறை கொள்க

இரவு

நாழிகை	பண	இராகம்
30 —$33\frac{3}{4}$	தக்கராகம	கனனட காம்போதி
$33\frac{3}{4}$—$37\frac{1}{2}$	பழநதகக ராகம	சுதத சாவேரி
$37\frac{1}{2}$—$41\frac{1}{4}$	சீகாமரம	நாதநாமக் கிரியை
$41\frac{1}{4}$—45	கொலலி, கொலலிக்கௌவாணம, திருநேரிசை, திருவிருததம	சிநது கன்னடா
45 —$48\frac{3}{4}$	வியாழக குறிஞசி	ஸௌராஷடரம
$48\frac{3}{4}$—$52\frac{1}{2}$	மேகராகக குறிஞசி	நீலாமபரி
$52\frac{1}{2}$—$56\frac{1}{4}$	குறிஞசி	மலகரி
$56\frac{1}{4}$—60	அநதாளிக குறிஞசி	ஸைலதேசாட்சி

பொதுப்பணகள்:

செவவழி
செந்துருத்தி
திருததாண்டகம்
எதுகுலகாம்போதி
மத்தியமாவதி
பியாகடை

திருவாய்மொழிப் பதிப்பினுள்ளே பண்ணும் இராகமும் ஒருங்கே குறிக்கப் பட்டிருக்கின்றன. இவை வருமாறு .

பண்ணுக் குரிய எண்	பண்	இராகம்
1	பாலையாழ்	தோடி, முகாரி, பந்துவராளி
17	தககராகம	பைரவி, சுருட்டி, கல்யாணி, நீலாமபரி, யமுனா கலயாணி, ஸௌராஷ்ட்ரம.
21	புறநீரமை	எதுகுல காமபோதி, கனடா
25	பஞசமம	பிலகரி, முகாரி, சஙகராபரணம்
33, 41	காநதாரம	நாயாசி, மோஹநம, சாவேரி
37	நட்டபாடை	நாயாசி, பியாகடை, கனடா, ஸ்ரீராகம, ஆநநதபைரவி, அபரூப ராகம
42	செருந்தி	கலயாணி
46	பழம்பஞசுரம	நாதநாமககிரியை, சாரஙகம
54	பழந்தக்காரகம	ஆநநதபைரவி,ஸௌராஷ்ட்ரம,காம்போதி, பநதுவராளி, கனடா
56	முதிாநத குறிஞசி முதிாநத விநதளம்	நாதநாமககிரியை, செஞசுருட்டி, ஆநநத பைரவி, சஹானா, காபி, கமாஸ
61	குறிஞசி	தோடி, முகாரி, தவஜாவநதி
62	நடடராகம	ஆசாவேரி
69	தககேசி	ஆரபி
70	கொல்லி	மோஹநம்
73	இநதளம	தேசிய ராகம, குணடககிரியை, ஆனநத பைரவி, ஸௌராஷடரம
80	கௌசிகம (கைசிகம)	செஞசுருடடி
82	சீகாமரம	பைரவி, முகாரி, நாதநாமககிரியை, சோக வராளி, சாவேரி, கல்யாணி, யதுகுல காம போதி
88	வியநதம	மததியமாவதி
95	நாடடம	முகாரி, யமுனா கலயாணி, சஹானா, உசேனி, சுருடடி, அடாணா, கேதாரா கௌளம, ஸாரஙகம.

மேலே காட்டிய அட்டவணைகளை நோக்குமிடத்துப், பதின்மூன்று பண்கள் தேவாரத்திற்கும் திருவாய்மொழிக்கும் பொதுவாகவுள்ளன வென்பதும், தேவாரத்திற் காணப்படாத ஆறு பண்கள் திருவாய்மொழியில் உள்ளன வென்பதும், திருவாய்மொழியிற் காணப்படாத எட்டுப்பண்கள் தேவாரத்திலுள்ளன வென்பதும் பெறப்பட்டன. பண்ணுக்கு நேராகக் குறிக்கப்பட்ட இராகப் பெயர்கள் பெரிதும் முரணித் தோன்றுவதை நோக்குமிடத்து, அவை பிற்காலத்தாரால் வரையறையின்றிக் குறிக்கப்பட்டன வென்பதும் பெறப்பட்டது.

புறஞ்சேரியிறுத்தகாதை யுரையினுள்ளும், ஊர்காண்காதை யுரையினுள்ளும், அடியார்க்குநல்லார் கூறிய சிலகுறிப்புகளை ஆதாரமாகக்கொண்டு, எண்பத்துநான்கு என்னுந் தொகையினவாகிய திறங்கள், அகநிலை 21, புறநிலை 21, அருகியல் 21, பெருகியல் 21 என வகைப்பட்டு நின்றனவென நிறுவியதோடு, நிகண்டு நூல்களை ஒப்புநோக்கி, அவைதமது பெயர்களையும் இயன்றவுரை தூய்மைசெய்து நிறுவினும்.

பரியாயப் பெயர்கள் உடைமையின, அகநிலைத் திறங்களே முதலில் வழக்கிலிருந்தனவெனக் கொள்ளல் வேண்டும். நைவளம், ஆசான் என்பன பழைய பெயர்கள். சாதி வகுத்தகாலத்தில் இவை, முறையே, நட்டபாடை, காந்தாரம் என்னும் புதுப்பெயர் பெற்றன. காந்தாரம் என்பது குறிஞ்சித்திறம் ஒன்றுக்கும் பெயராதலின், பாலைத்திறமாகிய காந்தாரத்தைப் பழைய 'ஆசான' பெயரால் வழங்குதல் நலமாகும்.

திறங்களின் பெயர்களுட் சில வடமொழிச் சொற்களாகக் காணப்படுதலின், வடநாட்டுத் தொடர்பு ஏற்பட்டபின்பே இசைநூற்றுறையினும் சாதி வேற்றுமை எய்தியதென் றெண்ணவேண்டியிருக்கிறது.

பிங்கலநிகண்டு எழுதப்பட்ட காலத்திலே, சாதிவகுப்பும், நூற்றுமூன்று என்னும் தொகையும் நிலைபெற்றிருந்தன.

வேனிற்காதையினுள்ளே, 'அகநிலை மருதமும், புறநிலை மருதமும், அருகியல் மருதமும், பெருகியல் மருதமும், நாலவகைச் சாதியு நலம்பெற நோக்கி' என்புழிக் குறித்த நான்கும் அரும்பத உரையாசிரியரால் ஒருவாறு விளக்கப்பட்டன. இசையாராய்ச்சி செய்யுமிடத்து, அவரது அடிச்சுவட்டில் நீங்காது செல்லும் அடியார்க்குநல்லார், இவ்விடத்து அவரோடு மாறுகொண்டு, பிறிதோருரை தருகின்றார். இருவருரையையும் இவ்வியலின் மற்றோரிடத்தில் ஆராய்வாம். நாற்பெரும்பண்கள், அகம், புறம், அருகு, பெருகு என வகைப்படுங்கால் எய்தும் பெயர்களை ஊர்காண்காதை யுரையினுள்ளும், ஆசான்திறத்தின் அகம், புறம், அருகு, பெருகு எய்தும் பெயர்களைப் புறஞ்சேரியிறுத்த காதையினுள்ளும் அடியார்க்குநல்லார் தருகின்றார். அரும்பதவுரையாசிரியர் 'ஆசான்றிறம்-காந்தாரம், ஆசானென்று ஒரு பண்ணிற்குப் பெயராகவும் இசைத்தமிழிற் கூறுப' எனக்கூறியமையினாற் பிங்கலநிகண்டிற் காணப்படும் பண் வகையும் தொகையும் அரும்பதவுரையாசிரியர் காலத்திற்கும் அடியார்க்குநல்லார் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தி லெழுந்ததோர் இசைநூலிலே முதலில் வகுத்துக் கூறப்பட்டிருத்தல்வேண்டும்.

'இவ்வேழு பெரும் பாலையினையும் முதலடுத்து நூற்றுமூன்று பணனும் பிறக்கும்', என வேனிற்காதையுரையினுள்ளே அடியார்க்குநல்லார் கூறுதலின, பண்ணுந் திறனும் பிறத்தற்கு நிலைக்களமாகநின்ற ஏழ்பெரும்பாலையோடு சார்த்தி, அவை தம்மை வகைப்படுத்துதலே இயற்கைமுறையென அறிகின்றாம. இம்முறையினையே பண்டையோர் கொண்டாரெனறெண்ண இடமுண்டு யாமும் இவ்வாராய்ச்சி நூலினுள்ளே ஏழ்பெரும்பாலைகளை முதலடுத்தே நூற்றுமூன்று பண்களின் இசையுருவங்களைக் காண முயல்வாம் பழைய இசைமரபு கூறும் நூல்கள் மறைந்தமையின், இன்னவுரு இன்ன பெயரினைப்பெறும் என நிச்சயித்தறகு வழியில்லை. வடநூலார் எடுத்தாண்ட ஒருசிலவற்றிற்கு மாத்திரம் ஒருவாறு பெயர் நிச்சயம் செயயலாம்

'செம்பாலையுட பிறககும பண்கள்.—பாலையாழ, நாகராகம, ஆகரி, தோடி, கௌடி, காந்தாரம், செந்துருத்தி உதயகிரி யெனவிவை பிறவும் விரிப்பின் உரை பெருகுமாதலின், அவற்றை வந்தவழிக் கணடுகொளக' என்பது வேனிற்காதை அடியார்க்குநல்லாருரை. தோடியென்னுஞ் சொல நூறறுமூன்று பண் பெயரினுள் வரவிலலை. இககாலத்திலே, தென்னாட்டிலே, தோடியென வழஙகுவது விளரிப்பாலையுள் உதித்த பண்ணாகும். வடநாட்டார் இதனைப் பைரவி யென்பா. வடநாட்டிலே தோடியென வழங்குவது தென்னாட்டுப் பந்துவராளி வராளி வராடியெனவும் நடககும். பாலையாழ்த திறத்தில 22 என்னும எண் பெற்றுநின்ற இப்பண் மேறசெம்பாலையுட் பிறப்பது. செந்துருத்தி என்பது குறிஞ்சியாழ்த் திறததில் 65 எனனும எண் பெற்ற செந்திறத்தின் மறறொருபெயர் கௌடி (43) குறிஞ்சியாழக் காந்தாரத்தின் அருகியல், உதயகிரி (44) பெருகியல், காந்தாரம் (41) அகநிலை, நாகராகம் (4) பாலையாழ் என்னும் பெரும்பண்ணின் பெருகியல, ஆகரி (10) மருதயாழ் எனனும் பெரும் பண்ணின் புறநிலை செமபாலையுட பிறந்த பண்கள் பாலையாழ, குறிஞ்சியாழ், மருதயாழ் என்னும மூனறு பெரும்பணணையுஞ் சாாநதுநிற்றல காண்கின்றாம.

வேங்கடமகி கொண்ட ஆகரிமேளம, மேலே யாம் மருதயாழ்ப் பெரும்பண்ணின் புறநிலையெனக் கூறிய ஆகரியோடு பெயரொறறுமை யுடையது. இக்காலத்தார் இதனைக் கீரவாணி யென்பா இதனையடுத்த கரஹரப்பிரியா வேங்கடமகியினாலே ஸ்ரீராகமேளம் எனக்கொள்ளப்பட்டது. இது செவவழியாழப் பெரும்பண்ணின் அருகியலாய், 15 என்னும எண்பெற்ற சீராகம் என்னும பண்ணோடு பெயரொற்றுமை யுடையது கரஹரப்பிரியா கோடிப்பாலையாகும் அஙஙனமாதலின், செவவழியாழ அருகியல் கோடிப்பாலையாய நின்றதெனக கொள்ளல்வேண்டும். வேனிற்காதை யுரையினை ஆராயுமிடதது இப்பொருளினை மேலும் விரிப்பாம.

மேலே நாம அட்டவணைப்படுததிய பெரும்பண் 16, திறம் 84+3 ஆகிய 103 இனையும் பணணென வழங்குதல் மரபாதலின, திறமெனப்படுபவும் பொதுவகையாகப் பணணென்னும பெயருக்கு உரியவென்பது பெறப்பட்டது.

வடநூலாசிரியர் கொண்ட மரபுபற்றி, 7, 6, 5, 4 சுவரஙகளை முறையே கொண்ட சம்பூரணம், ஷாடவம், ஔடவம, சதுர்த்தம் என்னும் நான்கினையும் பண், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் என வழங்குதலுண்டு எனபது புறஞ்சேரி

யிறுத்த காதைக்கு அடியார்க்குநல்லார் கண்ட உரையினு லறியப்படுகின்றது. ('ஔடவம்' என்னும் சொல்லின் சுத்தவுருவம் 'ஔடுவம்' ஆமெனச் சங்கீதரத்தினா கரம் கூறும்)

'ஏழே ஏழே நாலே மூன்று' என ஆளுடையபிள்ளையாரது தேவாரத்துட் காணப்படுதலின், பிள்ளையார் நிலவுலகத்தில் வாழ்ந்த காலத்திலே, பாலையாழ் ஏழு திறமும், குறிஞ்சியாழ் ஏழு திறமும், மருதயாழ் நான்கு திறமும், செவ்வழியாழ் மூன்று திறமும் பெற்று நடந்தனவென எண்ண இடமுண்டு பின்பு, பாலையாழ்த் திறங்கள் இரண்டினை எடுத்துக, குறிஞ்சிக்கு ஒன்று, செவ்வழிக்கு ஒன்று கொடுத்திருக்கலாம். பிங்கல நிகண்டு தோற்றிய காலத்துப் பாலையாழ 5, குறிஞ்சியாழ 8, மருதயாழ 4, செவ்வழியாழ் 4 எனத் திறம்பெற்று நின்றன

2 பாலைநிலையும் பண்ணுநிலையும்.

பண்ணென்னும் பெயர்க்காரணமும், பண்ணின பொதுவியல்பும பாயிரவியலி னுள்ளே கூறப்பட்டன அரங்கேற்றுகாதை யுரையினுள்ளே, கவிஞன அமைதி கூறியவிடத்து, 'இசைப்புலவன், ஆளத்தி வைத்த பண்ணீரமையை, முதலும், முறை யும், முடிவும், நிறையும், குறையும, கிழமையும், வலிவும, மெலிவும், சமனும, வரை யறையும், நீர்மையு மெனனும் பதினொரு பாகுபாட்டினனு மறிந்து, அறிந்தவண்ணம் அவன் தாளநிலையில எய்தவைத்த நிறம் தன் கவியினிடத்தே தோன்றவைக்க வல்லனாய்' என்னுமிடத்துப் பண்ணினிலக்கணம் பகுத்துரைக்கப்பட்டது.

ஒப்புநோக்கி யாராய்தல் கருதி, வடமொழி இசையாசிரியர் இராகங்களுக்குக் கூறிய பத்து லக்ஷணங்களையும சுருக்கமாக நோக்குவாம்.

கிரக அம்சங்களும், மந்தர தாரங்களும், ந்யாஸ அபந்யாஸங்களும், ஸந்யாஸ விந்யாஸங்களும், பஹுத்வமும் அற்பத்வமும் என்னும் பத்து லக்ஷணங்களையும் முனி வர்கள் கூறியுள்ளார்களென்று வேங்கடமகி நமக்குக் கூறுகிறார்.

கீதத்தின் முதலிலெடுக்கும சுவரம், தமிழிசை மரபில், 'முதல்' எனப்படும், வடமொழி மரபில 'கிரகம்' எனப்படும் வடமொழி 'அம்சம்' தமிழிற 'கிழமை'. பலமுறை பயின்று வருதற்குரியதாகலின், அம்சத்தை வடநூலார் 'ஜீவசுரம்' என வுங் கூறுவர் கிழமை யென்னுந் தமிழ்ச்சொல உரிமையென்னும் பொருளினதாய்ப், பலமுறை பயின்று வருதலையே குறிக்கின்றது கீதத்தை முடிக்குஞ் சுவரம், இரா கத்தின் இடையிலுள்ள முடிவைச் செய்யுஞ் சுவரம், கீதத்தினது முதற்கண்டத்தை முடிக்குஞ் சுவரம், கீதகண்டத்தினது முதல் அவயவத்தின் இறுதியிலுள்ள சுவரம் ஆகிய நான்கும், முறையே, ந்யாஸ, அபந்யாஸ, ஸந்யாஸ, விந்யாஸ மெனப் பெயர் பெறுவ இந்த நான்கும் தமிழில 'முடிவு' என்னுஞ் சொல்லினுள் அடங்குவன. 'பஹுத்வம்', 'அற்பத்வம' என்பன, தமிழில, நிறை, குறை யென நின்றன. 'மந்த ரம்' தமிழில் 'மெலிவு'; 'தாரம்' தமிழில் 'வலிவு'. ஆகவே, வடமொழியிற் கூறிய பத்து லக்ஷணங்களும, தமிழில், முதல், முடிவு, நிறை, குறை, கிழமை, வலிவு, மெலிவு

என்னும் ஏழினுள் அடங்குவன சமன் சம சுவரங்களைக் கூறுவது. முறை, சுவரங்கள் பயின்றுவரும் முறையினைக் குறித்தது எனக் கொள்ளலாம். வரையறையென்பது, ஒரு பண் பிறிதொன்றனோடு மயங்காமற் காத்தற்குக் கூறும் இலக்கணம் எனக் கொள்ளலாம். நீர்மை யென்பது, இலக்கணங் கூற முடியாது, உள்ளத் துணர்வா லுணர்ந்து கொள்ளவேண்டிய இராகபாவம் போல்வதெனக் கொள்ளலாம்

> எண்ணிடை யொன்றினர் இரண்டினர் உருவம்
> எரியிடை மூன்றினர் நான்மறை யாளர்
> மண்ணிடை ஐந்தினர் ஆறினர் அங்கம்
> வகுத்தனர் ஏழிசை யெட்டிருங் கலைசேர்
> பண்ணிடை யொன்பதும் உணர்ந்தவர் பத்தர்
> பாடிநின் றடிதொழ மதனனை வெகுண்ட
> கண்ணிடைக் கனலினர் கருதிய கோயில்
> கழுமலம் நினையநம் வினைகரி சறுமே

என்னும் திருக்கழுமலத் திருப்பதிகத்திலே, ‘பண்ணிடை யொன்பதும்’ என வருதலின், ஆளுடையபிள்ளையார் காலத்திலே, மேற்சொன்னவற்றுள், ‘வரையறையும் நீர்மையும்’ ஒழிய, எஞ்சிநின்ற ‘முதலும் முறையும் முடிவும், நிறையும் குறையும் கிழமையும், வலிவும் மெலிவும் சமனும்’ என்னும் ஒன்பதுமே கொள்ளப்பட்டனவென எண்ணவேண்டியிருக்கிறது.

‘ஏழிசை எட்டிருங் கலைசேர் பண்’ என்றமையின், இணை, கிளை, பகை, நட்பு என்றிந் நான்கினையும் ஆராய்ந்து, இசை புணருங் குறிநிலையினை நோக்கி, ஏழிசையினையும் பாலையாக நிறுத்தியபின், எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் எண்வகைத் தொழிலினாலும் பண்ணிப்படுத்த பண்ணானது மேற்கூறிய ஒன்பது பாகுபாட்டினாலும் உளங்கொளற்பாலது என்பது பெறப்பட்டது

இக்காலத்து வழக்குச் சொற்களாற் கூறின், குறித்த ஓர் இராகத்திற்கு ஆரோகணத்திலும் அவரோகணத்திலும் இன்ன சுவரங்கள் வருவன என நிச்சயித்து நிறுத்துவது பாலைநிலை, அவ்வாறு நிச்சயித்த சுவரங்களிலே, கிரக, அம்ச, நியாசம், பகுத்துவம், அற்பத்துவம், மந்தோச்சசமம அறிந்து, இசைப்புலவன் வைத்த தாளத்திற்கியைய இராகத்தை ஆலாபனை செய்தல் பண்ணுநிலையாகும்

‘எட்டுக்கலை’ என்றமையாது, ‘இருங்கலை’ யென விசேடித்தமையின், யாழக் கருவியிலே இசை எழுப்புதற்குச் செய்யும் ‘பண்ணல்’ முதலிய எண்வகைத் தொழிலும், இசைநிலையின் தீதின்மை யாராய்தற்குச் செய்யும் ‘வார்தல்’ முதலிய எட்டு வகையாகிய இசைக்கரணமும் கருவியிலே பண்ணினை இசைக்குங்கால் வேண்டப்படுவவென்பது குறிப்பிடப்பட்டது

> ‘பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கணென்னுங்
> கண்ணோட்ட மில்லாத கண்’

என்னுந் திருக்குறளின் விசேடவுரையிலே, ‘பண்களாவன, பாலையாழ்முதலிய நூற்றுமூன்று பாடற்றொழில்களாவன, யாழின்கண் வார்தல் முதலிய வெட்டும், பண்ணல் முதலிய எட்டும், மிடற்றின்கண் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம்

என்னும் ஐந்தும், பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ணம் முதலிய வண்ணங்கள் எழுபததாறுமாம். இவற்றோ டியையாதவழிப் பண்ணுற் பயனில்லாதவாறு போலக், கண்ணோட்டத் தியையாதவழிக் கண்ணுற் பயனில்லை யென்பதாம்.' என்னும பரிமேலழகர் கூற்றினை நோககுமிடத்து, மிடற்றுக்கண் எயதிய பாடற்றொழில் எடுத்தல் முதலிய ஐந்தாக நிற்றலின், 'எட்டிருங்கலை' என்னும் பிள்ளையாா கூற்று, யாழக்கருவிக் கலைதொழில்களாய பண்ணல் முதலெட்டினையும், வாாதல முதல் எட்டினையுமே குறிதது நின்றதெனக் கொள்ளலவேண்டும். அரும்பதவுரையாசிரியரும், பலவிடங்களிலே, 'பாடல்' என்பதற்குப் பண்ணல் முதலிய பாடலியல்புகள எனப் பொருள்கண்டார். இசையாசிரியனமைதி கூறியவிடத்து, 'இசைந்த பாடல் இசையுடன் படுத்து' என்பதறகு 'உருககளை இசைகொள்ளும்படியும் இரதம் பொருந்தும் படியும் புணர்ககவும வல்லனாய்' என அரும்பதவுரையாசிரியர் கூறுதலின், எட்டு வகையாகிய சுவைகளுள்ளே, பாடற்பொருள் தரும்சுவையே பண்ணிற்கும் இயைந்து நிற்றல்வேண்டு மென்பதும், அவ்வா றியையாத பண்ணிறுற் பயனின்று என்பதும், 'பண்ணென்னும் பாடற் கியைபின்றேல' என்பதனுள் விதந்தோதப்பட்டன வெனக் கொள்ளல்வேண்டும

பண்ணல முதலிய வெட்டினுக்கும, வார்தல் முதலிய வெடடினுக்கும் அரும்பதவுரையாசிரியர் காட்டும் இலக்கணங்களைக் கானலவரி யுரையிலின்றெடுத் தெழுதுவாம்

'வலக்கைப் பெருவிரல குரலகொளச சிறுவிரல
விலககின் றிளிவழி கேட்டும . . . ...

. . ..

இணைவழி யாராயந் திணைகொள முடிப்பது
விளைபபரு மரபிற் பணண லாகும்.

பரிவட் டணையி னிலககணந் தானே
மூவகை நடையின முடிவிற் றாகி
வலக்கை யிருவிரல வணபபுறத தழீஇ
இடக்கை விரலி னியைவ தாகத
தொடையொடு தோன்றியும தோன்றா தாகியும
நடையொடு தோன்றும் நயதத தாகும.

ஆராய்த லென்ப தமைவரக் கிளப்பின்
குரல் முதலாக இணைவழி கேடடும
இணையி லாவழிப பயனொடு கேட்டும
தாரமும உழையுந தமமிற கேட்டும
குரலும இளியுந தமமிற் கேட்டும
துததமும விளரியும் துன்னறக கேட்டும
விளரி கைக்கிளை விதியுளிக் கேட்டும
தளரா தாகிய தன்மைத தாகும.

[இளிக்கிரமத்திலே, துதத நரம்பானது, விளரியோ டிணையாது, விளரிக்குந் தாரத்திற்கும இடையே நின்ற அந்தரக்கோலோடு இணையும். குரற்கிரமத்திலே,

ORIENTAL INSTIT
LIBRA 14842
TIRUPATI

துத்தம் விளரியோ டிணையும். இவ் வேறுபாட்டினைக் காட்டவே 'துன்னறக் கேட்டு' என்றார். மேற்குறித்த இரு கிரமங்களையும் குரல் முதலாக நிறுத்தி, இப்பொருளை யுற்றுணர்வாம.

	கு	து	கை	உ	இ	வி	தா
இளிக்கிரமம்	4	4	3	2	4	3	2
குரறகிரமம	4	3	4	2	4	3	2

இளிக்கிரமத்திலே துத்தத திறுதிமுதல விளரி யிறுதிவரை யெயதிய அலகுகள 12 என்னுந தொகையவாதலையும், குரறகிரமததிலே இவை 13 என்னுந் தொகையவாதலையும நோககுக. கிளையியைபு 13 அலகு, நட்பியைபு 9 அலகு.]

தைவர லெனபது சாற்றுங் காலை
மையறு சிறபபின மனமகிழ் வெய்தித
தொடையொடு பட்டும படாஅ தாகியும
நடையொடு தோன்றி யாப்புநடை யின்றி
ஓவாச செயதியின வட்டணை யொழுகிச
சீரேற் றியன்றும இயலா தாகியும
நீர வாகு நிறைய தென்ப.

[மேற்போந்த நான்கு சூத்திரங்களின் பொருளை இயன்றவரை ஆராயநதறிய முயல்வாம. மை தீட்டிய கண்ணினையுடைய கலியாண மகளிர்போல அழகு விளங்கிக், கோட்டிலே மலர்த்தொடையல புனைந்து, சித்திர மெழுதிய உறையினுட் புக்கிருநத யாழ்க்கருவியினைத் தொழுது, இரு கையாலும் வாங்கி இடப்புறததிருததிய மாதவி, வலககையைப் பதாகைக் கையாககி, அஃதாவது, பெருவிரலைக் குஞ்சித்து, ஒழிந்த விரலகளை நிமிர்த்தி, அக்கையால கோடு அசையாதபடி பிடிதது, இடககை நால் விரலினால மாடகமாகிய முறுக்காணியினை உறப்பிடிதது, வலித்தல மெலித்தல செயத பின், வலக்கைப் பெருவிரலினால் குரலநரம்பினையும, சிறுவிரலினால இளிநரம்பினையும மீட்டி, ஆராயநது, இசை யோர்ந்து, தீதின்மையறிநது, அதன்பின், குரலுக்கு இணை நரம்பாகிய (இரண்டாம் நரம்பாகிய) துததததையும இளிநரமபினையும், முறையே, பெருவிரலினாலும 'சிறுவிரலினாலும் மீட்டி, ஆராயநது, இசை யோர்ந்து, இவவாறே துத்தத்தையும் இளி[illegible]ாகிய விளரியையும் மீட்டி, அதன்மேல, கைக்கிளை விளரி, உழை தாரம், உழை குரல் எனனு மிவறறை மீட்டிப் பண்ணல என்னுந் தொழிலினை முடிததாள் கைககிளை தாரம் இளையாவாகலின, அவை ஒருங்கு குறிக்கப்பட்டில வலக்கைப் பெருவிரலினையும சுட்டுவிரலினையும கோட்டின் இருபுறமுஞ் சேர வைத்து, அவவிரு விரலகளினாலும கோடடினை அழகு விளஙகத தழுவி, இடககை விரலினாலே அணைதது, நரமபுகளை ஆரோசையாகவும் அமரோசையாகவும் முத னடை யியக்கத்திலே மீட்டி, அதன்பின, வாரவியககததிலும், கூடையியக்கததிலும் மீட்டுதல, பரிவட்டணையாகும முதனடை, வாரம், கூடை என்பவறறின் பொருளைப் பாயிரவியலினுட் காண்க. தொடையொடு தோன்ற மீட்டுதல், ஒரு பாலையினின்று ஏழு நரம்பையும் ஆரோசை அமரோசையாக மீட்டி, அதற்கடுத்த பாலையை அதன் பின் மீட்டி, இவவாறு செல்லுதல். தொடையொடு தோன்றாது மீட்டுதல், அனைத்து

நரம்பினையும் ஆரோசை யமரோசையாக மீட்டுதல். மேல்வரும் தைவரற் சூத்திரம் இச்சூத்திரத்தோடு தொடர்புடையது. ஆராய்தற் சூத்திரம் பண்ணற் சூத்திரத் தோடு தொடர்புடையது. பண்ணலிலே குரல் இளி யென இணையும் நரம்பின் ஒற்றுமை கண்டோர், ஆராய்தலில் அநநரம்புகளை முதனிலையாகக்கொண்ட பாலைகளில் இணையும் நரம்புகளை அணைவுறக் கேட்டனர். இளிக்கிரமத்திலே, ம ப த நி ச ரி க படுமலைப்பாலையாகும்; ச ரி க ம ப த நி விளரிப்பாலையாகும். முன்னையதிலுள்ள 'ப த' பின்னையதிலுள்ள 'ரி க' வோடு இணையா ஒழிந்த ஐந்தும் ஒன்றி நிற்பன. ம–ச, நி–ம, ச–ப, ரி–த, க–நி, என அவைதமமை மீட்டிக் கேட்டல் குரலும் இளியும் தம்மிற கேட்டலாகும் 'இணையிலாவழிப் பயனொடு கேட்டும்' என்றமையின், மேலே நாம் இணையாவென விலககி நிறுத்திய 'ப த', 'ரி க' விலே பஞ்சமத்தை ரிஷபத்தி னந்தரத்தோடு கேட்டலும், தைவதத்தைக் காந்தாரத்தின் அந்தரத்தோடு கேட்டலும் பெறப்பட்டன. சகோடயாழின் நரம்புகளும் அந்தரஙகளும் பெறும் அசைவெண் விகிதங்களையும், அவை யியைந்து நிற்கும் மரபினையும், பாலைததிரிபியலினுட் காட்டினும். தைவரற சூத்திரததினுளளே வட்டணை என்றது பரிவட்டணையை. சீரென்றது தாளத்தினிறுதியை. 'யாதத சீரே யடியாப் பெனுஅ' எனச் செய்யுளியலிற் கூறியதனை நிகாப்ப, ஈண்டும், சீராகிய தாளததியலினைப் பாட்டினிடத்து அமைத்துக் காட்டுதல் யாப்புநடை யெனப்பட்டது]

செலவெனப் படுவதன் செயகை தானே
பாலை பணணே திறமே கூடமென
நாலவகை யிடத்து நயதத தாகி
இயககமு நடையும எயதிய வகைததாயப்
பதினே ராடலும் பாணியும இயலபும
விதிநானகு தொடாநது விளஙகிச் செல்வதுவே.

விளையாட் டென்பது விரிக்குங காலைக்
கிளவிய வகையி னெழுவகை யெழாலும்
அளவிய தகைய தாகு மெனப

கையூ ழென்பது கருதுங காலை
எவவிடத் தானும இன்பமுங சுவையும
செவவிதிற றோனறிச சிலைத்துவர வின்றி
நடைநிலை திரியாது நணணித தோனறி
நாற்பத தொன்பது வனபபும வணணமும
பாறபடத தோனறும பகுதித தாகும.

துளளற கணணுங குடக்குத துளளுந
தளளா தாகிய உடனிலைப் புணாசசி
கொளவன வெலலாம குறும்போக காகும

வாாதல–சுட்டுவிரற செயதொழில்

வடிததல–சுட்டுவிரலும் பெருவிரலுங் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல்

உநதல–நரம்புகளை உந்தி வலிவிற்பட்டதும் மெலிவிற்பட்டதும் நிரல்பட்டதும் நிரலிழிபட்டதும் என்றறிதல்.

உறழ்தல-ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய்தல்.

[பொருநராற்றுப்படை யுரையினுள், ‘வாரியுமு-ஈரமபுகளைக் கூடததழுவியுமு, வடித்துமு-உருவியுமு, உகதியுமு-தெரிததும், உறழநதுமு-ஒனறைவிட டொனறைத தெரித்துமு’ எனக் கூறப்பட்டிருத்தல் இத்தொடர்பில் நோக்கற்பாலது.]

உருட்டல-இடக்கைச் சுட்டுவிரல் தானே யுருட்டலும், வலக்கைச் சுட்டுவிரல் தானே யுருட்டலும, சுட்டொடு பெருவிரற் கூட்டி யுருட்டலும், இருபெருவிரலும் இயைநதுருட்டலும் என வரும்.

தெருட்டல் எனறது செப்புங காலை
உருட்டி வருவ தொன்றே மறற
ஒனறன் பாட்டுமடை யொன்ற நோக்கின்
வலலோ ராயநத நூலே யாயினும
வல்லோர பயிற்றுங கட்டுரை யாயினும
பாட்டொழிந தலகினி லொழிநத செய்கையும
வேட்டது கொண்டு விதியுற ஈாடி
என வரும்............ .

இவை இசைத்தமிழ்ப் பதினறுபடலத்துட் கரணவோத்துட் காண்க.’ என உரை முடிகின்றது ‘அளளல’, ‘படடடை’ என்னும் இரணடிற்கும உரை கிடைத்திலது. தெருட்டலியல்பு கூறும் சூததிரப்பொருள தெளிவுபட்டிலது.

எடுத்தல் முதலிய ஐந்தனுள், எடுத்தல்-உச்ச சுவரத்திற் பாடுதல். படுத்தல்-மந்த சுவரத்திற் பாடுதல் நலிதல்-சம சுவரத்திற் பாடுதல் கம்பிதம்-நடுங்கல் குடிலம்-உள்ளாளப்பாடல். இவற்றின் விரிவெல்லாம் பாயிரவியலில், ‘மிடற்றுப் பாடலும், கருவிப் பாடலும்’ என்னும் பிரிவினுட் கூறினும்

3. ஐந்து கிரமங்களிலும் ஏழ்பெரும்பாலைக ளெய்தும் இசைநிலை

குரறகிரமம.

முதலிற் குரறகிரமததினை எடுத்துக்கொள்வாம் இதனுட பிறககும் பாலைகள் சுருதிவீணையிலே செம்பாலை முதலாக அமைந்து நிறபன.

பாலைததிரிபியலிலே, ‘குரற்கிரமததில் வடடபபாலை’ என்னுந் தலைப்பெயர்க் கீழ் யாம் பிறப்பிதத பன்னிரு பாலைகளிலே, அந்தரம் ஐநதினையும் நீககிப், பெரும் பாலை ஏழினையும் செமபாலை முதற் மேற்செம்பாலை யீருக ஆயப்பாலையாக நிறுத்துவாம்.

கும்பம-செம்பாலை	0	2	6	9	11	15	18	22
மேடம்-படுமலைப்பாலை	2	6	9	11	15	18	22	24
மிதுனம்-செவ்வழிப்பாலை	6	9	11	15	18	22	24	28
கற்கடகம்-அரும்பாலை	9	11	15	18	22	24	28	31

கன்னி-கோடிப்பாலை	11	15	18	22	24	28	31	33
விருச்சிகம்-விளரிப்பாலை	15	18	22	24	28	31	33	37
தனு-மேற்செம்பாலை	18	22	24	28	31	33	37	40

மேலே தந்த அலகெண்கள் என்ன சுவரங்களைக் குறித்தன என அறிந்து கொள்வதற்குக் கும்பப்பாலையின் நிறையுருவத்தைப் பன்னிரிசைநிலையில் (சுவர ஸ்தானத்தில்) நிறுத்துவாம்.

ஷட்ஜம்	சுத்த ரிஷபம	சதுசுருதி ரிஷபம்	சாதாரண காந்தாரம	அந்தர காந்தாரம	சுத்த மத்திமம	பிரதி மத்திமம	பஞ்சமம	சுத்த தைவதம	சதுசுருதி தைவதம	கைசிகி நிஷாதம	காகலி நிஷாதம்
0	1	2	5	6	9	10	11	14	15	18	19
22	23	24	27	28	31	32	33	36	37	40	41

முதல் நிரலில் நின்ற சுவரங்கள், 0 ஷட்ஜம, 2 சதுசுருதி ரிஷபம், 6 அந்தர காந்தாரம், 9 சுதத மத்திமம, 11 பஞசமம், 15 சதுசுருதி தைவதம், 18 கைசிகி நிஷாதம் என நின்று; அரிகாம்போதி மேளம் என வழங்கும் செம்பாலையாயின.

சதுசுருதி ரிஷபததை ஆதார சுருதியாகக்கொண்டு, சது-ரி, அ-க, சு-ம, ப, சது-த, கை-நி, ச, சது-ரி, யென எடுக்க, நடபைரவி மேளமாகிய படுமலைப்பாலை யாகும். அஃது அவ்வாறுதலைப் பின்வருமாறு சுவரங்களின் ஒற்றுமை கண்டு தெளிந்துகொள்ளலாம் வெற்றிடஙகளில உடுக்குறி இடப்பட்டிருக்கிறது.

சது-ரி * அ-க, சு-ம * ப * சது-த, கை-நி * ச * சது-ரி

ச * சது-ரி, சா-க * சு-ம * ப, சு-த * கை-நி * ச

மேல் வருவனவறறையும் இவவாறு அடைவுபடுத்தித தெளிநதுகொள்ளலாம்.

அந்தர காந்தாரத்தை ஆதார சுருதியாகக் கொள்ளுமிடத்துச், சுத்த தோடி யென வழங்கும் செவ்வழிபபாலை தோற்றும்.

சுத்த மத்திமத்தை ஆதார சுருதியாகக் கொள்ளுமிடத்துத், தீரசங்கராபரணம் என வழங்கும் அரும்பாலை தோற்றும.

பஞ்சமத்தை ஆதார சுருதியாகக் கொள்ளுமிடத்துக், கரஹரப்பிரியா என வழங்கும் கோடிப்பாலை தோறறும்

சதுசுருதி தைவதததை ஆதார சுருதியாகக் கொள்ளுமிடத்து, ஹநுமத்தோடி என வழங்கும் விளரிபபாலை தோற்றும்.

கைசிகி நிஷாதத்தை ஆதார சுருதியாகக் கொள்ளுமிடத்து, மேசகல்யாணி என வழங்கும் மேற்செம்பாலை தோற்றும்

அரிகாம்போதி மேளத்திற் கமைந்த சுவரங்களை நிறுத்திக், கிரகசுவரம மாற நிச்செல்ல, மற்ற ஆறும் முறையே தோற்றக் காண்கின்றோம்.

எல்லாவிடத்தும் ஆதார சுருதியை ஷட்ஜம ஆகுதற்கு, ஒவ்வொரு நிரலிலும முதலில் நின்ற அலகுநிலையெண்ணினை அந்நிரலிலுள்ள எல்லா எண்களினின்றும கழித் தெழுதவேண்டும் அவ்வாறு செய்து, பன்னிரண்டு சுவரஸ்தானங்களிலும முறையாக நிறுத்தக் கிடைப்பது

இசைநிலைகள்	ச	ச—ரி	சது—ரி	சா—கா	அ—கா	சு—ம	பி—ம	ப	சு—தை	சது—தை	கை—நி	கா—நி	ச
அலகுநிலைகள்	0	1, 3	2, 4	5, 7	6, 8	9, 11	10, 12	11, 13	14, 16	15, 17	18, 20	19, 21	22
செம்பாலை	0	—	2	—	6	9	—	11	—	15	18	—	22
படுமலைப்பாலை	0	—	4	7	—	9	—	13	16	—	20	—	22
செவ்வழிப்பாலை	0	3	—	5	—	9	12	—	16	—	18	—	22
அருமபாலை	0	—	2	—	6	9	—	13	—	15	—	19	22
கோடிப்பாலை	0	—	4	7	—	11	—	13	—	17	20	—	22
விளரிப்பாலை	0	3	—	7	—	9	—	13	16	—	18	—	22
மேற்செம்பாலை	0	—	4	—	6	—	10	13	—	15	—	19	22

இவற்றுக்கு அமைந்த அலகெண்கள்

செம்பாலை	2	4	3	2	4	3	4
படுமலைப்பாலை	4	3	2	4	3	4	2
செவ்வழிப்பாலை	3	2	4	3	4	2	4
அருமபாலை	2	4	3	4	2	4	3
கோடிப்பாலை	4	3	4	2	4	3	2
விளரிப்பாலை	3	4	2	4	3	2	4
மேற்செம்பாலை	4	2	4	3	2	4	3

இளிக்கிரமம்.

இளிக்கிரமத்திலும், மேல்வரும் துத்த, விளரி, தாரக கிரமங்களிலும், ஏழ பெருமபாலைகளையும் ஆயப்பாலையாய நிறுத்தி, ஒரே ஆதாரசுருதி கொள்ளும்போது,

அவை அடையும் உருவங்களையும், பெறும் அலகெண்களையும் தருவாம் குரற்கிர மத்திற்குக் காட்டிய முறையிற் சென்று பொருளை புணர்ந்துகொள்ளலாம்.

அருமபாலை	0	2	6	9	11	15	19	22
கோடிப்பாலை	2	6	9	11	15	19	22	24
விளரிப்பாலை	6	9	11	15	19	22	24	28
மேறசெம்பாலை	9	11	15	19	22	24	28	31
செம்பாலை	11	15	19	22	24	28	31	33
படுமலைப்பாலை	15	19	22	24	28	31	33	37
செவ்வழிப்பாலை	19	22	24	28	31	33	37	41

அரும்பாலை	0	—	2	—	6	9	—	11	—	15	—	19	22
கோடிப்பாலை	0	—	4	7	—	9	—	13	—	17	20	—	22
விளரிப்பாலை	0	3	—	5	—	9	—	13	16	—	18	—	22
மேற்செம்பாலை	0	—	2	—	6	—	10	13	—	15	—	19	22
செம்பாலை	0	—	4	—	8	11	—	13	—	17	20	—	22
படுமலைப்பாலை	0	—	4	7	—	9	—	13	16	—	18	—	22
செவவழிப்பாலை	0	3	—	5	—	9	12	—	14	—	18	—	22

அரும்பாலை	2	4	3	2	4	4	3
கோடிப்பாலை	4	3	2	4	4	3	2
விளரிப்பாலை	3	2	4	4	3	2	4
மேற்செம்பாலை	2	4	4	3	2	4	3
செம்பாலை	4	4	3	2	4	3	2
படுமலைப்பாலை	4	3	2	4	3	2	4
செவ்வழிப்பாலை	3	2	4	3	2	4	4

துத்தக்கிரமம்.

படுமலைப்பாலை	0	2	5	9	11	14	18	22
செவ்வழிப்பாலை	2	5	9	11	14	18	22	24
அரும்பாலை	5	9	11	14	18	22	24	27
கோடிப்பாலை	9	11	14	18	22	24	27	31
விளரிப்பாலை	11	14	18	22	24	27	31	33
மேற்செம்பாலை	14	18	22	24	27	31	33	36
செம்பாலை	18	22	24	27	31	33	36	40

படுமலைப்பாலை	0	—	2	5	—	9	—	11	14	—	18	—	22
செவ்வழிப்பாலை	0	3	—	7	—	9	12	—	16	—	20	—	22
அரும்பாலை	0	—	4	—	6	9	—	13	—	17	—	19	22
கோடிப்பாலை	0	—	2	5	—	9	—	13	—	15	18	—	22
விளரிப்பாலை	0	3	—	7	—	11	—	13	16	—	20	—	22
மேற்செம்பாலை	0	—	4	—	8	—	10	13	—	17	—	19	22
செம்பாலை	0	—	4	—	6	9	—	13	—	15	18	—	22

படுமலைப்பாலை	2	3	4	2	3	4	4
செவ்வழிப்பாலை	3	4	2	3	4	4	2
அரும்பாலை	4	2	3	4	4	2	3
கோடிப்பாலை	2	3	4	4	2	3	4
விளரிப்பாலை	3	4	4	2	3	4	2
மேற்செம்பாலை	4	4	2	3	4	2	3
செம்பாலை	4	2	3	4	2	3	4

விளரிக்கிரமம்

கோடிப்பாலை	0	2	5	9	11	15	18	22
விளரிப்பாலை	2	5	9	11	15	18	22	24
மேற்செம்பாலை	5	9	11	15	18	22	24	27
செம்பாலை	9	11	15	18	22	24	27	31
படுமலைப்பாலை	11	15	18	22	24	27	31	33
செவ்வழிப்பாலை	15	18	22	24	27	31	33	37
அரும்பாலை	18	22	24	27	31	33	37	40

கோடிப்பாலை	0	—	2	5	—	9	—	11	—	15	18	—	22
விளரிப்பாலை	0	3	—	7	—	9	—	13	16	—	20	—	22
மேற்செம்பாலை	0	—	4	—	6	—	10	13	—	17	—	19	22
செம்பாலை	0	—	2	—	6	9	—	13	—	15	18	—	22
படுமலைப்பாலை	0	—	4	7	—	11	—	13	16	—	20	—	22

செவவழிப்பாலை	0	3	—	7	—	9	12	—	16	—	18	—	22
அரும்பாலை	0	—	4	—	6	9	—	13	—	15	—	19	22

கோடிப்பாலை	2	3	4	2	4	3	4
விளரிப்பாலை	3	4	2	4	3	4	2
மேற்செம்பாலை	4	2	4	3	4	2	3
செம்பாலை	2	4	3	4	2	3	4
படுமலைப்பாலை	4	3	4	2	3	4	2
செவ்வழிப்பாலை	3	4	2	3	4	2	4
அரும்பாலை	4	2	3	4	2	4	3

தாரகிரமம்

செவவழிப்பாலை	0	1	5	9	10	14	18	22
அரும்பாலை	1	5	9	10	14	18	22	23
கோடிப்பாலை	5	9	10	14	18	22	23	27
விளரிப்பாலை	9	10	14	18	22	23	27	31
மேற்செமபாலை	10	14	18	22	23	27	31	32
செம்பாலை	14	18	22	23	27	31	32	36
படுமலைப்பாலை	18	22	23	27	31	32	36	40

செவவழிப்பாலை	0	1	—	5	—	9	10	—	14	—	18	—	22
அருமபாலை	0	—	4	—	8	9	—	13	—	17	—	21	22
கோடிப்பாலை	0	—	4	5	—	9	—	13	—	17	18	—	22
விளரிப்பாலை	0	1	—	5	—	9	—	13	14	—	18	—	22
மேறசெயபாலை	0	—	4	—	8	—	12	13	—	17	—	21	22
செமபாலை	0	—	4	—	8	9	—	13	—	17	18	—	22
படுமலைபபாலை	0	—	4	5	—	9	—	13	14	—	18	—	22

செவவழிப்பாலை	1	4	4	1	4	4	4
அரும்பாலை	4	4	1	4	4	4	1
கோடிப்பாலை	4	1	4	4	4	1	4
விளரிப்பாலை	1	4	4	4	1	4	4

மேற்செம்பாலை	4	4	4	1	4	4	1
செம்பாலை	4	4	1	4	4	1	4
படுமலைப்பாலை	4	1	4	4	1	4	4

மேற்செல்லுமுன், ஐவகைக கிரமங்களின் சிறப்பியல்புகள் சிலவற்றை ஆராயந் தறிந்துகொள்வாம். முதலிற் றோன்றியது தாரககிரமம் அதனிடத்து 1, 4, 5, 8, 9, 10, 12, 13, 14, 17, 18, 21 என்னும் பன்னிரண்டு சுருதிகள் மாத்திரமே காணப்படு கின்றன. அவைதம்முள், 1, 8, 14, 21 எனனும் நான்கும், $\frac{256}{243}$, $\frac{81}{64}$, $\frac{128}{81}$, $\frac{243}{128}$ என்னும் பெரிய பின்னமான அசைவெண விகிதங்களைக் கொண்டனவாதலிற், சிறப்பிலவாகக் கருதப்பட்டன இவற்றை நீக்க, எஞ்சிநிற்கும் சிறப்புடைச்சுருதிகள் எட்டேயாம் சிறப்புடைச் சுருதிகள் பலவற்றால் நடப்பது இசையினிமை யடைதற்குக் காரண மாகலின், பண்டை யிசையாசிரியர்கள் வேறு கிரமங்களைக் கண்டு, அவைதம்மைப் பயன்படுத்துவாராயினர் குரற்கிரமமானது, மேலே சிறப்பிலவெனக் குறிககப் பட்ட 1, 8, 14, 21 என்னும் நான்கு சுருதிகள் ஒழிநத, பதினெட்டுச் சுருதிகளாலும் நடப்பது. குரற்கிரமத்தில் வருஞ் சுருதிகள் 3, 2–4, 5–7, 6, 9–11, 10–12, 11–13, 16, 15–17, 18–20, 19. [ஒரே சுவரஸதானத்தில் வரககூடிய இரண்டு சுருதிகளை ஒருங்கு நிறுத்தியிருக்கின்றோம்] குரற்கிரமத்தின் எதிரானிரனிறையாகிய விளரிக்கிரம மும், மேனாட்டில் வழங்கும் புதிய விளரிக்கிரமமும, குரற்கிரமத்திற்குரிய பதினெட் டுச் சுருதிகளையே பெற்று நடப்பன. இளிக்கிரமததின் செவவழிப்பாலையிலே 14 ஆம் சுருதியும், செம்பாலையிலே 8 ஆம் சுருதியும வருவன, இவை இரணடும், குரற்கிரமததில் வரும் பதினெட்டுமாகிய இருபது சுருதிகள் இளிக்கிரமத்தில் வரு வன. 1 உம் 21 உம வருவதில்லை.

இககாலத்திலே தீரசஙகராபரணம் என வழஙகும அரும்பாலைப்பண் ஐந்து கிரமங்களிலும் பெறறுவரும் உருவ விகற்பத்தை ஆராயவாம்

சுருதிவீணையிலே, அருமபாலையானது, இளி, தார, துதத, குரல், விளரிக் கிரமங் களிலே, முறையே, 0, 1, 5, 9, 18 என்னுஞ் சுருதிகளை ஆதார ஷட்ஜமாகக் கொண்டு தொடங்குகிறது. தொடங்குமிடததை வெற்றிலக்கமாக்கிப் பெறற உருவங்களை ஒப்பு நோக்குதறகாக ஒருங்கு வைப்பாம்.

இளி	0	—	2	—	6	9	—	11	—	15	—	19	22
தாரம	0	—	4	—	8	9	—	13	—	17	—	21	22
துத்தம்	0	—	4	—	6	9	—	13	—	17	—	19	22
குரல	0	—	2	—	6	9	—	13	—	15	—	19	22
விளரி	0	—	4	—	6	9	—	13	—	15	—	19	22

மேற்கண்ட அலகுநிலையெண்கள் பெறும் அசையெண் விகிதங்களை நிரலாக வைப்பாம்.

இளி	1	$\frac{10}{9}$	$\frac{5}{4}$	$\frac{4}{3}$	$\frac{40}{27}$	$\frac{5}{3}$	$\frac{15}{8}$	2
தாரம்	1	$\frac{9}{8}$	$\frac{81}{64}$	$\frac{4}{3}$	$\frac{3}{2}$	$\frac{27}{16}$	$\frac{243}{128}$	2
துத்தம்	1	$\frac{9}{8}$	$\frac{5}{4}$	$\frac{4}{3}$	$\frac{3}{2}$	$\frac{27}{16}$	$\frac{15}{8}$	2
குரல்	1	$\frac{10}{9}$	$\frac{5}{4}$	$\frac{4}{3}$	$\frac{3}{2}$	$\frac{5}{3}$	$\frac{15}{8}$	2
விளரி	1	$\frac{9}{8}$	$\frac{5}{4}$	$\frac{4}{3}$	$\frac{3}{2}$	$\frac{5}{3}$	$\frac{15}{8}$	2

இந்த ஐந்து வகையாகவும் தீரசங்கராபரணம் இசைத்தற்குரியது இவற்றுள்ளே, குரற்கிரமத்திலே தோன்றும இசை பலவாற்ருனுஞ் சிறப்புடையது. இளிக்கிரமத்திலே பஞ்சம ஸ்தானததில் மெலிந்த பஞ்சமம் நிற்றல் குறிப்பிடத்தக்கது இக்காலததிலே, இளி, தார, குரற் கிரமங்கள் வழக்கிலில்லை. மேலே காட்டிய துத்தககிரமமே, இக்காலத்திலே, தவருக, ஷட்ஜக்கிராம மென்று வழங்கப்படுகிறது. மேனுட்டுத் தொடர்பினுலே, விளரிக்கிரமமும் வழக்கிலிருக்கிறது.

ஐந்து உருவங்களின் அலகெணகளையும் எழுதி, அவைதமக்குரிய இடைவிகிதங்களை (intervals)யும எழுதுவாம்.

	அலகெண்கள்	இடைவிகிதங்கள்						
இளி	2 4 3 2 4 4 3	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	$\frac{16}{15}$	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{16}{15}$
தாரம	4 4 1 4 4 4 1	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{256}{243}$	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{256}{243}$
துத்தம்	4 2 3 4 4 2 3	$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{16}{15}$
குரல்	2 4 3 4 2 4 3	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	$\frac{16}{15}$
விளரி	4 2 3 4 2 4 3	$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{16}{15}$	$\frac{9}{8}$	$\frac{10}{9}$	$\frac{9}{8}$	$\frac{16}{15}$

ஐந்து கிரமங்களிலும் அரும்பாலை அமைநது நிற்பதை மற்ெருரு வகையாக நோக்குமிடத்து, இளிக்கிரமததிலே, அனைத்தும் நட்புச் சுருதிகள்; குரற்கிரமத்திலே, பஞ்சமம் (13) கிளைச்சுருதி யாகிறது, அதன்மேல், விளரிக்கிரமத்திலே, ரிஷபம் (4) கிளைச்சுருதியாகிறது; அதன்மேல், துத்தக்கிரமததிலே, தைவதம் (17) கிளைச்சுருதி யாகிறது; அதன்மேல், தாரககிரமத்திலே, காந்தார (8), நிஷாதங் (21) கள் கிளைச் சுருதி யாகின்றன. ஐநதினும் மததிமம் மாத்திரம் வேறுபடாது நிற்கிறது.

அரும்பாலையைப் போலவே, மற்றப்பாலைகளும், பாலைகளிற் பிறக்கும் பண்களும், திறஙகளும், கிராம வேறுபாட்டினுலே, ஒன்று ஐந்தாகு மியல்பின.

பிறிது பெயர் கொள்ளாது, பாலைப் பெயரினையே பண்ணின் பெயராகக் கொள்வதுண்டு. வேனிற்காதை, 24 ஆம் அடியில்வரும 'மதுரகீதம் பாடினள்' என்பதன் உரையிலே, அரும்பதவுரையாசிரியர் செமபாலைப்பண், மேற்செம்பாலைப் பண் என வழங்குதல காண்க.

4. பன்னிரு பாலையினுரு ; திணைப்பண்களின் பாலைநிலையும் நரம்படைவும

'பன்னிரு பாலையினுருத் தொண்ணூற்றொன்றும் பன்னிரண்டுமாய்ப் பண்கள் நூற்றுமூன்றாதறகுக் காரணமாமெனக் கொள்க' என உரையாசிரியரிருவரும் அரங கேற்றுகாதை யாழாசிரிய னமைதியுட் கூறுகின்றனர்

வேனிற்காதையுரையினுள்ளே, 'இவவேழு பெரும்பாலையினையும் முதலடுத்து நூற்றுமூன்று பண்ணும் பிறக்கும்' என அடியாாகுநலலார் கூறியது, 'பன்னிரு பாலையினுள்ளே நூற்றுமூன்று பண்ணும் பிறக்கும்' என்பதனோடு மாறுகொள் ளாதோவெனின், மாறுகொள்ளாது ; சிறுபாலையைநதும், அவ்வப்பெயரிய பெரும் பாலையோடு ஒத்த நீர்மையவாதலின் என்பது அவை ஒதது நிற்பதனைப் பின்னாக காட்டுதும்.

இனிப், பன்னிருபாலைகளைத் தாரததாககத்தினுலே ஆககிக்கொள்ளும் மர பினைக் கூறப்புகுவாம. 'தார நரம்புபெறற ஈரலகில் ஓரலகையும, குரல் நரமபுபெறற நாலலகில் இரண்டலகையும தாரநரமபின அநதரககோலிலே கைக்கிளையாக நிறுத் தத், தாரநதான் கைககிளையாயிற்று. அநத நரமபில ஒழிநத ஓரலகையும் பணடை விளரியிலே கூட்ட, அவவிளரி துத்தநரமபாயிற்று' என்பது உரையாசிரிய ரிருவருக் கும் ஒத்த முடிபு. கணிதமுறையினுலும இம்முடிபே பெறப்பட்டது. தாரங கைக் கிளையாய், விளரி துததமான விடதது, இளி குரலாகும அஙஙனமாதலின,

'தார பாகமும குரலின் பாகமும
சோாடு வணகிளை கொளள நிற்ப
முன்னாப பாகமும பினனாப் பாகமும
விளரி குரலாகு மென்மனா புலவா'

என அரங்கேறறுகாதையுள்ளும,

'குன்றுக குரறபாதி தாரததி லொனறு
நடுவ ணிணைகிளை யாககிக—கொடியிடையாய
தாரததி லொனறு விளரிமே லேறடவந
சேரத ததுகுரலா நினறு'

என வேனிறகாதையுளளும வருந திரிபுச சூத்திரங்கள் எழுதுவோர் கையில் வழு வுற்றன வென்பது வெளிபபடை. இவறறுள், வேனிற்காதைச சூததிரம்,

குன்றுக குரற்பாதி தாரததி லொனறு
நடுவ ணிணைகிளை யாககிக—கொடியிடையாய
தாரததி லொன்று விளரிமே லேறடவந
சேரத திளிகுரலா நின்று

என நிற்றல் பொருததமாகும். இதனோடு பொருளொற்றுமையுடைய அரங்கேற்று

காதைச் சூத்திரம்,

> தார பாகமுங் குரலின பாகமும
> நோடு வணகிளை கொளள நிறப
> முன்னர்ப பாகம விளரியி லேறட்
> இளிகுர லாகு மென்மனுா புலவா

என நிற்றல் பொருததமாகும்.

திரிபுச சூத்திரங்களி லமைந்த விதிக்கியையப் பன்னிரு பாலைகளையுந் தோற்று விப்பாம்

கருவியிலே முதலில் நின்றது உழை குரலாகிய கோடிப்பாலை. உழைநரம்பை வெற்றிலக்கத்தில் நிறுத்தி, இளி (4), விளரி (3), தாரம் (2), குரல் (4), துத்தம் (4), கைக்கிளை (3), உழை (2) என இளிக்கிரமத்தில் அலகுகளைக் கூட்டிச்செல்ல வந் தெய்துவது கோடிப்பாலையுருவம்.

உ	இ	வி	தா	கு	து	கை	உ
0	4	7	9	13	17	20	22

இப்பாலையிலே, தார நரம்பு 8 ஆம், 9 ஆம் அலகுகளை உடையதாயிற்று; குரல நரம்பு 10 ஆம், 11 ஆம், 12 ஆம், 13 ஆம் அலகுகளை உடையதாயிற்று

> ' குனருக குரறபாதி தாரததி லொன்று
> நடுவே ணிணை கிளை யாக்கி '

என்றமையின், தாரத்தாக்கஞ் செயயுமிடததது, 9 ஆம், 10 ஆம், 11 ஆம் அலகுகள் கைக்கிளையாவன. தாரத்தில் நின்ற ஓரலகை, அஃதாவது, 8 ஆம் அலகை விளரியி லேறட, விளரி துத்தமாகும், இளி திரிபின்றிக் குரலாகும், உழை தாரமாகும்; 12 ஆம், 13 ஆம் அலகுகளோடு நின்ற குரல் •உழையாகும்; துத்தம் இளியாகும்; கைககிளை விளரியாகும்; அஙஙனமாதலின்,

முதற் றிரிபினுலே,

தா	கு	து	கை	உ	இ	வி	தா
0	4	8	11	13	17	20	22

என எய்திய உருவம் தாரங் குரலான செம்பாலையாகும். 'தாரங் குரலான' என்னு மிடத்துக், 'குரல' என்னும சொல் ஆதார சுருதியாகிய முதல் நரம்பு என்னும் பொருளினது. 'இளி திரிபினறிக குரலாகும்' என மேலே குறிப்பிட்டது, தாரத் தாக்கத்தின்பின் நரம்புக ளெய்திநின்ற அடைவிலே, பண்டை இளி நரம்பின் அலகு நிலை குரனரம்பிற்கு உரியதாயிற்று என்னும் பொருளினது.

முதற்றிரிபினுலே, தாரம 21 ஆம், 22 ஆம் அலகுகளில் நின்றது. குரல் 1 ஆம், 2 ஆம், 3 ஆம, 4 ஆம் அலகுகளில் நின்றது. மேலை விதிப்படி மற்றெருகாற் றிரிகருமிடத்து, 22, 1, 2 என்னும் அலகுகள் கைக்கிளையாவன; 1, 2 மேற்றுனததில் 23, 24 ஆகும் குரலின் பிற்பாதியாகிய 3, 4 என்னும் அலகுகள் உழையாய் நிற் பன தாரத்தின் ஓரலகாகிய 21 ஆம் அலகினைப்பெற்ற விளரி துததமாகும். பிற வும், முன் குறிப்பிட்டவாறு அமைவன அங்ஙனமாதலின்,

இரண்டாந் திரிபினுலே,

கை	உ	இ	வி	தா	கு	து	கை
2	4	8	11	13	17	21	24

என்னும் உருவம் வந்தெய்தும். முதனரம்பு நிற்குமிடத்தை வெற்றிலக்கமாக்கும் பொருட்டு, முதனரம்பின் அலகுநிலையெண்ணுகிய 2 இனை எல்லாவிடத்துங் கழித்தெழுதல்வேண்டும் அவ்வாறு செய்யுமிடத்து,

கை	உ	இ	வி	தா	கு	து	கை
0	2	6	9	11	15	19	22

எனக் கைக்கிளை குரலாகிய அரும்பாலை வந்தெய்தும்.

மூன்றாந் திரிபினுலே,

வி	தா	கு	து	கை	உ	இ	வி
0	2	6	10	13	15	19	22

என விளரி குரலாகிய மேற்செம்பாலை வந்து எய்தும்.

நான்காந் திரிபினுலே,

து	கை	உ	இ	வி	தா	கு	து
1	4	6	10	13	15	19	23

என அந்தரச் செவ்வழிப்பாலையும்,

ஐந்தாந் திரிபினுலே,

இ	வி	தா	கு	து	கை	உ	இ
1	4	6	10	14	17	19	23

என அந்தர விளரிப்பாலையும்,

ஆறாந் திரிபினுலே,

கு	து	கை	உ	இ	வி	தா	கு
1	5	8	10	14	17	19	23

என அந்தரப் படுமலைப்பாலையும்,

ஏழாந் திரிபினுலே,

உ	இ	வி	தா	கு	து	கை	உ
1	5	8	10	14	18	21	23

என அந்தரக்கோடிப்பாலையும்,

எட்டாந் திரிபினுலே,

தா	கு	து	கை	உ	இ	வி	தா
1	5	9	12	14	18	21	23

என அந்தரச் செம்பாலையும் வந்தெய்துவன.

ஒன்பதாந் திரிபினுலே,

து	கை	உ	இ	வி	தா	கு	து
0	3	5	9	12	14	18	22

எனச் செவ்வழிப்பாலை தோற்றும்.

[பண்டைநிலையிலே, தாரம் 22, 23 என்னும் அலகுகளில் நின்றது. திரிபினால 22 ஆம் அலகு துத்தத்திற் காயிற்று 23, அஃதாவது, கீழ்த்தானத்தில் 1, குரலின் முற்பகுதியில் நின்ற 2, 3 என்னும் அலகுகளோடு சேர்ந்து, கைக்கிளையாயிற்று என அறிக.]

பததாரந் திரிபினாலே,

இ	வி	தா	கு	து	கை	உ	இ
0	3	5	9	13	16	18	22

என விளரிப்பாலையாகும்.

பதினொராந் திரிபினாலே,

கு	து	கை	உ	இ	வி	தா	கு
0	4	7	9	13	16	18	22

எனப் படுமலைப்பாலையாகும.

பன்னிரண்டாந் திரிபினாலே,

உ	இ	வி	தா	கு	து	கை	உ
0	4	7	9	13	17	20	22

எனக் கோடிப்பாலை மீட்டும் வந்தெய்தும

மேற்செலலுமுன், இஙகுப்பெற்ற பன்னிருபாலைக்கும், **பாலைததிரிபியலிலே**, '**இளிககிரமத்தில் வட்டப்பாலை**' என்னும் தலைப்பெயர்க்கீழ்ப் பெற்ற பன்னிரண்டினுககு மிடையே யமைந்த தொடர்பினை நோக்குவாம

இடமுறைத் திரிபாதலின், பன்னிருபாலையின் நிறையுருவத்தைக் கும்பப்பாலை முதலாக நட்புத்தொடர்பில் எழுதவேணடும் அவவாறு எழுதககிடைப்பது

கும்பம	0	1	2	5	6	9	10	11	14	15	18	19	22
கற்கடகம்	0	1	2	5	6	9	10	13	14	15	18	19	22
தனு	0	1	4	5	6	9	10	13	14	15	18	19	22
இடபம்	0	1	4	5	6	9	10	13	14	17	18	19	22
துலாம	0	1	4	5	8	9	10	13	14	17	18	19	22
மீனம்	0	1	4	5	8	9	10	13	14	17	18	21	22
சிங்கம்	0	1	4	5	8	9	12	13	14	17	18	21	22
மகரம்	0	3	4	5	8	9	12	13	14	17	18	21	22
மிதுனம்	0	3	4	5	8	9	12	13	16	17	18	21	22
விருசசிகம்	0	3	4	7	8	9	12	13	16	17	18	21	22
மேடம	0	3	4	7	8	9	12	13	16	17	20	21	22
கன்னி	0	3	4	7	8	11	12	13	16	17	20	21	22

இளிககிரமததிலே, நரம்பு நிற்கும் வீடுகள், மேடம், மிதுனம, கற்கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், குமபம் என்னும் ஏழுமாம். எஞ்சிய இடபம், சிங்கம, துலாம, தனு, மீனம என்னும ஐநதும, அநதரம் நிற்கும் வீடுகளாம். மேலே காட்டிய

நிறையுருவங்க ளோவவொன்றிலும் அந்தரங்களை வெற்றிடமாக விட்டு, ஏனைய எண்களை எழுதுவாம். எழுதும் முறையினைக் கும்பப்பாலையில வைத்துக் காட்டுவாம். கும்பப்பாலையின் முதல்வீடு கும்பம். அதனையடுதது மீனம், மேடம் முதலியன அடைவே வருவன. மீனம் (1), இடபம் (5), சிஙகம் (10), துலாம (14), தனு (18) என அந்தரமைந்தும் நின்றன இவற்றை நீகக,

0—2—6 9—11—15—19 22

என நாம் மேலே கண்ட அரும்பாலை யுருவம வந்தெய்துகின்றது

கற்கடகப்பாலையின் முதலவீடு கறகடகம அதனையடுத்துச சிங்கம, கன்னி முதலியன அடைவே வருவன சிஙகம் (1), துலாம் (5), தனு (9), மீனம (14), இடபம (18) என அந்தரமைந்தும நின்றன இவற்றை நீக்க,

0—2—6—10 13—15—19 22

என நாம் மேலே கண்ட மேற்செமபாலை யுருவம வந்தெயதுகின்றது

தனுப்பாலையின் முதலவீடு தனு அதனையடுதது மகரம, குமபம் முதலியன அடைவே வருவன தனு (0,22), மீனம (5), இடபம (9), சிஙகம (14), துலாம் (18) என அந்தரமைநதும் நின்றன இவறறை நீக்க,

1 4—6—10 13—15—19—23

என நாம் மேலே கண்ட அநதரச செவவழிப்பாலை யுருவம் வந்தெயதுகின்றது.

எஞ்சிய ஒன்பதிலும், இவவாறே அநதரங்களை நீககி, அவை பெறும உருவஙகளின் பெயர்களைத தநது, பன்னிரணடினையும முறையாக நிறுததுவாம

கும்பம அருமபாலை	கை 0	—	உ 2	—	இ 6	வி 9	—	தா 11	—	கு 15	—	து 19	கை 22	
கறகடகம மேறசெம்பாலை	வி 0	—	தா 2	—	கு 6	—	து 10	கை 13	—	உ 15	—	இ 19	வி 22	
தனு அ செவவழிப்பாலை	—	து 1	கை 4	—	உ 6	—	இ 10	வி 13	—	தா 15	—	கு 19	—	து 23
இடபம அ விளரிபபாலை	—	இ 1	வி 4	—	தா 6	—	கு 10	—	து 14	கை 17	—	உ 19	—	இ 23
துலாம அ படுமலைபபாலை	—	கு 1	—	து 5	கை 8	—	உ 10	—	இ 14	வி 17	—	தா 19	—	கு 23
மீனம அ கோடிபபாலை	—	உ 1	—	இ 5	வி 8	—	தா 10	—	கு 14	—	து 18	கை 21	—	உ 23
சிஙகம அ. செமபாலை	—	தா 1	—	கு 5	—	து 9	கை 12	—	உ 14	—	இ 18	வி 21	—	தா 23
மகரம செவவழிப்பாலை	து 0	கை 3	—	உ 5	—	இ 9	வி 12	—	தா 14	—	கு 18	—	து 22	
மிதுனம விளரிபபாலை	இ 0	வி 3	—	தா 5	—	கு 9	—	து 13	கை 16	—	உ 18	—	இ 22	
விருசசிகம படுமலைபபாலை	கு 0	—	து 4	கை 7	—	உ 9	—	இ 13	வி 16	—	தா 18	—	கு 22	

மேடம் கோடிப்பாலை	உ 0	—	இ 4	வி 7	—	தா 9	—	கு 13	—	து 17	கை 20	—	உ 22
கன்னி செம்பாலை	தா 0	—	கு 4	—	து 8	கை 11	—	உ 13	—	இ 17	வி 20	—	தா 22

பன்னிரு பாலையின் நிறையுருவங்கள் ஐந்து கிரமங்களுக்கும் பொதுவாக அமைந்தன. எந்தக் கிரமத்தின் வட்டப்பாலை யுருவினைப் பெற விரும்புகின்றேமோ, அந்தக் கிரமத்திற்குரிய அந்தரங்களை நீக்கி, எஞ்சிநின்ற நரம்புகளிலே வட்டப்பாலை யுருவினைக் காணுதல்வேண்டும். இளிக்கிரமத்திற்குரிய அந்தரங்களை நீக்கி, மேலே யாம் பெற்ற வுரு, இளிக்கிரமத்து வட்டப்பாலையாகும். திரிபுசசூத்திர விதியினாற் கணித்துக் கண்ட பன்னிரண்டும் அரும்பாலை முதலாக அமைந்து நிறகக் காண்கின்றேம். அந்தரப்பாலை யைந்திலும் முதலில் நின்ற நரம்பு ஈற்றிலும் பெய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறு பெய்து பாடுதல் பண்டையோர் வழக்கென்பதை அரங்கேற்றுகாதை யுரையினு லறிகின்றேம்.

நட்புத்தொடர்பிலே தோன்றும் அலகெண்களாகிய 0—9—18—5—14—1—10—19—6—15—2—11 என்பவற்றை, முறையே, கும்பம், கற்கடகம், தனு, இடபம், துலாம், மீனம், சிங்கம், மகரம், மிதுனம், விருச்சிகம், மேடம், கன்னி எனனும் நிரல்களில் நின்ற அலகுநிலையெண்களோடு கூட்டச், சுருதிவீணையிலே இசைத்தற்குரிய முறையாக நாம் பாலைத்திரிபியலிலே காட்டிய இளிக்கிரமத்து வட்டப்பாலை யுருவம் வந்தெய்தும். அந்தரப்பாலை ஐந்தினையும் நீக்க, எஞ்சி நிற்பன பெரும்பாலை ஏழுமாம். அந்தரப்பாலை ஐந்தினையும் நிறுத்தி, முதனரம்பின் அலகுநிலையாகிய 1 இனை எவ்விடத்துங் கழித்துப் பெற்ற ஐந்தும், அவ்வப் பெயரிய பெரும்பாலை யுருவாதல் காண்கின்றேம்.

பன்னிருபாலை யுருவங்களை இக்காலத்துக் குறியீட்டெழுத்துக்களால் எழுதப் புகுவாம். அவ்வாறு செய்யுமுன், வடநாட்டிலும் தென்னாட்டிலும் வழங்கும் சுவரஸ்தானங்களைக்குறித்து ஒரு சில கூறவேண்டியிருக்கிறது.

வேங்கடமகி யேற்படுத்திய பன்னிரண்டு சுவரஸ்தானங்களை, ஒழிபியலிலே, 'வேங்கடமகியும் அகோபல பண்டிதருங் கொண்ட சுருதிகள்' எனப் பெயரிய பிரிவினுள்ளே காணலாம். சுத்த காந்தார, சுத்த நிஷாதங்களை வேங்கடமகி, முறையே, பஞ்சசுருதி ரிஷபத்திலும், பஞ்சசுருதி தைவதத்திலும் நிறுவினர். வீணைக்கருவி யமைப்போர் வேங்கடமகி கொண்ட சுருதிகளின் நரம்பு நீளங்களை யறிந்திலர். பண்டைத் தமிழிசை நூல்களும் வடமொழிப் பரதமுங் காட்டிய வழிமுறையிலே, தொன்றுதொட்டுத் தம் முன்னேர் கைக்கொண்ட கணக்கின்படி தொழிலாளர் கருவி யமைத்துச் சென்றனராதலின், வேங்கடமகியின் சுருதிமுறை வழக்கு வீழ்ந்தது. வேங்கடமகியின் பஞ்சசுருதியானது பழைய சதுசுருதிக்கும் பஞ்சசுருதிக்கும் இடையில் நிற்பது. பிற்காலத்து இசைவாணர் பழைய சதுசுருதி ரிஷபத்தையே சுத்த காந்தாரமெனவும், பழைய சதுசுருதி தைவதத்தையே சுத்த நிஷாதமெனவும் வைத்தனர். வேங்கடமகி கற்பித்த எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகங்களைப் பழைய

சுருதியிலமைந்த வீணைக்கருவியிலே இசைத்தலினாலே ஏற்படும் மலைவுகள், தென்னாட்டிலே, இன்னும் தீரா வழக்காக நிற்கின்றன. மதுரை நாதஸ்வர வித்துவான் பொன்னுச்சாமிப்பிள்ளை யவர்களை யுள்ளிட்ட பல வித்துவான்கள் மேளகர்த்தா ராகங்கள் முப்பத்திரண்டே கொள்ளவேண்டு மெனக் கூறுவர். வேங்கடமகி கொண்ட சுருதிகளின்வழி நிற்பின், எழுபத்திரண்டு கொள்வதில் இழுக்கில்லை. அன்றியும், வேங்கடமகி மேலதிகமாகக்கொண்ட நாற்பது மேளகர்த்தா ராகங்களுட் சில 'பண்டையோர் வகுத்த சிறுபாலை யைந்தும் நிலைக்களமாகத் தோற்றியிருத்தல் கூடு மென்பதனை ஒழிபியலிலே 'எழுபத்திரண்டு மேளகர்த்தாக்களின் மூர்ச்சனைகள்' என்னும் பிரிவினுள்ளே காட்டுவாம். இரு மத்திமமும் வரும் இராகங்களை வேங்கடமகி கொண்டிலர். வடநாட்டு வழக்கில் அத்தகைய ராகங்கள் உள்ளன. செவ்வழிப்பாலை பஞ்சமம் பெறாது, இரு மத்திமமும் பெற்றுப் பண்ணாய் நின்றது. இப்பொருளினை இவ்வியலின் மற்றோரிடத்தில் விரிவுற ஆராய்வாம். 'பிலாவல' எனப் பெயரிய தீரசங்கராபரண மேளத்தைச் சுத்த சுவர மேளமெனக் கொண்ட வடநாட்டார், அதனிடத்துள்ள சுவரங்களைச் சுத்த சுவரங்களெனக்கொள்வர். சங்கீதரத்நாகரத்திலும், இராகவிபோதத்திலும், சுவர மேள கலாநிதியிலும், சங்கீதசாராமிருதம், சங்கீதபாரிஜாதம் முதலிய பிற இசை நூல்களிலும் சுவரஸ்தானங்கள் பல்வேறு வகையாக நிர்ணயிக்கப்பட்டன. மேலும், இவ்வாராய்ச்சி நூலினுள்ளே, யாம் காட்டிய ஐவகைக் கிரமங்களிலும் இசைச் சுவரங்கள் இடம்பெயர்ந்து, வேறுவேறு சுருதிகளில் நிற்பனவெனக் கண்டாம். ஆதலினாலே, பொருளை வரையறை செய்யும்பொருட்டு, இளிக்கிரமத்திலே, நரம்புகள் நின்ற அடைவிலே எய்தும் பெயர்களையும், இக்காலத்திலே, தென்னாட்டிலும் வடநாட்டிலும் வழங்கும் பெயர்களையும், யாம் வழங்கப்போகின்ற குறியீட்டெழுத்துக்களையும் ஒருங்கு நிறுவி அட்டவணைப்படுத்துவாம்.

இளிக்கிரமத்தில் நரம்படைவு	தென்னாட்டு சுவரஸ்தானங்கள்	வடநாட்டு சுவரஸ்தானங்கள்	குறியீட்டு எழுத்துக்கள்
இளி	ஷட்ஜம்	ஷட்ஜம்	ச
விளரி	சுத்தரிஷபம்	கோமளரிஷபம்	ர
விளரியனந்தரம்	சதுசுருதிரிஷபம்	சுத்தரிஷபம்	ரி
தாரம்	சாதாரணகாந்தாரம்	கோமளகாந்தாரம்	க
தாரத்தினந்தரம்	அந்தரகாந்தாரம்	சுத்தகாந்தாரம்	கி
குரல்	சுத்தமத்திமம்	சுத்தமத்திமம்	ம
குரலினந்தரம்	பிரதிமத்திமம்	தீவிரமத்திமம்	மி
துத்தம்	பஞ்சமம்	பஞ்சமம்	ப
கைக்கிளை	சுத்ததைவதம்	கோமளதைவதம்	த
கைக்கிளையினந்தரம்	சதுசுருதிதைவதம்	சுத்ததைவதம்	தி
உழை	கைசிகிநிஷாதம்	கோமளநிஷாதம்	ந
உழையினந்தரம்	காகலிநிஷாதம்	சுத்தநிஷாதம்	நி

[தென்னாட்டில் இக்காலத்தில் வழங்கும் சுத்தகாந்தாரம் சதுசுருதி ரிஷபத்தின் குறியீட்டினையும், சுத்தநிஷாதம் சதுசுருதி தைவதத்தின் குறியீட்டினையும், ஷட்சுருதி

ரிஷபம் சாதாரணகாந்தாரத்தின் குறியீட்டினையும், ஷட்சுருதிதைவதம் கைசிகிநிஷாதத்தின் குறியீட்டினையும் பெறுவ. மேலே தந்த குறியீட்டெழுத்துக்கள் வடநாட்டு வழக்கினைப் பின்பற்றியனவாதலின், வடநாட்டு இராகங்களைக் குறித்தற்கும் பயன்படுவ.]

ஏழுபெரும்பாலைகளையும் மேலே காட்டிய குறியீட்டெழுத்துக்களினாலே எழுதுமிடத்து, அவை பின்வருமாறு அமைவன.

செவ்வழிப்பாலை	ச ர க ம மி த ந ச
விளரிப்பாலை	ச ர க ம ப த ந ச
படுமலைப்பாலை	ச ரி க ம ப த ந ச
கோடிப்பாலை	ச ரி க ம ப தி ந ச
செம்பாலை	ச ரி கி ம ப தி ந ச
அரும்பாலை	ச ரி கி ம ப தி நி ச
மேற்செம்பாலை	ச ரி கி மி ப தி நி ச

சிறுபாலையைந்தும் பின்வருமாறு அமைவன.

அந்தரச் செவ்வழிப்பாலை	ர ரி கி மி ப தி நி ர
,, விளரிப்பாலை	ர ரி கி மி த தி நி ர
,, படுமலைப்பாலை	ர க கி மி த தி நி ர
,, கோடிப்பாலை	ர க கி மி த ந நி ர
,, செம்பாலை	ர க ம மி த ந நி ர

சுவரங்களை ஒருவீடு (ஸ்தானம்) முன்னாகத் தள்ளி நிறுத்த, இவை தத்தம் பெயரிய பெரும்பாலையாதல் காண்கின்றோம்.

அரும்பாலை, மேற்செம்பாலையொழிந்த பெரும்பாலை யைந்தும் பண்ணு நிலையிலே பின்வரும் பண்ணாவன. 'யாழின்பகுதி' என்ற தொல்லாசிரியர் கூறிய யாழ்ப் பெயர்களையும் உடன்தருவாம்.

பாலை	பண்	யாழ்
செவ்வழிப்பாலை	விளரிப்பண்	விளரியாழ் நெய்தல்யாழ்
விளரிப்பாலை	செவ்வழிப்பண் முல்லைப்பண்	செவ்வழியாழ் முல்லையாழ்
படுமலைப்பாலை	குறிஞ்சிப்பண்	குறிஞ்சியாழ்
கோடிப்பாலை	மருதப்பண்	மருதயாழ்
செம்பாலை	பாலைப்பண்	பாலையாழ்

'முல்லையுஞ் சாதாரியும் செவ்வழியாழிற்குரிய திறமென்பது பின்னர்க் காட்டப்படும். செவ்வழி முல்லைக்குரியதாக விருப்ப, அதனை நெய்தலொடு புணர்த்துக் கூறிய இளம்பூரணரும் பிறரும் வழுவுற்றனரோ வெனின், அற்றன்று; திறனில்

யாழாகிய நெய்தல்யாழை இசைநூலாசிரியர் பெரும்பண் வரிசையினின் றகற்றி விட்டாராதலின், மாலைப்பொழுதிற்குரிய செவ்வழியாழினை எற்பாட்டோடுஞ் சார்த்திக் கூறியது ஒருவாற்றா னமையு மென்க.' என யாம் இவ்வியலின் முதற்பிரிவிற் கூறியது இத்தொடர்பில் உணரற்பாலது மேலே 'பெரும்பண் வரிசை' யென்றது 'நாற்பெரும் பண்ணென வகுத்து நிறுத்திய வரிசை' யென விரியும்.

கக-ஆம் பரிபாடலிலே, 'பண்கண்டு திறனெய்தாப் பண்டாளம் பெறப்பாடி' என்னுமிடத்தும் குறிப்பிட்டது, செவ்வழிப்பாலையி லுதித்த விளரிப்பண்ணினையே யாம் இது பண்ணாய் நிற்றற்குரியது, திறம் தோற்றுதற்கு உரியதன்றாகலின், 'பண் கண்டு திறன் எய்தாப்பண்' எனப்பட்டது.

கானல்வரிப் பாடலினுள்ளே, 'நுளையா விளரி நொடிதரு தீம்பாலை, இளிகிளையிற் கொள்ள விறுத்தா யான்மாலை' என்னுமிடத்து, இளங்கோவடிகள் குறித்தது விளரிப்பாலையி லுதித்த செவ்வழிப்பண்ணினை மாலைக்குரிமை செவ்வழிப்பண்ணுதலை இவ்வியலின் முதற்பிரிவினுட் காட்டினும் கிளை யென்றது இளியின் கிளையாகிய துத்தத்தை இளியின் பகைநரம்பாகிய கைக்கிளையினை, நுளையர் கள்ளுண்ட மயக்கத்தினாலே தடவினா எனக் கூறிய அரும்பதவுரையாசிரியருரை பொருந்தாவுரையாகும் நுளைய ரிசைத்த பாலை 'தீம்பாலை' எனச் சிறப்பித்துக் கூறப்பட்டிருத்தலை நோக்குக. விளரிப்பாலை முல்லைப்பண்ணுதலை ஆய்ச்சியர் குரவையினை ஆராயுமிடத்துங் காட்டுவாம்.

'வணர்கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீஇப்
புணர்புரி நரம்பிற் பொருள்படப் பத்தாக்
குரல் குரலாக வருமுறைப் பாலையிற்
றுத்தங் குரலாத் தொன்முறை யியற்கையி
னந்திங் குறிஞ்சி யகவன் மகளிரின்
மைந்தர்க் கோங்கிய வருவிருந் தயர்ந்து'

என நடுகற்காதையினுள்ளே குறிஞ்சிப்பண்ணி னிலக்கணம் கூறப்பட்டது இளிக் கிரமத்திலே குரல் குரலாயது படுமலைப்பாலை. இதுவே பழைமை பொருந்திய தாரக சிரமத்திலே துத்தங் குரலாக நின்றதாதலானும், ஒன்பான கோவையி னமைந்த சீறியாழ் தாரகசிரமத்தி லிசைகூட்டப்பட்ட தாதலானும், 'துத்தங் குரலாத் தொன்முறை யியற்கையி' னென்றார் படுமலைப்பாலை குறிஞ்சிப்பண்ணுதல இதனாற் பெறாரும் 'படுமலை' என்னும் பெயரும் குறிஞ்சி நிலத்தினைச் சுட்டி நிற்றல் காண்க

'குரலவா யிளிவாய்க் கேட்டன ளன்றியும்
வரன்முறை மருங்கி னைந்தினு மேழினும்
உழைமுத லாகவும் உழையீ றாகவும்
குரன்முத லாகவும் குரலீ றாகவும்
அகநிலை மருதமும் புறநிலை மருதமும்
அருகியல் மருதமும் பெருகியல் மருதமும்
நால்வகைச் சாதியும் நலம்பெற நோக்கி'

என வேனிற்காதையினுள்ளே மருதப்பண்ணி னிலக்கணம் கூறப்பட்டது. இங்குக்

கூறிய நாற்பாலும் நால்வேறு பாலையன்று, அனைத்தும் கோடிப்பாலையேயா மென் பதை வேனிற்காதை யுரையினை யாராயுமிடத்துக் காட்டுதும்.

அரங்கேற்றுகாதையினுள்ளே, 'பாறபட நின்ற பாலைப் பணமேல்' (கசக ஆம் அடி) என்றமையின், அக்காதையினுள் இணைநரம்பாகத தொடுததவழித், தாரமுதற் செமபாலை, உழைமுதல 'வமப்புறு மரபிற செம்பாலை' யாகியவிடததுத் தோன்றியது பாலைப்பண் ஆகும பாலையாழ செம்பாலையுட் பிறககு மென்பதை வேனிற்காதைக்கு அடியார்க்குநல்லார் கண்ட உரையினுலும அறிகின்றும்

பெரும்பண் நானகிறகும உரியனவாக வமைந்த செம்பாலை, படுமலைப்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை யென்னும் நான்கினையும சகோடயாழிலே இணை நரம் பாகத தொடுத்துப்பாடலாம். செமபாலையினை இணைநரம்பாகத் தொடுககும் முறை அரஙகேற்றுகானத யுரையினுள்ளே காட்டப்படடது ஒழிந்த மூன்றினையும் இணை நரமபாகத தொடுககும முறை ஆய்ச்சியர்குரவை யுரை, வேனிற்காதையுரைகளை ஆராயுமிடததுக காட்டப்படும

பெருமபண் நான்கென வகுததமையின, பண்கொளளும நீர்மையில நெயதற் றிணையினையும் முல்லைததிணையினையும ஒருஙகு நிறுவுதல இன்றியமையாததாயிற்று

'தாரத துழைதோனறப பாலையாழ தணகுரல
ஒரு முழைதோனறக் குறிஞ்சியாழ்—நேரே
இளிகுரலிற றோனற மருதயாழ துததம
இளியிற பிறககநெயத லியாழ்'

என அடியார்க்குநலலார் ஆய்ச்சியர்குரவையுட காட்டிய மேறகோட்சூத்திரத்திலே, நெயதல்யாழ எனக குறிபபிட்டது, முலலையாழாகிய செவ்வழியாழினையே யாம். படுமலைப்பாலை குறிஞ்சியாழாகு மெனவும, கோடிப்பாலை மருதயாழாகு மெனவும், சிலபபதிகார நூற் சானறு காட்டி மேலே யாம் நிறுவினேமாதலின், உரை மேற் கோட சூததிரததிலே 'குறிஞ்சியாழ', 'மருதயாழ' எனற சொறகள இடமாறிநிற்றல் வேண்டுமென்பது தெளிவாகிறது மயகக மெய்தாது காத்தற்பொருடடு, 'நெயதல்' என்னுஞ் சொலலினை 'முலலை'-யென மாறறுதலுமவேண்டும

'தாரததுழை தோனறப பாலையாழ தணகுரல
ஒருமுழை தோனற மருதயாழ—நேரே
இளிகுரலிற றோனறக குறிஞ்சியாழ துததம
இளியிற பிறக்கமுலலை யாழ'

என மேற்கோடசூததிரம் நிற்றல் பொருததமாகும 'குரல்வாய இளிவாயக் கேடட னள' என வேனிற்காதையுட கூறியதனை உரியவிடத்து ஆராயவாம சூததிரத்துப் பொருளைத் தூயமைசெய்யும்பொருட்டு, அதனுட குறிதத நாறபெரும் பணணுக்கும, 'பணகண்டுதிறனெயதாப் பண' ணுகிய விளரிபபண்ணுககும், இளிககிரமததிலே இயைந்த நரம்படைவினைத தருவாம

பாலைநிலை	நரம்படைவு			திணைப்பண்
	மெலிவு	சமன்	வலிவு	
செம்பாலை	க ம ப த	நி ச ரி க ம ப த	நி ச ரி	பாலை
கோடிப்பாலை	நி ச ரி க	ம ப த நி ச ரி க	ம ப த	மருதம்
படுமலைப்பாலை	ம ப த நி	ச ரி க ம ப த நி	ச ரி க	குறிஞ்சி
விளரிப்பாலை	ச ரி க ம	ப த நி ச ரி க ம	ப த நி	முல்லை
செவ்வழிப்பாலை	ப த நி ச	ரி க ம ப த நி ச	ரி க ம	நெய்தல்

ஆய்ச்சியர் குரவையினுள்ளே,

'பாடுந‌ம
முல்லைத்தீம் பாணி யெனறுள,
எனக்,
குரன்மந்தமாக இளி சமனாக
வரன்முறையே துத்தம வலியா—உரனிலா
மந்தம் விளரி பிடிப்பா ளவணட்பின
பினறையைப் பாடடெடுப்பாள'

என முல்லைப் பண்ணுக்கு நரமபடைவு கூறப்பட்டது குரலும் விளரியும மெலிவுத் தானததில் நிற்றல், மேலே தந்த ஐந்து நிரலகளினுளளே விளரிப்பாலை நிரலில்மாத திரம் அமைந்து நிற்பதை நோக்குக. உழைமுதற கைக்கிளையீறுகக் கட்டிய சகோட யாழிலே, விளரிப்பாலைக்கு அமைநத நிரலினை எவவாறு பொருந்தக் கொள்ளலா மெனின், சகோடயாழ பதினறு கோவையாகவும் வருமென இலககணம கூறப்பட டுள்ளதாதலின், ஈற்றிலொரு உழை நரமபினைப் பெய்து, உழைமுத லுழையீறுகிய நிரலிலே முதலுழையினைக் கொள்ளாதொழிய, இளிமுதல் உழையீறுகப் பதினனகு நரமபாகுமென்பது

மேலே தநத ஐந்து நிரலிலும, மெலிவுத தானத்தின் முதலினின்ற நரமபின கிளைநரம்பானது, சமன் தானதது முதலிலும, வலிவுத் தானதது முதலிலும் பொருநதி நிற்றலை நோக்குக.

'தாரத்து உழை தோன்றப் பாலையாழ' என்றது, இளிக்கிரமததிலே தாரம் முதல செம்பாலையாதலின், 'க ம ப த நி ச ரி க' திரிபின்றிச் செம்பாலையாக நிறக, தாரத்தின் கிளைநரம்பாகிய உழையினை முதலிற்கொண்ட 'நி ச ரி க ம ப த நி' யில விளரி, தாரங்கள் தாரத்தாக்கததினுல அநதரக்கோலி னிற்றலினுலே யமைந்த

'நி ச ரி க ம ப த நி' என்னும், 'வமடுறு மரபிற் செம்பாலை' யானது தாரம் முதற் செம்பாலையோடு இணைநரம்பாகத் தொடுத்துப் பாடப்படுமிடத்துப், பாலையாழ் என்னும் பெரும்பண் தோற்றுமெனப் பொருள்படும்.

அவ்வாறே, 'தண்குரல ஒருமுழை தோன்ற மருதயாழ்' என்றது, 'நி ச ரி க ம ப த நி' என்னும் உழை முதற் கோடிப்பாலையும், 'ம ப த நி ச ரி க ம' என விளரி தாரங்கள் அந்தரத்தில் நின்ற குரல் முதல் கோடிப்பாலையும் இணைநரம்பாகத் தொடுத்துப் பாடப்படுமிடத்து, மருதயாழ் எனனும் பெரும்பண் தோன்றுமெனப் பொருள்படும்

மேலும், 'நேரே இளிகுரலிற் றேன்றக குறிஞ்சியாழ்' என்றது, 'ம ப த நி ச ரி க ம' என்னும் குரல முதற் படுமலைப்பாலையும், 'ச ரி க ம ப த நி ச' என விளரி தாரஙகள் அநதரததில் நின்ற இளிமுதற படுமலைப்பாலையும் இணைநரம்பாகத் தொடுத்துப் பாடப்படுமிடத்துக், குறிஞ்சியாழ என்னும் பெரும்பண தோன்றுமெனப் பொருள்படும் ௧௯ ஆம் பரிபாடலிலே, 'யாழிலிளிகுரல் சமங்கொள்வோரும்' என்பதும் இப்பொருளை யுணர்த்திறறு பின்னரும், 'துத்தம் இளியிற் பிறக்க முல்லை யாழ்' என்றது, 'ச ரி க ம ப த நி ச' எனனும் இளிமுதல் விளரிப்பாலையும், 'ப த நி ச ரி க ம ப' என விளரி தாரங்கள் அந்தரத்தில் நின்ற துத்தம் முதல விளரிப்பாலையும் இணைநரமபாகத தொடுததுப் பாடப்படுமிடத்து, முல்லையாழ் (செவவழியாழ) என்னும பெரும்பண் தோன்றுமெனப் பொருளபடும்.

செவ்வழிப்பாலையி லுதிதத விளரிப்பண் திறந்தோற்றுதற்கு நிலைக்களனுகா தெனக் கூறினும். அரும்பாலை, மேறசெம்பாலைப் பண்களுக்கு நிலம் வகுத்திலராத லின், அவை திணைப்பண்ணுகாது, பொதுவாய் நிற்றற்குரிய எனபது புலப்படுகின் றது. திணைக்குரியபொழுது கொள்வன திணைப்பண்கள் மாத்திரமேயாம்.

'மாலை மருதம பண்ணிக் காலைக்
கைவழி மருஙகிற செவவழி பணணி
வரவெமா மறநதனா'

என்றமையின், வைகறை, விடியலுககுக் கோடிப்பாலையி லுதிதத மருதப்பண் ணுரிய தென்பதும, எறபாடு, மாலைக்கு விளரிபபாலையி லுதித்த செவவழிப்பண் உரியதென் பதும பெறப்பட்டன படுமலைப்பாலையி லுதித்த குறிஞ்சிப்பண் யாமப் பொழுதிற் குரியதென நடுகற்காதையினு லறிகின்ரும ஆங்குக் கோலங்கொண்ட மகளிர் தம் கணவரொடு கூடுதற கியைந்தது யாமப்பொழுதாதலின், அப்பொழுதினையே குறிஞ் சிப் பண்ணுக்குப் பண்டையாசிரியர் கொண்டனரென்பது தெளிவாகின்றது. 'பாய் கலைப் பாவை பாடற பாணி, ஆசான திறததி னமைவரக் கேட்டு' எனப் புறஞ்சேரி யிறுதத காதையினுள்ளே, நணபகலும, வேனிற் பெரும்பொழுதும், கொற்றவை யாகிய பாலைத்திணைத் தெய்வமும், செமபாலையுட் பிறந்த பாலைப் பெருமபண்ணேடு சார்ததிக் கூறப்பட்டன

வேனிறகாதை யுரையிலே, விளரிப்பாலையினுள்ளே பெருகியல் மருதப்பண் பிறந்ததென ஆசிரியர் அடியார்ககுநல்லார் கூறினரெனின், அவர் வரலாற்றுமுறை

மறந்த காலத்து உரை செய்தாராதலின், அவ்வாறு கொண்டாரெனக் கூறவேண்டியிருக்கிறது. அகநிலைமருதம், புறநிலைமருதம், அருகியல்மருதம், பெருகியல்மருதம் என்னும் நான்கு சாதியும் கோடிப்பாலையி லுதித்தன வென்பதனை வேனிற்காதையுரையினை ஆராயுமிடத்துத் தெளிவுபடுத்துவாம்.

செவ்வழிப்பாலை திறந் தோற்றுதற் குரியதன் றாதலின், எஞ்சிய ஆறினுள்ளும் என்ன தொகையினவாகிய திறங்கள் தோற்றுதல் கூடுமென ஆராய்ந்தறிவாம். திறமென்னுஞ் சொல் பெரும்பண்ணெனொழிந்த அனைத்தினையுங் குறிக்குமாதலின், பண்ணியற்றிறம், திறம், திறத்திறம் என்னும் வழக்கு உளதாயது. அனைத்திலும் திறம் என்னும் மொழி பொருந்தி நிற்றல் காண்க. நூற்றுமூன்று பண் என்றமையின், திறத்தினையும் பண்ணெனக் கொள்ளுதலும் மரபாம் என்பது புலப்படுகிறது. இவ்வாராய்ச்சியினுள்ளே, ஏழு இசைநரம்புகள் பெற்று நடப்பவற்றைப் பெரும்பண்ணெனவும், ஆறு இசைநரம்புகள் பெற்று நடப்பவற்றைப் பண்ணியற் றிறமெனவும், ஐந்து இசைநரம்புகள் பெற்று நடப்பவற்றைத் திறமெனவும் வழங்குவாம். இம்மூன்றினையும், இக்காலத்தார், சம்பூரணம், ஷாடவம், ஔடவம் எனபார். நாலு இசைநரம்புகளால் நடப்பதென இக்காலத்தார் கொண்ட சதுர்த்தம் என்னும் திறத்திறம் இவ்வாராய்ச்சிக்கு வேண்டப்படாது. அனைத்தினையும் பண்ணெனக் குறிக்கும் வழக்கும் இவ்வாராய்ச்சியுள் ஆளப்படும்.

ஏழு பெரும்பாலைகளிற் றோன்றிய உருக்கள், ‘வண்ணப்பட்டடை’ என்னும் இளிநரம்பு (ஷட்ஜம்) முதலாகக் கொள்ளுகின்ற உருவங்களை முதலிலே காண்பாம். அதன்மேல், ஏழு பெரும்பாலையும் வேறு வேறிடங்களிலே தொடங்குதலா லெய்திய உருவங்களைக் காண்பாம். மேலே நாம் அட்டவணைப்படுத்திய குறியீட்டெழுத்துக்களைப் பயன்படுத்துமிடத்து, ஷட்ஜம் எல்லா உருக்களின் முதலிலும் இறுதியிலும் வருவதாதலின், அஃதொழிந்த மற்றைய எழுத்துக்களைத் தருவாம். கற்போர் எல்லா உருக்களின் முதலிலும் இறுதியிலும் ஷட்ஜத்தின் குறியீடாகிய ‘ச’ வினைப் பெய்து கொள்வார்களாக. ஷட்ஜம் புறநீங்கலாகச் சம்பூரணத்துக்கு ஆறு சுவரமும், ஷாடவத்திற்கு ஐந்து சுவரமும், ஔடவத்திற்கு நான்கு சுவரமும் அமைவன. இரு பாலையில் ஒருரு வந்தெய்துமிடங்களில், ஒரு பாலையிலே அதனைக் கணக்கிற் சேர்த்து, மற்றப் பாலையிலே அது முன்னாகத் தோன்றியுள்ளதெனக் குறிப்பிட்டுச் செல்வாம். பெரும்பாலை ஏழும், ஷட்ஜம் புறநீங்கலாகியவிடத்துப், பின்வருமாறு நிற்பன.

பெரும்பண்

செவ்வழிப்பாலை	ர க ம மி த ந
விளரிப்பாலை	ர க ம ப த ந
படுமலைப்பாலை	ரி க ம ப த ந
கோடிப்பாலை	ரி க ம ப தி ந
செம்பாலை	ரி கி ம ப தி ந
அரும்பாலை	ரி கி ம ப தி நி
மேற்செம்பாலை	ரி கி மி ப தி நி

[செவ்வழிப்பாலை யொழிந்த ஆறினையும் ஒவ்வொன்றாக எடுத்து, அவைதம்முள் உதிக்கின்ற பண்ணியற் றிறங்களையும், திறங்களையும் அட்டவணைப்படுத்துவாம்]

விளரிப்பாலை

பண்ணியற்றிறம்	திறம்					
ர க ம ப த		ர க ம ப	ர க ம த	ர க ப த	ர ம ப த	க ம ப த
ர க ம ப ந		*	ர க ம ந	ர க ப ந	ர ம ப ந	க ம ப ந
ர க ம த ந			* *	ர க த ந	ர ம த ந	க ம த ந
ர க ப த ந				* * *	ர ப த ந	க ப த ந
ர ம ப த ந					* * * *	ம ப த ந
க ம ப த ந						* * * * *

[விளரிப்பாலையி னுருவாகிய 'ர க ம ப த ந' வில் ஈற்றில் நின்று தொடங்கி, ந, த, ப, ம, க, ர என்பவற்றை முறையே நீக்கிப் பெற்ற ஆறு உருக்களும் பண்ணியற்றிற மென நின்றன. அதன்பின், பண்ணியற்றிறத்தில் முதலில் நின்ற 'ர க ம ப த' வை எடுத்து, ஒவ்வோ ரெழுத்தினை நீக்கிப் பெற்ற ஐந்தும் திறத்தின் முதல் நிரலாக நின்றன. அதன்மேல், 'ர க ம ப ந' வில் முதலிற் பிறக்கும் 'ர க ம ப' ஏற்கனவே வந்துவிட்டதாதலின், ஓர் உடுக்குறி யிட்டு, எஞ்சிய நான்கினையும் இரண்டாம் நிரலாக எழுதினும். 'ர க ம த ந' வில் முதலாவதாகவும், இரண்டாவதாகவும் பிறந்த 'ர க ம த' 'ர க ம த' ஏற்கனவே வந்துள்ளவாதலின், இரண்டு உடுக்குறி யிட்டு, ஒழிந்த மூன்றினையும் எழுதினும். பிறவு மிவ்வாறே. 'க ம ப த ந' வின் ஐந்து உருக்களும் ஏற்கனவே வந்துள்ளவாதலின், அந்நிரலில் ஐந்து உடுக்குறி யிடப்பட்டன. விளரிப்பாலையிலே ஆறு பண்ணியற் றிறமும், பதினைந்து திறமும் தோன்றி நின்றன.]

படுமலைப்பாலை

ரி க ம ப த		ரி க ம ப	ரி க ம த	ரி க ப த	ரி ம ப த
ரி க ம ப ந			ரி க ம ந	ரி க ப ந	ரி ம ப ந
ரி க ம த ந				ரி க த ந	ரி ம த ந
ரி க ப த ந					ரி ப த ந
ரி ம ப த ந					

[படுமலைப்பாலையிலே தோற்றிய ஆறு பண்ணியற் றிறங்களிலே ஒன்றாகிய 'க ம ப த ந' வும், அதன்வழித் தோன்றிய க ம ப த, க ம ப ந, க ம த ந, க ப த ந, ம ப த ந, என்னும் ஐந்து திறங்களும், விளரிப்பாலையின் கீழ் ஏற்கனவே எண்ணப்பட்டன வாதலின், படுமலைப்பாலையின் கீழ்க் குறிக்கப்பட்டில. அவை யொழிந்த ஐந்து பண்ணியற் றிறங்களும், பத்துத் திறங்களும் மேலே குறிக்கப்பட்டன.]

கோடிப்பாலை

ரி க ம ப தி			ரி க ம தி	ரி க ப தி	ரி ம ப தி	க ம ப தி
ரி க ம தி ந				ரி க தி ந	ரி ம தி ந	க ம தி ந
ரி க ப தி ந					ரி ப தி ந	க ப தி ந
ரி ம ப தி ந						ம ப தி ந

[ரி க ம ப ந என்னும் பண்ணியற்றிறமும், அதன்வழித் தோன்றிய ரி க ம ப, ரி க ம ந, ரி க ப ந, ரி ம ப ந, க ம ப ந என்னும் ஐந்து திறங்களும முன்னும் வந்துள வாதலின், இஙகுத் தரப்பட்டில; ஒழிநத ஐந்து பண்ணியற்றிறங்களும், பத்துத் திறங்களும், மேலே குறிககப்பட்டன.]

செம்பாலை

ரி கி ம ப தி		ரி கி ம ப	ரி கி ம தி	ரி கி ப தி		கி ம ப தி
ரி க ம ப ந			ரி கி ம ந	ரி கி ப ந		கி ம ப ந
ர கி ம தி ந				ரி கி தி ந		கி ம தி ந
ர கி ப தி ந						கி ப தி ந
கி ம ப தி ந						

[ரி ம ப தி ந என்னும் பண்ணியறறிறமும், அதன்வழித் தோன்றிய ரி ம ப தி, ரி ம ப ந, ரி ம தி ந, ரி ப தி ந, ம ப தி ந எனனும் ஐந்து திறங்களும் முன்னும் வந்துளவாதலின், இங்குத தரப்பட்டில, ஒழிந்த ஐந்து பண்ணியற்றிறங்களும், பத்துத திறங்களும் மேலே குறிக்கப்பட்டன]

அரும்பாலை

ரி கி ம ப நி			ரி கி ம நி	ரி கி ப நி	ரி ம ப நி	கி ம ப நி
ரி கி ம தி நி				ரி கி தி நி	ரி ம தி நி	கி ம தி நி
ரி கி ப தி நி					ரி ப தி நி	கி ப தி நி
ரி ம ப தி நி						ம ப தி நி
கி ம ப தி நி						

[ரி கி ம ப தி என்னும் பண்ணியற்றிறமும், அதன்வழித் தோன்றிய ரி கி ம ப, ரி கி ம தி, ரி கி ப தி, ரி ம ப தி, கி ம ப தி என்னும் ஐந்து திறங்களும், முன்னும் வந்துளவாதலின், இங்குத் தரப்பட்டில; ஒழிந்த ஐந்து பண்ணியற்றிறங்களும், பத்துத் திறஙகளும மேலே குறிக்கப்பட்டன]

மேற்செம்பாலை

ரி கி மி ப தி		ரி கி மி ப	ரி கி மி தி		ரி மி ப தி	கி மி ப தி
ரி கி மி ப நி			ரி கி மி நி		ரி மி ப நி	கி மி ப நி
ரி கி மி தி நி					ரி மி தி நி	கி மி தி நி
ரி மி ப தி நி						மி ப தி நி
கி மி ப தி நி						

[ரி கி ப தி நி என்னும் பணணியறறிறமும், அதன்வழித் தோன்றிய ரி கி ப தி, ரி கி ப நி, ரி கி தி நி, ரி ப தி நி, கி ப தி நி என்னுமை ஐந்து திறங்களும முன்னும் வந்துளவாதலின், இங்குத் தரப்பட்டில; ஒழிநத ஐநது பண்ணியற்றிறஙகளும், பததுத் திறஙகளும் மேலே குறிக்கப்படடன]

பெருமபண் 7, பண்ணியற்றிறம் 31, திறம் 65 ஆகிய 103 உருக்கள் மேலே தோன்றியன. இவற்றுள்ளே, பெரும்பண் 7, பண்ணியற்றிறததில் 9 ஆகிய 16 இனை யும் பெரும்பண் வகை 16 ஆக வைத்துப், பண்ணியற்றிறம் 21 இனை அகநிலைத்திறம் 21 ஆக வைத்து, எஞ்சி நின்ற ஒரு பண்ணியற்றிறத்தினைப் பண் வரிசையில் 101 ஆம்

இலக்கம் பெற்ற 'தாரப்பண்டிறம்' என வைத்துத், திறங்கள 65 இனுள், புறநிலைத் திறம் 21, அருகியற்றிறம 21, பெருகியற்றிறம் 21, என வைத்து, எஞ்சிநின்ற இரண்டினையும் (102) பையுள்காஞ்சி, (103) படுமலை யென வைததுப், பண்டை யிசை யாசிரியாகள முறைப்படுததினர்க ளென்பது ஊகிக்கவேணடியிருக்கிறது பண்ணியற்றிறம் 9 பெருமபண் வகையைச சேருமிடத்து, ஆரோகணததில் ஷாடவமாகவும, அவரோகணத்தில் சம்பூரணமாகவும நிற்கலாம அததகைய ஷாடவ, சம்பூரணங்களை வேங்கடமகியினை யுளளிட்ட பிற்காலதது இசையாசிரியாகள் சமபூரணமென வழங்கினராதலின், அவைதமமைப பெருமபண் வகையிற் சோப்பதில இழுக்கில்லை.

'ஏழ பெருமபாலையி னுரு தொண்ணூற்றுறும, ஏழுமாயப் பண்கள நூற்று மூன்றுதறகுக காரணமா மெனக கொள்க' எனறுது, 'பன்னிரு பாலையி னுரு தொண்ணூறறொன்றும பனனிரண்டுமாயப், பணகள நூற்றுமூன்றுதற்குக் காரணமா மெனக கொள்க' எனறமையின், சிறுபாலை ஐந்தினையும பெரும்பண் வகையிற சேர்ததுத், திறம் ஐநதினைத தள்ள வேணடியிருக்கிறது மேறகுறிததவறறுள்ளே, ர க த ந, ரி க த ந, ரி க தி ந, ரி கி தி ந, ரி கி தி நி எனனும ஐந்து திறங்கள மததிம, பஞ்சம சுவரஙகளில ஒனறுயினும எயதப் பெருமையால, அவை தள்ளுணடனவோ என எண்ண வேணடியிருககிறது.

5. நூற்றுமூன்று பணகளின் பாலைநிலைகளைச் சுருதிவீணையி லமைத்துக காட்டல

சுருதிவீணையின மெட்டுககள குமபப்பாலையி லமைநதுநின்றன வாதலின், ஷட்ஜககிராமம எனபபடும இளிககிரமததிலே, முதலிலே, அரும்பாலை தோன்றும. (பாலைத்திரிபியல்—இளிக்கிரமததில வட்டப்பாலையை நோககுக)

அருமபாலையின அலகுநிலைகள, 0-2-6-9-11-15-19-22 ஆவன 22 ஐக் கூட்டிபபெறற (மேல்ஸ்தாயி சுருதிகள) மேறறுனதது அலகுநிலைகள் 24-28-31-33-37-41-44 ஆவன கோடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செமபாலை, செம்பாலை, படுமலைப் பாலை, செவ்வழிப்பாலை என்னும் இவைதமமை அடைவே பிறப்பிததற்கு, முதலிலே நின்ற அலகுநிலையினை நீககி, ஈற்றிலே மேற்றுனதது அலகுநிலையினைச் சேர்க்கவேண்டும

அரும்பாலை	0	2	6	9	11	15	19	22
கோடிப்பாலை	2	6	9	11	15	19	22	24
விளரிப்பாலை	6	9	11	15	19	22	24	28
மேறசெமபாலை	9	11	15	19	22	24	28	31
செம்பாலை	11	15	19	22	24	28	31	33
படுமலைப்பாலை	15	19	22	24	28	31	33	37
செவ்வழிப்பாலை	19	22	24	28	31	33	37	41

பண்ணியல்

ஒவ்வொரு நிரலிலும் முதலில் நின்ற அலகுநிலையெண்ணை அந்நிரலிலுள்ள எல்லா எண்களினின்றும் கழித்தெழுதிப் பெறும் சுத்த உருவங்களை நோக்கி, மேற் குறித்தன அவ்வப் பாலையாதலைத் தெளிந்துகொள்ளலாம்.

மேலே தந்த ஏழும் ஏழு நரம்பு பெற்ற பண்கள் (சம்பூரண ராகங்கள்). இவற்றில் நின்று பிறக்கும் ஆறு நரம்பு பெற்ற பண்ணியற்றிறங்களை (ஷாடவ ராகங்களை)ப் பெறுதற்கு, முதலில் நின்ற அரும்பாலையிலே ஒவ்வொரு நரம்பினை விட்டு உற்றுழ்ந்து காணவேண்டும். விடப்பட்ட நரம்பைக், கீழ்த்தானத்திற் போலவே, மேற்றானத்திலும் விடல்வேண்டும். இம்முறையாக உற்றுழும்போது, அவ்வாறு பண்ணியற்றிறங்கள் கொண்ட ஏழு வட்டங்கள் தோன்றுவன. இவற்றின் உருவங்களையும் (ஓரலகு நிலையினின்று அதற்கு முன்னுள்ள அலகுநிலையைக் கழித்துப்பெற்ற) அலகெண்களையும் தருவாம்.

பண்ணியற்றிறங்கள்

ஷட்ஜம் நீங்கிய முதல் வட்டம்

கோடிப்பாலை	2	6	9	11	15	19	24	4	3	2	4	4	5
விளரிப்பாலை	6	9	11	15	19	24	28	3	2	4	4	5	4
மேற்செம்பாலை	9	11	15	19	24	28	31	2	4	4	5	4	3
செம்பாலை	11	15	19	24	28	31	33	4	4	5	4	3	2
படுமலைப்பாலை	15	19	24	28	31	33	37	4	5	4	3	2	4
செவ்வழிப்பாலை	19	24	28	31	33	37	41	5	4	3	2	4	4

ரிஷபம் நீங்கிய இரண்டாம் வட்டம்

அரும்பாலை	0	6	9	11	15	19	22	6	3	2	4	4	3
விளரிப்பாலை	6	9	11	15	19	22	28	3	2	4	4	3	6
மேற்செம்பாலை	9	11	15	19	22	28	31	2	4	4	3	6	3
செம்பாலை	11	15	19	22	28	31	33	4	4	3	6	3	2
படுமலைப்பாலை	15	19	22	28	31	33	37	4	3	6	3	2	4
செவ்வழிப்பாலை	19	22	28	31	33	37	41	3	6	3	2	4	4

காந்தாரம் நீங்கிய மூன்றாம் வட்டம்

அரும்பாலை	0	2	9	11	15	19	22	2	7	2	4	4	3
கோடிப்பாலை	2	9	11	15	19	22	24	7	2	4	4	3	2
மேற்செம்பாலை	9	11	15	19	22	24	31	2	4	4	3	2	7
செம்பாலை	11	15	19	22	24	31	33	4	4	3	2	7	2
படுமலைப்பாலை	15	19	22	24	31	33	37	4	3	2	7	2	4
செவ்வழிப்பாலை	19	22	24	31	33	37	41	3	2	7	2	4	4

மத்திமம் நீங்கிய நான்காம் வட்டம்.

அரும்பாலை	0	2	6	11	15	19	22	2	4	5	4	4	3
கோடிப்பாலை	2	6	11	15	19	22	24	4	5	4	4	3	2

விளரிப்பாலை	6	11	15	19	22	24	28	5	4	4	3	2	4
செம்பாலை	11	15	19	22	24	28	33	4	4	3	2	4	5
படுமலைப்பாலை	15	19	22	24	28	33	37	4	3	2	4	5	4
செவ்வழிப்பாலை	19	22	24	28	33	37	41	3	2	4	5	4	4

பஞ்சமம் நீங்கிய ஐந்தாம் வட்டம்.

அரும்பாலை	0	2	6	9	15	19	22	24	2	4	3	6	4	3
கோடிப்பாலை	2	6	9	15	19	22	24	28	4	3	6	4	3	2
விளரிப்பாலை	6	9	15	19	22	24	28	31	3	6	4	3	2	4
மேற்செம்பாலை	9	15	19	22	24	28	31	33	6	4	3	2	4	3
படுமலைப்பாலை	15	19	22	24	28	31	33	37	4	3	2	4	3	6
செவவழிப்பாலை	19	22	24	28	31	33	37	41	3	2	4	3	6	4

தைவதம் நீங்கிய ஆறாம் வட்டம்

அரும்பாலை	0	2	6	9	11	19	22	24	2	4	3	2	8	3
கோடிப்பாலை	2	6	9	11	19	22	24	28	4	3	2	8	3	2
விளரிப்பாலை	6	9	11	19	22	24	28	31	3	2	8	3	2	4
மேற்செம்பாலை	9	11	19	22	24	28	31	33	2	8	3	2	4	3
செம்பாலை	11	19	22	24	28	31	33	37	8	3	2	4	3	2
செவ்வழிப்பாலை	19	22	24	28	31	33	37	41	3	2	4	3	2	8

நிஷாதம் நீங்கிய ஏழாம் வட்டம்.

அரும்பாலை	0	2	6	9	11	15	22	2	4	3	2	4	7
கோடிப்பாலை	2	6	9	11	15	22	24	4	3	2	4	7	2
விளரிப்பாலை	6	9	11	15	22	24	28	3	2	4	7	2	4
மேற்செம்பாலை	9	11	15	22	24	28	31	2	4	7	2	4	3
செம்பாலை	11	15	22	24	28	31	33	4	7	2	4	3	2
படுமலைப்பாலை	15	22	24	28	31	33	37	7	2	4	3	2	4

முன்பு நாம் சுவரங்களினாலே குறியீடு செய்த பண்ணியற்றிறங்களோடு இவைதம்மை ஒப்புநோக்குதற்கு, ஆதார சுருதியை எவ்விடத்தும் ஷட்ஜமாகக் கொண்டு, அவ்வடைவிலே மற்ற நரம்புகளினியல்பைக் குறித்தறியவேண்டும். இது செய்தற்கு, ஒவ்வொரு நிரலிலும் முதலிலுள்ள அலகுநிலையெண்ணினை, நிரலிலுள்ள எல்லா எண்களிலும் கழித்தெழுதவேண்டும்; வெற்றிலக்கத்தை முதலில் வைத்து, அலகெண்களை ஒவ்வொன்றாகக் கூட்டிச் சென்றாலும், அம்முடிபே பெறப்படும். இவ்வாறு பெற்ற சுத்த உருவங்களைப் பன்னிரு (சுவரஸ்தானங்களில்) வீடுகளில் நிறுத்தி, நரம்புகளி னுருவத்தைக் காணவேண்டும் (ஷட்ஜக்கிராமத்தில் 1 ஆம், 21 ஆம் சுருதிகள் வாராவாதலின், அவை இங்குக் குறிக்கப்படவில்லை.)

ச	ர	ரி	க	கி	ம	மி	ப	த	தி	ந	நி	ச	(கீழே தநத சுவர வரிசைகளின் முத லிலும ஈறறிலும 'ச' வைச சோதது வாசித துக கொளளவும)	வட்டம
0	•3	2	5	6	9	10	11	14	15	18	19	22		
		4	7	8	11	12	13	16	17	20				
0	—	4	7	—	9	—	13	—	17	—	—	22	ரி க ம ப தி	
0	3	—	5	—	9	—	13	—	—	18	—	22	ர க ம ப ந	
0	—	2	—	6	—	10	—	—	15	—	19	22	ரி கி மி தி நி	I
0	—	4	—	8	—	—	13	—	17	20	—	22	ரி கி ப தி ந	
0	—	4	—	—	9	—	13	16	—	18	—	22	ரி ம ப த ந	
0	—	—	5	—	9	12	—	14	—	18	—	22	க ம மி த ந	
0	—	—	—	6	9	—	11	—	15	—	19	22	கி ம ப தி நி	
0	3	—	5	—	9	—	13	16	—	—	—	22	ர க ம ப த	
0	—	2	—	6	—	10	13	—	—	—	19	22	ரி கி மி ப நி	II
0	—	4	—	8	11	—	—	—	17	20	—	22	ரி க ம தி ந	
0	—	4	7	—	—	—	13	16	—	18	—	22	ரி க ப த ந	
0	3	—	—	—	9	12	—	14	—	18	—	22	ர ம மி த ந	
0	—	2	—	—	9	—	11	—	15	—	19	22	ரி ம ப தி நி	
0	—	—	7	—	9	—	13	—	17	20	—	22	க ம ப தி ந	
0	—	2	—	6	—	10	13	—	15	—	—	22	ரி கி மி ப தி	III
0	—	4	—	8	11	—	13	—	—	20	—	22	ரி கி ம ப ந	
0	—	4	7	—	9	—	—	16	—	18	—	22	ரி க ம த ந	
0	3	—	5	—	—	12	—	14	—	18	—	22	ர க மி த ந	
0	—	2	—	6	—	—	11	—	15	—	19	22	ரி கி ப தி நி	
0	—	4	—	—	9	—	13	—	17	20	—	22	ரி ம ப தி ந	
0	—	—	5	—	9	—	13	16	—	18	—	22	க ம ப த ந	IV
0	—	4	—	8	11	—	13	—	17	—	—	22	ரி கி ம ப தி	
0	—	4	7	—	9	—	13	—	—	18	—	22	ரி க ம ப ந	
0	3	—	5	—	9	—	—	14	—	18	—	22	ர க ம த ந	
0	—	2	—	6	9	—	—	—	15	—	19	22	ரி கி ம தி நி	
0	—	4	7	—	—	—	13	—	17	20	—	22	ரி க ப தி ந	
0	3	—	—	—	9	—	13	16	—	18	—	22	ர ம ப த ந	V
0	—	—	—	6	—	10	13	—	15	—	19	22	கி மி ப தி நி	
0	—	4	7	—	9	—	13	16	—	—	—	22	ரி க ம ப த	
0	3	—	5	—	9	12	--	—	—	18	—	22	ர க ம மி ந	

0	—	2	—	6	9	—	11	—	—	—	19	22	ரி கி ம ப நி	
0	—	4	7	—	9	—	—	—	17	20	—	22	ரி க ம தி ந	
0	3	—	5	—	—	—	13	16	—	18	—	22	ர க ப த ந	VI
0	—	2	—	—	—	10	13	—	15	—	19	22	ரி மி ப தி நி	
0	—	—	—	8	11	—	13	—	17	20	—	22	கி ம ப தி ந	
0	3	—	5	—	9	12	—	14	—	—	—	22	ர க ம மி த	
0	—	2	—	6	9	—	11	—	15	—	—	22	ரி கி ம ப தி	
0	—	4	7	—	9	—	13	—	—	20	—	22	ரி க ம ப ந	
ச்ரப்பா த்ர ரீபாபாதாரீ பாதா சாசா பாதாநீதா பாம்ாம்ா | ரீபாதா்ரீ பாதாபாதாபாபா சாசா மாமா | ச்ாகாரீம்ா | மகரி சாசா சரிக பாதாரீபாதாரீ பாதாபாதாசாசா சாரீகாமாதாபா நீதாபாநீ தா பா ரீ ரீ.

இது ஆலாபம்.

[ஆலாபத்தின ஈற்றெழுத்துக்கள் பதிப்பினுள் ூ ூ என நின்றன; இங்கு ரீ, ரீ என எழுதியிருக்கின்றோம்.]

சச பப தத ரிரி பப தச சாம(2) ரிரி பப தநி பப ரிப தச சா சா(2) தத ம்ம் காரீ மக ரிக மம மகரிக சாசா பாதா நிதப மம. இது கரணம்.

[கரணத்தில் அடைப்பினுள் நிற்கும் (2) என்னும் எண்ணுனது பாடிய பகுதியை மீட்டும் ஒரு முறை இசைத்தலைக் குறித்ததெனலாம்.]

சா	சா	தா	நீ	பா	பா	பா	பா
தா	தா	நீ	நீ	ரீ	ரீ	பா	பா
ரீ	பா	பா	பா	தா	நீ	பா	பா
தா	மா	தா	சா	சா	சா	சா	சா
தா	தா	சா	தா	சா	ரீ	கா	சா
ரீ	கா	பா	பா	பா	பா	பா	பா
தா	மா	தா	மா	சா	சா	சா	சா
பா	தா	நித	பா	மா	பா	மா	மா

இது சாதாரிதாவின் ஆளத்தி.

பஞ்சமம் (உறுபபு)

இப்பண், மூன்றாந் திருமுறையில், 56 முதல் 66 வரை யுள்ள பதிகங்களிலும், ஏழாந் திருமுறையில், 97 முதல் 100 வரை யுள்ள பதிகங்களிலும் அமைந்து நின்றது.

மேலும், இப்பண்ணுனது, பாலைப்பெரும்பண்ணின் 'உறுப்பு' என்னுந் திறத்தின் அகநிலையாய்ப், பண்வரிசையில் 25 என்னும் எண் பெற்று நினறது

பஞ்சமம் என்னும் இராகமானது, மத்தியமா, பஞ்சமீ என்னும் ஜாதிராகங்களினின்று தோன்றியதும், காகலீ, அந்தரங்களோடு கூடியதும், பஞ்சம சுவரத்தினை முதல் (க்ரஹம்), முடிவு (ந்யாஸம்), கிழமை (அம்சம்) ஆகப் பெற்றதும், ஹ்ருஷ்யகா எனப் பெயரிய மூர்ச்சனையினை யுடையதும், காமனை யதிதேவதையாகப் பெற்றதும், கிரீஷ்ம ருது என்னும் பெரும்பொழுதிற் குரியதும், உவகை, நகை யென்னும் சுவைகளோடு கூடியதும், அவமர்சம் (விளைவு) என்னும் நாடகச் சந்தியுள் வருவதும், எனச் சங்கீதரத்நாகரம இதன் இலக்கணத்தைத் தருகிறது.

காகலீ அந்தரங்களோடு கூடியவழி, ஹ்ருஷயகா என்னும் மூர்சசனையானது, இக்காலத்து ஹரிகாம்போதி மேளத்தை நிகாப்பது. ஆளத்தியி லுள்ள 64 சுவரங்களில், 16 ரிஷப சுவரம் ஆதலின், அது கிழமை (அம்சம்) ஆகும். அங்ஙனமாயினும், ப த நி ச ரி க ம ப என்னும் நிரலில் நிற்கும் ரிஷபம், ச ரி க ம ப த நி ச என்னும் நிரலிலே பஞ்சம மாகுதலின், பஞ்சமம் அம்ச சுவரமாக நின்றது எனக் கூறியது

பொருத்தமே யாம். ஆளத்தியில் நிஷாத சுவரம் 3 மாத்திரம் வருதலின், அது வாஜிய மாகும் பதநிசரிகமப என்னும் நிரலில் நிற்கும் நிஷாதம், ச ரி க ம ப த நி ச என்னும் நிரலிலே காந்தார மாகும் குடுமியாமலைக் கல்வெட்டை நோக்குவோமெனில், பஞ்சமம் அம்சமாகிய இடததிலே தைவதமும் குறையாய் நிற்றல் காண்பாம். ஆத லின், ஹரிகாம்போதி மேளததிலே, ஆரோகணத்தில் காந்தார தைவதங்கள் வாஜிய மாகிய ரி ம ப ந-ந தி ப ம கி ரி எனனும் ஔடவ சம்பூரண உருவம் பஞ்சமப் பண்ணுக்கு உரியதெனக கொள்ளலாம்

இக்காலத்திலே, கரஹரப்பிரியா மேளத்திற் பிறந்து, ஆரோகணததில காந தார மத்திம வர்ஜியமாகவும், அவரோகணத்தில ரிஷப வர்ஜியமாகவும் வந்த பஞ்சமம் (ரி ப தி ந—ந தி ப ம க ந) எனனும் ஒரு ராகம் வழககி லுளளது 'கி ம மி ப த நி' என்னும் உருவுடைய பஞ்சமப் பெயரிய இராக மொன்று வடநாட்டு வழக்கி லுள்ளது.

சார்ஙகதேவர் பஞ்சமத்திறகுக் கூறிய ஆலாபம், கரணம், ஆளததி யெனு மிவை வருமாறு —

பாதா மாதா நீதாபாபா | பதநீரிமபதாமா தநி த பாபாரீகா சாசா மாபமாகா ரீரீ | ரீமாபதா மா பநிதபாபா | சாகா நீதா பப நிரீமா பாதாமாத நித பாபா. இது ஆலாபம.

பாபதபத மததநித பாபா | பாபாதநி ரிகபாபா மதநித பாபா பாதநி ரீரீ | கக சச கக ரீரீ ரீரீ மம பப தம தத நிதபா இது கரணம.

சா	சா	சா	சா	ரீ	ரீ	கா	கா
மா	கா	பம	கா	ரீ	ரீ	ரீ	ரீ
மா	சா	சா	சா	ரீ	ரீ	கா	சா
மா	கா	பம	கா	ரீ	ரீ	ரீ	ரீ
ரீ	ரீ	மா	மா	பா	பா	தா	மா
மா	தா	சா	சா	நீ	தா	பா	பா
தா	நீ	ரீ	மா	ரீ	மா	பா	பா
தா	மா	தா	நீ	பா	பா	பா	பா

இது ஆளத்தி

ஆலாபம், கரணம், ஆளததி ஆகிய இவை மூன்றும் சங்கீதரத்திஞகர மரபுக கியையப் பஞ்சமம் முதலாகிய நிரலில அமைந்தன வாதலின், ப தி நி ச ரி கி ம ப எனச சமன்பஞ்சமம் முதல உசசபஞ்சமம் வரையும எடுத்து, நிஷாத காநதார வர்ஜியமாகப பாடுதல் நலமாகும் வேஙகடமகியும், சதுர்தண்டிப்பிரகாசிகையிலே, 'பூரண பஞ்சம மென்பது நிஷாத வாஜிதமும், ஆகவே, ஷாடவமும் ஷடஜக்கிரம முடையதுமாம்' (25 ஆம் மேளம) எனக காடடுகின்ருர்.

திருமுறைகண்ட புராணத்திலே, 'தூங்கிசைசேர் பஞ்சமம்' எனக் கூறியிருத்தலையும் நோக்குக.

தக்கராகம் (அராகம)*

இப்பண், முதலாந் திருமுறையில, 23 முதல 46 வரையு முள்ள பதிகங்களிலும், ஏழாந திருமுறையில, 13 முதல 16 வரையு முள்ள பதிகங்களிலும் அமைந்து நின்றது

மேலும், இப்பண்ணானது பாலைப் பெருமபண்ணின் அராக மென்னுந் திறத்தின் அகநிலையாயப, பண்வரிசையில் 17 எனனும் எண்பெறறு நின்றது

டக்க எனனும் இராகமானது, சடஜ மத்தியமா, தைவதீ என்னும் ஜாதி இராகங்களிலே தோன்றியதும், அறப பஞ்சம முடையதும, சட்ஜ சுவரததை முதல் (கரஹம்), முடிவு (நயாஸம), கிழமை (அமசம்) ஆகக் கொண்டதும், காகலீ அந்தரத்தோடு கூடியதும், ஆதய மூர்ச்சனையினைக கொண்டதும, உருத்திரருக்குப் பிரியமானதும், வாஷ ருது என்னும பெருமபொழுதினை யுடையதும், பெருமிதம், மருட்கை, வெகுளி என்னும சுவைகளோடு கூடியதும, போாவீரனோடு தொடர்புடையது மெனச சங்கீதரததினாகரம் இதன் இலக்கணததைத தருகின்றது மேலும, பாஷாங்க ராகங்களைக் கூறுமிடதது, டக்க ராகததின் விபாஷையாகிய தேவாரவர்த்தநீ பஞ்சம அமசம, பஞசம க்ரஹம, சடஜ ந்யாஸம உடையதும், சமபூரணமானது மெனவுங் குறிபபிடுகின்றது ஷாடவ ஔடவ சமபூரணஙகளையும் சம்பூர்ண ராகமெனக கூறுவது இநநூல் வழக்கு

பெருமிதச சுவைக்கு ஆசிரியர் தொலகாப்பியனார், 'கலவி தறுகண் இசைமை கொடையெனச, சொல்லப் பட்ட பெருமித நான்கே' என இலக்கணங் கூறினர். ரததினாகர உரையினுளளே, கல்லிநாதர், 'வீரரசமானது தானவீரம், தயாவீரம், யுத்த வீரமென மூவகைபபடும்' என்றார, ஆதலினாலே, தக்கராகம், தறுகண்மை நிலைக்களமாக வெழுநத பெருமிதச சுவையினைத தருவதென்பது முடிபாகின்றது அங்ஙனமாயினும, உடபகைக ளாகிய காம, வெகுளி, மயக்கஙகளை யெதிர்த்துப் போர் புரிநது வெற்றிபெறும் வீரனும பாராட்டுதலுக் குரியனாதலின், அவனையும் இவவிராகததினோடு தொடர்புபடுததலா மென்பது ஒருதலை

இதன் ஆளததியினை நோக்குமிடத்து, ரிஷபம் வர்ஜிதமாகவும், பஞ்சமம் (ஒரு முறை மாததிரம் தோற்றி) அற்பமாகவும நிற்கக காணகின்றோம். மததியமக்கிராமத்து சௌவீரி என்னும் மூர்ச்சனையினை ஆதய மூர்ச்சனை யெனக் கொள்ளலாம். காகலீ யந்தரஙகளோடு கூடியவழி, இது மேசகல்யாணி மேளத்திறகு ஒப்பாகும். ம ப த நி ச ரி க என்னும் நிரலில, பஞ்சம, ரிஷபங்கள் வர்ஜியமாதல், ச ரி க ம ப த நி என்னும் நிரலில் ரிஷப தைவதங்கள வர்ஜியமாத லாகும அஙஙனமாதலின், கி மி ப நி-நி தி ப மி கி ரி என ஔடவ சம்பூரணமாக இப்பண்ணின உருவததைத் தரலாம்

*கலிப்பா வுறுப்பினுள ஒன்றாய், 'முடுகியல' ஆக நடக்கும 'அராகம' வேறு, பாலைப் பெரும பண்ணின் திறஙகளுள ஒன்றாகிய இது வேறு.

இதன் ஆளத்தியினைத் தருமிடத்து, ஆளத்திகுரிய கீதத்தையும் தமிழெழுத்திலே எழுதிச் சேர்த்திருக்கின்ரும் மற்றைய ஆளத்திகளுக்கும் கீதங்கள் தரப்பட்டன வெனினும், விரிவஞ்சி யவற்றைக் குறிப்பிட்டிலம.

சாதா மாரீ மாகா கசா கத நிசாரீ கசாரீ கம மாச நித மத மரீரீ ரிமாகாகசா சாசக மதநிதா சாதாமரி கசா கதநிசா | சாசா சச்கசாசசமரிகசாச கதாதத கசா சச தத நிதாதம தமங்நிமரிகரிரி நிதமமதமரீ கரீமரிகசா சசக சாசரிகதாதநி நிசாசா சசசகசசமமகதமமநிததசாசதாதமாமதா மரிகசா கதநிச | மாமாமதாமாமதாநிதாநி மாமதா தநிகமகாமரிக சாததநிசாசாசாசாசசதா கமமநி ககமத மரீரிமகாகசா சாசாசசகசசமகமசகமகநிதாசா | சாசா(ஷட்ஜ) சசசரி தமககசநிதாதமா மாமா தமதம்ம் மமமதமதமாதநி சரிகமகம கரிம காகசா ககநிசாமமகமகமம ககமமகக நிநிமம ககமம சசமமககமச சமமரிரிகசசககச சததநிநி மமமதததததத நிதநிதமததததத மததசத நிதாமததமததததமசக சதநிதா | மமமமமமமத சகாரி மாகாகமக தநீசாசா. இது ஆலாபம்.

(ஷட்ஜ)சதா மாரிகரிநிதாம மதமாரிகசாசகதாத (ஷட்ஜ)சதாதாசாத கரி-கரிரீரீநிரிமா | மாமதநிதா மமத தசசததகரிமாசகசநி மநிமாதாசாதாநீ சாசாமா-சநிதநிதாநீ சாகாதநீ சாமா சாதா மாகாரீரீ(ரிஷப) ரிகாமா நிதாநீ சாசாசக மததநிகா தாசாசாசமரிகசகசநிதா நீதாதாத சா சாசா சாசா மகாமகாகநிகப-மாகா | சாமாமாமா தாமரி கசாசகசாகநீ காசா மாமா காநீ (ஷட்ஜ) ச சா சா சா கா கா காமா சா சா | சகாசாசா காமகா மமகமமாமா | காசாகாரி மாரி மாரி மாரி கசாகநி (ஷட்ஜ) சசா இது கரணம்.

சா சு	சா ர	தா மு	தா கு	மா ட	மா ம	மா ணி	மா க
சா ளை	சநி ரசிo	தா த	சா o	சா ச	சா ர	சா ணம	சா o
சா சு	சா ர	கா வரு	கா க்ஷ	சா o	மா கு	கா சு	மா ம
தா வா	சா o	நித சிo	சா த	சா மு	சா கு	சா டம்	சா o
தா ச	நீ சி	சா ச	கா க	மா ல	தா கி	மா ர	கா ண
சா வி	சா சசு	தா ரி	நீ o	சநி தo	தா ஜ	தா டம்	தா o
சா ப்ர	சா ண	பா ம	நீ த	மா ப	கா சு	மா ப	கா தி
கா ம	கா ஜ	தா ம	நீ ம	சா ரம	சா o	சா o	சா o

இது ஆளத்தி.

தக்கேசி (நவிர)

இப்பண், முதலாந் திருமுறையில், 63 முதல் 74 வரையு முள்ள பதிகங்களி லும், ஏழாந் திருமுறையில், 54 முதல் 70 வரையு முள்ள பதிகங்களிலும் அமைந்து நின்றது.

மேலும், இப்பண்ணனது, மருதப் பெரும்பண்ணின் நவிர் என்னுந் திறத்தின் அகநிலையாய்ப், பண்வரிசையிலே 69 என்னும் எண் பெற்று நின்றது.

தைவதீ, மத்தியமா என்னும் ஜாதிராகங்களிலிருந்து தோன்றியதும், தைவ தத்தை முதல் (கரஹம்), முடிவு (ந்யாஸம), கிழமை (அம்சம்) ஆகக் கொண்டதும், காகலீ அந்தரத்தோடு கூடியதும், உத்தராயதா என்னும் மூர்ச்சனையினை யுடையதும், இளிவரல, அச்சம் என்னும் சுவைகளைப் பெற்றதும், மகாகாளருக்கும் மன்மதனுக் கும பிரியததைத் தருவதும் எனச் சங்கீதரத்நாகரம், டக்க கைசிக மென்னும் இரா கத்தின் இலக்கணத்தைத தருகின்றது

மேலும், மத்திமததை முதல், கிழமை யாகவும் தைவதத்தை முடிவாகவும் பெறறு, நி க ச த என்னும இசைகளோடு கூடிநின்ற திராவிடி என்னும இராகம் டக்க கைசிகத்தின் விபாஷா ஆகுமெனவும் அந்நூல் கூறுகின்றது

மருதப் பெரும்பணணின் அகநிலை யாதலின், தக்கேசிப்பண் அரும்பாலையில் (தீரசங்கராபரணததிற்) பிறக்கவேண்டுமென்பது இடைக்காலத்து மரபு. * காகலீ யந்தர சம்யுக்தமான மூர்ச்சனைகளிலே, ஷட்ஜாதி மூர்ச்சனையே தீரசங்கராபரண மாகு மாதலின், மேலே தந்த குறிப்புகளுக் கியையத், தக்கேசிப்பண்ணைக் 'கி ம தி நி' என்னுஞ் சுத்த ஔடவமாகக் கொளளல்வேண்டும்

நடடபாடை (நைவளம)

இப்பண், முதலாந் திருமுறையில், 1 முதல் 22 வரையு முள்ள பதிகங்களிலும், ஏழாந் திருமுறையில், 78 முதல் 82 வரையு முள்ள பதிகங்களிலும் அமைந்து நின்றது.

மேலும், இப்பண்ணனது குறிஞ்சிப் பெரும்பணணின் நைவளம் என்னும் திறத்தின் அகநிலையாய்ப், பண் வரிசையில் 37 என்னும் எண்பெற்று நின்றது.

பழந் தமிழ் நூல்களாகிய பத்துப்பாட்டினும, பரிபாடலினும் நைவளம் என் னும் பெயர் பயின்றுவருதல் காணலாம்

'நைவளம பழுநிய நயநதெரி பாலை'

—சிறுபாணாற்றுப்படை

'நைவளம் பழுநிய பாலை வலலோன'

—குறிஞ்சிபபாடடு

'நைவளம் பூதத நரமபியைசீர்ப் பொய்வளம்
பூததன பாணநின் பாட்டு'

—பரிபாடல

இதனைச் சங்கீதரத்நாகரம் வேசர ஷாடவம் என்னும் இராகத்தின் பாஷாங்கமாகக் கொண்டதாதலின், முதலிலே, வேசர ஷாடவத்தின் இலக்கணத்தினை யாராயந் துணர்தல் இன்றியமையாத தாகும்

சட்ஜ மத்தியமா என்னும் ஜாதிராகத்தில் தோன்றியதும், மத்திம சுவரத்தினை முதல (க்ரஹம்), முடிவு (ந்யாசம்), கிழமை (அம்சம்) ஆகக் கொண்டதும், காகலி அந்தரங்களோடு கூடியதும், மத்திம மாதியான மூர்ச்சனையினை யுடையதும், சம்பூரண மானதும், நகை, உவகை, நடுவுநிலை என்னும் சுவைகளை யுடையதும் சுக்கிரனுக்குப் பிரியமானது மென இதன் இலக்கணம் தரப்பட்டிருக்கிறது இடைக்காலத்து வழக்கின்படி, இதற்கு மத்திம மாதியான செம்பாலை கொள்ளுதல் மரபாதலின், காகலீ யந்தர சமயுக்தமான மூர்ச்சனையைக் கொள்ளாது, சுத்த மூர்ச்சனையையே கொள்வாம்.

மத்திம மாதியான மூர்ச்சனை யென்பது, குரல் குரலாகிய செம்பாலையைக் குறிக்கும் இக்காலத்தார், இதனை, அரிகாம்போதி மேள மென்பர். வேசர ஷாடவத்தின் ஆளத்தியினை நோக்க, 61 இல் 3 முறை மாத்திரம் வந்து, அற்பமாகி நிற்கும் நிஷாதம் விடப்படுவ தென்பது தோன்றும் மத்திம முதலாகிய சுவர வரிசையில் நிஷாதத்தை விடுதல், ஷட்ஜ முதலாகிய வரிசையில் மத்திமத்தை விடுதலாகும்.

இனி, வேசர ஷாடவத்தின் பாஷாங்கமாய, ‘நாட்யா’ எனப் பெயர் பெற்று நின்ற இராகம், சட்ஜத்தைக் கிரஹ சுவரமாகவும், மத்திமத்தை நியாஸ சுவரமாகவும் பெற்றது மேலும், இது மத்திமத்தை நிறையாகப் பெற்று, பஞ்சமத்தைத் தள்ளி விடுகிறதெனக் கூறப்பட்டிருத்தலின், இதனுருவம் ‘ரி கி ம தி ந’ என்பதாகும். அங்ஙன மாதலின், இக்காலத்தார் இப்பண்ணுக்குரியதாக வழங்கும் நாட்டைக் குறிஞ்சி யென்னும் இராகம் பொருத்தமானதே யாம் திரு C சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றிய ‘தென்னிந்திய சங்கீத லக்கணம்’ என்னும் நூலில், இவ்விராகத்தின் ஆரோகணம் ச ரி கி ம, ந தி ந ப தி ந ச எனவும், அவரோகணம் ச ந தி ம, கி ம ப கி ரி ச எனவும் தரப்பட்டிருக்கின்றன. இதனைச் ச ரி கி ம தி ந ச — ச ந தி ம கி ச எனக் கொள்வாரு முளர்

இனி, மத்திமம் முதலாகிய நிரலிலே வரும் பஞ்சமமானது, ஷட்ஜம் முதலாகிய நிரலிலே ரிஷப மாகு மாதலின், ரிஷபம் வர்ஜ்யமாகிய ‘கி ம ப தி ந’ என்னுஞ் சுத்த ஷாடவ வுருவத்தைக் கொள்ளுதலும் பொருந்தும்

தமிழர் வழங்கிய நைவளம் என்னும் பண்ணினை வடநாட்டார் கைப்பற்றி, வேசரஷாடவத்திற்குப் பாஷாங்க ராகமாக்கி, ‘நாட்யா’ எனப் பெயர் புனைந்தார்கள். வேற்று மொழியிலிருந்து எடுத்து, வடமொழி வழக்கிற சேர்க்கப்பட்ட தெனக் குறிப்பதற்காக, இது ‘நாட்டிய பாஷா’ எனவும் வழங்கப்பட்டது. தமிழர் தாம் இழந்த பொருளினை அடையாளம் கண்டறிய மாட்டாதாராய், ‘தமிழ’ என்பதைக் குறித்து நின்ற ‘பாஷா’ என்னும் சொல்லைப் ‘பாடை’ யாக்கி, ‘நட்டபாடை’ப் பெயர் வழங்கி யிடர்ப்படுவா ராயினர் இனி, இப்பண்ணினை ‘நைவளம்’ என வழங்குவதே முறையாகும்.

கௌசிகம (கைசிகம)

இப்பண், மூன்ருந் திருமுறையில், 43 முதல் 55 வரையு முள்ள பதிகங்களில் அமைந்து நின்றது.

மேலும, இப்பண்ணனது மருதப் பெரும்பண்ணின் வஞ்சி யென்னும் திறத்தின் பெருகியலாயப், பண் வரிசையில 80 என்னும் எணபெற்று நின்றது.

'கைசிகம்' என்னும் சொல் கௌசிகம் எனவும் மருவி நடததலின, இது சுதத கைசிகம், பிரந கைசிகம், கௌட கைசிகம, சட்ஜ கைசிகம், மாளவ கைசிகம் எனச் சாரங்கதேவா வகுத்தவறறுள் ஒன்றின்பால தாதல் வேண்டும் எனக் கருதி யாராய்ந்த பொழுது, மாளவ கைசிகததின் 'விபாஷா' வாக வமைந்த தேவாரவர்த்தநீ எனனும் இராகததினைக் கணணுற்றேம தேவாரத்தோடு தொடர்புடைய தெனக் குறிக்கும் பெயா நாம் தேடிய பொருள் இதுவேயா மென வெளிப்படுத்தியது.

கைசிகீ என்னும் ஜாதிராகததிலே தோன்றியதும், சட்ஜத்தினைக் கிரஹ, அமசம், நியாஸமாகக் கொண்டதும், அறப தைவத முடையதும், காகலியோடு கூடியதும, சட்ஜம் முதலாகிய மூர்ச்சனைகளை யுடையதும, வீரம, வெகுளி, வியப்பு எனனும் சுவைகளோடு கூடியதும, சிசிர ருது என்னும பெரும்பொழுதினை யுடையதும், கேசவனுககுப பிரியமானதும என மாளவ கைசிகததின் இலக்கணம் சங்கீதரததினுகரததிற் கூறப்பட்டது அந்நூலிலே தேவாரவாததநீ யெனப் பெயரிய இராகம மாளவ கைசிகததின் 'விபாஷா' வாக வந்து, சட்ஜத்தை அம்சமாகவும், பஞ்சமத்தை நியாஸமாகவும பெறறுக், காந்தார நிஷாத சுவரங்கள் விடுபட்டு நினறது எனவும் கூறப் படடிருத்தலின், கௌசிகப் பண்ணின் உருவம் 'ரி ம ப நி' எனப் புலப்படுகிறது.

வடநாட்டாா 'சுர-மல்ஹாா' என வழங்கும் சுத்தராகம் இவ்வுருவினது. தெனனுட்டில் இது சுதத சாவேரி யென வழங்கப்படுகிறது

செவ்வழி

இப்பண், இரணடாந்திருமுறையில், 113 முதல 122 வரையு முள்ள பதிகங்களில் அமைந்து நின்றது

செவவழிப் பாலையிலே விளரிப் பணணும், விளரிப் பாலையிலே செவ்வழிப் பணணும் கொளளுதல் பண்டையோர் மரபு கிரம வழககு வீழ்ந்த இடைக் காலத்திலே, செவ்வழியாழின அகநிலை கோடிப்பாலையிலே கொள்ளப்பட்டது (உாஎ ஆம் பக்கம பாாகக) பண்டையோர் வைகறை விடியலிற் பாடிய மருதப் பணணுக்கு நிலைககளமாய் நினற கோடிப்பாலையானது இடைக்காலத்திலும் வைகறை விடியலுக்கே உரிததாகிநிற்ப, அதனிடைப் பிறநத பண்ணின் பெயர் செவவழியாழ எனத் திரிபுபடடு நின்றது இவ்வாறமைந்த இடைக்காலத்து வழக்கினை நோக்கியே, திருஞானசமபந்தசுவாமிகளும், திருவீழிமிழலைப் பதிகத்து, 'சேருடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு, வேருய வுருவாகிச் செவவழிநற் பணபாடும் மிழலையாமே' எனக், காலைப் பொழுதிற்குச் செவவழிப் பணணினை உரிமையாக்கிக்

கூறினர்; சிறைவண்டு செங்கழுநீர்த் தாதாடி, மது வுண்ணுதல் காலைப்பொழுதில் நிகழ்வதாதலின். கம்பரும்

'குயிலினம் வதுவை செய்யக் கொம்பிடைக் குனிக்கு மஞ்ஞை
அயிலவிழி மகளி ராடு மரங்கினுக் கழகு செய்யப்
பயில்சிறை யரச வன்னம் பன்மலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை'

—நாட்டுப்படலம், கச

எனக் கூறுவாராயினர். செவ்வழியாழ், முல்லையாழ் எனவும் படும். (௨௭௩ ஆம் பக்கம் பார்க்க)

சேக்கிழார் சுவாமிகள், ஆனாய நாயனார் புராணத்திலே,

'மாறுமுதற் பண்ணின்பின் வளர்முல்லைப் பண்ணாக்கி
யேறியதா ரமுமுழையு கிழமைகொள விடுந்தானம்
ஆறுலவுஞ் சடைமுடியா ரஞ்செழுத்தி னிசைபெருகக்
கூறியபட் டடைக்குரலாங் கொடிப்பாலையினி னிறுத்தி'

என முல்லைப்பண்ணுக்குக் கோடிப்பாலை கொண்டதுமன்றி, அது தாரமும், உழையுங் கிழமைகொளும் எனவுங் கூறினர். அங்ஙனமாதலின், கரஹரப்பிரியா ராகத்தினைக் காந்தார நிஷாதங்கள் அம்ச சுவரமாகப் பாடுமிடத்துச், செவ்வழிப்பண் தோற்றும் என அறிகின்றோம்.

செந்துருத்தி (செந்திறம்)

இப்பண், ஏழாந் திருமுறையில், 95 ஆம் பதிகத்தில் அமைந்து நின்றது.

குறிஞ்சிப் பெரும்பண்ணின் அகநிலையா யமைந்து, பண்வரிசையில், 65 என்னும் எண் பெற்று நின்றது. செம்பாலையிலே தோற்றிய திறமாதலின், இது செந்திறமென வழங்கப்பட்டதென்று எண்ணவேண்டியிருக்கிறது. நாரத சங்கீத மகரந்தம் கூறுகின்ற மதுமாதவி யென்னும் இராகம ம-முதலாகிய மூர்ச்சனையில், ரி த வர்ஜியமாகத் தோன்றுவது அங்ஙனமாதலின், ச-முதலாகிய ச ரி கி ம ப தி ந என்னும் செம்பாலை (ஹரிகாம்போதி) நிரலில், கி தி நீங்க, எஞ்சி நிற்கும் ரி ம ப ந என்பது இதனுருவாகும் மதுமாதவி யென்னுஞ் சொல் திரிந்தே, மத்தியமாவதி யுருவம் பெற்றதென எண்ணவேண்டியிருக்கிறது

காந்தாரம்

இப்பண், இரண்டாந் திருமுறையில், 54 முதல் 82 வரையு முள்ள பதிகங்களிலும், நான்காந் திருமுறையில், 2 முதல் 7 வரையு முள்ள பதிகங்களிலும், ஏழாந் திருமுறையில், 71 முதல் 75 வரையு முள்ள பதிகங்களிலும் அமைந்து நின்றது.

குறிஞ்சிப் பெரும்பண்ணின் அகநிலையாய்ப், பண் வரிசையில், 41 என்னும் எண் பெற்று நின்றது. காந்தார பஞ்சமத்தின் பாஷாங்க ராகமாக வரும் காந்தாரீ என்பது, ஷட்ஜ மததிமங்களால் அலங்கரிக்கப்பட்டுத், தைவதத்தை யொழித்து வருவது எனவும், எல்லா வுலகங்களையும், சிறப்பாக, மகளிரையும் மகிழ்விப்பது எனவும் இதன் இலக்கணம் சங்கீதரத்திநாகரத்திற் கூறப்பட்டிருக்கிறது.

'காந்தார மிசையமைத்துக் காரிகையார் பண்பாட' எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் கூறுதலின், சார்ஙகதேவர் கூறிய காந்தாரியே காந்தாரப்பண் எனக் கொள்ளுதல் பொருந்தும். அஃதன்றியும், தேவாரவர்த்தநீ யாகிய, கௌசிகத்தை யடுதது இது கூறப்பட்டிருப்பதும் இக்கொளகையை வலியுறுத்தும். செம்பாலைக் குரிய ரி கி ம ப தி ந என்னும் உருவில், தைவதம் ஒழிய, எஞ்சி நின்ற ரி கி ம ப ந என்னும் சுத்தஷாடவ வுருவத்தைக் காநதாரப்பண்ணுக்கு உரியதாகக் கொள்ள லாம

பாலைப் பெரும்பண்ணின் ஆசானதிறததின் அகநிலையாய்ப், பணவரிசையில், 31 எனனும் எண பெறறு நின்ற காந்தாரததை நாரத சங்கித மகரந்தம் கூறிய தேவ காந்தாரத்திறகு ஒப்பாகக் கொள்ளலாம் கொள்ளுமிடத்து, இது மகரந்த இலக் கணத்திற கியைய, ரி கி ரி தி நி என்னும் சுத்தஷாடவ வுருவம் பெறும் பண்ணிய விலே (பக்கம் ாகூரு), இதனை 36-சுருதிகாநதாரததுக்கு ஒப்பாகக் கூறினு மெனி னும், செவவழிப்பாலை பெற்ற அதனினும் பாாகக, மேறசெமபாலை பெற்ற இதற்கு உரிமையாக்குதல் வலியுடைதது

குறிஞ்சி

இப்பண், முதலாந் திருமுறையில, 75 முதல 103 வரையு முள்ள பதிகஙகளி லும், நான்காந திருமுறையில, 21 ஆம பதிகத்திலும், ஏழாந் திருமுறையில், 90 முதல் 94 வரையு முள்ள பதிகஙகளிலும் அமைநது நின்றது.

குறிஞ்சிப் பெரும்பண்ணின் அரற்று எனனுந் திறத்தின் அகநிலையாய்ப், பண் வரிசையில, 61 என்னும எண்பெற்று நின்ற குறிஞ்சிப்பண்ணினை, நாரத சங்கித மக ரந்தம் கூறும் குரஞ்சி யெனக கொளளுமிடத்து, ம-முதலாகிய செம்பாலையில், நி-குறைந்து நின்றதாகக் கொள்ளல்வேண்டும். ம-முதலாகிய நிரலில் நி-குறைவது, ச-முதலாகிய நிரலில ம-குறைவதாகு மாதலின், ரி கி ப தி ந என்னும் சுத்தஷாடவ வுருவத்தைக் குறிஞ்சிப்பணணிற குரியதாகக் கொளளலாம்.

மேகராககுறிஞ்சி

இப்பண், முதலாந் திருமுறையில, 129 முதல 135 வரையு முள்ள பதிகங் களில் அமைந்து நின்றது

இது, குறிஞ்சிப் பெரும்பண்ணின் பஞ்சுரம் என்னுந திறத்தின் அருகிய லாய்ப், பண்வரிசையில், 47 என்னும் எண்பெற்று நின்றது. நாரத சங்கித மகரந் தம் கூறுகிற மேகரஞ்சி இதுவாக விருப்பின், ம-முதலாகிய மூர்ச்சனையில, தைவத நிஷாதங்கள் நீஙகிய உரு இதனுருவாகும் ம ப த நி ச ரி க வில் உள்ள த நி, ச ரி க ம ப த நி யிலுள்ள க ம ஆகுமாதலின், ஹரிகாமபோதி மேளத்தில் காந்தார மததிம வர்ஜியமாகிய 'ரி ப தி ந' என்னும் சுதத ஔடவ வுருவம் இதன் உருவ மெனக் கொள்ளலாம். இது நூற்றுமூன்று பண்களில் இணை நீங்கிய திறங்களுட் காணப்படுவது.



VII. மகர யாழ் (வருணன் ஊர்தி)

எ—ஒழிபியல்

1. எண்ணலளவை ; இசைக் கணிதம் ; நாற்பத்திரண்டு அலகுநிலைகள்

கணக்கறிந் தார்க்கன்றிக் காணவொண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்கும்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே —திருமூலர்

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு —திருவள்ளுவர்

எண்ணலளவை

I

பழந் தமிழிசை நூல்கள் வழக்கொழிந்து இறந்ததுபோல, எண்ணூல்களும் இறந்துபட்டன வாதலின், இசை யாராய்ச்சிக்கு வேண்டப்படுவ வாகிய கணித நூன் முடிபுகளைப் பிறமொழி வாயிலாகப் பெறுதல் இன்றியமையாத தாயிற்று. இப் பிரிவினுள்ளும், அடுத்துவரும் 'இசைக்கணிதம்' என்னும் பிரிவினுள்ளும் கணிதநூன் முடிபுகள் சிலவற்றைத் தொகுத்துக் கூறுவாம்.

II

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது என நின்ற எண்கள் முதலெண் எனப்படுவ. இவைதம்மை, க, உ, ௩, ௪, ரு, சு, எ, அ, கூ என எழுதுதல் தமிழ் மரபு. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்னும் குறியீடுகளை அராபிய இலக்கம் என்பர். எழுதல், அச்சிடுதல், கணக்கியற்றல் என்னும் இவற்றிற்கு எளி தாம் நீர்மை நோக்கிப், பொதுவழக்கி லுள்ள அராபிய இலக்கங்களையே யாமும் வழங்குவாம்.

முதலெண்களைப் பதின்மடங்கு கொள்ளக் கிடைப்பன பதின் தானத்து எண்கள். முதலெண்கள் தனித்து நிற்குமிடத்து, அவை முதற் றானத்தில் நிற்பன. பதின் மடங் காகியவழிப், பத்தின் தான மாகிய இரண்டாந் தானத்தின எண்கள் எய்த, முதற் றானம் வெறுமை யாகும், அத்தானம் வெறுமை யாயிற்று எனக் காட்டுதற்கு '0' என்னும் வெற்றிலக்கத்தை யிடுதல் மரபு.

10, 20, 30, 40, 50, 60, 70, 80, 90 எனு மிவை, பத்து, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது, தொண்ணூறு எனப்படுவ. இவை தம்மைப் பதின்மடங்கு கொள்ளக் கிடைப்பன, நூறு, இருநூறு, முந்நூறு, நானூறு, ஐந்நூறு, அறுநூறு, எழுநூறு, எண்ணூறு, தொளாயிரம் ஆம். எழுதுமிடத்து, முதற் றானத்திலும், இரண்டாந் தானத்திலும் வெற்றிலக்கம் நிற்றலின், இவை,

100, 200, 300, 400, 500, 600, 700, 800, 900 என நிற்பன. இவைதமமைப் பதின்மடங்கு கொளளக் கிடைப்பன, ஓராயிரம் (1,000) முதல் ஒன்பதினுயிரம் (9,000) வரை யென்பதும், இவைதமமைப் பதின்மடஙகு கொள்ளக் கிடைபபன, ஒருபதினு யிரம் (10,000) முதல் தொண்ணூருயிரம் (90,000) வரை யெனபதும், இவைதமமைப் பதின்மடங்கு கொள்ளக் கிடைப்பன, ஒருநூருயிரம் (1,00,000) முதல் ஒன்பது நூரு யிரம் (9,00,000) வரை யென்பதும், இவைதமமைப் பதின்மடங்கு கொள்ளக கிடைப் பன, ஒருபது நூருயிரம் (10,00,000) முதல் தொண்ணூறு நூருயிரம் (90,00,000) வரை யென்பதும் அறிதற் பால. பப்பத்தாகப் பெருகிச் செலலு மியல்பின தாதலின், இவ வெண்மரபு பதின்மரபு (Decimal Notation) எனப்படும்

III

நூறு நூருயிரம கோடி யாகும் நூருயிரததினை இலடசம் என்பது வடநூல் வழக்கு தமிழ வழக்கின்படி, 7,24,65,318 என நினற எணணுனது, ஏழு கோடியே இருபததுநான்கு நூருயிரதது அறுபததையாயிரதது முந்நூற்றுப் பதினெட்டு ஆகும். வடமொழி வழக்கினைப் பின்பற்றி, 'நூருயிரதது' என்பதை நீக்கி, 'இலட் சத்து' எனபதைப் பெய்துகொள்ளின், மேற்காட்டிய எண, ஏழு கோடியே இரு பத்துநான்கு லட்சதது அறுபததையாயிரதது முநநூறறுப் பதினெட்டு என வாசிக் கப்படும்.

'கோடி' எட்டாந் தானதத்து இதனை நோக்கிப்போலும், 'ஏக மெண் மடங்கு கொண்டது கோடி' எனப் பிஙகல நிகண்டு கூறும

ஏகம முதற ருனம், பத்து இரண்டாந தானம், பத்தினை இருபடி வைத்துப் பெருககிப் பெற்ற நூறு மூனருந் தானம், பததினை முப்படி வைததுப் பெருக்கிப் பெறற ஆயிரம நான்காந தானம்; பத்தினை நாறபடி வைத்துப் பெருக்கிப் பெற்ற பதினுயிரம் ஐந்தாந் தானம, பத்தினை ஐம்படி வைததுப் பெருககிப் பெற்ற இலட் சம் ஆருந் தானம், பத்தினை அறுபடி வைத்துப் பெருக்கிப் பெற்ற பததிலட்சம ஏழாந் தானம்; பத்தினை எழுபடி வைத்துப பெருக்கிப் பெற்ற கோடி எட்டாந் தானம் என அறிக இத்தனை படி யெனபதைக குறிககும் எணணை வலப்புறத்தில மிதத்தி எழுதுதல் மரபு = என்பது சமன் குறி, சமன் என வாசிக்கப்படும்.

$10^1 = 10$
$10^2 = 100$
$10^3 = 1,000$
$10^4 = 10,000$
$10^5 = 1,00,000$
$10^6 = 10,00,000$
$10^7 = 1,00,00,000$

பத்து ஒருபடி சமன் பதது; பத்து இருபடி சமன் நூறு; பத்து முப்படி சமன் ஆயிரம், பிறவும் இப்படியே வலப்புறததில் மிதத்தி யெழுதிய எண்ணினைப் 'படி யெண்' எனபாம்.

கோடி கோடி சங்கம் எனப்படும். கோடி, பத்துக் கோடி, நூறு கோடி, ஆயிர கோடி, பதினுயிர கோடி, இலட்ச கோடி, பத்திலட்ச கோடி, சங்கம். முதல், கடையிரண்டும் உள்பட எட்டுப் பெயர்கள் உள. இதனை நோக்கிப்போலும், 'கோடியெண்மடங்கு கொண்டது சங்கம்' எனப் பிங்கல நிகண்டு கூறும். கோடி 10^7 ஆதலின், கோடி கோடி யாகிய சங்கம் 10^{14} ஆகும். இவவெண் பதினைந்து தானத்தது.

'சஙகமெண மடஙகு கொண்டது விநதம'
'விநதமெண மடஙகு கொணடது குமுதம்'
'குமுதமெண மடஙகு கொண்டது பதுமம'
'பதுமமெண் மடங்கு கொணடது நாடு'
'நாடெண மடஙகு கொண்டது சமுததிரம'
'சமுததிரமெண் மடஙகு கொண்டது வெளளம'

என்னும் சூத்திரங்களுக்கும் இவ்வாறே பொருள் காண்புழிக், கோடி சங்கம் விந்தம் எனவும், கோடி விந்தம் குமுதம் எனவும், கோடி குமுதம் பதுமம் எனவும், கோடி பதுமம் நாடு எனவும், கோடி நாடு சமுததிரம எனவும, கோடி சமுத்திரம வெள்ளம் எனவும் வெளியாகின்றன

'நெயதலுங குவளையும் ஆம்பலுஞ சஙகமும்
மையில் கமலமும வெள்ளமும நுதலிய
செய்குறி யீட்டங கழிப்பிய வழிமுறை
கேழல திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி யொருவினை யுணாததலின முதுமைககு
ஊழி யாவரு முணரா
ஆழி முதலவநிற பேணுதுந தொழுது'

எனப் பரிபாடலுட் கீரநதையார் கூறியவற்றுள்ளே, ஆம்பல் குமுதமெனவும், கமலம் பதுமமெனவும் அறிகின்றும். நெய்தல் நிலவுரிமை பற்றிச் சமுத்திர மாதல் சாலும். குவளையினை நாடு எனல் பொருந்தும்.

IV

மேற் சொல்லுமுன், கணககியற்றலில வழங்கும் நான்கு குறியீடுகளைத் தருவாம்.

+ கூட்டற் குறி; இதனைக் 'கூட்டு' என வாசிப்பாம்.
− கழிததற் குறி ; இதனைக் 'கழி' என வாசிப்பாம்.
× பெருககற் குறி, இதனைப் 'பெருக்கு' என வாசிப்பாம்
÷ பிரித்தற் குறி, இதனைப 'பிரி' என வாசிப்பாம்.

V

கோடி × கோடி = சங்கம். இது 15 தானத்தது.
கோடி × கோடி × கோடி = விந்தம். இது 22 தானத்தது.
கோடி × கோடி × கோடி × கோடி = குமுதம் (ஆம்பல்). இது 29 தானத்தது.
கோடி × கோடி × கோடி × கோடி × கோடி = பதுமம் (கமலம்) இது 36 தானத்தது.

கோடி × கோடி × கோடி × கோடி × கோடி × கோடி = நாடு (குவளை) இது 43 தானத்தது

கோடி × கோடி × கோடி × கோடி × கோடி × கோடி × கோடி = சமுத்திரம் (நெய்தல). இது 50 தானத்தது

கோடி × கோடி × கோடி × கோடி × கோடி × கோடி × கோடி × கோடி = வெள்ளம. இது 57 தானத்தது.

சங்கினது உருவம இருகோடி (கோணம) விந்ததின் (மலையின்) உருவம் முக்கோடி (கோணம) ஆமபலின் உருவம் நாறகோடி (நாலிதழ). தாமரையினுருவும் ஐங்கோடி (ஐயிதழ) பதுமபந்தம் ஐயிதழாக வரையபபடும். நாட்டி னுருவமும், குவளையி னுருவமும அறுகோடி (அறுகோணம, ஆறிதழ்) சமுததிரத்தி னுருவம எழு கோடி (ஏழு கடல்); நெயதல மலருக்கு இதழ ஏழாதலவேண்டும். வெள்ளததி னுருவம் எண்கோடி, எட்டுத திக்கிலும் பரவுவது. இவை யாவும காரணப்பெயராதல் காண்க சங்க நிதி கோடி கோடி பொன் பதும நிதி கோடி கோடி கோடி கோடி கோடி பொன். இவை எண்ணினால எயதிய பெயர்கள்

VI

இப பேரெண்களை வழங்கும் வானநூன் முடிபுகள சிலவற்றைத தருவாம். அண்டத்தி லுள்ள எப்பொருளினும் ஒளியே மிகுந்த வேக முடையது அது ஒரு செககண்டில் (Second), ஓரிலட்சதது எணபத்தாறாயிரம (1,86,000) மைல் செலலும் ஒரு மணி நேரத்திலே, அறுபததாறு கோடியே தொணணூறறாறு இலட்சம் (66,96,00,000) மைல செலலும ஒரு நாளிலே, ஓராயிரத் தறுநூறறேழு கோடியே நாலு லடசம (1,607,04,00,000) மைல செலலும. 365 நாடகள் கொண்ட ஓராண்டிலே, ஐநதிலட்சத்து எண்பததாறாயிரத்து ஐஞ்ஞூற றறுபததொன்பது கோடியே அறுபதிலடசம (5,86,569,60,00,000) மைல செலலும ஓராண்டிலே ஒளி செலலும தூரததினை, விணமீன்களின் தூரததை அளப்பதற கியைந்த ஓர் அளவு கோலாகக் கொள்வர்

சூரியனுக்கும பூமிககும் இடையே யுளள தூரம ஒனபது கோடியே முப்பதிலட்சம் (9,30,00,000) மைல் எனபர் அங்ஙன மாதலின, சூரியனிடமிருநது புறப்படட ஒளிக் கிரணமானது பூமியை வந்து அடைய 500 செக்கணடு, அஃதாவது, எட்டு மினிட்டு இருபது செககண்டு எனனும அளவாகிய நேரம செல்லு மென அறிகினறோம். சீரியஸ் (Sirius) எனப்படும விண்மீனிலிருநது பூமிககு ஒளிவர, எடடு வருடமும் எட்டு மாதமும் செலலு மென்பா. ஆதலின், அவவிண்மீனின் தூரம் ஏறததாழ ஐம்பததோரிலட்ச கோடி மைலாகும அந்திரமீதா (Andromeda) என்னும் விண்மீனிலிருந்து பூமிககு ஒளிவர, எட்டு லட்சத்து ஐம்பததையாயிரம ஆண்டு செல்லு மெனக் கணககிட்டிருககின்றனா. ஆதலினால, அவ்விணமீனின் தூரம் ஐம்பதினாயிரம் சங்க மைலுக்கு மேலா மென அறிகினறோம்

அண்டகோளததி லுள்ள விண்மீனகளின் தொகை இருபதினாயிரகோடி எனக கணிதநூல் வல்லாா கணககிட்டிருககின்றனா. இவையனைத்தினையும் உள்ளடககிய

அண்டகோளமும அளவினுடபட்டதெனக் கணிதநூற் பேரறிஞராகிய எயின்ஸ்தெயின் (Einstein) என்னும் ஆசிரியர் கூறுவர் இவர் கருத்தின்படி, அண்டகோளத்தி னெல்லையிலிருந்து புறப்பட்ட ஒளியானது பூவுலகத்தை அடைய மூவாயிரத் திருநூறு கோடி ஆண்டுகள் செல்லும் அங்ஙன மாதலின், அண்டகோளத்தின் அச்சு நீளம் மூநூற் றெழுபததைநது விநதமே நாற்பது லடசத்து நாற்பத்தையாயிரத்து நானூற்று நாற்பது சஙகம (375,40,45,440,00,00,000,00,00,000) மைல்களாமென உததேசமாகக் கூறலாம

VII

அண்டத்தின் அளவைக் காண்பதறகுப் பேரெண்கள் கருவியாதல் போல, அணுவின் அளவைக் காணபதறகுக் கீழ்வா யெண்கள் கருவி யாவன.

ஏகத்தின் பத்திலொரு கூறு 1 என எழுதப்படும், இதனைப் 'புள்ளி ஒன்று' என வாசிபபாம். (புள்ளியை மிததநி யெழுதவேண்டு மென்பதைக் குறித்துக் கொள்ளவும்) பத்திலொரு கூற்றின் பத்திலொரு கூறு, அஃதாவது, ஏகத்தின் நூற்றிலொரு கூறு 01 என எழுதப்படும. இதனைப் 'புள்ளி வெற்றிலககம ஒன்று' என்பாம். ஏகததின் ஆயிரததிலொரு கூறு 001 என எழுதப்படும் இதனைப் 'புளளி வெறறிலககம் வெறறிலக்கம் ஒன்று' என வாசிப்பாம பிறவும் இப்படியே.

நமமுன்னோா ஏகததின் இருபதி லொரு கூற்றினை 'மா' என வழங்கினா. ஆதலின், பததிலொரு கூறு 'இருமா' வாகும்; ஐநதிலொரு கூறு 'நாலுமா' வாகும். இருப்து மா ஒன்று ஆதலின, நூறு மா ஐந்து ஆகும், ஆயிரம் மா ஐம்பது ஆகும்

மாவின் காற் கூறறினை, அஃதாவது, ஏகத்தின் எணபதில் ஒரு கூற்றினைக் 'காணி' என்றனர் ஆயிரம் மா ஐம்பது ஆதலின, ஆயிரம் காணி ஐம்பதின் காற் கூறுகிய பன்னிரணடரை யாகும் $50+12\frac{1}{2}=62\frac{1}{2}$ ஆதலின், ஆயிரம் மாகாணி அறுபததிரணடரை ஆயிறறு. இனி, மற்றொரு வகையாக நோக்குவாம். மா நாற் காணி யாதலின், மா காணி ஐங்காணி யாகும். மா நாற் காணி யென்னும் வாசகத்தைக், குறியீட்டிலே, $\frac{1}{20}=\frac{4}{80}$ எனக் காட்டலாம். 'இருபதிலொன்று' ($\frac{1}{20}$) என்னும் பின்ன வெண்ணிலே, இருபது 'பகுதி' யெனப்படும், ஒன்று 'தொகுதி' யெனப்படும். அவ்வாறே, 'எண்பதில் நானகு' ($\frac{4}{80}$) என்னும் பின்ன வெண்ணிலே, எண்பது 'பகுதி' யாகும், நான்கு 'தொகுதி' யாகும். ஏகததை இருபது சம கூறு செய்து, ஒரு கூற்றினை யெடுப்பது, எண்பது சமகூறு செயது நான்கு கூற்றினை யெடுத்தல்போலாகும் ஆதலின், இவை சமமாயின

பினன வெண்ணின தொகுதியையும, பகுதியையும், ஒரே யெண்ணிறை பெருக்கினலோ, பிரித்தாலோ, அப பினன வெணணின மதிபபு வேறுபடாது என்னும் விதி உளங் கொளற்பாலது. மேலே விதியின்படி,

$$\frac{5}{80}=\frac{1}{16} \text{ ஆகும்.}$$

பதினாறி லொன்றினை 'வீசம்' என்பர். 'ஐங்காணி சமன் ஒரு வீசம்' என்று மேலேயுள்ள குறியீட்டினை வாசிக்கலாம். மாகாணி ஐஙகாணி யாதலின், மாகாணியும் வீசமும் ஒரு பொருளன.

$\frac{1}{2}$ இன் $\frac{1}{2}=\frac{1}{4}$
$\frac{1}{4}$ இன் $\frac{1}{2}=\frac{1}{8}$
$\frac{1}{8}$ இன $\frac{1}{2}=\frac{1}{16}$

என்பவற்றை அரையின் அரை சமன் கால், காலின் அரை சமன் அரைக்கால், அரைக்காலின் அரை சமன் வீசம் என வாசிக்கலாம்.

ஆயிரததை இரணடிற் பிரிக்க 500, நான்கிற் பிரிக்க 250, எட்டிற் பிரிக்க 125, பதினாறிற் பிரிகக 62½ ஆம்.

$\frac{1}{2}=\frac{5}{10}=5$; $\frac{1}{4}=\frac{25}{100}=\cdot 25$

$\frac{1}{8}=\frac{125}{1000}=125$; $\frac{1}{16}=\frac{625}{10000}=0625$

என்னும் இம்முடிபுகளை ஆராய்ந்து நோக்குக

```
2| 1
 2| 5
  2| 25
   2| 125
      0625
```

மேல்வாய் எண்களுக்கும், கீழ்வாய எணகளுக்கும் இடை நிற்பது தானநிலைப் புள்ளி தானநிலைப் புள்ளியினைத் தொடர்ந்து வேண்டிய அளவு வெற்றிலக்கங்க ளிட்டுப் பிரித்தற் செய்கையைச் செய்து கொள்க

'முக்காலே யரைக்காலைப் பதின்கூற்றுக கீழவாயெண்ணிற் கணககிட்டுக் கூறுக' என்னும வினவிற்கு விடைகாணுமிடத்து, அரை, கால், அரைக்கால் என்னு மிவற்றைத் தனித்தனி பதின்கூற்றுக் கீழவா யாக்கி, மொத்ததைக் காணலாம்

$\frac{1}{2}=\cdot 5$
$\frac{1}{4}=\cdot 25$
$\frac{1}{8}=\cdot 125$
மொத்தம் 875

முக்காலே யரைக்கால் ஏழு அரைக்கா லாதலின், பின்ன வுருவிலே $\frac{7}{8}$ ஆகும். தொகுதி யாகிய 7 இனை வைத்துத் தானநிலைப் புள்ளியிட்டு, வேண்டிய வெறறிலககஙகளைச் சேர்த்துப், பகுதியாகிய 8 இனாற் பிரிப்பாம்.

```
8 | 7 000
    875
```

அவவாறு செயயுமிடத்து, முன் பெற்ற முடிபே பெறுகின்றாம்.

பின்னவெண்களைக் கூட்டல, கழிததல் செய்யுமிடத்து, அனைததினையும் ஓரே பகுதிய வாககிக் கூட்டல, கழித்தல் செயதல் முறையாகும்

$\frac{3}{4}+\frac{2}{3}-\frac{1}{6}=\frac{9}{12}+\frac{8}{12}-\frac{2}{12}$
$=\frac{15}{12}$
$=\frac{5}{4}$

என்பதை நோககுக. 4, 3, 6 என்னும் பகுதிகள் 12 இல் அடங்குவ வாதலின்,

அதனைப் பொதுப் பகுதி யெனலாம். $\frac{3}{4}=\frac{9}{12}$, $\frac{2}{3}=\frac{8}{12}$, $\frac{1}{6}=\frac{2}{12}$ என வறிந்து எழுதிய பின், $9+8-2=15$ எனக் கண்டு, $\frac{15}{12}$ என எழுதினும். பொதுச்சினை யாகிய 3 இனல் தொகுதியையும் பகுதியையும பிரிகக, $\frac{5}{4}$ ஆகும் இது $\frac{4}{4}+\frac{1}{4}$ ஆதலின், $1\frac{1}{4}$ என எழுதலாம்.

பின்னஙகளைப் பெருககுமிடத்துத், தொகுதி யனைததினையும் பெருக்கற் குறி யிட்டுத் தொகுதியாக எழுதி, அவ்வாறே பகுதி யனைத்தினையும் பெருக்கற குறியிட்டுப் பகுதியாக எழுதித், தொகுதியிலும பகுதியிலும் பொதுச சினைகளை நீக்கிய பின் தனிததனி பெருக்கி யெழுதி, விடை கண்டுகொள்க

$$\frac{256}{243}\times\frac{81}{80}=\frac{256\times 81}{243\times 80}$$

256 ககும, 80 க்கும் பொதுசசினை 16 பொதுச்சினையினுல 256 ஐப் பிரிக்க, 16 உம், 80 ஐப் பிரிகக 5 உம் கிடைப்பன. ஆதலினுலே, 256, 80 என்னு மிவறறை வெட்டி விட்டு, அவை நின்ற விடததில், முறையே, 16, 5 என்பவற்றை நிறுத்தி, மேலை முடிவினை எழுதப பெறுவது,

$$\frac{16\times 81}{243\times 5}$$

243 கது 81 சினையாகும அதனை நீக்க,

$$\frac{16}{3\times 5}=\frac{16}{15}$$

என வாயிற்று.

தொடாபாகிய பல பின்னங்களையும் பெருக்கும் முறையும் இதுவாகும்.

$$\tfrac{16}{15}\times\tfrac{25}{24}\times\tfrac{16}{15}\times\tfrac{135}{128}\times\tfrac{16}{15}\times\tfrac{135}{128}\times\tfrac{16}{15}\times\tfrac{16}{15}\times\tfrac{25}{24}\times\tfrac{16}{15}\times\tfrac{135}{128}\times\tfrac{16}{15}$$

என நின்ற பன்னிரண்டு பின்ன வெண்களைப் பெருக்கிப் பெற்ற பேறு 2 ஆதல் காண்க.

பகுதியைத் தொகுதியாகவும், தொகுதியைப் பகுதியாகவும் மாற்றி எழுதிப் பெற்ற பின்ன வெண்ணுனது, முனனினற பினன வெண்ணின் தலைகீழெண் எனப் படும $\frac{4}{5}$, $\frac{5}{4}$ என்பவற்றை நோக்குக ஒரெண்ணையும, அதன் தலைகீழெண்ணையும் பெருக்கிப் பெற்ற பேறு ஏகம் ஆகும். $\frac{4}{5}\times\frac{5}{4}=1$ என்பதை நோக்குக. 16 இன் தலை கீழெண் $\frac{1}{16}=0625$ ஆதலின், $16\times 0625=1$

ஒரு பின்னததை மற்றொரு பினனததினுற் பிரிக்கவேண்டின், பிரிக்கப்படு மெண்ணினை வைத்துப், பிரிக்கு மெண்ணின் தலைகீழெண்ணினுலே பெருக்கிக் கொள்க.

$\frac{5}{6}\div\frac{2}{3}=\frac{5}{6}\times\frac{3}{2}=\frac{5}{4}$ என வருதல காண்க.

[இவ்வாராயசசியை உளங்கொளற்கு வேண்டிய ஒரு சில முடிபுகளே இங்குத் தரப் படுகின்றன. மேலும் அறிய விரும்புவோர் வல்லாரவாய்க் கேட்டு அறிநதுகொள் வாாகளாக]

VIII

படி யெணகளின இயல்பைப் பற்றி ஒரு சிறிது ஆராயந்தறிவோமாக.

நூறு நூருயிரம்=கோடி

$100 \times 100 \times 1000 = 1,00,00,000$

$10^2 \times 10^2 \times 10^3 = 10^7$

சினைகளின் படியெண்களாகிய 2, 2, 3 என்பவறறைக் கூட்டப், பேற்றின் படி யெண்ணுகிய 7 வருகிறது.

$1,00,00,000 - 1,000 = 10,000$

$10^7 \div 10^3 = 10^4$

பிரிக்கப்படு மெணணின் படியெண்ணுகிய 7 இலிருந்து பிரிக்கு மெண்ணின் படி யெண்ணுகிய 3 ஐக் கழிக்க, ஈவின் படியெண்ணுகிய 4 வருகிறது

$1,000 \div 10,000 = \frac{1}{10}$

$10^3 \div 10^4 = 10^{-1}$

1,000 ஐப் 10,000 இனுற் பிரிக்குமிடததுப, பததிலொன்று $\frac{1}{10}$ என்னும் கீழவா யெண் கிடைக்கும். 3 இலிருந்து 4 இனை எடுததாற கிடைப்பது குறை 1, இதனை -1 என எழுதலாம் ஆதலினுலே, $\frac{1}{10} = 10^{-1}$ எனவும், $\frac{1}{100} = 10^{-2}$ எனவும வருவ ஏகததின் படியெண் வெற்றிலக்கம் ஆகும் அஃது அங்ஙனம் ஆதலைக் கீழே காண்க. எண் ணினை வைத்துப் பத்தினுற் பிரிததுச் செல்ல, ஒவ்வொரு பிரித்தலுககும் ஒவ்வொரு படியெண் குறையும் ஆயிரததிற் ெருடஙகி, ஆயிரததி லொரு கூறு (கீழவாய் ஆயிரம்) வரையும் செல்வாம்

$1000 = 10^3$ பத்து முப்படி

$100 = 10^2$ பத்து இருபடி

$10 = 10^1$ பத்து ஒருபடி

$1 = 10^0$ பத்து வெற்றுப்படி

$\cdot 1 = 10^{-1}$ பத்துக் குறை யொருபடி

$01 = 10^{-2}$ பத்துக் குறை யிருபடி

$001 = 10^{-3}$ பத்துக் குறை முப்படி

என வருவ. அங்ஙனமாதலின்,

$$1000 \times 001 = 10^3 \times 10^{-3}$$
$$= 10^0$$
$$= 1$$

IX

10 இனை அடிமணையாகக் கொண்ட லகு வெண்கள், மேலே நாம் ஆராய்ந்து கண்ட படி யெணகளை ஒத்து நிற்பன. லகு [வெண்களை மேனுட்டார் லாகரிதம் (Logarithm) என்பர்.

லகு 100 = 2
லகு 1000 = 3
லகு ·1 = −1
லகு ·01 = −2
லகு 1,00,00,000 = 7
லகு 10 = 1
லகு 1 = 0

என்பன வெளிப்படை.

லகு 2 = ·3010
லகு 3 = ·4771
லகு 7 = ·8451

என்பன கணித நூலார் கண்ட முடிபுகள்.

$2 \times 2 = 4$
$2 \times 3 = 6$
$10 \div 2 = 5$
$2 \times 4 = 8$
$3 \times 3 = 9$

எனப் பெருக்கற பேருகவும, பிரித் தெய்திய ஈவாகவும் வந்த எண்களின் லகு வெண் களைக் காண முயல்வாம் சினைகளின் படி யெண்களைக் கூட்டப், பேற்றின் படி யெண் வருமெனவும், பிரிககப்படு மெண்ணின் படி யெண்ணி லிருந்து பிரிக்கு மெண் ணின் படி யெண்ணினைக் கழிக்க, ஈவின் படியெண் வருமெனவும் மேலே காட்டினும். எண்களின் பெருக்கல், லகு வெண்களின் கூட்ட லாவதும், எண்களின் பிரித்தல், லகு வெண்களின் கழித்த லாவதும் இதனுற் பெறப்படுகின்றது. அங்ஙன மாதலின்,

லகு 4 = லகு 2 + லகு 2
= ·3010 + 3010
= 6020

லகு 5 = லகு 10 − லகு 2
= 1 − ·3010
= 6990

லகு 6 = லகு 2 + லகு 3
= 3010 + 4771
= 7781

லகு 8 = லகு 4 + லகு 2
= 6020 + ·3010
= 9030

லகு 9 = லகு 3 + லகு 3
= 4771 + ·4771
= 9542

ஒன்று முதற் பத்து வரையும் உள்ள எண்களின் லகு வெண்களை ஒரு நிரலாக வைப்போமாக.

லகு 1= 0000	லகு 6= 7781
லகு 2= ·3010	லகு 7= 8451
லகு 3= ·4771	லகு 8= 9030
லகு 4= ·6020	லகு 9= 9542
லகு 5= 6990	லகு 10=1 0000

20, 200, 30, 300 என்னு மெண்களின் லகு வெண்களைக காணபோமாக.

லகு 20=லகு 4+லகு 5
=·6020+ 6990
=1·3010

லகு 200=லகு 5+லகு 5 +லகு 8
=·6990+·6990+·9030
=2 3010

லகு 30=லகு 5+லகு 6
= 6990+ 7781
=1·4771

லகு 300=லகு 5+லகு 5+லகு 4+லகு 3
= 6990+ 6990+·6020+·4771
=2 4771

லகு 2, லகு 20, லகு 200 என்னும மூன்றின் மதிப்பையும் நோக்குமிடத்துக், கீழ் வாய்ப் பாகமானது மூன்றிடத்தும் 3010 என ஒத்து நிறறல் காண்கின்றோம்.

மேலும், லகு 10=1 ஆதலின், 10 இற் குறைந்த தாகிய 2 இன் லகு வெண்ணுனது, மேல்வா யெண் பெறுது, கீழ்வா யெண் மாத்திரம் பெற்று நின்றது. லகு 100=2 ஆதலின், 100 க்கும் 10 க்கும் இடை நின்ற 20 இன் லகு வெண்ணுனது 2 இற் குறைநதும, 1 இற் கூடியும் நிற்றல வேணடும ஆதலினுலே, அதன் மேல் வாய்ப் பாகம் 1 ஆதல வேண்டும். லகு 1000=3 ஆதலின், லகு 200 இன் மேல்வா யெண் 2 ஆதல் வேண்டும். 3,30,300 இன் லகு வெண்களும் இவ்வாறு அமைந்து நிற்றலை நோக்குக. லகு வெண் வாய்பாடுகளில் கீழ்வாயப் பாகம் (Mantissa) மாத் திரமே தரப்பட்டிருக்கும; மேலவாயப் பாகம (Characteristic) மேலே காட்டிய வண்ணம் ஆராய்ந்து அறிதற் குரியது.

சினை யுள்ள எண்களின் லகு வெண்ணினை எளிதாகக கண்டறிநதுவிடலாம. 12, 14, 15, 16, 18 என்னும் எண்கள், முறையே, 3×4, 2×7, 3×5, 4×4,' 3×6 ஆவன. சினை யிலலாத 11, 13, 17, 19 என்னும் எண்களின் லகு வெண்களைக் கணித நூலோர் கணிதது வைத்திருக்கும வாய்பாடுகளிற் கண்டறியலாம்.

பினனங்களின் லகு வெண்ணினைக கணடறிதற்குத், தொகுதியின் லகு வெண்ணிலிருநது பகுதியின் லகு வெணணினைக் கழித் தெழுதவேண்டும்

லகு $\frac{9}{8}$=லகு 9 − லகு 8
= 9542 − 9030
=·0512

லகு $\frac{16}{15}$ = லகு 16 − லகு 15
= லகு 2 + லகு 8 − லகு 3 − லகு 5
= ·3010 + ·9030 − ·4771 − 6990
= ·0279

லகு $\frac{7}{8}$ இனைக் காண்பதற்கு, லகு 7 இலிருந்து லகு 8ஐக் கழிக்கவேண்டும். அவவாறு கழிக்குமிடத்து, லகு வெண்ணின் கீழ்வாய்ப் பாகம் குறை யடையாளம் பெற்று நிற்கும். இது முறையன் றுதலின், இக் கணக்கினைப் பின்வருமாறு செய்க.

லகு $\frac{70}{8}$ = லகு 70 − லகு 8
= 1·8451 − ·9030
= ·9421

லகு $\frac{7}{8}$ = லகு $\frac{70}{8}$ − லகு10
= ·9421 − 1
= $\bar{1}$ 9421

கீழ்வாயை நிறை யெண்ணுகவே நிறுத்திக்கொண்டு, மேல்வாய் மாத்திரம் குறை யெண் ணுயிற்று எனக் காட்டுதற்குக், குறை யடையாளத்தை மேல்வா யெண்ணின் மேல் இடுதல மரபு. பின் வருவனவற்றை நோக்குக.

லகு 875 = லகு 5 + லகு 5 + லகு 5 + லகு 7
= ·6990 + 6990 + 6990 + 8451
= 2 9421

லகு 87·5 = 1 9421
லகு 8 75 = 9421
லகு ·875 = $\bar{1}$·9421

$\frac{7}{8}$ என்னும் பினனம, ·875 என்னும் பதின் கூற்றுக் கீழ்வா யெண்ணுக்குச் சம மான தென்று முன்னர்க் காட்டினும்.

(i) தோற்றுவாய், (ii) பதின் மரபு, (iii) பிங்கல நிகண்டும் பரிபாடலும் எடுத்தாண்ட பேரெண்கள், (iv) கணக இயற்றலில் வழங்குங் குறியீடுகள், (v) பேரெண்களின் தான நிலைகள், (vi) பேரெணகளை வழங்கும வானநூன் முடிபுகள், (vii) கீழ்வா யெண்கள், பின்ன வெண்கள், (viii) படி யெண்கள், (ix) லகு வெண்கள் என்னும் ஒன்பது தலைப்பெயர்க்கீழ் எண்ணலளவையினை ஒருவாறு கூறினும்.

இங்கு நாம அறிந்து செயற்படுத்திய கணித முடிபுகள், அடுத்துவரும் ‘இசைக்கணிதம்’ என்னும் பிரிவினுட் பயன்படுவ.

இசைககணிதம்

I

நரம்பு நீள விகிதங்களின் தலைகீ ழெண்கள் அசைவெண் விகிதங்களா மென இசைநரம் பியலினுட் காட்டினும்.

256 சிற்றசைவுகளோடு இயங்கி, ஷட்ஜ சுவரத்தினைத் தருகிற வீணை நரம்பின் சரிநடுவிலும், மூன்றி லிரண்டிலும், நாலில் மூன்றிலும், ஐந்தில் நாலிலும், ஐந்தில் மூன்றிலும், ஒன்பதிலெட்டிலும், பதினைந்தி லெட்டிலும், எழுகின்ற சுவரங்களின் அசைவெண் விகிதங்கள் யாவை? அசைவெண்கள் யாவை? அசைவெண்களை மேன்மேலேகிச் செல்லும் வரிசையாக வைத்து, அவை நின்ற முறையில் அசைவெண் விகிதங்களை வைத்து, இசைநரம்பியலுட் காட்டியபடி இடைவிகிதங்களைக் கணித்திட்டத்திற் பெற்றபால வாகிய இடைவிகிதங்கள் யாவை? இடைவிகிதங்களேழினையும் பெருக்கிப் பெற்ற பேறு யாது? இடைவிகிதங்களேழினுக்கும் தனித்தனி யமைந்த மாத்திரை யாவை? அம்மாத்திரைகளின் கூட்டுத் தொகை யாது?

மேலே குறித்த வினாக்களுக்கு விடை காணப் புகுவாம்.

$\frac{1}{2}, \frac{2}{3}, \frac{3}{4}, \frac{4}{5}, \frac{3}{5}, \frac{8}{9}, \frac{8}{15}$ என்னும் பின்னங்கள் நரம்பு நீள விகிதங்களைக் குறித்தன வாதலின், இவற்றின் தலைகீ ழெண்களாகிய

$\frac{2}{1}, \frac{3}{2}, \frac{4}{3}, \frac{5}{4}, \frac{5}{3}, \frac{9}{8}, \frac{15}{8}$ என்பன அசைவெண் விகிதங்களைக் குறித்து நின்றன இவ் வசைவெண் விகிதங்க ளெல்லாம் ஆதார ஷட்ஜத்தின் அசைவெண்ணாகிய 256 இனை அவாவி நின்றன வாதலின், இவைதம்மைத் தனித்தனி 256 இனாற் பெருக்கி, இவற்றி லெழும் சுவரங்களின் அசைவெண்களைப் பெறலாம் அவ்வாறு செய்யக் கிடைப்பன

512, 384, $341\frac{1}{3}$, 320, $426\frac{2}{3}$, 288, 480.

இவைதம்மை வரிசையின் வைத்து, அசைவெண் விகிதங்களையும் உடனவைத்து, ஆதார ஷட்ஜத்தையும் முதலில் நிறுவக் கிடைப்பது

1	$\frac{9}{8}$	$\frac{5}{4}$	$\frac{4}{3}$	$\frac{3}{2}$	$\frac{5}{3}$	$\frac{15}{8}$	2
256	288	320	$341\frac{1}{3}$	384	$426\frac{2}{3}$	480	512

இடை விகிதத்தைக் காண்பதற்குப், பின்னின்ற அசைவெண் விகிதத்தை வைத்து, முன்னின்ற விகிதத்தாற் பிரிக்கவேண்டும் இவ்வாறு செய்யக் கிடைப்பது:

$\frac{9}{8}$ $\frac{10}{9}$ $\frac{16}{15}$ $\frac{9}{8}$ $\frac{10}{9}$ $\frac{9}{8}$ $\frac{16}{15}$

முற்றிசை யாகிய $\frac{9}{8}$ நான்கலகும், நெட்டிசை யாகிய $\frac{10}{9}$ இரண்டலகும், பற்றிசை யாகிய $\frac{16}{15}$ மூன்றலகும் பெறுவ வென இசைநரம்பியல் இறுதிப் பிரிவினுட் காட்டினு மாதலின், மேற் குறித்த இடைவிகிதங்கள் பெறும் அலகுகள், முறையே,

4 2 3 4 2 4 3

என வாகும் அலகுகளின் மொத்தம் 22; இடைவிகிதங்க ளேழினையும் பெருக்கிப் பெற்ற பேறு 2. [மாத்திரை, அலகு என்பன ஒருபொருட் சொற்கள்]. தானத் திடைவிகிதம் 2, தானத் தலகெண் 22 ஆதலின், மேலே தந்த சுவரங்கள் ஒரு தான மாக அமைந்து நின்றன வென அறிகின்றும்.

இங்குப் பெற்ற சுவர வரிசையானது, மேனாட்டார் வழங்கும் 'மேஜர் டயாற் றணிக் ஸ்கேல்' (Major Diatonic Scale) எனனும் புதிய விளரிக் கிராம மாம் குறித்த சுவரங்களைப் பிறப்பிப்பதற்கு, முதலிலே, வீணை நரம்பின் (இயங்குகின்ற) முழு நீளத்

தையும் சரியாக அளந்து கொள்ள வேண்டும் இந் நீளம் 32 இஞ்சு என்று வைத்துக் கொள்வோம். நரம்பு நீள விகிதங்களை 32 இனாலே தனித்தனி பெருக்கக் கிடைப்பன நரம்பு நீளங்களாம். நரம்பு நீளங்களைத் தனித்தனி 32 இற் கழிக்க, மேருவுக்கும் மெட்டுகளுக்கும் இடையே யுள்ள தூரங்கள் கிடைப்பன மேருவி லிருந்து இத் தூரங்களைச் செம்மையாக அளந்து, மெட்டுகளை வைத்துக் கொள்ளின், குறித்த சுவரங்களைத் தோற்றுவிக்கலாம்

சுவரம்	நரம்பு நீள விகிதம்	நரம்பு நீளம்	மேருவிலிருந்து மெட்டின் தூரம்
ஷட்ஜம்	1	32	0
சதுச்சுருதி ரிஷபம்	$\frac{8}{9}$	$28\frac{4}{9}$	$3\frac{5}{9}$
அந்தர காந்தாரம்	$\frac{4}{5}$	$25\frac{3}{5}$	$6\frac{2}{5}$
சுத்த மத்திமம்	$\frac{3}{4}$	24	8
பஞ்சமம்	$\frac{2}{3}$	$21\frac{1}{3}$	$10\frac{2}{3}$
சதுச்சுருதி தைவதம்	$\frac{3}{5}$	$19\frac{1}{5}$	$12\frac{4}{5}$
காகலி நிஷாதம்	$\frac{8}{15}$	$17\frac{1}{15}$	$14\frac{14}{15}$
தார ஷட்ஜம்	$\frac{1}{2}$	16	16

மேலே குறித்த தந்தியிலே சுத்த ரிஷபம், சாதாரண காந்தாரம், பிரதி மத்திமம், சுத்த தைவதம், கைசிகி நிஷாதம் என்னும் ஐந்து சுவரங்கள் பிறக்கும் இடங்கள் யாவை?

குறித்த சுவரங்களை மேனாட்டார், 3 ஆம், 7 ஆம், 10 ஆம், 16 ஆம், 18 ஆம் அலகு நிலைகளிலே வைப்ப ராதலின், அசைவெண் விகிதங்கள், முறையே, $\frac{16}{15}$, $\frac{6}{5}$, $\frac{45}{32}$, $\frac{8}{5}$, $\frac{16}{9}$ என நிற்பன. இவற்றிற் கியைந்த நரம்பு நீள விகிதங்கள், முறையே, $\frac{15}{16}$, $\frac{5}{6}$, $\frac{32}{45}$, $\frac{5}{8}$, $\frac{9}{16}$ என வருவன இவைதம்மைத் தனித்தனி 32 ஆற் பெருக்கியும், பெருக்கி வந்த பேறுகளை 32 இற் கழித்தும், முன்போல அட்டவணைப் படுத்துவாம்.

சுவரம்	நரம்பு நீள விகிதம்	நரம்பு நீளம்	மேருவிலிருந்து மெட்டின் தூரம்
சுத்த ரிஷபம்	$\frac{15}{16}$	30	2
சாதாரண காந்தாரம்	$\frac{5}{6}$	$26\frac{2}{3}$	$5\frac{1}{3}$
பிரதி மத்திமம்	$\frac{32}{45}$	$22\frac{34}{45}$	$9\frac{11}{45}$
சுத்த தைவதம்	$\frac{5}{8}$	20	12
கைசிகி நிஷாதம்	$\frac{9}{16}$	18	14

இவ்வா றமைந்து நின்ற பன்னிரண்டு சுவரங்களின் இடை விகிதங்கள் யாவை? அவ் விடை விகிதங்களைப் பெருக்கிப் பெற்ற பேறு யாது?

ஷட்ஜம் முதல் தார ஷட்ஜம வரை நரம்புகளை நிரையாக வைத்து, அவை தமது அசைவெண் விகிதங்களை யெழுதுவோமாக

$$1,\ \frac{16}{15},\ \frac{9}{8},\ \frac{6}{5},\ \frac{5}{4},\ \frac{4}{3},\ \frac{45}{32},\ \frac{3}{2},\ \frac{8}{5},\ \frac{5}{3},\ \frac{16}{9},\ \frac{15}{8},\ 2$$

இவைதமது இடை விகிதங்க ளாவன

$$\frac{16}{15},\ \frac{135}{128},\ \frac{16}{15},\ \frac{25}{24},\ \frac{16}{15},\ \frac{135}{128},\ \frac{16}{15},\ \frac{16}{15},\ \frac{25}{24},\ \frac{16}{15},\ \frac{135}{128},\ \frac{16}{15}$$

இடை விகிதங்களின் பெருக்கற் பேறு தானத் திடைவிகித மாகிய 2 ஆதல் காண்க.

தென்னாட்டிலே, மேலே குறித்த சுருதிகளோடு, வீணைக்கு மேளம பண்ணுவ துண்டு.

சுருதித் தொகையைக் காணபதற்கு, $\frac{16}{15}$ என்னும பற்றிசையினை 3 சுருதியாக வும், $\frac{135}{128}$ என்னும் குற்றிசையினை 1 சுருதியாகவும், $\frac{25}{24}$ என்னும குறையிசையினை -1 சுருதியாகவும் வைத்துக் கணக்கிடுக. பற்றிசை ஏழும், குற்றிசை மூன்றும, குறையிசை இரண்டும் உளவாகலின், மொத்தச் சுருதி, $7\times3+3-2=22$, இருபத திரண்டு ஆகும் குறையிசையைக் குறித்து 'நாற்பத்திரண்டு அலகு நிலைகள' கூறும் பிரிவினுள்ளே விளக்குவாம்.

II

மேனாட்டில் இக்காலத்தில் வழங்கும் இசை மரபினைப்பற்றிப் பின்னொரு பிரிவினுளளே சற்று விரிவாகக் கூறுவாம இங்கு மேனாட் டிசைவாணர் வழங்கும சதவிலக்க முறையைச் சுருக்கமாகக் கூறுவாம்

இசைச் சுவரங்கள் நிற்றற்குரிய வீடுகள் பன்னிரண்டினையும் சமப்படுத்தி, ஒரு வீட்டினை நூறு கூறு செய்து பெற்ற ஒரு கூறு, மேனாட்டிலே 'cent' (சென்ற்) என வழங்கப்படும். 'நூற்றுக் கூறு' என்பது இம்மொழியின் பொருள் ஈழ நாட்டினர், ஒரு ரூபாவின் நூற்றி லொரு பங்கு மதிப்புள்ள நாணயத்தைச் சதம் என வழங்குவர் அவ்வழக்குப் பற்றிச் சென்ற் என்பதைச் சதம் எனவும, சதவிலக்கம் எனவும வழங்குவாம.

சதவிலக்கங்கள் லகுவெண் நிலைக்களமாகப் பிறந்தன வாதலின, கணிதச் செய்கைகளை எளிதாக்கும் நீர்மைய

தானத் திடைவிகிதமாகிய 2 இன் லகுவெண் 3010 என, மேலே லகுவெண் களை ஆராய்ந்தவிடத்துக் கண்டாம் ஓரிசை வீட்டுக்கு நூறு சதமாக, ஒரு தானத்தி லுள்ள பன்னீரிசை வீட்டுக்கும் 1200 சதங்கள் அமைந்தன. ·3010 இனை 3986 இனற் பெருக்க, 1200 பேறாகும. ஆதலினலே, எந்த அசைவெண் விகிதத்தின் லகு வெண்ணையேனும் 3986 இனற் பெருக்க, அந்த அசைவெண் விகிதத்திற் கியைந்த சதவிலக்கம் வநதெய்தும் பின்வரும் செய்கை முறைகளை நோக்குக.

லகு $2=\cdot3010$. சதவிலக்கம் $2=3010\times3986=3{\cdot}01\times398\ 6$

```
 398 6
   3 01
 1195 8
    3·986
 1199 786
```

[தானததின் சதவிலக்கம் முழு எண்ணுக 1200]

[கீழ்வாய் $\frac{1}{2}$ இனும் மிகக தாதலின், முழு எண்ணுக்குமிடத்து, மேல்வாயக்கு 1 கூட்டிகொண்டு, கீழவாயை நீககிவிடலாம.]

லகு $\frac{4}{3}$ = லகு 4 − லகு 3
= 6020 − 4771
= ·1249

சதவிலக்கம் $\frac{4}{3}$ = ·1249 × 3986
= 1 249 × 398 6

```
 398 6
   1 249
 398 6
  79 72
  15 944
   3 5874
 497 8514
```

[சுதத மத்திமததின் சதவிலக்கம் முழு எண்ணுக 498]

லகு $\frac{3}{2}$ = லகு 3 − லகு 2
= 4771 − · 3010
= 1761

சதவிலக்கம் $\frac{3}{2}$ = 1761 × 3986
= 1 761 × 398 6

```
 398 6
   1 761
 398 6
 279 02
  23 916
    3986
 701 9346
```

[பஞ்சமத்தின் சதவிலக்கம் முழு எண்ணுக 702]

சுதத மத்திமத்தின் சதவிலகக மாகிய 498 ஐயும, பஞ்சமத்தின் சதவிலக்க மாகிய 702 ஐயுங் கூட்டத், தானததின் சதவிலக்க மாகிய 1200 வருகிறது. சுத்த மத்திமத்தின் அசைவெண் விகித மாகிய $\frac{4}{3}$ இனுல் பஞ்சமத்தின் அசைவெண் விகித மாகிய $\frac{3}{2}$ ஐப் பெருக்கத், தானத் தசைவெண் விகித மாகிய 2 கிடைக்கிறது அசைவெண்களின் பெருக்கல், சதவிலக்கங்களின் கூட்ட லாதல் காண்க.

சதவிலக்கம் 4 = ·6020 × 3986
= 6 02 × 398 6

```
  398·6
    6 02
 2391 6
     7 972
 2399 572        [முழு எண்ணுக 2400]
```

சதவிலக்கம் 3 = 4771 × 3986

= 4 771 × 398 6

```
  398 6
    4 771
 1594 4
  279 02
   27 902
      ·3986
 1901 7206       [முழு எண்ணுக 1902]
```

மேலே, சதவிலக்கம் 4 உம், சதவிலக்கம் 3 உம பெறப்பட்டன முன்னதிலிருநது பின்னதைக் கழிததுச, சதவிலக்கம் $\frac{4}{3}$ ஐப் பெறலாம். 2400 − 1902 = 498. முன பெற்ற முடிபே இவ்வழியாகவும வருதல காண்க

மேலும், சதவிலக்கம் 3 − சதவிலககம் 2

= சதவிலக்கம $\frac{3}{2}$ = 1902 − 1200 = 702

என வருதலையும் நோக்குக பொதுவாக வரும் அசைவெண் விகிதங்களின் சதவிலக்கங்களைக் கண்டறிதறகு, ஓர் எளிதான வழி மேற்காட்டிய செய்கை முறையி லிருந்து புலப்படுகிறது. அவவழியினைக் கூறுவாம அசைவெண் விகிதங்க ளெல்லாம் 1 இற பெரிதாகவும், 2 இற சிறிதாகவு முள்ளன அவறறைக் காட்டும் பின்னங்கள்,

$\frac{9}{8}$, $\frac{27}{25}$, $\frac{16}{15}$, $\frac{25}{24}$, $\frac{135}{128}$, $\frac{256}{243}$, $\frac{10}{9}$, $\frac{81}{80}$, $\frac{144}{125}$, $\frac{64}{45}$, $\frac{15}{8}$

என்பன போல்வன. இவை யெல்லாம் 1 இல் மிக்கும் 2 இற் குறைந்தும் நிற்றலை நோக்குக. இப் பின்னஙகளின் சதவிலக்கங்களைக் காண்பதறகுத், தொகுதியின் சதவிலக்கத்திலிருந்து பகுதியின சதவிலக்கத்தைக கழித்தல் வேண்டும் பின் வரும் சதவிலக்கச் சூத்திரத்தை நோக்குக

சதவிலககச சூததிரம

ஓஓ ஓஓ ஒன்றின் பாலே
கோஞோ நாதும் கூறு மிரணடே
வாஞோ வையம் மன்னும மூனறே
போதோ நீதா புலலும நானகே
பூவே யெனருள பொறபுடை யைநதே
நாளோ ரநதி நல்கிய தாறே
மையூ டிப்பி வரினஃ தேழே
ஓரோ ரூழி யொன்றிய தெட்டே
கீழோர் மேலில கேளொன் பதுவே

ஊடே வைமமின ஒப்புறு பததே
நலகு மத்தீ நவிலபன ஞெனறே
யாரோ நிணறீர கூரபனி ரணடே
கொண்டிர மீளிர் பன்மூன றுகும
பைஙகூ மூண்டிர் பததொடு நாலே
வேறே கூறீர சோபதி னைநதே
கோடோ டேகீர கொளபதி ஞறே
உள்ளோர வைதநீர் ஓபதி னேழே
நீரோ மோதும் மூவா றுகும
எலலை போடும் சொல்பத தொன்பான
கூடே கட்டும் நாலைந தென்ப

ஒன்று முதல் இருபது வரையு முள்ள எண்களின் லகுவெண்களைத் தனித்தனி 3986 இனுற் பெருக்கிப் பெற்ற பேறுகிய சதவிலக்கங்கள் மேலே தந்த கருவிச் சூத்திரத்திற் காணப்படுவன.

தமிழிலே சோதிட நூல் வகுத்துரைதத அறிஞர் கைககொண்ட மரபினைப் பின்பற்றி, எணகள் 'வாக்கியங்'களில வைத்துக் கூறப்படடன. வாக்கியங்களை எண்ணுக்குமிடத்துத், தனிமெய்கள மதிப்புப் பெறு உயிர்கள் தனித்தும், மெய் யோடு மருவியும் நின்று மதிப்புப் பெறுமிடதது, ஒகர ஓகாரங்கள வெற்றிலககம் (0) ஆக மதிக்கப்படுவ. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ என்னும் ஒன்பதும், முறையே, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்னும் மதிப்பினைப் பெறுவ வாக்கியஙகளில் ஒன்றின் தானம், பத்தின் தானம், நூற்றின் தானம், ஆயிரததின் தானம் என எண்கள் நிற்பன வாதலின், அவைதம்மை எதிர்நிரலாக எழுதி, ஆயிரத்தின் தானம், நூற்றின் தானம், பததின் தானம், ஒன்றின் தான மென நின்ற எண்மான முறையில் வைக்கவேண்டும். இளமையிற் கற்ற சூடாமணி யுள்ள முடையான் நினைவினைக்கொண்டு, மேற்போந்த வற்றை எழுதினும் சோதிட நூன் மரபு வேறு யிருப்பினும், மேலே காட்டிய முறையினையே இவ்வாராய்ச்சிக் குரியதென அறிஞர் ஏற்றுக்கொள்வாராக. இம் முறையினின்று சூததிரத் துட்பொருளை அட்டவணைப்படுத்தி நிறுவுவாம். சூத்திரம் நினைவில் நிற்குமெனில், அட்டவணையினை நோக்காமலே, சுருதிகளுக் கியைந்த சதவிலக்கங்களை எளிதிற் பெற்றுக்கொள்ளலாம்

எண்	வாக்கியம	சதவிலக்கம்
1	ஒஒஒஒ	0000
2	கோஞோநாதம	1200
3	வாஞோர்வையம	1902
4	போதோநீதா	2400
5	பூவேயெணறுள	2786
6	நாளோரகதி	3102
7	மையூடிப்பி	3369
8	ஓரோரூழி	3600
9	ஓீழோர்மேவில்	3804
10	ஊடேவைம்மின	3986

எண்	வாக்கியம்	சதவிலக்கம்
11	நலகுமதநீ	4151
12	யாரோவின்றீர்	4302
13	கொணமடாமீளீர்	4440
14	பைஙகூழுணடா	4569
15	வேழ்றகூறீர	4688
16	கோடேடாடேகீர	4800
17	உளளோரவைதநீர	4905
18	நீரோமோதும	5004
19	எலலைபோடும	5097
20	கூடேகட்டும	5186

சதவிலக்கங்கள் லகுவெண் நிலைக்களமாகப் பிறநதன வாதலின், அவற்றைப் போலவே, சாதாரண எண்களின் பெருக்கல, பிரிததல் சதவிலககங்களில, முறையே, கூட்டல், கழித்த லாகும். உதாரணமாக, 6 இன் சதவிலககம், 3 இன் சதவிலக் கத்தையும, 2 இன் சதவிலக்கத்தையும கூட்டிப் பெறப்படுவது 14 இன் சதவிலக கம், 7 இன் சதவிலக்கத்தையும, 2 இன் சதவிலக்கததையும கூட்டிப் பெறப்படுவது. இங்குத் தரப்படாத 21 இன் சதவிலக்கம், 7 இன சதவிலக்கததையும், 3 இன் சத விலக்கத்தையும் கூட்டிப் பெறப்படுவது $\frac{1}{3}$ இன் சதவிலக்கம, 4 இன் சதவிலக்கத்தி லிருந்து 3 இன சதவிலக்கததைக் கழிததுப பெறப்படுவது 25 இன் சதவிலக்கம், 5 இன் சதவிலக்கத்தை இருபடி வைத்துக் கூட்டிப் பெறப்படுவது. பிறவு மிவ் வாறே. பின்வருஞ் செய்கை முறைகள் இதனைத் தெளிவு படுததுவன.

$\frac{21}{20}=\frac{7\times3}{20}$ ஆதலின, $\frac{21}{20}$ இன் சதவிலககம, 3369 + 1902 − 5186 = 85 சதம் ஆகும்

$\frac{25}{24}=\frac{5\times5}{6\times4}$ ஆதலின, $\frac{25}{24}$ இன் சதவிலககம, 5572 − 5502 = 70 சதம் ஆகும்

இதனை மறறொரு வகையாகவும் நோககலாம.

$\frac{25}{24}=\frac{5}{4}\div\frac{6}{5}$. $\frac{5}{4}$ அந்தர காநதாரத்தின் அசைவெண விகிதம் இதன மதிப்பு, 2786 − 2400 = 386 சதம்.

$\frac{6}{5}$ சாதாரண காந்தாரததின் அசைவெண் விகித மாகும். இதன் மதிப்பு, 3102 − 2786 = 316 சதம. இவறறின் இடைவிகிதம், 386 − 316 = 70 சதம.

$\frac{27}{25}=\frac{9}{5}\div\frac{5}{3}$ $\frac{9}{5}$ கைசிகி நிஷாததததின் அசைவெண் விகிதம் இதன் மதிப்பு, ‘ஓேரர் மேலில்’ எனனும் வாக்கியத்திலிருந்து ‘பூவேயென் ருள்’ என்னும வாககியததைக் கழித்துப் பெறப்படுவது. 3804 − 2786 = 1018 சதம்

திணையுஞ், சொல்லினையும், பொருளினையும் ஆராய்ந்து பத்து வகைக் குற்றமுந் தீர்ந்து, முப்பத்திரண்டு வகை உத்தியொடு புணர்ந்த இந் நூலுள்ளே, அம் மூவகை யிலக்கணமும் மயங்கா முறைமையிற் செய்கின்றமையின், எழுத் திலக்கணத்தை முன்னாகக் காட்டி, ஏனை யிலக்கணங்களையுந் தொகுத்துக் கூறினன்" எனப் பனம்பாரனார் பாயிரத்திற்கு நச்சினார்க்கினியர் உரை கூறுதலின், ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்திற்கு முன்பாகப் பரந்துபட்ட இலக்கண நூல்கள் பல இருந்தன வென்பதும், அவை, எழுத்துச், சொற், பொருள் மாத்திரத்தோ டமையாது, இசை யிலக்கணங்களும், கூத் திலக்கணங்களும், பிறவும் மயங்க உரைத்தன வென்பதும் பெறப்படுகின்றன. ஆசிரியர் தொல்காப்பியனாரும் பழைய வழக்கினை ஒரோவிடத்துக் கைக்கொண்டு, தமது நூலினுள்ளும் இசை நூன் முடிபுகள், கூத்து நூன் முடிபுகள் சிலவற்றை யுணர்த்திச் செல்லாநிற்பர். அங்ஙனம் அவ ருணர்த்திய முடிபுகள் சிலவற்றைத் தொகுத்துக் கூறுவாம்.

அளபெடை கூறுமிடத்து,

> அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
> உளவென மொழிப இசையொடு சிவணிய
> நரம்பின் மறைய வென்மனார் புலவர்

என ஆசிரியர், பிறன்கோட் கூறி, உயிர்க்கண்ணும், உயிர்மெய்க்கண்ணும் மாத்திரை யிறந்து ஒலித்தல் யாழ்நூ லிடத்தன என வுரைத்து, எழுத்திற்கு ஆவதோர் இசை யிலக்கணத்தினைத் தந்தார். மேலும், எழுத்ததிகாரத்து மாத்திரை யளபு கூறுஞ் சூத்திரங்க ளனைத்தும் இசை நூற் பொருளினைத் தழுவி யெழுந்தனவே யாம். இனிப், பொருளதிகாரத்து, அகத்திணை யியலி னுள்ளே, திணைக் கருப்பொருள் கூறிய

> தெய்வ முணாவே மாமரம் புட்பறை
> செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
> அவ்வகை பிறவுங் கருவென மொழிப

என ஆசிரியர் கூறிய சூத்திரத்தினுள், திணைக் கருப்பொரு ளாகிய யாழின் பகுதியும், அவ்வந் நிலத்திற் குரிய பறையுங் கூறப்பட்டன.

முல்லைக்கு, முல்லை யாழும், ஏறுகோட் பறையும், குறிஞ்சிக்குக், குறிஞ்சி யாழும், தொண்டகப் பறையும், மருதத்திற்கு, மருத யாழும், நெல்லரிகிணையும், மண முழவும், நெய்தற்கு, நெய்தல் யாழும், மீன்கோட் பறையும், பாலைக்குப், பாலை யாழும், நிரைகோட் பறையும், சூறைகோட் பறையும் உரிய வாகக் கூறப்பட்டன.

ஈண்டு, யாழென்றது அவ்வந் நிலத்தினுக் குரிய பெரும்பண்ணினை. வல்வில் லோரியை வன்பரணர் பாடிய க௫௨-ஆம் புறப்பாட்டில், 'மூவேழ் துறையும் முறையுளிக் கழிப்பி' என வருவதனை நோக்குமிடத்து, நாற் பெரும்பண்ணுக்கும் உரிய இருபத்தொரு திறங்களும் மிகப் பழைய காலத்திலே இசைவாணரால் வழங்கப்பட்டன வென அறிகின்றோம். இடைக் கால வழக்கில், பாலைக்கு, அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி, ஆசான் என்னும் ஐந்து திறங்களும், குறிஞ்சிக்கு,

நைவளம், காந்தாரம், பஞ்சுரம், படுமலை, மருள், அயிர்ப்பு, அராறு, செந்திறம் என்னும் எட்டும், மருத்தத்திறகு, நவிர், வடுகு, வஞ்சி, செய்திறம் என்னும் நான்கும்; முல்லைக்கு, நோதிறம், பெயர்திறம், யாமை, முல்லை என்னும் நான்கும், ஆக, இருபத்தொரு திறங்கள் இருந்தன வறிகின்றோம் இவற்றுள், நைவளம் என்னும் பண் பத்துப் பாட்டிலும், பரிபாடலிலும் வருதலைப் பிறிதோரிடத்திற் காட்டினோம். 'ஏழே யேழே நாலே மூன்றிய விசை யிசை யியல்பா' எனச் சம்பந்த சுவாமிகள் தேவாரத்துட் குறிக்கப்பட்ட தாதலின், இருபத்தொரு திறங்களும், பழங் காலத்திலும், இடைக் காலத்திலும் மற்றொரு வகையாகப் பகுக்கப்பட்டு நின்றன வெனவும் அறிகின்றோம் 'பாயகலைப் பாவை பாடற் பாணி, யாசான் திறத்தி னமைவரக் கேட்டு' (XIII-௧௧௧, ௧௧௨) எனச் சிலப்பதிகாரங் கூறுதலின், இருபத்தொரு திறங்கள் அடிகள் காலத்தில் வழக்கி லிருந்தமை புலனும் அங்ஙன மாதலின், தொல்லாசிரியர் காலம் முதல் இதுவரையும் வந்த இசை மரபு நிலைபெற்ற நீர்மைய தென்பது புலனாகின்றது

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட டாயிரு பாங்கினும்
உரிய தாகு மென்மனார் புலவர்

'புனைந்துரை வகையானும், உலக வழக்கத்தானும் புலவோரால் பாடுதற் கமைந்த புலவராற்று வழக்கம் கலியும் பரிபாடலு மென்கின்ற அவ்விரண்டு கூற்றுச் செய்யு ளிடத்தும் நடத்தற்கு உரியதா மென்று கூறுவர் புலவர்,' என வருதலின், கலியும் பரிபாடலும் நாடக வழக்கிற்கு உரிய வென்பது ஆசிரியர் கருத் தாயிற்று

மறவரது மறத்தினைக் கடைக்கூட்டிய துடி நிலையும், வேலன் வெறியாட்டயர்ந்த காந்தளும், மூவேந்தர்க் குரிய போந்தை, வேம்பு, ஆர் என வரூஉம் அடையாளப் பூச் சூடி யாடிய கூத்தும், வாடா வள்ளி யென்ற வள்ளிக் கூத்தும், மழலைப் பருவத்தா னொருவன் போர்க்களத்திடை ஓடாது நின்றமை கண்டு, அவற்குக் கட்டிய கழலினைப் பாடிய கழல்நிலைக் கூத்தும், வாளாற் பொருது உயர்ந்த அரசிளங் குமரனை, அவற்கு அரசு கொடுத்து வீரர் கொண்டாடிய பிள்ளை யாட்டும், களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் வியந்து ஆடும் அமலைக் கூத்தும், தேரின் கண் வந்த அரசர் பலரையும் வென்ற வேந்தன், வெற்றிக் களிப்பாலே, தேர்த் தட்டிலே நின்று, போர்த் தலைவரொடு கைபிணைந் தாடும் முன்தேர்க் குரவையும், தேரோரை வென்ற கோமாற்கே பொருந்திய இலக்கணத்தானே தேரின் பின்னே கூழுண்ட கொற்றவை கூளிச் சுற்றம் ஆடும் பின்தேர்க் குரவையும் என்னும் இவை யெல்லாம் முத்தற்கண் செயலாகவும், வரலாறு கூறுங்கால், கூத்து விகற்பமாகவும் அமைதற்கு உரிய

வணணப் பகுதி யாகிய பாடல்பற்றி வரும் செந்துறையும், நாடகத்துள் அவி நயத்துக்கு உரிய வாகி வரும் வெண்டுறையும், 'ஏனையொன்றே தேவர்ப் பராய முன்னிலைக் கண்ணே' என வரும் தேவபாணிப் பாட்டும் என்னும் இவையனைத்தும் கூத்தியல், இசையியற் பால

ஈரசை கொண்டு மூவசை புணாந்தும்
சீரியைந் திறறது சீரெனப படுமே

எனனுஞ் சூததிரததினுள, 'சீரியைந் திறறது' எனபுழிப், 'பாணியுந தூககுஞ சீரும்' எனனுந் தாளக் கூறுபாடுகள மூன்றனுள ஒன்ருகிய சீா கூறப்பட்டது

பாட்டிடைக கலந்த பொருள வாகிப
பாட்டி னியல பண்ணத தியயே

எனக குறிப்பிடட இசைப பாடடு விகற்பமும, பாஅ வணணம, தாஅ வணணம், வலலிசை வண்ணம், மெலலிசை வண்ணம், இயைபு வணணம, அளபெடை வண்ணம, நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீா வண்ணம், சித்திர வண்ணம், நலிபு வண்ணம், அகப் பாட்டு வண்ணம், புறப்பாட்டு வண்ணம, ஒழுகு வணணம, ஒரூஉ வண்ணம, எண்ணு வண்ணம், அகைப்பு வணணம, தூஙகல வண்ணம், ஏந்தல வண்ணம், உருட்டு வண்ணம், முடுகு வண்ணம், என நிறை வணண விகற்பஙகளும ஈணடைககு ஏற புடையன.

கூததரும பாணரும பொருநரும விறலியும
ஆறறிடைக் காட்சி யுறழத தோன்றிப
பெறற பெருவளம பெறுஅாக கறிவுறீஇச
சென்றுபய னெதிரச சொனன பககமும

எனபதனுல், கூததராறறுப்படை, பாணுறறுப்படை, பொருநராற்றுப்படை, விறலி யாற்றுப்படை, எனக கூறிய ஆறறுப்படை விகறபஙகளும் கூததியல், இசையியலை யுணர்த்திநின்றன

முதலவழி யாயினும யாபபினுட சிதையும
வலலோன புணரா வாரம போனறே

எனபுழி, வாரம புணர்த்தல் எனனும இசைநூன் முடிபு குறிபபிடப்படடது

கூறுமுனிபாற கேடட மாணவா பனனிருவருள் ஒருவராகிய சிகணடி யென னும அருநதவ முனிவா இயறறிய இசை நுணுகக மெனனும் நூலும் தொல்காப பியா காலததததே இந நூலுளிருந்து அடியாாககுநலலாா எடுததுக காட்டிய சூததிரங்களைச சோககையினுள தநதாம ஆணடுக காணக சிகண்டியாா தம நூலினை இசைநுணுககம எனப் பெயரிட்டு வழஙகியது, பரந்துபட்ட இசை நூலகள பல அவா காலத திருந்தமையைப புலபபடுததும

2

நூறறைமபது கலியும, எழுபது பரிபாடலும் எனச சஙகததாா வகுதத தொகைநூ லிரணடும புலவராற பாடுதறகு அமைந்த புலநெறி வழககததைத தருவனவாம சஙக காலதது மககளுடைய வாழககையைச சஙக மரீஇய நூலகளி லிருந்து யாம் கணகூடாகக காணலாம புறததிணை யியலுள், பழந தமிழ மககளது வீரச செயலகளைத, தொலகாபபியா இசைத திறன ஆராயநத விடதது ஒருவாறு கூறிபபோநதாம் ஈணடு, அன்பின மேய அகததிணை யொழுககததின் இயல்பினை ஒரு சிறிது ஆராயநது நோககுவாம

முடியுடை வேந்தரும், குறுநில மன்னரும் முதலாயினோர், நாடக மகளிர் ஆடலும், பாடலும் கண்டும், கேட்டும் காம நுகரும் இன்ப விளையாட்டினுள் சுவை பிறக்கு மென்றத் தொல்லாசிரியர் கூறினர். அவ் வின்ப விளையாட்டினை யெடுத்துரைக்குஞ் செய்யுட்கள் கலியினுள்ளும் பரிபாடலினுள்ளும் பெருக வருவன.

சங்க மிருந்து தமிழ் ஆராய்ந்த நல்லிசைப் புலவர் பாடலினைப் பெற்ற வையைப் புனல், தமிழ் மக்களது வாழ்க்கைக்கு அழகு பயக்கும் நீர்மையது. பதினோராம் பரிபாடலினுள் யாம் காணுதற் கமைந்த நீரணி விழா வொன்றி னியல்பை முதற்கண் நோக்குவாம். சைய மலைக்கண் மழை பெய்ய, வையையில் நீர் நிறைந் தோடியது. திருமருதநீர்ப் பூந்துறை, பூவாராய்ந்து பறிக்கும் கோலினை யுடைய வலிய குடிகள் நிறைத்த வாகிய பூக்களைக் கொண்டுவந்து குவிக்கும் பூமண்டப மென்னப் பொலிவு பெற்றுத் தோன்றியது. அரி மலராகிய படாத்தையும், முத்துக்கள் தாழ்ந்த மார்பினையும், திரையையும், நுரையையும், குமிழியையும், இனிய மண நாறுஞ் சந்தனத்தினையும் உடைய அரிவை யென்ன வையைப் புனல் சிறந்து தோன்றியது. காமன் அனையரும், காரிகை நல்லாரும் ஒருங்கு குழுமி நீரில் விளையாடும் எல்லைபுள், ஆடவ னொருவன் உவந்ததை காட்டி மொழிகின்றான்

‘கண்டார்க்குத் தாக்கணங்கிக் காரிகை காண்மின்
பண்டாரங் காமன் படையுவள் கண் காண்மின்
நீனெய்தாழ் கோதை யவாவிலக்க நில்லாது
பூவூது வண்டினம் யாழ்கொண்ட கொளைகேண்மின்
கொளைப்பொரு ளிதரக் கொளுத்தாமற் குரல்கொண்ட
கிளைக்குற்ற வுழைச்சுருதி கேழ்கெழு பாலையிசை யோர்மின்
பண்கண்டு திறனெய்தாப் பண்டாளம் பெறப்பாடிக்
கொண்டவி னிசைத்தாளங் கொளைசீர்க்கும் விரித்தாடீஇ
தண்டும்பி யினங்காண்மின.’

என்பது அவன் கூற்று. இவ் வழகிய நீர்மையினை யுடையாள் தன்னைக் கண்டாரைத் தாக்கித் துன்புறுத்துந் தாக்கணங்கு போல்வாள். இவளைக் காண்மின். உவ்விடத்து நிற்கும் மடநல்லாளது கண் காமவேளின் பண்டசாலையும் படைக்கலமும் ஆக அமைந்துள்ளது. அவ்வாறு ஆதலை நீரே கண்கூடாகக் கண்டு தெளிமின். நீல நிறத்தை யுடைய தேனெய் தங்கிய கோதையை யுடைய மகளிர் பலர் விலக்கவும் நில்லாது, அவர் கோதையில் பூவினை யூதும் வண்டினம், குரல் நரம்பின் இன்னிசையினை யெழுப்புதலை ஓர்ந்து கேண்மின். பாட்டின் பொருள் வெளிப்படா திருந்தும், குரல் நரம்பினுக்குக் கிளை யாகிய உழை நரம்பினை யிசைத்தலினாலே, குரலும், உழையும் ஒன்றியவழி யெழுகின்ற மருதப் பண்ணாகிய இசையினை ஓர்ந்து கேண்மின். பெரும் பண்ணுய நின்று தனக்கெனத் திறம் பெறாத பண்ணினைத் தாளம் பொருந்தப் பாடி, அவ் விசைத் தாளத்திற் கேற்பவும், பாட்டின் சீர்க் கேற்பவும் சிறை விரித் தாடுங் காணுதற்குத் தண்ணிய தும்பி யென்னும் வண்டின கூட்டத்தைக் கண்டு தெளிமின், என இங்ஙனம் உவந்ததை காட்டி மொழிவான் கூற்றின்கண் இயற் றமிழோடு இசைத் தமிழ்ப் புலமையும்

நிரம்பிய ஆசிரியர் நல்லந்துவனார் அரிய இசைக் குறிப்புக்களைத் தருகின்றார். குரல் கொண்ட கிளைக்கு உற்ற உழைச் சுரும்பின் கேழ் கெழு பாலை யிசை யென்றது மருதப் பண்ணாதலை இந்நூலின் ௭௩-ஆம் பக்கத்துட் காட்டிய

தாரத் துழைதோன்றப் பாலையாழ் தண்குரல்
ஒருமுழை தோன்ற மருதயாழ்—நேரே
இளிகுரலிற் றோன்றக் குறிஞ்சியாழ் துத்தம்
இளியிற் பிறக்கமுல்லை யாழ்

என்னும் மேற்கோட் சூத்திரம் தெளிவுபடுத்தும். விளரிப் பாலையிற் றோன்றிய செவ்வழிப்பண், ஈண்டுப் 'பண்கண்டு திறனெய்தாப் பண்' எனக் குறிப்பிடப் பட்டது.

கடைச் சங்கத் திருந்து தமிழாராய்ந்த புலவர்களால் ஆக்கப்பட்ட கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும், நூல் வடிவிற் கிடைத்திலவேனும், உரைசா லடிகள் அருளிய கானல்வரிப் பாடலினுள்ள வரிப்பாட்டுக்களும், அரங்கேற்று காதை யினுள்ளே கூத்து, இசை யிலக்கணங்கள் பலவும் அமைந்து கிடத்தலின், குறித்த நூல்கள் அழியா நீர்மைய என்பது தெளிவாகும்.

3

இளங்கோவடிகளுடைய முத்தமிழ்ப் புலமையும், அகலக்கவி யமைக்கும் ஆற்றலும், பழந் தமிழரது பண்பு சான்ற வாழ்க்கையை எழுதிக் காட்டுந் திறமையும், சிலப்பதிகார நூலினுள்ளே தெளிவுறக் காட்டப்பட்டன. இக் காலத்துக் கவிகளுட் சிறந்தோ ராகிய சுப்பிரமணிய பாரதியார், தமிழ்நாட்டினைப் போற்று முகத்தான, 'நெஞ்சை அள்ளுஞ் சிலப்பதி கார மென்றோர் மணி யாரம் படைத்த தமிழ்நாடு' எனக் கூறுகின்றார். பதினெட்டு நூற்றாண்டுகளாகப் பொலிவுற்று விளங்கி, ஆடி நன்னிழலில் நீடிருங் குன்றத்தைக் காட்டுவார் போன்று, கருத்து வெளிப்படுத்து நிலவும் இச் சீரிய நூலினுள்ளே, யாழாசிரியன் இயல்பு கூறுஞ் செய்யுட் பாகத்துக்கு இயைந்த ஒரு விரிவுரையாக இந் நூலே அமைந்து நின்றது.

கடைச் சங்கத்தி லெழுந்த நூல்களை வகுத்து உரைக்கு மிடத்துக், களவிய லுரையானது, கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என இசை, நாடக நூல்களைக் குறிப்பிடுகின்றது. இந் நூல்களைக் காலமுங் கயவரும் அழிக்க முயன்றா ராயினும், முக்காலமு முணர்ந்த சேர முனிவர், இவற்றினுட் பொதிந்த பொருள் அழிவுறா திருத்தற்கு வழி கோலிவிட்டார். கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும், எவ்வெத் துறையை விளக்கினவோ, அவ்வத்துறை யனைத்தும் சிலப்பதிகார மென்னும் இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுளி னுள்ளே, ஆடி நன்னிழலில் நீடிருங் குன்றம் தெளிவுறப் புலப்படுமாறு போல, ஆராய்ந்து கற்போர்க்குப் புலப்படும் நீர்மையவாக அமைந்து நின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை யெடுத்துக் காட்டுவாம்.

அரங்கேற்று காதையினுள், கூத்தியது அமைதி, ஆடலாசிரியன் அமைதி, இசை யாசிரியன் அமைதி, கவிஞன் அமைதி, தண்ணுமை யாசிரியன் அமைதி,

குழலோன் அமைதி, யாழாசிரியன் அமைதி, அரங்கின அமைதி, தலைக்கோல் அமைதி, அரங்கிற் புகுந்து ஆடுகின்ற முறைமை என்னு மிவற்றோடு, 'பாறபட நின்ற பாலைப் பண்மேல' என்புழிப், பாலைப் பண்ணின இலக்கணமுங் கூறப்பட்டது. கடலாடு காதையினுள, பதினோராடலும் கூறப்பட்டன கானல் வரியினுள், மேலே கடைச்சங்கத்துப் புலவர்களால யாத்து அமைக்கப்பட்ட வெனக் கூறியவற்றுள, நெய்தற் றிணையில நிகழும வரிப்பாடலகளும், விளரிப் பண்ணும், பிறவுங் கூறப் பட்டன. வேனிற் காதையினுள், எண்வகை வரிக் கூத்துகளும, நால்வகைப் பண் ணும, இணை, கிளை, பகை, நட்பு என நின்ற நரம பிலக்கணங்களும, செம்பகை, ஆர்ப்பு, கூடம், அதிர்வு என்னுங் குற்றங்களும், இவற்றை நீக்கு மாறும், யாழ் வாசிக்கும் முறையும, பிறவும பெருகக் கூறப்பட்டன வேட்டுவ வரியினுள, பாலை நிலத்து வரிப்பாட்டி னியலபினைக் காணலாம புறஞ்சேரி யிறுத்த காதையி னுள், 'பாயகலைப் பாவை பாடற் பாணி, ஆசான திறத்தின் அமைவரக் கேட்டு' எனபுழி, அம்பணவா யாழி னியல்பும, பாலைப் பெருமபணணுக்குத் திறமாக அமைந்த காந்தாரப் பண்ணின் இயலபுங் கூறபபட்டன ஊர்காண் காதையினுளளே, அறுபத்து நான்கு கலைகளை யுணர்ந்த நாடக மகளிர இயலபு கூறுமிடத்து, வேத்தியல, பொதுவியல் எனனும் இரு வகைக் கூத்தும, நால வகைப பட்ட அவினயக களனும, எழு வகை வரிப்பாடலகளும, பிறவும் குறிபபிடப்பட்டன

பதினேழாவது காதையாகிய ஆய்ச்சியர் குரவையினுள, எழுவர் அல்லது ஒனபதின்மா கறகடகக கைகோத்து செந்நிலை மணடிலத்தால் நின்று ஆடுதற கமைந்த குரவை யாடலின இலக்கணமும், நான்கு நரமபுகள் ஒத்திசைத்துப்-பிறக் கின்ற ஒத்திசை (Harmony) என்னும இசைககிரியையும், பிறவும் உரைக்கப்பட்டன. ஊர்சூழ் வரியில, மருதத் திணைக்கு உரியதொரு வரிப்பாடலினைக் காண்கின்றோம். அழறபடு காதையுள, நாடக வரங்கினுள் எழுதிவைத்தற குரிய நால வகை வருணப் பூதரின் வருணனை தரப்பட்டது

குன்றக்குரவையினுள, குறிஞ்சி நிலத்திற குரிய குரவைப் பாடல சிறப்புற வுரைக்கப்பட்டது காலகோட் காதையினுள, கார்க் குரவையும், வேனிற்பாணியும், வரிப்பாடல்களும குறிப்பிடப்பட்டன நீர்ப்படைக் காதையினுள, குறத்தியா பாடிய குறிஞ்சிப் பாணியும, உழவா ஓதைப் பாணியும, கோவல ரூதுங் குழலின் பாணியும, மகளிர பாடும நெய்தற் பாணியும, பிறவுங் கூறப்பட்டன நடுகற் காதை யினுள, 'வணர்கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீஇப், புணர்புரி நரமபிற் பொருள்படு பத்தாக, குரல்குர லாக வருமுறைப் பாலையிற், றுத்தங் குரலாத தொன்முறை யியற்கையின், அந்தீங் குறிஞ்சி யகவன் மகளிரின், மைந்தாக கோங்கிய வருவிருந் தயர்ந்து' எனக் குறிஞ்சிப் பண்ணின் இலக்கணமும, பதினோ ராடலினுள் இறைவ னுடிய இரண்டனு ளொன்றாகிய கொடுகொட்டி யாடலின் இலக்கணமும், கூத்தச் சாக்கையன் அதனை யாடியவாறுங் கூறப்பட்டன. வாழ்த்துக் காதையினுள, அம் மானை வரி, கந்துக வரி, ஊசல் வரி, வள்ளைப் பாட்டு என்னும் இசைப் பாடல் வகை களைக் காணலாம்.

4

முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், இந்திரகாளியம், பஞ்ச மரபு, பரத சேனாபதீயம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், என்னும் நூல்களெல்லாம் அடியார்க்கு நல்லார் உரைக்குப் பெரிதும் பயன்பட்டன. இவற்றிலிருந்து எடுத்தாண்ட சூத்திரங்களைச் சோக்கையுட் காண்க.

அடிகள் காலத்துக்குப் பின்னும் தேவார ஆசிரியர் காலத்திற்கு முன்னும் ஆகிய இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தின் வரலாறு பேரிருளால் மறைப்புண்டு கிடத்தலின், இவ் விடைக் காலத்து இசை வளர்ச்சியும் அருகித் தோன்றும் நீர்மையது. ஆதலினால், மேற் காட்டிய நூல்களிலிருந்து அடியார்க்கு நல்லார் தம் உரையில் எடுத்தாளுஞ் சூத்திரங்களின் கருத்து இவ் விடைக் காலத்து இசை, நாடக வளர்ச்சியை ஒருவாறு உணர்த்துவ தாகும் எனக் கூறித், தெய்வத் தமிழிசை யாசிரியர் காலத்தை நோக்குவாம்.

5

துத்தங் கைக்கிளை விளரி தாரம் உழையிளி யோசைபண் கெழுமப் பாடிச்
சச்சரி கொக்கரை தக்கை யோடு தகுணிதந் துந்துபி தாளம் வீணை
மத்தளங் கரடிகை வன்கை மென்றோல் தமருகங் குடமுழா மொந்தை வாசித்
தத்தனை விரவினோ டாடு மெங்கள் அப்ப னிடந்திரு வாலங் காடே

அம்மையார், மூவுலகும் தொழுதேத்தும் பேய் வடிவத்தினை இறைவன்பால் வேண்டிப் பெற்றுத், திருவாலங்காட்டில் திருநடனத்தைக் கண்ணாரக் கண்டு, களிப் பெய்திப் பாடிய பாடல்கள் காரைக்காலம்மையார் அருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என வழங்கப்பெற்றுப், பின்வந்த தேவார ஆசிரியர்களுக்கு வழி காட்டி நின்றன. மூத்த திருப்பதிகங்க ளிரண்டும், முறையே, நட்டபாடை, இந்தளம் என்னும் பண்களில் அமைந்தன. மேலே நாம் எடுத்துக் காட்டிய திருப்பாடலி னுள்ளே, 'துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி, ஓசை பண்கெழுப் பாடி' என்பதில், குர லொழிந்த ஆறு நரம்புகளுங் காணப்படுகின்றன. இக் கால வழக்கில் அவை ப த ரி க நி ச என நின்றன. இசைக் கருவிகள் பலவற்றின் பெயர்கள் இங்குக் காணப்படுகின்றன. அம்மையார் இயற் றமிழிலும், இசைத் தமிழிலும் புலமை வாய்ந்தவர் என்பதற்கு, அவ ரருளிய நூல்கள் சான்று பகர்கின்றன. பின் வந்த தெய்வத் தமிழிசை யாசிரியர்களுக்கு அம்மையார் சிறந்த வழிகாட்டியாகத் திகழுகின்றார். முன்னோர் மொழி பொருளே யன்றி, அவர் மொழியும், பொன்னே போற் போற்றுவம் என்பதற்கு எடுத்துக் காட்டாக அம்மையார் திருப்பதிகங்களில் உரைத்த பொருளினையும், இசையினையும் பின்வந்த பெரியோர்கள் எடுத்தாண் டிருக்கக் காண்கின்றோம்.

இறைவனால் நாவுக்கரசு என்னுந் திருப் பெயரினைப் பெற்ற மருணீக்கியார் தம் உடன்பிறந்தா ராகிய திலகவதியாரது தவ வலிமையால் சமண சமய விருளி னின்றும் விடுபட்டு, ஞானக் கதிரவனாய்ச், சிவநெறி பரப்பும் நல்லாசிரியனாய்த்

திகழுந்தார் பல்லவ மன்னன் இவரைப் பலவாறு நலிவித்தும், இறையருளே துணையாக நின்ற இவரது திண்மையினைக் கண்டு, வழிபட்டுச், சிவநெறியைக் கைக்கொண்டான். ஆளுடைய அரசு கைக்கொண்ட தொண்டு இரண்டு. அவை தாம், பாட்டுத் தொண்டும், உழவாரத் தொண்டும் ஆகும். திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந் தருளிய திருப்பாடல்கள், சைவத் திருமுறை பன்னிரண்டனுள் நான்கு, ஐந்து, ஆறாந் திருமுறைகளாக இயைந்து நின்றன. கொல்லி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், சாதாரி, காந்தார பஞ்சமம், பழந்தக்க ராகம், பழம்பஞ்சுரம், இந்தளம், சீகாமரம், குறிஞ்சி, திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்னும் இசை விகற்பங்களிலும், செய்யுள் விகற்பங்களிலும் இவர்தந் தெய்வ இசை அமைந்துநின்றது. இவரது திருவாதிரைத் திருப்பதிகத்தின் ஓசை நயம் சுவிசேசக்கரவாததி யாகிய கம்பர் உள்ளத்தையுங் கவர்ந்தது. ஆறாந் திருமுறையி லுள்ள செய்யுட்கள் வடநூலார் வகுத்த தண்டக மலல நெறிக்காப் பியத்திற் கண்ட தேவபாணிக் குரிய எண்சீரான் வந்த கொச்சக வொருபோகு என்பதை இந்நூல் தேவார வியலினுட் காட்டினும்.

> மாசில் வீணையும் மாலை மதியமும்
> வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
> மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
> ஈச னெந்தை யிணையடி நீழலே

என்னுமிடத்து, ஈசன் இணையடி நீழலிற் பெறுதற் குரிய பேரின்பத்திற்கு மாசிலலாத வீணையின் இசையை எடுத்துக் காட்டிய தகைமையை நோக்கும் பொழுது, ஆளுடைய அரசருக்கு இசையின் மீதிருந்த ஆர்வம் புலப்படுகின்றது.

> விளக்கினாற் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றி யாகும்
> துளக்கில்நன் மலர்தொ டுத்தால் தூயவிண் ணேற லாகும்
> விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞான மாகும்
> அளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகள்தாம் அருளு மாறே

என்னுந் தேவாரத்தினுள் கீதஞ் சொன்னாரது சிறப்புக் கூறப்பட்டது.

ஆளுடைய அரசர் இவ்வாறாகச் சைவமுந் தமிழும் வளர்த்து வருகின்ற நாளில், சீகாழிப் பதியிலே நடந்த ஒரு சீரிய நிகழ்ச்சியைக் கேட்டு, உள்ளத்தில் கழிபெருங் காதல் கூர ஆளுடையபிள்ளையாரை நேரிலே கண்டு தொழல் வேண்டு மென்னுங் காதல் உள்ளத்தினைப் பற்ற, அந் நகர்க்குச் சென்றார். சென்றவர், தொண்டர் குழாத்திடைப் புகக்குக், குற்றமற்ற காதலுடன் பிள்ளையார் திருவடிகளிற் பணியப், பிள்ளையாரும் தமது மலர்க் கையினாலே ஆளுடைய அரசர் கரங்களைப் பற்றி யெடுத்து இறைஞ்சி, 'அப்பரே' என, அவரும் 'அடியேன்' என்றார்.

> ஆழிவிட முண்டவரை அம்மைதிருப் பாலமுதம் உண்ட போதே
> ஏழிசைவண் டமிழ்மாலை இவனெம்மான் எனக்காட்டி யியம்ப வல்ல
> காழிவரும் பெருந்தகைசீர் கேட்டலுமே அதிசயமாங் காதல் கூர
> வாழியவர் மலர்க்கழல்கள் வணங்குதற்கு மனத்தெழுந்த விருப்பு வாய்ப்ப

தொழுதணைவுற் றாண்டவர் சண்பையர்க்குத் தொண்டர்குழாத் திடையே சென்று
பழுதில்பெருங் காதலுடன் அடிபணியப் பணிந்தவர்தங் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி விடையின்மேல் வருவார் தம்மை
அழுதழைத்துக் கொண்டவர்தாம் அப்பரே யெனஅவரும் அடியேன் என்றார்

இவ்வண்ணம் திசை யனைத்தின் பெருமையெலாம் தென்றிசையே வென்று ஏறவும், விண்ணுலகும் பிறவுலகும் பெற்ற கீர்த்தியினை யெல்லாம் இப் பூவுலகு அவை தம்மை வென்று, தான் தனியாக எய்திநிற்கவும், உலகில் வழங்கும் மொழி வழக்குகளுள், செழுந் தமிழ் வழக்கே மிக்கது என்று அறிஞர் யாவரும் போற்றவும், இசை நூலறிவு முழுவதும், மெய்ஞ்ஞான அறிவு முழுவதும் தமக்கு நிலைக்களமாயினார் இவரென இவர் அடிசார்ந்து நிற்கவும், இயங்கு திணைப் பொருள்கள், நிலைத் திணைப் பொருள்கள் யாவற்றினும் சாந்தம், சிவம், சுந்தரம் என நின்ற உண்மைப் பொருள் விளக்க முற்று நிற்பவும் வந்து அவதரித்த பிள்ளையாரும், கலைக் கடலாகிய ஆளுடைய அரசரும் சைவமும், தமிழும் வளர்த்துவரும் நாட்களில், திருநீலகண்டப்பெரும் பாணரும், அமுதம் போன்ற இசைப் பாட்டினைப் பாடவல்ல மதங்கசூளாமணியாரும், ஆளுடைய பிள்ளையாரை வணங்கி, அருள் பெறும் நோக்கமாகச் சீகாழிப் பதியினிடை வந்தணைந்தார்கள் அன்றுமுதல் பிள்ளையார் அருளிய திருப்பதிகங்களை, ஏழிசையும் பணி கொண்ட நீலகண்ட யாழ்ப்பாணர் யாழின் முறைமையி னிட்டு எல்லா வுயிர்க் கூட்டங்களையும் மகிழ்வித்தார் உம்பர்களும் போற்றிசைப்பச், சிவம் பெருகும் ஒலியினை உலக மெலாம் நிறைத்து வருகின்ற நாட்களில், பாண்டிமாதேவியாரும், குலச்சிறை நாயனாரும், திருவாலவாயில் தமிழும் இசையும் வளர்தற் குரிய காலம் வந்து அணுகுதலும், பிள்ளையாருடைய திருவடிகள் முத்தமிழ் வளர்த்த அந் நகரத்தைப் பரசமய அழுக்ககற்றித் தூய்மை செய்தல் நலமென்று இறைவன் திருவருள் குறிப்பிட, ஆளுடையபிள்ளையாரை மதுரைக்கு எழுந்தருளும் வண்ணம் குறையிரந்து வேண்டினார்கள் அவர்தம் வேண்டுகோளுக்கு இணங்கி எழுந்தருளி வரும் பிள்ளையார், மதுரைத் திருப்பதி தோற்றுதலும், ஆர்வமை மிகக்கு, மங்கையர்க் கரசியாரும், குலச்சிறைநாயனாரும் சைவ சமயத்திற்குச் செய்யும் தொண்டினைப் பாராட்டித், திருப்பதிகம் பாடினார் அப் பதிகத்தின் முத லிரண்டு பாடல்களையுந் தருகின்றாம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால் வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த ஆலவா யாவது மிதுவே

வெற்றவே யடியார் அடிமிசை வீழும் விருப்பினன் வெள்ளைநீ றணியுங்
கொற்றவன் றனக்கு மந்திரி யாய குலச்சிறை குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடைய னும்பரார் தலைவன் உலகினி லியற்கையை யொழிந்திட்
டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற ஆலவா யாவது மிதுவே

மதுரைப் பதியினை வந்தடைதலும், மங்கையர்க்கரசியாரும், குலச்சிறை நாயனாரும், சிவநெறித் தொண்டர் பிறரும் வந்து குழுமி, நன் ஞானத்தின் திருவுருவத்தை,

நான்கு வேதங்களுக்கும் ஒப்பற்ற துணை யாயினாரை, வானத்திற் றோன்றி மறைதலுங் கலை வளர்தலும், தேயதலும் தனக்கு இயல்பாகக் கொண்ட மதியத்தைப் போலன்றி, இம மண்ணுலகு செய்த பெருந் தவததாற் றோனறி, ஈரெட் டாண்டில் எண்ணெண் கலையும நிறைந்து, அந் நிறைவாய வுருவததோடு இறைவனோ டொன்றுபட்ட ஞானத்தின் எழு பிறப்பைத் தமது கண் களிக்கும்படி கண்டாாகள

ஞானததின திருவுருவை நானமறையின் றனிததுணையை
வானததின மிசையனறி மணணிலவளா மதிக்கொழுநதைத
தேனகக மலாக்கொனறைச செஞசடையாா சீாதொடுக்குக
கானததி னெழுபிறப்பைக கணகளிபபக கண்டாாகள

திருஞானசம்பநதப்பிள்ளையா ரருளிய திருப்பாடலகள் பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளாக இயைந்து நின்றன முதற றிருமுறையில, நைவளம் (நட்டபாடை), தககராகம, பழநதககராகம, தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக குறிஞ்சி, யாழமுரி என்னு மிவையும, இரண்டாந் திருமுறையில், இநதளம், சீகாமரம, காந்தாரம, பியநதைககாந்தாரம், நட்டராகம, செவவழி என் னும பண்களும், மூன்றாந் திருமுறையில், காந்தார பஞ்சமம, கொல்லி, கௌசிகம், பஞ்சமம், சாதாரி என்னும பண்களும தோனறுவன

மாதொரு பாகனா ராகிய இறைவருக்கு வழிவழி யடிமை செய்யும் வேதியர் குலததிலே, சடையனாருககும, இசைஞானியாருக்கும் மகவாக வந்துதித்துத், தம்பிரான் தோழ ரெனச சைவ வுலகம போற்றப பெரு வாழவு வாழ்ந்து, இறைவன் திருக கயிலையைச சோநது, அவன் தொண்டில் வழுவாது நின்ற சுந்தரமூர்த்தி நாயனார் திருவாய மலாந்த தேவாரப் பதிகங்கள் ஏழாந திருமுறை யென அமைந்து நின்றன காலத்தாற் பிநதிய சுநதர ரருளிய தேவாரஙகள், நாட்டுப் பாடல்கள் பல வற்றை யெடுததாணட சிறப்பினை யுடையன. தேவாரவியல, உ௫0, உ௫க ஆம் பக்கங்களில இநதளப் பணணில் அமைந்து நின்ற திருப்பதிகம மகளிரது கும்மிப் பாடலுக்கு இயைந்த சநதமாக நின்றது

தமக்குமுன இருந்த சமய குரவா இருவரையும் புகழந் தேததி, அவர் சென்ற வழியே தாமும் செல்வதாகச சுநதரமூர்ததி நாயனார் கூறுகிறார். 'நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக் கரையனும பாடிய நற்றமிழ் மாலை, சொல்லியவே சொல்லி யேததுகப்பானை' எனபது அவா திருவாககு 'நான் மறை தெரிந்த வேதியர்கரு இடமாய திருவீழிமிழலையிலே யிருந்து, தமிழோடு இசை கேட்கும் இச்சையினால் திருநாவுக்கரசாககும, ஞானசமபநதருககும படிக்காசு நல்கினீா, அடியேறகும் அருளுதிா' எனக கூறிய திருப்பாடல் மேலும் இவ் வுண்மையை வலியுறுததும் இநதளம், தககராகம, நட்டராகம், கொலலி, கொலலிக் கௌவாணம, பழமபஞ்சுரம, தக்கேசி, காநதாரம், பியநதைக காநதாரம, காநதார பஞ்சமம், நைவளம் (நட்ட பாடை), நோதிறம (புறநீாமை), சீகாமரம், குறிஞ்சி, செநதிறம் (செந்துருததி), பஞ்சமம் என்னும் பண்கள இவருடைய திருப்பதிகங்களிற காணப்படுகின்றன

காலம் கார்காலம். கொன்றை மரமொன்று, வாசனை பொருந்திய மலர்த் துணர் தூக்கித், திருச்சடைபோன்ற காய்களோடு நின்ற தோற்றத்தினை, ஒன்றிய சிந்தையில் அன்பினை யுடையவராகிய ஆனாய நாயனார் கண்டார். கண்டு, கழிபெருங் காதல் கொண்டு, எல்லா வுயிர்களும் என்பூ டுருகிக் கரைந்து நிற்கும் வண்ணம், வேயங்குழலின் இன்னிசை யெழுப்பி, எல்லா நரம்புகட்கும் அடிமணை யாதலின், பட்டடை யெனப் பெயர் பெற்ற இளி நரம்பு ஆதார சுருதி யாக, இடைக் கால வழக்கிற் றோன்றிய கோடிப்பாலை யிசையினிலே, திருவாளனது திருவைந்தெழுத்தை முறை யறிந்து பாடினார். அம் முறைதான,

> மந்தரத்தும் மத்திமத்துந் தாரத்தும் வரன்முறையால்
> தந்திரிகள் மெலிவித்துஞ் சமங்கொண்டும் வலிவித்தும்
> அந்தரத்து விரற்றொழில்கள் அளவுபெற அசைத்தியக்கிச்
> சுந்தரச்செங் கனிவாயுந் துளைவாயுந் தொடக்குண்ண
>
> எண்ணியநூற் பெருவண்ணம் இடைவண்ணம் வனப்பென்னும்
> வண்ணஇசை வகையெல்லாம் மாதுரிய நாதத்தில்
> நண்ணியபா ணியலுந் தூக்குநடை முதற்கதியிற்
> பண்ணமைய வெழுமோசை எம்மருங்கும் பரப்பினார்

என வரும் சேக்கிழார் சுவாமிகள் செழும் பாடல்களுள் விரித்துரைக்கப்பட்டது. இடைக் காலத்து வழக்கிலே, இளி குர லாகிய கோடிப்பாலை, இக் காலத்தார் இருபத் திரண்டாம் மேள மெனக் கொள்ளுங் கரகரப்பிரியா மேளத்தை நிகர்த்தது.

நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி, பழந் தமிழ்ப் பண்களும், பழைய இலக்கணத்திற் கேற்ற தாளமும் அமையப் பெற்றது. பிற்காலத்தார் தாம் வேண்டியவாறு இராகங்களை யமைத்தாரேனும், வைணவப் பெரியார்கள் பண் முறையினையே தேவகானம் எனப் பாராட்டுவர். திருவாய்மொழியினுட் காணப் பட்ட பண்களை **யாழ்நூல்**, ௱௫௰ ஆம் பக்கத்தினுள் தந்தாம். பண்களுக்கு ஒவ்வாத இராகங்கள் பதிப்புகளிற் குறிக்கப்பட்டிருக்கின்றன. திருவாய்மொழியில் வருகின்ற பண்களை ஆராய்ந்து நோக்குமிடத்துத், தேவாரத்தில் வாராதன வாகிய ஐந்து பண் கள் காணப்படுகின்றன. அவைதாம், பாலையாழ், செருந்தி, முதிர்ந்த விந்தளம் அல்லது முதிர்ந்த குறிஞ்சி, வியந்தம், நாட்டம் என்பனவாம். அவற்றுக் குரிய எண்களையும் பிறவற்றையுந் தருவாம்.

பாலையாழ் — பெரும் பண் செம்பாலையினுட் பிறந்தது. பண் வரிசையில் முதலில் நிற்பது. இக் கால வழக்கில் அரிகாம்போதி மேளத்தை ஒப்பானது.

செருந்தி — குறிஞ்சிப் பெரும்பண்ணின் காந்தாரம் என்னுந் திறத்தின் புற நிலையாய், 42 என்னும் எண் பெற்றுநின்றது.

முதிர்ந்த விந்தளம் — குறிஞ்சிப் பெரும்பண்ணின் மருள் என்னுந் திறத்தின் பெருகியலாய், 56 என்னும் எண் பெற்று நின்றது. இதனை முதிர்ந்த குறிஞ்சி யெனவும் வழங்குவர்.

வியக்தம். முல்லைப் பெரும்பண்ணின் நோதிறம் என்னுந் திறத்தின் பெருதியலாய், 88 என்னும் எண் பெற்று நின்றது.

நாடடம முல்லைப் பெரும பண்ணின் யாமை என்னுந திறததின் அருகியலாய, 95 என்னும எண் பெறறு நின்றது இத் திறததின் புறநிலையா யமைந்து, 94 என்னும் எண் பெற்று நினற சாளாபாணி என்னும் பண பூநதுருததிகாட நம்பியின் திருவிசைப்பாவில வருவது

நம்மாழவாா, திருககுருகையில், வேளாண் குலததில், காரியார்ககும் உடையநங்கையாாக்கும புதலவராய அவதரிததாா இளம பருவததில மாறன என்னுந் திருப்பெயர் பூணடாா இவா திருவவதரிதத நாள் தொடங்கி, முலை யுண்ணுமல், வாய் பேசாது, இருநதாரென வைணவப் பெரியார் கூறுவா அக் காலததில மதுரகவி யாழவார் எனபவா, வடநாட்டி லுள்ள திவ்விய தேசஙகளைச சேவிததுத, திருவயோததிக்கு எழுந்தருளின அளவில, தென றிசையில் ஒரு பேரொளி விளக்கந் தோன்ற, யாரோ பெரியவர் அவதரித்திருககிறாா எனற குறிப்பினை யுணாந்து, அவரைச சேவிககும நோககமாகத தென்றிசை நோக்கி வநது, திருககுருகூரில் உறஙகாப் புளியின் கீழ எழுநதருளி யிருககின்ற பரமாசசாரிய ரான நம்மாழவாரைப் பாாதது, ‘செதததின் வயிற்றில சிறியது பிறநதால் எததைத தின்று எங்கே கிடககும்’ என வினவ, ஆழ்வாரும வாயதிறநது, ‘அததைத தினறு அங்கே கிடக்கும்’ என அருளிச செயதாா அதனபின், மதுரகவியாழவாா நம்மாழவாரைக குருமூாததி யாகச கொண்டு, ‘கணணிநுண் சிறுத்தாம்பு’ என்னுந திருபபாசுரததை அருளிச செயதார். நம்மாழவாரது திருவாய்மொழி ஆயிரம் பாடலகளையும், முதறகண் எழுதிவைத்தவர் இம மதுரகவியாழ்வார் எனக் கூறுவா. நமமாழவாா அருளிசசெயத மறறைய நூல்கள், திருவிருததம், பெரிய திருவந்தாதி, திருவாசிரியம் எனபன

சோழ நாடடில, உறையூரிற், பாணர் குலததிற் பிறந்து, பரநதாமனுடைய திருவடிகளை எனறும நினைநதுருகி, யாழிசைததுப பண பாடுந தொழிலில ஈடுபட டிருநத திருப்பாணுழவாா, பகவானுடைய கடடளையின்படி, ஸ்ரீ லோகசாரஙக முனிவருடைய தோளமீது இவாநது, முனி வாகனராய, பகவானுடைய சநநிதியையடைநது, அவனுடைய எலலை யற்ற வனபபினைப் பாதாதி கேசமாக வருணித்து, அமலனாதிபிரான் முதல் ‘கண்ட கணகள பிறவற்றை நோக்காது’ என முடியும் பத்து அழகிய திருப்பாடலகளை யருளி, அவனைக் கண்ட கணகள பிறவற்றை நோக்காத வண்ணம இவ வுலக வாழ வொருவித திருநகரததை யலஙகரித்தாா

முததமிழப புலமை நிரமபித தென்னவனுககு மந்திரியாராக அமர்ந்து தென்னவன பிரமராயன் எனனுந திருப பெயரினைத தாங்கிப் பின் மணணுலகாளும் மனனவன பணியினின்றும நீஙகி, விணணவா வேநதும, வந்து அடி பணியும் செலவம் நிறைவுபெற நினற திருவாதவூ ரடிகளது திருசசரிதம் கேட்போாககும் நினைப்போர்க் கும் உள்ளததை யுருக்கும நீர்மையது அடிகள முததமிழுககும நலகிய பெருஞ் சிறப்பினை ஓருவாறு ஆயந் துரைபபாம

மகளிர் தாயருகே நின்று தவத தைநீ ராடுதல் பொருளாக எழுநத திருவெம் பாவைப் பாடடும, மகளிர் ஆடலு ளொன் ருகிய அமமனே யாடலே யெடுத்தோதும் அம்மானைப் பாட்டும், சங்க காலத்து வள்ளைப் பாடடினை யொதத பொற்சுண்ணப் பாட்டும், மேலே நாம் பரிபாடலுட் காட்டிய செயயுட் பகுதியில, தும்பியை விளித்துக் கூறியது போன்ற கோததும்பிப் பாடடும், தெளளேணம் என்னும் பறை யினைக் கொட்டிப் பாடிய தெளளேணப் பாடடும், மகளிர் ஆடலு ளொன் ருகிய சாழற் பாட்டும், மறறொன் ருகிய பூவலலிப் பாட்டும, மகளி ராடலு ளொன ருகிய உந்திப் பாட்டும், மற்றொன் ருகிய ஊசற் பாடடும், துயிலெடைநிலை யெனப் பணடை யோர் கண்ட திருபபள்ளியெழுசசியும, குயிலினே விளிததுக கூறுங குயிற பாட்டும, பிறவும் அடிகளுடைய முததமிழப் புலமையை நனகு புலபபடுததுவ.

6

செமபொன்மணி யமபலதது நிருதத னாகருத
திருவிசைபபா வுரைததவாதக திருப்போ சொலலில
பமபுபுகழ செறிதிருமா ளிகைமெயத தேவா
பரிவுடைய சேநதனா கருவூரத தேவா
நமபிகா டவாகோன்நற் கணடரா திததா
நனகுயாவே னாடடிகள திருவாலி யமுதா
அமபுவியோா புகழ்புருடோத தமா சேதிராயா
ஆகவிவ ரொனபதினமா தாமுறைகண டடைவே.

இவ் வொனபதினமருட சேந்தனா என்பாா திருப்பல்லாண்டும் இயற்றி யுளளாா. இவை ஒன்பதாந் திருமுறை யெனப்படுவ இத திருமுறையில மொததம முந்நூற றுறுபததைந்து செய்யுட்கள் உளளன பாடபபட்ட பண்களா 21 புற நீரமை, 25 பஞ்சமம், 41 காநதாரம், 62 நடடராகம, 73 இநதளம, 94 சாளாபாணி என்பன வாம். இத திருமுறையிற பயின்ற செயயுள் விகறபஙகள் பதினு ருகும. அவையாவன:

(1) 1 ஒளிவளா, 2 உயாகொடி, 7. மாலுலாமனந, 8 கணமவிரி, 9 கலேகளதம, 10 தளிரொளி, 11 புவனநாயகனே, 13 அனனமாய 14. திருவருள, 15. பெரியவா, 16 உலகெலாந, 17 வெய்யசெஞ, 18. கைககுவான.

விளம மா விளம மா விளம விளம மா

(2) 3. உறவாகிய

தனனதன தானன தானதன தனனதன தானன தானதன

(3) 4. இணஙகிலா

திரு நேரிசைச சநதம

(4) 5. ஏகநாயகனை

தானன தனன தனதன தனன தானன தனதன தனன

(5) 6 பொய்யாதவேதியா.

தனதான தானன தானனு தனதான தானன தானனு

(6) 12. நீரேறாஙகுவளாகமலம, 21.துசசானசெய்திடினும

காயசீா நான்கு வநத தரவுகொசசகக் கலிபபா

(7) 19. முததுவயிரமணி

வெணடளை தழுவி வநத தரவுகொசசகக் கலிபபா

(8) 20. மினனுருவம

தானு தானு தானு தானு தானன தானதனு

(9) 22. மையனமாதொரு

தான தானன தானதானன தானதானன தானனுதன
தான தானதன - தன - தான தனதனனு

முத லீரடியைப் போலப் பின் னீரடியும் அமையும்

(10) 23. பவளமாலவரை

மா விளம விளம விளம விளம புளிமாஙகாய

(11) 24. அலலாயபபகலாய்

தானு தனனு தனனு தனனு தானு தனதானு

முதற றிருமுறையில் '69. பூவாா மலாகொண்டடியாா்' என்னும் திருப் பதிகததைப் போலவது

(12) 25. கோலமாாநெடுஙகட

தான தனதனனு - தன - தானன தானதனு

ஏழாந் திருமுறையில் '20 நீள நினைந்தடியேன்' எனனும் பதிகத்தைப் போல்வது.

(13) 26 வாரணிநறுமலா

தானன தானன தானதானு தானன தானன தானதானு

முதற றிருமுறையில '4. மைம்மருபூஙகுழல்' எனனும் பதிகத்தைப் போலவது

(14) 27 வானவாகள.

வெணடளை தழுவி வநத தரவுகொசசகக கலிபபாவின் மறறொரு விகற்பம

(15) 28. சேவுலாமவயல

தான தானன தானன தானன
தான தானன தானனு

முத லீரடியைப் போலப் பின் னீரடிகளும் அமையும.

முதற் றிருமுறையில் '135. நீறு சேர்வதொர்' என்னும் பதிகததை நிகர்த்தது

(16) 29 மனனுக்கிலலை.

வெண்டளை தழுவி, முதன் மூன் றடியும அறு சீராகவும், ஈற்றடி எழு சீராகவும் நடக்கும் கொச்சகவொருபோகு பிற காலத்தார் இதனைக் கலித்தாழிசை யென்பா

"இன்னரம் முழவம மழலையாழ வீணை கெழுவுகம்பலை செய கீழக்கோட்டூர்"
(திருவிசை 10—அ)

"நினைகையிலியாழ நரம்பாலும உயிரீநதாய" (திருவிசை 12—அ)

"தந்திரிவீணை கீதமும்பாடச் சாதகினனரங் கலந்தொலிப்ப
மந்திரகீதந் தீங்குழலெங்கும மருவிடந் திருவிடைமருதே" (திருவிசை. 17—உ)

"மழலையாழ சிலம்ப வந்தகம புகுந்தோன" (,, 17—எ)

'மருத யாழுதிப்ப வருங்கருங் கண்டத்தண்ட வானவர் கோன்" (,, 17—௧௦)

என வரும் திருவிசைப்பாத் தொடர்களால், பதினோராம் நூற்றாண்டின் பின்னும யாழும, பழந் தமிழிசையும நிறைவாக இருந்தமை புலனாகின்றது திருவிசைப்பாப் பாடல்களின் சொலலும், பொருளும், யாப்புருவமுஞ், செய்யுள் நடையும், பிறகாலத்தில் இராமலிங்க அடிகளால் எடுத்தாளப்பட்டன

7

கோயில் நான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா வொருபது என்னும் ஐந்து நூல்களும பட்டணத்துப்பிள்ளையார் இயற்றியன வாகப் பதினோராந் திருமுறையிற் காணப்படுவன அடிகளுடைய சங்கத் தமிழ்ப் புலமைக்கும், உண்மை நூல் விளக்கத்திற்கும இத் திருப்பாடல்கள் சான்று பகர்கின்றன. கோயில் நான்மணிமாலையில் வருகின்ற சந்தச் செய்யுட்கள், திருப்புகழாசிரியர்க்கு வழிகாட்டியா யிருந்தன வென்று எண்ண இட முண்டு. அந் நூலிலிருந்து நான்கு பாடல்களைக் கீழே தருகின்றாம்

சந்து புனைய வெதும்பி மலரணை
தங்க வெருவி இலங்கு கலையொடு
சங்கு கழல நிறைந்த அயலவர்
தஞ்சொல நலிய மெலிந்து கிளியொடு

பந்து கழல்கள் மறந்து தளிர்புரை
பண்டை நிறமும இழந்து நிறையொடு
பண்பு தவிர அனங்கன் அவனொடு
நண்பு பெருக விளைந்த வினையன

நந்தி முழவு தழங்க மலைபெறு
நங்கை மகிழ அணிந்த அரவுகள்
நஞ்சு பிழிய முரன்று முயல்கனை
ஐந்து கால அலைந்த பகிரதி

ஒழிபியல்

அந்தி மதியொ டணிந்த தில்லைக்கா
அம்பொ னணியும் அரங்கில் நடங்கில்
அங்க ணரசை யடைந்து தொழுதில்ள
அன்று முதலெதிர் இன்று வரையுமே (கோயிஞன் கக)

நெறிதரு குழலை யறலென்பாகள
நிழலெழு மதியம நுதலெனபாகள
நிலவினும வெளிது நகையெனபாகள
நிறமவரு கலசம முலையெனபாகள

அறிகுவ தரிதிவ விடையெனபாகள
அடியிணை கமல மலரெனபாகள
அவயவம் இனைய மடமங்கையா
அழகிய ரமையு மவரென்செய

மறிமழு வுடைய கரனெனகிலா
மறலியை முனியும அரனென்கிலா
மதிபொதி சடில தரனெனகிலா
மலைமகள மருவு புயனெனகிலா

செறிபொழில நிலவு தில்லையெனகிலா
திருநடம நவிலும இறையெனகிலா
சிவகதி யருளும அரசெனகிலா
சிலாநர குறுவா அறிவினறியே (கோயிஞன கரு)

உலவு சலதி வாழவிடம அமரா தொழவு ணுவென
நுகரு மொருவ ரூழியின இறுதி யொருவ ராழிய
புலவு கமழ்க ரோடிகை யுடைய புனிதா பூசுரா
புலிசை யலாசெய போதணி பொழிலின நிழலின் வாழ்வதோா
கலவ மயிலி ஞாசுருள கரிய குழலி ஞாகுயில்
கருது மொழியி ஞாகடை நெடிய விழியி ஞரிதழ்
இலவில் அழகி யாரிடை கொடியின வடிவி ஞாவடி
வெழுது மருமை யாரென திதய முழுதும ஆளவரே. (கோயிஞன் உ௩)

தொடா நரைததங்க முன்புள வாயின
தொழிலகண மறுதொனறு மொனறி யிடாதொரு
சுளிவு நலைகொணடு புனபுலை வாரிகள்
துளையொழு கக்கண்டு சிநதனை யோயலொடு
நடைகெட முறகொண்ட பெணடிா பொருவொரு
நடலை நமகென்று வநதன பேசிட
நலியிரு மற்கஞ்சி யுணடி வெருவிழு
நரக வுடற்கன்பு கொணடலை வேன்இனி

மிடலொடி யப்பண் டிலங்கையர் கோனொரு
விரலின் முக்குண்டு பண்பல பாடிய
விரகு செவிகொண்டு முன்புள தாகிய
வெகுளி தவிர்த்தன்று பொன்னறியி டாவகை

திடமருள் வைக்குஞ் செழுஞ்சுடர் ஊறிய
தெளியமு தத்தின் கொழுஞ்சுவை நீடிய
தி(ல)லைநக ரிறைசெம்பொ னம்பலம் மேவிய
சிவனை நினைக்குந் தவஞ்செய்த ராவதே (கோயினான் ௩௯)

தமக்கு இச் செய்யுட்களைத் தந்துதவிய பட்டணத்துப் பிள்ளையாரைக் குறித்து 'என்னப்பன் பட்டினத்தான்' என அருணகிரிநாதர் கூறுவதியல்பாம் ஞானத் தந்தை யென்ற உண்மை யுணராத உலக மாந்தர், இவர் பட்டினத்தார்க்கு ஒரு கணிகையிடம் மகவாய்ப் பிறந்தனர் எனப் புனைந்து விட்டனர்.

திருப்புகழ், திருவகுப்பு, என்னும் இசைத் தமிழ் நூல்களையும், கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி என நின்ற இயற் றமிழ்ப் பாமாலைகளையும், பிற வற்றையும் ஆக்கித் தந்த அருணகிரிநாத ரெனனும் அருந்தவப் பெரியார், இற்றைக்கு ஐஞ்ஞூ றாண்டுகளின்முன், பிரபுடதேவ மகாராசன் காலத்தில் வாழ்ந்தனர் என அறிஞர் கூறுவர். இவர் பாடிய திருப்புகழ் நூலினுள்ளே இடைச் செருகல்கள் பல புகுந்து, நூல் வனப்பினைக் குறைவு படுத்துகின்றன இடைச் செருகல்களை யொழித்த தூய வுருவத்தில் திருப்புகழ் நூல் வெளிவருமாயின், சைவ சித்தாந்த மெய்ஞ் ஞான நூல்களி லொன்றாக விளங்கு மென்பதற்கு ஐயமில்லை தாயுமான சுவாமிகள் அருணகிரிநாதரைக் குறித்துச் சொல்லுகின்ற வாசகங்களை இங்குத் தருவாம்.

தேவர் தொழும் வாதவூர்த் தேவே யென்பேன . ... .
பூவுலகில் வளரருணகிரியே மற்றைப் புண்ணியர்களோ வென்பேன்

ஐயா அருணகிரி யப்பா வுனைப்போல
மெய்யாக வோர்சொல் விளம்பினர் யார்

யான்றா னெனலற்றே யின்பநிட்டை யென்றருணைக்
கோனன் றுரைத்த மொழி கொள்ளாயோ

கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன
எந்தையரு ணாடி யிருக்குநா ளெந்நாளோ

அறிவை யறிவதுவே யாகும் பொருளென்
றுறுதிசொன்ன வுண்மையினை யோருநா ளெந்நாளோ

எனத் தாயுமான அடிகள் கூறும் வாசகங்களே, அக விருளினை யொழிக்கும் மெய்ஞ் ஞான பானு வாகிய அருணகிரிநாதரது உண்மை வரலாறாகும்

...மச்சந்திய் ஞமுனறவி திததவா முறகடித
சசசபுட சாசபுட சட்பிதா புதநிரிக
கணடச சமபதிய பேத மாமடல
கஞ்சப பஞசத தாள மாமபடி
கற்சரி யுறசவ தறபண லக்ஷண
சச்சரி மட்டிகை யொட்டி யறுபபன

எனத் திருவகுப்பினுள பஞ்ச தாளஙகள கூறப்பட்டன

காலமா ரூத வராளிசி கணடிகை
பாலசீ காமர மானவி பஞசிகை
கவுட பயிரவி லளிதை கயிசிகை
கவுளி மலகரி பவுளி இசைவன
கனவ ராடிய ருமபட மஞசரி
தனத ஞசிவி தமபடு பஞசமி
கைசசுலவு கோனமுறைவி திகதரா கததடைவி
லுசசமது சாதிகமெ டுததுமேல் எட்டுவன
கஞ்சக கஞசாற் மீறசி ராஞசிகு
றிஞசிப் பணகுறித தியாழை யோதுவ
கற்றவு டுக்கையி டககைக ளபபறை
மததளி கொடடிய முறறும டிபபன
காரெனமு ழஙகுகுர லேறுதுடி சநதரவளை
வீரமுர சநதிமிற டாரிகுட பஞசமுகி
காடிபறை பஙகனந தஙகோடி கொட்டுவன

என அக கால வழககி லுள்ள சிறநத இராகங்களும், பண்களும், யாழ்க் கருவியும், தோற் கருவிகளும, கஞ்சக் கருவிகளுங் கூறப்பட்டன.

முது கூகை கொடடபுறறு எழ, அடட பயிரவர் தாள யிடக, கழுகொடு, கழுது ஆடப், பயிரவி நடம புரிய, முருகன் அவுணரைப பொருத போர்க் களததின் வருணனை பின்வரும் அடிகளில் மிக அழகாகத தரப்பட்டது.

திததிதெய வொததப பரிபுர	
நிரததபபதம வைததுப பயிரவி	
திகதொககக நடிககக் கழுகொடு	கழுதாடத
திககுபபரி அடடப பயிரவர	
தொககுததொகு தொக்குக தொகுதொகு	
சிதரப்பவு ரிககுத ரிகடக	எனவோதக
கொததுபபறை கொடடக களமிசை	
குககுக்குகு குககுக குகுகுகு	
குததிபபுதை புககுப பிடியென	முதுகூகை
கொட்புறறெழு நடபற றவுணரை	
வெடடிபபலி யிடடுக குலகிரி	
குததுபபட வொததுப பொரவல	பெருமாளே

...ANA ORIENTAL INSTITUTE LIBRARY ... S * TIRUPATI *

இடக் கை உடுக்கை ஆகிய தோற கருவிகளின் ஒலியும், படுகளத்தில் அண்டம் பிளக்க நிமிர்ந்து ஆடுகின்ற அலகைக் கூட்டங்களின் நடனமும் பின்வரும் பாடலுள் அழகாகச் சொல்லப்படுகின்றன.

தகுதகுகு தகுதகுகு தாதாத குததகுகுகு
டிகுடிகுகு டிகுடிகுகு டிணடிணடி குககுகுகு
தகுதசெண செணசெகுத தாதாத ரிததகுத — தததததகுதிதோ

தனதனன தனதனன தாதாத னததன
டுடுடுடு டுடுடுடு டுணடுண டுட்டுடு
தாராரா ரிரிரிரி எனறெணறி டகையுமு — டுக்கையுமியாவும

மொகுமொகென அதிரமுதி ரணடமபி ளககநிமிர்
அலகைகா ணமிடஉல கெஙகுமபா மிக்கநட
முடுகுபயி ரவாபவுரி கொணடினபு றபபடுக — ளதநிலொருகோடி

முருகனுடைய பரதத்துவமும், அவன் கதிர்காமப் பதியில் வேட னருளிய பூசனையை உவந் தேற்றமையும, மயிலினது நடனத்திற கேற்ற தாளமும, பின் வரும் திருப்புகழ்ப் பாடலி ‘லுள்ளன.

அ[illegible]மாகி அதிபனு மாகி
அதிகமு மாகி — அகமாகி
அடவெனன வாகி அரியென வாகி
அரனென வாகி — அவாமேலாய
இகரமு மாகி எவைகளு மாகி
இனிமையு மாகி — வருவோனே
இருநில மீதில எளியனும வாழ
எனதுமு னோடி — வரவேணும
மகபதி யாகி மருவுமவ லாரி
மகிழ்களி கூருமு — வடிவோனே
வனமுறை வேட னருளிய பூசை
மகிழ்கதிர் காம — முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு — மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு — பெருமாளே

துடியின் ஆரப்பும், பேரிகையின அதிரவும், பின வருந தொடர்களிற் காணப்படுவ.

திநதோதிமி தீதத மாததுடி
தாதாதன னுதன தாததன
செமபூரிகை பேரிகை ஆரதெழ மறையோத

முருகப் பெருமானது இள நலமுந், தளர் நடையும், பின் வருமாறு வருணிக்கப் படுவன .

கிணகிணி கிணிணகிணின கிணினெனக்
குணடல மசைநதிலங குழைகளிற ப்ரபைவீசத
தநதனந தனநதனந தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ சிடமணித
தணடைகள கலின்கலின் கலினெனத திருவான
சஙகரி மனங்குழைந் துருகமுத
தநதா வருஞசெழுந தளாநடைச
சநததி சகந்தொழுஞ சரவணப் பெருமாளே

திமிலை, முருடு முதலிய தோற் கருவிகளின் இசை பினவருமாறு வருணிக்கப் பட்டுள்ளது ·

திமிலை பலமுருடு திநதிந திமிததிமித
டுமுட டுமுடுமுட டுணடுண டுமுட்டுமுட
திகுட திகுடதிகு திந்திந திகுரததிகுரத திகுதீதோ
செகண செகணசெக செஞுசெஞு செககணென
அகிலமு ரகனமுடி அணடம பிளக்கவெகு
திமிர்த குலவிருது சஙகந தொணிததசுரர் களமீதே.

உரை யுணாவிறந்து ஒன்ருகி நின்ற பிரமப் பொருளாக முருகப் பெருமானைக் கண்டு, அவ வநுபவததை அமைத்துப் பாடிய பாடற் பகுதியினைத் தந்து, இவ் வுரையினை நிறைவு செய்வாம

காணொ ணாதது உருவோ டருவது
பேசொ ணாதது உரையே தருவது
காணு நான்மறை முடிவாய நிறைவது பஞசபூதக்
காய பாசம தனிலே உறைவது
மாய மாயுட லறியா வகையது
காய மானவ ரெதிரே யவரென வாதுபேசிப்
பேணொ ணாதது வெளியேய் ஒளியது
மாய ஞாய னறியா வகையது
பேத பேதமொ டுலகாய் வளர்வது விாதுநாதப்
பேறு மாகலை துரியா துரியவ
தீத மானது வினையேன் முடிதவப
பேறு மாயருள் நிறைவாய விளைவது ஒன்றுநீயே

9 முடிபுரை

நூல் தோன்றிய வரன்முறையினையும், பிறவற்றையுங் கூறும் முன்னுரை சித்திரபானு ஆண்டு ஆனித் திங்களில் எழுதப்பட்டது. மேல் நடந்த வற்றைத் தொகுத்துக் கூறும் இப் பின்னுரை ஏறக்குறைய ஐந்தாண்டுகளுக்குப் பின் எழுதப் படுகிறது. இக் கால வெல்லையி னுள்ளே இந் நூல் வெளியீட்டுக்கும் நூலாசிரிய னாகிய எனக்கும் நிகழ்ந்தன சிலவற்றை யெடுத்துரைப்பது இவ் வுரையின் கருத் தாகும்.

தமிழ் வழக்கிற் குரிய வட வெல்லை யாகிய இமயத்தி லிருந்து தெற் கெல்லை யாகிய ஈழத்திற்கு வர நேர்ந்ததும், ஈழ நாட்டுப் பல்கலை க்கழகத்துத் தமிழ்ப் பேராசிரிய ராகத் தொண்டாற்ற இயைந்ததும், யாழ்நூலை நிறைவு செய்தற்கு வாயி லாயின. வட நாட்டி லிருந்து வந்து ஓராண்டு எல்லைக்கண் பித்த வாத சுர மென்னுங் கொடு நோயினால் பீடிக்கப் பட்டதனால், உடல் பெரிதுந் தளர்ச்சி யுற்றது. அந் நிலையில் திருவாளர் சிதம்பரஞ் செட்டியார் அவர்களும், பிற அன்பர்களும், நோய் நீக்குதற்குத் தாங்கள் செய்தற்பாலது யாது என வினவினார்கள். யாழ் நூலினை அச்சேற்றுதலே என்னுடைய உள்ளத்திற்கு ஆறுத லளிக்குஞ் செயலாகு மென்று விடை பகர்ந்தேன். முதல் நான்கு பக்கங்கள் அச்சிட்டு அனுப்பப்பட்டன. இறை யருளால் நோயும் நீங்கிற்று. அச்சியற்றும் வேலை செவ்வனே நடைபெற்று வந்தது. உலகப் பெரும்போரினாலே அச்சுத் தாளின் கட்டுப்பாடுகள் வருதலும், நூல் வெளி யீட்டு வேலை இரண்டாண்டுக ளளவில் தடைப்பட்டு நின்றது. ஆயிர மாண்டுக ளாக மறைந்து கிடந்த பொருள் வெளிப்படுவதற்கு ஆண்டு சில கழிதல் இயல்பு தானே யென்னு மெண்ணம் உள்ளத்திற்கு ஆறுத லளித்தது. உலகினைத் துன் புறுத்திய பெரும்போர் முடிந்தது. அச்சுத் தாளின் கட்டுப்பாடுகளும் ஒருவாறு நீக்கப்பட்டு, நூல் வெளி வருதற்கு வசதி யேற்பட்டது. வெளியீடு காலந் தாழ்த்த மைக்காகக் கவல வேண்டுவ தில்லை. இந் நூலின் சேர்க்கையாக அமைந்திருக் கின்ற அரும் பொருள்களும், இசை நூல் வரன்முறையும் பின்பு எழுதியுந் தொகுத் தும் சேர்க்கப்பட்டன. அவை யாழ்நூலினை நிறைவு செய்யும் நீர்மைய.

சிலப்பதிகாரத்தில், அரங்கேற்று காதையினுள்ளே, யாழாசிரியன் அமைதி கூறும் இருபத்தைந்து அடிகளுக்கு இயைந்த தொரு விரிவுரையாக இந்நூல் எடுத்துக் கொள்ளப்பட்டது. திருவருள் வயத்தினாலே எடுத்துக்கொண்ட அப் பொருள் நிறைவு பெற்றதோடு, மேலும் பல துறைகளில் இவ் வாராய்ச்சி சென்று, வழக் கொழிந்து போன இசைநூ லிலக்கணத்தை வகுத்துரைத்தும், நூற்று மூன்று என்னுந் தொகையின வாகிய பண்களின் உருவத்தைத் தந்தும், அவைதம்மை யிசைத்தற்கு வேண்டிய அலகு நிலைகளைக் குறிப்பிட்டும், வழக்கொழிந்து பலவாண்டு மறைந்து கிடந்த பழந் தமிழிசை மரபிற்குப் புத்துயி ரளித்தது. மேலும், கிராம வழக்கு வேறுபட்டு நடக்குமிக் காலத்தில், பண்டையோர் கொண்ட இருபத்திரண்டு அலகுகள் (சுருதிகள்) இவை யெனக் காட்டியதோடு, இருபத்து மூன்றாவதாக நின்ற பிரமாண சுருதி யென்னும் விதியிசையின் அளவினையும், அது அளபிற் சிறிதாயினும்,

எண்ணிக்கைக்கு ஈரலகு பெறும் என்னும் பேருண்மையினையும் நன்கு விளக்கிச், சுருதி வீணை யென்னுங் கருவியினைச் செய்து முடித்து, இடைக் காலத்தில் நேர்ந்த வழுவினை இந் நூல் களைந்த தென்பது மிகையாகாது. மேலும், ஐவகைக் கிரமங்களின் அமைதியைக் காட்டிக், கிரம வழக்கினைப், பண்டுபோல், என்றும் நிலவச் செய்தது இந் நூலே யாம்.

குடுமியா மலையில், பல்லவ மன்ன னாகிய மகேந்திர வாமன் காலத்தில் எழுதப் பட்ட கல்வெட்டின் பொருள், ஐயந் திரிபற, இந்நூலினுட் காட்டப்பட்டது. அவ் விசையினை யிசைத்தற் குரிய பரிவாதினி யாழ் என்னுங் கருவியின் அமைப்பும் விளக்கப் பட்டது.

எழுபத்திரண்டு மேள கர்த்தாக்களை வகுத்துத், தென் னாட்டுக் கருநாடக சங்கீதத்தை முறைப்படுத்திய வேங்கடமகி கையாண்ட வீணைக் கருவி, பஞ்ச சுருதி ரிஷபத்தில் சுத்த காந்தாரமும், பஞ்ச சுருதி தைவதத்தில் சுத்த நிஷாதமும் பேசுவது மூந்நூ றாண்டுகளாக வழக்கற்றுக் கிடந்த இக் கருவியினை மீட்டும் உருப்படுத்திக் காட்டிய பெருமை இந் நூற் குரியது.

ஆயிர நரம்பு யாழின் கணக்கினைக் கண்டறிந்து, அவ் வியாழினை மீட்டும் அமைப்பதற்கு வேண்டிய குறிப்புக்களை இந் நூல் ஐயந் திரிபற எடுத்துரைத்தது.

அரங்கேற்று காதையில், மாதவி யிசைத்த யாழ்க் கருவியின் அமைப்பும், பாடிய இசையின் அமைப்பும், இந் நூலினுள் விரிவாகத் தரப்பட்டன. கோடபதி யெனவும், சகோடயா ழெனவும் பெய ரெய்தி, விளக்கமுற் றிருந்த, ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி யென்னும் யாழ்க் கருவியின் இசை தமிழகத்தில் மீட்டும் பரவ, இந் நூல் துணை புரியு மென்பது ஆசிரியரது உள்ளக் கிடக்கை.

இவ் வாராய்ச்சியினைச் செய்தற்கு யான் கைக்கொண்ட முறையினைப்பற்றி ஒரு சில வாசகங்கள் கூறுவது, மேலும் ஆராய விரும்புபவர்களுக்குப் பெரும் பயன் தருவ தாகும். ஆதலால், அப் பொருள்பற்றிச் சில கூறி, இவ் வுரையினை நிறைவு செய்வாம். ‘மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு இனத்திற் சேர்த்தி யுணர்த்தல் வேண்டும்’ என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியது, இவ் வாராய்ச்சிக்கு வழிகாட்டியா யமைந்து நின்றது. உதாரணமாகப், பெரும்பண்ணின் இலக்கணத் தைக் கூறுகின்ற பகுதிகள், சிலப்பதிகாரத்து, ஐவேறிடங்களில், தனித்தனியாகத் தரப்பட்டுள்ளன. இவைதம்மை ஒருங்கு வைத்து நோக்கு மிடத்துப், பெரும் பண்ணி னிலக்கணம் தெற்றெனப் புலப்படுகின்றது. யாழ்க் கருவியின் இலக்கணம், பத்துப்பாட்டினுள், நான்கு பாட்டுகளில், தனித்தனியே யுரைக்கப்பட்டது. ஓரிடத் திற் காணப்படாத சிறப்பியல்பு, மற்றோரிடத்திற் கூறியவற்றால் தெளிவுபடுகின்றது.

இந் நூல் தேவாரவியல், மூவ ரருளிய தேவாரப் பதிகங்கள் முழுமைக்கும் யாப்பமைதி கூறுவதோடு, கட்டளை யமைதி, சுவை யமைதி என்னு மிவற்றையுந்

தந்து, வடமொழி நூலகளில தேவாரத்துக்கு உரியன எனக் காட்டப்பட்ட தமிழ்ப் பண்களின் உருவங்களையுந தந்து, தேவாரத்தைக கற்கும் மாணவாகளுககு விழுப் பயன் தரும நீர்மையதாய அமைந்தது. அரும்பத வுரையாசிரியரும், அடியார்ககு நலலாரும், அரங்கேறறு காதை யுரையினுள்ளே, எடுத தாளுகின்ற பாலை, இளி முதல் உழை யீருகக் கீழிருந்து மேனேக்கிச செலலும குரற் கிரமதது எதிர் நிரனிறைககு உரியது என யாழ நூல் ௱கச-ஆம் பக்கததில ஐயந திரி ।।றக் காட்டப்பட்டது

இந் நூல ஒழிபியலினுள், முதற பிரிவாகக் கூறப்பட்ட எண்ணலளவை, இசைக் கணிதம் என்னும பொருளகள், இசை யாராயசசிக்கு இன்றியமையாதன யாழ் நூல் ௬ாக-ஆம் பக்கததில், எண்ண லளவையுட கூறிய பொருளகள் இவை யெனத் தொகுததுரைக்கப்பட்டன. இஙகுப் பழந் தமிழா வழங்கிய பேரெண்கள் இவை யெனவும், ‘நெய்தலுங் குவளையும ஆமபலுஞ் சஙகமும், மையில் கமலமும் வெள்ளமும நுதலிய’ எனப், பரிபாடலினுள, கீரந்தையார் கூறிய பேரெண்களின் அளவு இவையெனவும், அண்ட கோளததின் அசசு நீளம் இது வெனவும், அண்டத தின் அளவைக் காண்பதற்குப் பேரெண்கள் கருவியா யிருததல்போல, அணுவின் அளவைக் காண்பதறகுக கருவி யாகிய கீழவா யெண்களின் இயல் பிது வென வும், பேரெணகளையுங கீழவா யெண்களையுங கூட்டல, கழிததல, பெருக்கல, வகுத்தல் செய்யும் முறைகள இவை யெனவும், மேனுடடார் வழங்கும் லகு வெண்கள் (logarithm) இந் நீர்மைய வெனவும, இந் நூல ஒழிபியலினுள் செவவிதின் உரைக்கப் பட்டன

இசை நரமபுகளின இலககணததைக கூறுமிடதது, அவற்றின அசைவெண் விகிதம, நரமபு நீள விகிதம், சத விலககம என்னு மிவறறைக கணக்கிடும் முறைகளும், ஒன்று முதல் இருபது வரையு முளள எணகளின சத விலக்கஙகளைத் தருஞ் சூத்திர மும, துளைக கருவியினை முறைப்படி யாககும வழியும், இருபததிரண்டு அலகுகளைத தோற்றுவிககுங் கணித முறையும், நாறபத்திரண்டு அலகுகளின் சத விலககஙகளும், அசைவெண விகிதஙகளும, ஆயிர நரமபு யாழுககு அடிப்படை யாகிய இருநூறு அலகுகள் தோனறும் முறையும, பிறவும தெளிவு படுததப்பட்டன. இருபததிரணடு சுருதிகளின் அளவினை வகுததுக கூறும ஐநது வெணபாககளும, அகோபல பண்டிதா வழஙகிய பாரிசாத வீணையின அலகுகளை எடுததுரைக்கும ஐந்து கட்டளைக கலித் துறைச் செய்யுடகளும இநநூலுக்கு அழகு செயகின்றன

இவ வணணம இசை யாராயசசிககு இனறியமையாது வேண்டப் படுவன வாகிய கணக்கு முறைகளையும, பிறவறறையும மாணவாகள படித்துப் பயனடைவாா களாக.

இவ் வெளியீட்டிறகுத் துணை புரிந்த அன்பாகள் பலா அவர்களுள், வனப்புற இந நூல் வெளிவருதறகு ஆகவேண்டிய தொணடுகளை மனஞ் சலியாது செயது நிறைவேறறிய திரு அ. கணபதிப் பிள்ளை அவர்களுக்குத தமிழுலகம் பெரிதும கடமைபபட்டது கையெழுத்துப் படிகளை யெழுதியும், ஒப்பு நோக்கியும், உதவி புரிந்த, எனது மாணவா, திரு வெள்ளை வாரணனா இந நூலுக்குச சிறப்புப்பாயிரஞ்

செய்யும் பணியினைத் தனக்கு உரியதாக்கிக் கொண்டார். இந் நூற் பதிப்புக்கு வேண்டிய பொருளினைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளித்தும், இவ் வாராய்ச்சியிற் கண்ட கருவிகள் சிலவற்றைச் செய்வித்தும், பலவாற்றானும் யாழ் நூல் மீட்டும் தமிழகத்தில் நின்று நிலவ உதவி புரிந்த நண்பர் திரு சிதம்பரஞ் செட்டியார் அவர்கள், இந் நூல் பல மாணவர்களுடைய உள்ளத்தில் நின்று நிலவ வேண்டு மென்றும், பழந் தமிழிசைக் கருவி யாகிய யாழ், தன்னுடைய இசையினைத் தமிழ நாட்டில் மீண்டும் பரப்பி, மக்க ளுள்ளத்தை மகிழ்விக்க வேண்டு மென்றும் விரும்பி, அவ்வண்ணம் நிறை வுறுதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்தற்கு முனைந்து நிற்கின்றார்கள். இந் நூலாராய்ச்சியினாலே புதிதாக அமைக்கப்பட்ட இசைக் கருவிகளை நலம்பெற இசைத்துப், பழந் தமிழிசையின் ஒலியுருவத்தினை நாமெல்லாம் கேட்டு மகிழுமாறு செய்த சங்கீத பூஷணம் திரு க. பொ. சிவானந்தம் அவர்களுக்கு என்னுடைய மன நிறைந்த ஆசியுரையினைக் கூறுகின்றேன்.

ஆயிரம் யாண்டுகளாக மறைந்து கிடந்த கலைச் செல்வத்தைத் தமிழ் மக்கள் மீட்டும் பெறுதற்கு உதவி புரியும் இந்நூலினது அரங்கேற்று விழா, நிகழும் சர்வசித்து ஆண்டு, வைகாசித் திங்கள், உஉ-ஆம் நாள் (5—6—1947), தமிழ் விரக ராகிய ஆளுடைய பிள்ளையாருடைய திருநாளிலே, அவருடைய திருமுன்னிலையிலே, திருக் கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலில் நடைபெறுவது, தமிழகத்தார் செய்த தவத்தின் பயனாகும்.

இவ் விழாக் கொண்டாட்டத்திற் கலந்து, நம் மெல்லோரையும் மகிழ்விப்பார்கள் என யாம் எதிர்பார்த்திருந்த செந்தமிழ்ச் செல்வர்கள் ஐவர். அப் பெரியார்கள் தமிழ்வேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், மகாமகோபாத்தியாய சாமிநாதையர் அவர்கள், தமிழ்ப் பெருங்கவி, முதுபெரும் புலவர், வெள்ளக் கால் சுப்பிரமணிய முதலியார் அவர்கள், மகா வித்துவான் ரா. இராகவையங்கா ரவர்கள், பல்கலைப் புலவர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் ஆகியோ ராவர். தமிழ்வேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், தமிழ்ப் பொழிலில் யாழ் நூற் பொருள் வெளிவந்ததனைக் கண்ணுற்றுப், பெருமகிழ் வெய்தி, இந் நூலினை விரைந்து ஆக்குதல் வேண்டு மென எமக்கு அடிக்கடி ஊக்க வுரை கூறுவார்கள். மகாமகோபாத்தியாய சாமிநாதைய ரவர்கள், இப் பொருள்பற்றி யான் சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரை நிகழ்த்தியபோது, நேரில் வந்திருந்து, என்னை ஊக்கப் படுத்தியதோடு, இந் நூல் என்று வெளிவரு மென்று ஆர்வத்தோடு எதிர்நோக்கி யிருந்தார்கள். வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியா ரவர்கள், தமிழ்ப் பொழிலிலும், செந்தமிழிலும் வெளிவந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்து, நூல் வெளிவருவதனைப் பேரார்வத்தோடு எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள். மகாவித்துவான் ரா. இராகவையங்கா ரவர்கள், அண்ணாமலை நகரில் சந்திக்க நேரிடும்பொழு தெல்லாம் இவ் வாராய்ச்சியினைப்பற்றி வினவியும், தம்முடைய ஆழ்ந்த கல்வியின் பயனாக, யாழ்க் கருவியினைப்பற்றிய சில குறிப்புக்களைச் சொல்லியும், என்னை யூக்கினார்கள். தமிழ் மொழியிலும், தமிழர் நாகரிகத்திலும் பேரார்வ முடைய கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள், இந் நூல் வெளியீட்டினைக்

குறித்து, எனக்கும் அவருக்கும் மாணவராயமைந்தார்கள்பால், அடிக்கடி வினவி, இந்நூல் வெளிவருதலை ஆவத்தோடு எதிர்நோக்கியிருந்தார்கள். மண்ணுலக வாழ்வினை விட்டு, விண்ணவர்க்கு விருந்தாக அமைந்த இப் பெரியோர்கள், தோன்றாத் துணையாயிருந்து, இவ்விழாவிற்கு வந்திருந்து, தமிழ்ப் பணியினைச் செய்வாரனைவரையும் மனமார வாழ்த்துவார்கள் என்னும் உறுதி எமக்கு உண்டு.

திருக்கொள்ளம்பூதூர்,
ஆளுடையபிள்ளையார் திருநாள்,
சர்வசித்து, வைகாசி, உஉ,
5—6—1947

